# புகழ்ச் செல்வர்

'தி. ஜ. ர.'

7737

★

கார்த்திகேயினி பிரசுரம்

ராமச்சந்திரபுரம் :: புதுக்கோட்டை ஸ்டேட்

முதற்பதிப்பு: மார்ச் 1947
உரிமை பதிவு

No., 6. (வரலாறுகள்)

விலை ரூ. 3/-

அச்சிட்டோர்:
மதராஸ் ரிப்பன் பிரஸ், ராமச்சந்திரபுரம்
புதுக்கோட்டை ஸ்டேட்.

## உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| (1) | மகாத்மா காந்தி | ... | 1 |
| (2) | பண்டித ஜவாஹர்லால் | ... | 10 |
| (3) | மௌலானு அபுல்கலாம் ஆஸாத் | ... | 15 |
| (4) | யோகி அரவிந்தர் | ... | 21 |
| (5) | கான் சகோதரர்கள் | ... | 25 |
| (6) | வைஸிராய் வேவல் | ... | 27 |
| (7) | சியாங்கே-ஷேக் | ... | 31 |
| (8) | ஈமன் டிவாலரா | ... | 37 |
| (9) | தளபதி ஸ்மட்ஸ் | ... | 44 |
| (10) | ஜனாதிபதி ட்ரூமன் | ... | 51 |
| (11) | வின்ஸ்டன் சர்ச்சில் | ... | 54 |
| (12) | பீவர் புரூக் | ... | 58 |
| (13) | அமெரி | ... | 63 |
| (14) | ஸ்டாலின் | ... | 69 |
| (15) | கமலாதேவி | ... | 76 |
| (16) | கே. சீனிவாசன் | ... | 83 |
| (17) | அவினாசிலிங்கம் | ... | 89 |
| (18) | விஜயலட்சுமி பண்டிட் | ... | 96 |
| (19) | டி. கே. சி. | ... | 104 |
| (20) | சுத்தானந்த பாரதியார் | ... | 112 |
| (21) | ருக்மிணி தேவி | ... | 124 |

# முன்னுரை

இதில் இருபத்தொரு பிரபலஸ்தர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் அடங்கி யிருக்கிறது. சிலர் உலகப் பிரபலஸ்தர்; சிலர் தேசப் பிரபலஸ்தர்; சிலர் தமிழ்நாட்டுப் பிரபலஸ்தர். சிலர் இந்தியர்; சிலர் அயல்நாட்டார். வெவ்வேறு அளவிலும் வகையிலும் புகழ் பெற்றவர்கள். நான் ஒருமுறை வகுத்துக் கொண்டு, திட்டம் போட்டு, இந்த வரலாறுகளை எழுதவில்லை. 'சக்தி' ஆசிரியராக நான் இருந்த காலத்தில் அந்தந்த மாதத்தின் தேவையையும் வசதியையும் உத்தேசித்து, சொந்தப் பெயரிலும், 'ஸரஸி', 'ஜேயார்' என்ற புனை பெயர்களுடனும் அவ்வப்போது இவைகளை நான் எழுதி வந்தேன். எனவே 'சக்தி' அதிபர் ஸ்ரீ வை. கோவிந்தன் அவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

இன்னொரு விஷயம்: எல்லார் வரலாறுகளையும் ஒரேவிதமாக எழுதவில்லை. (1) கமலா தேவி, (2) கே. சீனிவாசன், (3) அவிநாசிலிங்கம், (4) விஜயலட்சுமி பண்டிட், (5) டி. கே. சி., (6) சுத்தானந்த பாரதியார், (7) ருக்மிணி தேவி இந்த ஏழுபேர்களையும் இதற்கென்றே நேரில் பேட்டிகண்டு, அவர்களைப் பற்றியும் அவர்களுடையவும் கருத்துக்களைச் சேகரித்துக் கொண்டு, வரலாறுகளை எழுதினேன். மற்றவர்களைப் பற்றிய தகவல்களைப் பத்திரிகைகளிலும் புத்தகங்களிலுமிருந்து சேகரித்துக்கொண்டு, அவர்களின் வரலாறுகளை எழுதினேன். ஏறக்குறைய எல்லார் வரலாறுகளுமே ஒன்றிரு வருஷங்களுக்கு முன்பு, எழுதப்பட்டவை. ஆகையால், அவரவர் வாழ்க்கையில் பிந்தி நிகழ்ந்திருக்கும் சம்பவங்களைப் போதிய அளவு குறிப்பிட முடியவில்லை. என்றாலும், சிறிது சிறிது திருத்தி இன்றைய 1947-ஆம் ஸு மார்ச்சு மீ வரைக்கும் இந்த வரலாறுகளைப் பூர்த்திசெய்ய முயன்றிருக்கிறேன்.

தவிர, நான் விரும்பிய அனைவரின் வரலாறுகளும் இதில் அடங்கி யிருக்கவில்லை. பொதுவாக இந்தியப் பிரபலஸ்தர் சம்பந்தப்பட்ட மட்டிலும், முக்கியமாகத் தமிழ்நாட்டுப் பிரபலஸ்தர் சம்பந்தப்பட்ட மட்டிலும், இன்னும் எத்தனையோ பேரின் வரலாறுகளை நான் எழுதியிருக்க வேண்டும் என்பது என் ஆசை. உதாரணமாக, வ. ரா., ராஜாஜி இந்த இருவரின் வரலாறுகளையும் நான் நிச்சயமாய் எழுதியிருக்க வேண்டும். என் சக்திக் குறைவாலும், சந்தர்ப்பக் குறைவாலும், அது சாத்தியமில்லாமல் போய்விட்டது. நடக்காததைப் பற்றிச் சிந்தித்துப் பயனில்லை. அமைந்த அமைப்பு இதுதான் என்று நான் திருப்தி யடைகிறேன். இதே முறையில் நண்பர்களும் இதை அங்கீகரிக்க வேண்டுகிறேன்.

சென்னை
1—3—47.

தி. ஜ. ர.

# பதிப்புரை

அரசியலில் பூரண சுதந்தரம் பெறவிருக்கிற இந்த நாளில் நாட்டு நலத்துக்குப் பணியாற்றிய பெரியார் களைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆசைப்படுவது இயல்பு.

இந்தத் தொகுதியில் மகாத்மா காந்தி, நேரு, ஆஜாத், ஜெனரல் ஸ்மட்ஸ், வின்ஸ்டன் சர்ச்சில் முதலான இருபத்தோரு பிரபலஸ்தர்களின் வரலாறுகளை ஆசிரியர் தி. ஜ. ர. அவர்கள் தந்துள்ளார்கள். பெரியார்களில் சிலரை ஆசிரியர் நேரில் பேட்டியும் கண்டிருக்கிறார்.

இவை "சக்தி" யில் அவ்வப்போது வெளிவந்தவை. இவைகளை இப்போது புத்தகரூபத்தில் மகிழ்ச்சியுடன் தருகிறோம்.

ராமச்சந்திரபுரம்
1—3—47

கார்த்திகேயினி பிரசுரம்.

# மகாத்மா காந்தி

'என்றுமே உலகம் கண்டிராத ஓர் அபூர்வ ராணுவ மேதை மகாத்மா காந்தி' என்கிறார் ஒரு சிறந்த ஆசிரியர்.

'காந்தி மகா புத்தி நுட்பம் வாய்ந்த அரசியல் வாதி' என்று புகழ்ந்தார் ஒருமுறை லாயிட் ஜார்ஜ்.

'புத்தருக்குப் பிறகு வந்த மிகப் பெரிய இந்தியர் காந்தி தான்' என்கிறார் ஜான் கந்தர்.

மகாத்மா காந்தி ஓர் அபூர்வ புருஷன். அவதார புருஷன் என்று அவரைப் பலர் மதிப்பதில் எவ்விதத் தவறுமில்லை. இந்தியாவை உய்வித்து, அதன் மூலம் உலகத்தையே உய்விக்க ஆசைகொண்ட உத்தமன் காந்தி.

மோகன்தாஸ் கரம்சந்திர காந்தி, 1869-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ம் தேதி போர்பந்தர் சமஸ்தானத்தில் பிறந்தார். அவருடைய தந்தை ஒரு திவான்; பாட்டனாரும் ஒரு திவான். பனியா என்ற வைசிய குலத்தினர் அந்தக் குடும்பத்தார். தாய், ஹிந்து விரதாதி நோன்புகளை மிக்க பக்தியுடன் அனுஷ்டித்து வந்தாள். குடும்ப வழக்கப்படி ஏழு வயதிலேயே மகாத்மா காந்திக்குக் கலியாண நிச்சயதார்த்தம் நடந்து விட்டது; பதின்மூன்று வயதிலே விவாகம்!

கருணை உள்ளம் படைத்த காந்திக்கு வைத்தியத்திலே சிறு வயதிலிருந்து பற்றுதல். வைத்தியக் கல்வி பெறத்தான் அவருக்கு ஆசை. ஆனால், சட்டக் கல்வி பெற, அவர் லண்டனுக்கு அனுப்பப் பட்டார். லண்டனிலே பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் திரும்பி வந்தார். ஆனால், வக்கீல் தொழில் புரிய அவரால் முடியவில்லை. 1893-ஆம்ஆண்டு ஏதோ ஒரு வியாச்சியம் சம்பந்த மாகத் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார். அங்கே இந்தியர் படும் சிரமங்களை நேரே அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் ஏற் பட்டது.

1908—14-ஆம் வருஷங்களில் முதல் முதலாகத் தென்னாப் பிரிக்காவில் சத்தியாக்கிரகப் போர் நடத்தி, அங்குள்ள இந்தி யரின் சில பெருங் குறைகளைக் களைந்து வெற்றி பெற்றார்.

இந்தச் சத்தியாக்கிரக காலத்தில், தென்னுப்பிரிக்க சர்க்காரின் தலைவரா யிருந்த ஜெனரல் ஸ்மட்ஸ்தான் இப்போதும் தென்னுப்பிரிக்கப் பிரதம மந்திரியா யிருக்கிறார். காந்தி—ஸ்மட்ஸ் ஒப்பந்தம் மிகப் பிரசித்தமாகும். 1922-ஆம் ௵ இந்தியாவில் காந்திஜி முதல் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தினர். அதில் பலாத்காரம் கலந்ததால், தாமே இயக்கத்தை நிறுத்தினர். என்ருலும், அவருடைய மூன்று கட்டுரைகளுக்காக, சர்க்கார் அவர்மீது வழக்குத் தொடுத்தார்கள். அதில் 6 வருஷச் சாதாரணக் காவல் தண்டனை பெற்ருர். 1930-ஆம்௵ உப்பு சத்தியாக்கிரகம் ஆரம்பித்து ரெகுலேஷன் கைதியானர். 1931-ஆம் வருஷம் காந்தி-இர்வின் சமரச ஒப்பந்தத்தின்மேல், இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்ருர். 1932-ஆம் வருஷம் இந்தியாவுக்குத் திரும்பி வந்தவுடனே, வில்லிங்டன் பிரபு புதிய வைஸிராயாக வந்திருந்தார். காந்தி—இர்வின் ஒப்பந்தம் சிதைந்து கிடந்தது.

வைஸிராய் வில்லிங்டனைக் கண்டு பேச, மகாத்மா விரும்பினர். ஆனல், வைஸிராய் மறுத்துவிட்டார். இதைப் பற்றி ஒரு ரஸமான கதை உண்டு. “காந்தியை நேரே சந்திப்பவர்கள் அவரது வசீகர சக்தியில் மயங்கி விடுகிருர்கள். ஆகையால் காந்தியை நீங்கள் சந்திக்காதீர்கள்” என்று வைஸிராய் வில்லிங்டனுக்கு, அப்போது இந்தியா மந்திரியா யிருந்த ஸர் ஸாமுவேல் ஹோர் கட்டளை யிட்டாராம். அதனல் தான், சாதாரண மரியாதையைக் கூடப் பார்க்காமல், வைசிராய் வில்லிங்டன், காந்திஜியைக் காண மறுத்துவிட்டாராம்! வேறு வழியின்றி மகாத்மாஜி இரண்டாவது சத்தியாக்கிரகம் தொடங்கிச் சிறைப்பட்டார். அடுத்த வருஷம் சிறையிலிருந்த வண்ணமே, ஹரிஜனங்களுக்காக உலகப் பிரசித்தி பெற்ற உண்ணுவிரதம் கிடந்தார். அதன் மூலம் பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் வகுப்புத் தீர்ப்பை உடைத்தார். 1939-ஆம் வருஷம் பிரபலமான ராஜகோட் உண்ணுவிரதத்தைத் தொடங்கி, தாகூர் சாகேபைப் பணியச்செய்து வெற்றி பெற்ருர். 1940-ஆம் ௵ அதிசயமான தனி நபர் சத்தியாக்கிரகம் நடத்தினர். 1942-ம் ௵ ‘இந்தியாவை விட்டு வெளியேறு’ என்ற தீர்மானத்தைக் காங்கிரஸ் கமிட்டியில் கொணர்ந்து நிறைவேற்றினர். மகத்தான சத்தியாக்கிரகத்துக்கு அவர் திட்டம் தயாரித்துக் கொண்டிருக்கிருர் என்று

ஊகித்த சர்க்கார், அவரையும் இதர பிரபல காங்கிரஸ் தலைவர்களையும் கைது செய்தது. 1944-ஆம் ஆண்டு விடுதலையடைந்தார். நௌகாலியில் நிகழ்ந்த படுகொலையைக் கண்டு மனம் பதறி இன்று (1947 பிப்ரவரி) அங்கே சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார். இதே சமயம், பீஹாரில் நிகழ்ந்த குரூரங்கள் அவர் மனத்தை வாட்டிவிட்டன. அதற்குப் பிராயச்சித்தமாக மிகக் குறைந்த உணவை உண்டு உபவாசத் தவமும் புரிந்தார்.

காந்திஜியின் வாழ்க்கை மிக எளிமை வாய்ந்தது. உணவு, உடைகளில் அவர் எளிமையே கடைப் பிடிப்பார். தம் தேகத்தை அடக்கியாள்வதில் வல்லவர். "இதோ இருபது நிமிஷம் தூங்கப் போகிறேன்" என்று அவர் சொல்லுவார். வண்டியிலே, மோட்டாரிலே எதில் இருந்தாலும் அப்படியே உடனே கணக்காக இருபது நிமிஷம் தூங்கிவிட்டு விழிப்பார். பண்டித மோதிலாலின் சவக்கிரியை நடந்து திரும்பியபோது, காரிலே காந்திஜி இவ்விதம் சற்றுத் தூங்க ஆரம்பித்தார். கார் குடை கவிழ்ந்துவிட்டது. காந்தி கீழே விழுந்துவிட்டார். நண்பர்கள் கவலையுடன் ஓடிப்போய்ப் பார்த்தால், இன்னும் காந்தி தூங்கிக் கொண்டேயிருந்தாராம்! உடம்பை அடக்கியாளும் முனிவன் அல்லவா அவர்?

காந்திஜி நகைச்சுவை நிறைந்தவர். நண்பர்களுக்கு அயர்வு ஏற்படுமானால், தமாஷ் செய்வார். "எனக்கு நகைச்சுவையில்லாவிட்டால், வெகு காலத்துக்கு முன்னே நான் தற்கொலை செய்து கொண்டிருப்பேன்" என்று கூட ஒரு நண்பரிடம் ஒரு சமயம் அவர் சொன்னார். யாருடனும் அன்பு கனியவே பழகுவார். நண்பர்களுடைய சுகதுக்கங்களையும் யோக க்ஷேமங்களையும் அக்கரையோடு காந்திஜி விசாரிப்பார். காந்திஜியிடம் பழகியவர்கள், தங்கள் சொந்தக் குடும்ப விஷயங்களையெல்லாம், காந்திஜியிடம் தாங்களாகவே சொல்லிக்கொண்டு ஆறுதல் பெறுவார்கள். ஜவாஹர்லால் நேரு சிறையில் இருந்தார். நெருக்கடியான சமயம். அதற்கிடையிலும், "என் சின்னப் பெண்ணின் நிறை அதிகரித்துள்ளது" என்ற தகவலை, காந்திஜிக்கு நேரு மிகுந்த சிரத்தையோடு தெரிவித்தாராம்!

முப்பது வருஷ காலத்துக்குள் இந்தியாவிலே ஓர் அற்புதம் விளைந்தது. அந்த அற்புதத்தைச் செய்து முடித்தவர் காந்தி,

மெலிந்த உருவம்; சரீர பலமும் கிடையாது. கண்கள் இருண்டு, சாந்தமயமாயிருக்கும். மான் விழியார் எனப் பெண்களை வர்ணிப்பார்கள். காந்தியின் கருணைக் கண்கள் குழந்தையின் கண்களைப் போல் கள்ளமற்று மருண்ட தோற்றம் வாய்ந்திருக்கும். ஆனால், அந்தக் கண்களின் பார்வையிலிருந்து பெருகும் அன்பு வெள்ளம் இந்த உலகத்தை நிறைத்துவிடும் போல் தோன்றும். இடுப்பில் அரைமுழத் துணி, மேலே ஒரு முரட்டுக் கதர்ப் போர்வை. இந்தச் சாந்த மூர்த்திதான் காந்தி, மகாத்மா காந்தி.

ராஜீயப் போர்களை நடத்த ராஜதந்திரம் வேண்டும் என்று சொல்லுவார்கள். காந்தி ராஜதந்திரத்தை அறியார்; ஆனால், உன்னத ராஜதந்திரிகளைத் திணறச் செய்ய அவருக்குத் தெரியும்.

போர் மனம் படைத்த ஜனங்களைத் திரட்டலாம்; அணி வகுக்கலாம்; பட்டாளமாய் நடத்திச் செல்லலாம். அதற்கு ராஜதந்திரமும் யுத்த தந்திரமும் போதியவையா யிருக்கலாம் அதை நெப்போலியன், கெய்சர், கரிபால்டி இவரிலொருவர். செய்து முடிக்கலாம். ஆனால், இந்தியாவில் தன்னம்பிக்கையற்றுக் கிடந்த இந்தியாவில் பணிந்து கிடப்பதே பிறவிப் பயன் என்ற கேவல மனோபாவ இருள் சூழ்ந்திருந்த இந்தியாவில், போர் வீரர்களையே சிருஷ்டிக்க வேண்டியதா யிருந்தது; போராட்ட மனோபாவத்தையே உண்டாக்க வேண்டியதா யிருந்தது. காந்திஜியின் தர்ம சொரூபமே அதனைச் செய்யும் சக்தி வாய்ந்தது. எந்த வெறும் ராஜீயவாதியும் அதனைச் சாதித்திருக்க முடியாது.

அவர் தர்க்க சாஸ்திரியல்ல; அவருக்குத் தர்மமே தெரியும். தர்மம் வேறே, வாழ்வு வேறே, ராஜீயம் வேறே, மதம் வேறே சாஸ்திரம் வேறே, சடங்கு வேறே, நான் வேறே, நீ வேறே என்று அவர் பல பாகப் பிரிவினை செய்வதில்லை. மனித வாழ்வுக்குரியவை என்னவெல்லாமோ அத்தனையும் தர்மத்தையே ஆதார சக்தியாய்க் கொண்டிருக்க வேண்டும் என்பது அவர் கருத்து, நம்பிக்கை.

மனிதனது ஆத்ம விகாசத்தை உண்டாக்கி விட்டால், சகலமும் ஒழுங்குபட்டுவிடும் என்பது அவர் சித்தாந்தம்.

அபேதவாதம், குடியரசு, முடியரசு, சர்வாதிகார ஆட்சி என்று என்னென்னவோ சொல்லுகிறார்கள். காந்தி சொல்லு

வது 'காந்தி தர்மம்'; அதுவே சகல மத ஆதார தர்மம். மனிதன் மனம் மாத்திரம் மாறிவிட்டால் எது ஒழுங்கு பிறழ்ந்து நடக்கும்?

ராஜாங்கத்தின் அமைப்பே பெரிதென்றால், இதுவரை உலகம் வாழ்ந்த வாழ்வெல்லாம் வீணேயோ? எந்த நிலை உயர்ந்தது? எது தாழ்ந்தது? ஸ்ரீ ராமன் காலத்தில் ரயில் வண்டியில்லை; ஸ்ரீ கிருஷ்ணன் காலத்தில் நீர்மூழ்கி யில்லை, அதனால், ராமாயணமும் பாரதமும் வியர்த்தமாகி விடவில்லை. மனிதனுடைய மனம் புனிதமடையாத காலந்தான் வியர்த்தம். உள்ளம் மலர்ந்து, பக்குவமடைந்தால், வேண்டிய சட்ட திட்டம் தானே வருகிறது. காந்தி, ஹிருதய விகாசத்தை உண்டாக்குபவர்.

"வழி எதுவா யிருந்தால் என்ன; பலனே முக்கியம்" என்று பேசுவது மற்றவர் வழக்கம். காந்தி, வழிக்கும் பலனுக்கும் வேற்றுமை யறியார். புனிதமில்லாத வழியில் நடந்து, புனித விளைவைப் பெறுவது சாத்தியமல்ல என்பது அவர் கருத்து. வாழ்க்கையின் பாதை, தஞ்சைக்கும் திருச்சிக்கும் போகும் பாதையல்ல. மனிதனது ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு முடிவு; பெரிய லட்சியத்தின் ஒரு பாகம்.

ஆங்கிலத்திலே ஒரு கவிதை யுண்டு. "அருட் ஜோதியே! வழி காட்டிடு. இருள் சூழ்ந்திருக்கிறது. வீட்டுக்கு வெகு தொலைவி லிருக்கிறேன். தூரத்தே யுள்ள காட்சிகளை நான் காண வேட்கை யுறவில்லை. ஒரே ஓர் அடியை நான் சரியானபடி வைத்தால் போதும். அதற்கு அருள் புரி" என்பது அதன் கருத்து. இந்தக் கவி, காந்திஜீக்கு மிக மிகப் பிரியமானது. ஆமாம்; இருளில் நடக்கும் ஒரு மனிதன் ஒவ்வோர் அடியையும் சரியான திசையில் வைக்கும் அருள் பெற்றால், அவனுடைய இலட்சியம் எப்படிப் பிசகிப் போகும்? காந்திஜீயின் முழுத் தத்துவமும் இதில் அடங்கி யிருக்கிறது.

காந்திஜீ யாருக்கும் எதிரியல்ல. பகைவனையும் நேசிப்பவர். அந்தத் தத்துவத்தை ஓயாது உபதேசமும் செய்து வருபவர்.

காந்திஜீ, இந்த வலிமை வாய்ந்த பிரிட்டிஷ் சர்க்காரை எத்தனையோ முறை எதிர்த்திருக்கிறார். ஆனால், அவர் செயலில் குற்றங்காண முடியாத சர்க்கார், பின்பற்றுவோரையே குறை சொல்லுவது வழக்கம்!

மகாத்மாஜி இந்திய அரசியலில் கலப்பதற்கு முன்னே, அங்கங்கே சில ரகசியப் புரட்சிக்காரர்கள் இருந்தார்களே யொழிய, சட்ட வரம்பு மீறிய கட்டுப்பாடான ராஜீயப் போராட்டம் எதுவும் நேரடியாக நடக்கவில்லை. மகாத்மா காந்திதான் அதற்கு வழி காட்டினர். அஹிம்ஸா தர்ம சத்தியாக்கிரகம் என்ற அபூர்வமான வொரு முறையை அவர் வகுத்தார். எதிரியிடம் அவர் குரோதம் கொள்வதில்லை; அன்பும் அனுதாபமுமே கொள்வார். போராட்டத்தை விட, சகலரும் கௌரவமாய், கண்ணியமாய் வாழத் தக்க ராஜிதான் அவருக்கு முக்கியம். அபேதவாதிகளோடு ராஜி, ராஜாக்க ளோடு ராஜி, முதலாளிகளோடு ராஜி, இந்திய சர்க்காரோடு ராஜி—எல்லோரோடும் ராஜிக்கு அவர் தயார். ஆனல், அடிப் படையில் அவர் ஏழை பங்காளன். சர்வ ஜனங்களும் சுபிட்ச மாய், கௌரவமாய், சுதந்தரமாய் வாழத் தக்க கற்பனை உலகம் ஒன்று அவருக்கு உண்டு. ஒவ்வொரு ராஜியும் அந்தக் கற்பனை உலகை நோக்கி ஏறும் ஒரு படியாக இருக்க வேண்டும் அவருக்கு. ராஜியின்றிப் போராட்டம் மூளும்போது, எவ்வளவு பெரும் தியாகத்துக்கும் அவர் அஞ்சமாட்டார். ஆனல், எதிரிக்கு மட்டில் துளித் தீங்கு கூடப் புரிய அவர் சம்மதியார்.

காந்திஜீ சிறையி லிருந்தார். அவரைச் சிறையிலே போட்ட இர்வின் பிரபு இந்தியச் சட்டசபையிலே பேசினர். தாம் சிறைக்குள் தள்ளிய அதே காந்தியைப் பற்றி, அந்தக் காந்தி சிறையிலே நலிந்து கொண்டிருந்த காலத்தில், அவர் என்ன சொன்னர் தெரியுமா?

"காந்தி எவ்வளவு தவருன அபிப்பிராயம் கொண்டிருக் கிருர் என்று வேண்டுமானுலும் ஒருவர் நினைக்கலாம். அவர் பெயரால் நடத்தப் பெறும் இயக்கத்தின் பலன்கள் எவ்வளவோ வருந்தத் தக்கவையாகக் காணப்படலாம். என்ருலும் காந்தியின் ஆத்ம சக்தியை மாத்திரம் யாரும் அங்கீகரித்தே ஆக வேண்டும். தாம் நேசிக்கும் இந்தியாவின் லட்சியத்தைப் பெறுவதற்காக, எவ்வளவு மகத்தான தியாகமும் பெரிதல்ல வென்று அவர் நினைக்கிருர். அந்த ஆத்ம சக்தியால் தூண்டப்பட்டே அவர் இவ்வாறு நினைக்கிருர். தம்முடன் மாறுபட்ட அபிப்பிராய முடையவர்கள் ஒரு மாய வேதாந்தத்துக்கு இரையாகிப் போனவர் என்றே அவரும் கருதுவார் என நான் நம்புகிறேன்" என்றுதான் இர்வின் பிரபு கூறினர்.

முதல் முறை காந்திஜீயை விசாரணை செய்த புரூம்ஸ் பீல்டு என்ற மாஜிஸ்திரேட், கைதிக் கூண்டிலே உட்கார்ந்திருந்த காந்திஜீயை நோக்கி, "நீங்கள் மகாத்மா. சட்டம், மனிதர்களின் பெருமையைக் கவனிப்ப தில்லையே" என்று வருந்தினர்.

இவ்வாறு எதிரிகளும், அவருடன் போராடும் பொழுதே, அவரைப் போற்றி வணங்குவதன் காரணமென்ன? காந்தி ஒரு குணக் குன்று; அவர் நெறி புனிதமானது.

காந்தியின் வாழ்க்கை முழுவதும் தியாகத்தா லமைந்தது. சத்திய சோதனையிலே ஈடுபட்டது. அஹிம்சா தர்ம நெறியிலே ஊறியது.

இன்று தினம் ஸயின்ஸ் உலகத்தின் மன்னவனுய் விளங்குபவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். ஸயின்ஸ் ஆராய்ச்சிகளிலே ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்கியவர் அவர். "தாங்களே உலக சமாதானத்தை ஸ்தாபிக்கக் கூடியவர். தங்களிடம் எனது பக்தியையும் வியப்பையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நேருக்கு நேரே தங்களைச் சந்திக்க விரும்புகிறேன்" என்று அவர் காந்திஜீக்கு ஒருமுறை செய்தி யனுப்பினுர். ஆங்கில மொழியிலே தலைசிறந்த ஆசிரியர்களான பெர்ணுடு ஷா, ரஸ்ஸல் ஆகியவர்களும் உன்னதமான பிரஞ்சு ஆசிரியராகிய ரோமேன் ரோலந்தும் காந்தியிடம் பரம பிரேமை வைத்தவர்கள். பர்மிங்ஹாம் அரண்மனை பிஷப், அமெரிக்க பிஷப் ஹோம்ஸ் முதலிய எத்தனையோ கிறிஸ்தவக் குருக்களுக்கு அவரிடம் பெரு வியப்பு. அமெரிக்காவிலே இன்று பிரபல ஆசிரியர்களுள் ஒருவராக விளங்கும், அப்டன் ஸிங்கிளேருக்கு, காந்திஜீயிடம் பெரும் பற்றுதல். இன்னும் உலகிலுள்ள எத்தனையோ அறிஞர்கள் காந்திஜீயைக் கொண்டாடுகிருர்கள். இத்தனைக்கும் காரணம் என்ன? காந்திஜீயின் உபதேசம் மகா புனிதமானது. ஆனல், அவர் வாய் வேதாந்தியல்ல; கர்மவீரர்.

பல சத்தியாக்கிரகப் போர்கள் நடத்தி ஜயம் பெற்ருர் காந்தி. காந்தி பல, சிக்கல்களையும் சிடுக்கறுத்து, மிக எளிய திட்டங்களே போடுவார். ஆனல், அவை வாழ்க்கையின் அடிப்படையையே மாற்றிவிடக் கூடியவையா யிருக்கும். பிறர் பெரிய பெரிய திட்டங்கள் போட்டார்கள்; இந்தச் சர்க்காருக்குப் பதில் சர்க்கார் அமைத்து விடுவோம் என்ருர் சிலர். ஆனல், காந்தி அற்பமான உப்புச் சட்டத்தைத் தாக்கினர். அது காந்தி—இர்வின் ஒப்பந்தத்தில் முடிந்தது.

காந்தி, கதர் கட்டச் சொன்னார். லங்காஷயர் கூக்குரல் போடத் தொடங்கி விட்டது. தேசத்திலே கதர், தேச பக்தரின் புற அடையாளமாய் விளங்கிற்று; எளியவர்களின் காமதேனுவு மாயிற்று.

ஹரிஜன சேவையில் தமது முழு ஆற்றலோடும் இறங்கினார் காந்தி. அமெரிக்காவில் நீக்ரோக்கள் பட்ட கஷ்டத்தைச் சரித்திரத்தில் நாம் படித்ததில்லையா? ஹிந்து தர்மத்தையே அரித்து வருவது இந்தத் தீண்டாமைதான் என்று அவர் கண்டு கொண்டார். உடனே அதை ஒழிக்கும் வேலையில் அவர் தீவிர மாய் இறங்கி விட்டார். இன்று நமக்கு அதன் பூரணப் பெருமையும் தெரியாது; பின் சந்ததியார், காந்திஜி துவக்கி வைத்த இந்தக் காரியத்தின் முழு மதிப்பையும் உணர்ந்து போற்றப் போகிறார்கள்.

இதே மாதிரிதான், மதுவிலக்கு, ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமை என்று தெளிவாய், சுலபமாய் விளங்கும் திட்டங்களையே அவர் வகுக்கிறார்.

பிரமாதமான பொருளாதார சாஸ்திரமோ, அபாரமான வேத வேதாந்தங்களோ, அவர் பேசுவதில்லை. நூற்றுக்கு ஐம்பது நிலவரியைத் தள்ளு, பெரிய சம்பளங்களைக் குறை, சத்தியம் பேசு, அஹிம்சையைக் கடைப்பிடி—இப்படித்தான் அவர் சொல்லுவார்.

காந்திஜியின் உபதேசங்கள் எளியவர்களைப் போய்ச் சேர்ந்தால், அவர்கள் மிகத் தெளிவாய்ப் புரிந்து கொள்ளுகிறார்கள். பல சிக்கல்களும் பின்னல்களும் நிறைந்த படித்த வகுப்பார் மனத்திலே புகுந்தால், அந்த உபதேசங்கள் திக்குத் திசை தெரியாமல் தவிக்க ஆரம்பித்து விடுகின்றன.

"காந்தியின் வாழ்க்கை, வீரத்தனம் என்ற சொல்லின் பூரண அர்த்தத்தில், வீரத்தனம் நிறைந்தது" என்கிறார் கந்தர். அது முற்றிலும் வாஸ்தவமாகும். காந்தி, கனவு காணுமொரு லட்சியவாதி; ஆனால், அதே சமயத்தில் பெருங் கர்ம வீரனு மாவார். பொது உடைமை, அபேதவாதம், பாஸிஸம், அது இது என்ற ராஜீய, பொருளாதார தத்துவங்களெல்லாம் அவரைக் கட்டுப்படுத்த மாட்டா. அவர் ஜனங்களை அன்பினால் ஆளும் சர்வாதிகாரி; அஹிம்சை ஆயுதம் தாங்கிய சேனாதிபதி; பாமர மக்களின் உரிமைகளுக்குப் போராடும் ஜனநாயகவாதி.

இந்தியாவின் ஆத்மாவைச் சுதந்தர எழுச்சி கொண்ட அதன் தேசியத்தினிடம்தான் காணவேண்டும். அந்தத் தேசியத்தின் ஆத்மா இன்று காந்தியிடம் இருக்கிறது. சுமார் சென்ற முப்பது வருஷ காலமாக, இந்தியாவின் தேசீயப் போராட்டம், காந்தியின் போராட்டமாகும்; காந்தியின் போராட்டம், தேசீயத்தின் போராட்டமாகும். இந்திய தேசீயக் காங்கிரஸின் முழுப் பலமும் இன்று மகாத்மா காந்திதான். காந்தியும் காங்கிரஸும் ஒட்டாததுபோலச் சில சமயம் தோன்றும். ஆனால், அது சாத்தியமில்லை; சாத்தியப்படவும் இல்லை. காந்தியை ஒதுக்கி வைத்து, காங்கிரஸ் ஒன்றும் செய்யமுடியாது; ஏற்கெனவே அந்த முயற்சி நடந்த ஒன்றிரு சமயங்களில் காங்கிரசுக்குத் தோல்விதான் ஏற்பட்டது. இப்படி ஒரு மனிதனிடம் காங்கிரஸ் அடைக்கல மாவதா என்று சிலர் ஆயாசப்படலாம். என்ன செய்வது? காந்தியும் காங்கிரஸும் உயிரும் உடம்பும்போல் ஆகியிருக்கும் போது, யார் என்ன செய்ய முடியும்? தவிர, எதற்குத்தான் அது? உத்தமோத்தமமான மனிதன்—புல்லினிலே வயிரப் படை தோற்றுவித்தது போல, நாட்டுக்குப் புத்துயிரும் புதிய உரமும் நல்கிய மகா புருஷன் — காந்தி இருக்கும் போது, காங்கிரஸ் ஊறுபட்டுவிடுமோ என்று நாம் ஏன் கவலைகொள்ள வேண்டும்? காந்திஜி ஆண்டவன் கைக் கருவி; ஆண்டவனைப் பிரதிபலிக்கும் கண்ணாடி.

# பண்டித ஜவாஹர்லால்

**பண்டித** ஜவாஹர்லால் சிறையில் இருந்தார். அவருடைய ஐம்பத்தைந்தாவது ஜன்ம தினம் வந்தது. அன்று மகாத்மாஜி லண்டன் நண்பர்களுக்கு அனுப்பிய செய்தி இது:

> "ஜவாஹர்லால் மனித குலத்தின் ஒரு மாணிக்கம். அவரைப் பெற்ற நாடு பாக்கியசாலியாகும். அவரைப் போன்ற மனிதர்களைச் சிறையில் போடுவதல்லாமல், அவர்களுக்கு வேறு உபயோகம் காணாத ஓர் ஆட்சி முறையிலே, ஏதோ கோளாறு இருக்கத்தான் வேண்டும்."

இதைவிட நாம் என்ன சொல்லக்கிடக்கிறது?

ஜவாஹரின் குடும்பம் புராதனமான காஷ்மீரப் பிராம்மண வம்சத்தைச் சேர்ந்தது. தந்தை மோதிலால், இந்தியாவின் மிகச் சிறந்த வக்கீல்களில் ஒருவர்; பெரும் செல்வர். ராஜ போகமாய் வாழ்ந்து, பின்னல் அதை யெல்லாம் துறந்து, தேசப் பணியில் ஈடுபட்டுச் சிறையும் சென்றவர். நவ இந்தியாவின் சிருஷ்டிகரில் ஒருவர். இத்தகைய உத்தமரின் புதல்வர் ஜவாஹர்.

ஜவாஹர் 1889-ஆம் வருஷம் நவம்பர் மாதம் 14-ஆம் தேதி அலஹபாத்தில் ஜனித்தார். சிறு வயதிலேயே ஓர் ஆங்கிலேயரை உபாத்தியாயராகப் பெற்று மேல்நாட்டுக் கல்வி பயின்றார். 1905-ஆம் வருஷம் இங்கிலாந்து சென்று ஹாரோவிலும், கேம்பிரிட்ஜ் கல்லூரியிலும் படித்தார். 1912-ஆம் வருஷம் இந்தியாவுக்குத் திரும்பி வந்து, சட்டக் கல்வி பயின்று, அலஹபாத்தில் ஓர் அட்வொகேட் ஆகத் தொழிலில் இறங்கினர். ஆனல், வெகு சீக்கிரத்திலே ராஜீயம் அவரைப் பிடித்து இழுத்துக் கொண்டது. 1918-ஆம் வருஷம் இந்தியன் ஹோம் ரூல் லீக் காரியதரிசியானர். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினருமானர். 1929-ஆம் வருஷம் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் பொதுக் காரியதரிசியானர். 1929, 1935, 1936 இந்த மூன்று வருஷங்களிலும் திரும்பத் திரும்பக் காங்கிரஸ் அக்கிராசனர் பதவி வகித்தார். தேசத்துக்காக எட்டுத் தடவை

சிறை சென்ருர். 1946-இல் நான்காம் முறையாகக் காங்கிரஸ் தலைவரானுர். இன்று (1947-ல்) இந்திய இடைக்கால சர்க்காரில், உப அக்கிராசனராக இருந்துவருகிருர்.

ஜவாஹர் முதன்முதலாக அலஹபாத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் அரசியல் பிரசங்கம் செய்தார். அப்போது அவருக்கு மகா கூச்சம். மிகுந்த அவநம்பிக்கையோடுதான் பேசினுர். என்ருலும், பேச்சு முடிந்ததும், டாக்டர் ஸாப்ரூ ஆனந்தம் அடைந்து, மேடைக்கு ஓடிவந்து ஜவாஹரைக் கட்டித் தழுவிக் கொண்டுவிட்டார். ஆனுல், அந்த ஸாப்ரூவின் ராஜீயம் ஜவாஹருக்கு இன்று துளிக்கூடப் பிடிக்காது.

தந்தை மோதிலால் நேருவைத் தீவிரமான தேசீயப் போரில் இழுத்துவிட்டவர் பண்டித ஜவாஹர். அரண்மனை போன்ற 'ஆனந்தபவ'னைத் தேசத்துக்கு–தேசீயத்தின் பிரதிநிதியான காங்கிரஸுக்கு—தானங் கொடுத்துவிடும்படி மோதிலாலைத் தூண்டியவரும் ஜவாஹர்தான் என்று சொல்வதுண்டு. "இந்த மாளிகையை யாருக்காக வைத்திருக்கிறீர்கள்? எனக்கு வேண்டாம். பின்னே யாருக்காக?" என்று, தந்தைக்கு அவர் அன்று எழுதிய கடிதம் மிக உருக்கமானது என்று ஞாபகம்.

அதிகாரிகளின் அநாவசிய கெடுபிடிகளைக் கண்டால், அதற்குப் பணிய ஜவாஹருக்கு என்றுமே மனம் வருவதில்லை. 1919-ஆம் வருஷம் தாய் ஸ்வரூபராணியையும் மனைவி கமலாவையும் வைத்தியத்துக்காக வடக்கே முஸோரிக்கு அழைத்துச் சென்ருர். அப்போதுதான் ஓர் ஆப்கன் போர் நடந்து, பிரிட்டிஷ் இந்திய சர்க்காருக்கும் ஆப்கன் சர்க்காருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நிகழ்ந்துகொண்டிருந்தன. முஸோரியில் எந்த ஹோட்டலில் ஜவாஹர் தங்கியிருந்தாரோ அதே ஹோட்டலில் ஆப்கன் சர்க்காரின் சமாதான தூதர்களும் வந்து தங்கியிருந்தார்கள். என்ருலும் அவர்கள் யாரோ, இவர் யாரோ; அவர்களிடம் பேசும் உத்தேசமே இவருக்குக் கிடையாது. ஆயினும், ஸ்தலப் போலீஸ் அதிகாரிகள் மிரட்சியடைந்து, இவரிடம் ஓடிவந்து, அந்த ஆப்கன் தூதர்களுடன் இவர் பேசக்கூடாது என்று ஒரு கட்டளையைச் சாதரா செய்தார்கள். "இந்தக் கட்டளைக்கு நான் கீழ்ப்படிய மாட்டேன்" என்று தெரிவித்தார் ஜவாஹர். உடனே ஜவாஹரை அதிகாரிகள் கைதுசெய்து, முஸோரி ஜில்லாவை விட்டு வெளியே கொண்டு

போய் விட்டுவிட்டார்கள். அப்போதுதான், கிஸான்களிடம் பழக, முதல்முறையாக ஜவாஹருக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

முதல்முதலில் அபேதவாதப் பற்றுக்கொண்ட பிரபல இந்தியத் தலைவர் ஜவாஹர்தான். 1927-ஆம் வருஷம் ருஷியாவுக்கு நேரே சென்று வந்த பின், ஸோவியத் ருஷிய வாழ்க்கை முறையைப்பற்றி, அனுதாபத்துடன் அவர் எழுதிய சில கட்டுரைகள், இந்தியப் பத்திரிகைகள் பலவற்றில் தொடர்ச்சியாக வெளிவந்தன. காங்கிரஸுக் குள்ளேயே அபேதவாதக் கருத்துக்களைப் பரப்பவும் ஜவாஹர் முயன்றார். அவரும் காலம் சென்ற ஸ்ரீ எஸ். சீனிவாசையங்காருமாகச் சேர்ந்து, பூரண சுயேச்சைக் கட்சி யொன்றையும் காங்கிரஸுக் குள்ளே அமைக்க முயன்றார்கள், 'பூரண சுயேச்சையே காங்கிரஸின் லட்சியம்' என்று காங்கிரஸ் தீர்மானம் செய்யும்படி செய்தது இவர்களின் இந்த முயற்சியின் பலன்தான்.

லாகூர்க் காங்கிரஸில் தமக்கு வந்த மகுடத்தை நிராகரித்து, ஜவாஹருக்குச் சூட்டும்படி செய்தார் மகாத்மா காந்தி. ஜவாஹர் முதல் முறை ராஷ்டிரபதியான வரலாறு இப்படி. ஆனால், இரண்டாம் முறையிலும் மூன்றும் முறையிலும், நான்காம் முறையிலும் தம் சொந்தச் செல்வாக்கினாலேதான் அவர் அதைப் பெற்றார்.

ஜவாஹரின் மனைவி கமலா பல வருஷங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தாள். ஜவாஹர் சிறையிலிருந்தபோது, கமலாவின் நோய் மிகவும் அதிகரித்தது. "மீதியுள்ள தண்டனைக்காலம் பூராவும் ராஜீயத்தில் கலப்பதில்லை என்று வாய்மொழியாகச் சொன்னால் போதும். உம்மை விடுதலைசெய்து விடுகிறோம். நீர் உம்முடைய மனைவியின் பக்கத்தில் போயிருக்கலாம்" என்று அதிகாரிகள் எவ்வளவோ சொன்னார்கள். ஜவாஹர் இசையவில்லை. "அப்படி வாக்குக் கொடுக்கவே கொடுக்காதீர்கள்" என்று கமலாவுங்கூட ஜவாஹரை வேண்டிக்கொண்டாள்! அவளும் அவ்வளவு தன்மதிப்பும் தியாக உணர்ச்சியும் நிறைந்தவள். இத்தகைய அருந் துணைவியை 1936-ஆம் வருஷம் ஜவாஹர் இழந்து விட்டார். வியாதியிலிருந்து மீளாமல் அவள் காலமாகி விட்டாள்.

காந்திஜிக்கும் ஜவாஹருக்கும் அபிப்பிராய வேற்றுமைகள் ரொம்ப உண்டு. என்றாலும், இருவரும் பரஸ்பரம் மிகுந்த

வாத்ஸல்யம் கொண்டவர்கள். ஜவாஹரைத் தம்முடைய உத்தம புத்திரன்போல் மகாத்மா பாவிக்கிறார். ஜவாஹருக்கும் காந்திஜியிடம் மிகுந்த மரியாதை. இந்தியாவில் மட்டிலும் அல்ல, உலக மதிப்பிலேயே, காந்திஜிக்கு அடுத்தபடியான இந்தியத் தலைவர் ஜவாஹர்லால்தான். காந்திஜிக்கு மேனாட்டு லோகாயத நாகரிகம் பிடிக்காது; ஜவாஹருக்கு அதிலே ஓரளவு பிரேமையுண்டு. காந்திஜியின் 'ராம ராஜ்ய'த்திலே முதலாளிக்கும் தொழிலாளிக்கும், மன்னனுக்கும் பிரஜைகளுக்கும் இடமுண்டு. ஆனால், அந்த மன்னனும் முதலாளியும் தர்மகர்த்தாக்களைப்போல் நடந்து கொள்வார்கள். ஜவாஹரின் லட்சியமான அபேதவாத உலகில் அதெல்லாம் கிடையாது. சுதந்தர இந்தியாவின் தீமைகள் ஒழிவதற்கு மட்டிலுமல்ல, இந்தியா சுதந்தரமடைவதற்கேகூட, அபேதவாதம் தேவை என்ற கருத்துக்கொண்டவர் ஜவாஹர். ஆனால், 'கம்யூனிஸ்ட்' என்ற பொது உடமை வாதிகளின் பலாத்காரம் ஜவாஹருக்குப் பிடித்தமில்லை. மகாத்மாஜியின் அஹிம்சா தர்ம தத்துவத்தில் ஜவாஹருக்கு வரவர அதிகப் பற்றுதல் ஏற்பட்டுவருகிறது.

சில கிராமவாசிகளை அஹிம்சா தர்மத்துக்குத் தாம் தயார் செய்த விதத்தை ஒருமுறை தீனபந்து' ஆண்டிரூஸிடம் ஜவாஹர் சொல்லியிருக்கிறார்:

"உங்கள் கண்ணுக்கு முன்னே போலீஸார் என்னைக் கைதுசெய்து விலங்கிட்டார்களானால், நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று அந்த ஜனங்களை ஜவாஹர் கேட்பார்.

"அவர்கள் மேல் பாய்ந்து விழுந்து, உங்களைத் தப்புவித்து விடுவோம்" என்று பதில் வரும்.

"இல்லை, இல்லை. அதுதான் நீங்கள் செய்யக்கூடாது. நீங்கள் கலங்காமல் பரிபூரண அமைதியோடு இருக்கவேண்டும். ஓர் அடிகூட இருந்த இடத்தைவிட்டு நகரக்கூடாது" என்பார் ஜவாஹர்.

அவர்களுக்கு இது விசித்திரமாய் இருக்கும். ஒன்றும் புரியாமல் அவர்கள் ஆச்சரியத்துடன் விழிப்பார்கள்.

"இதுமட்டிலுமல்ல. என்னை அவர்கள் தடியால் அடித்தாலும் நீங்கள் அப்படியே பொறுமையோடிருக்கவேண்டும்."

"அதை எங்களால் சகிக்க முடியாதே?"

"சகித்துத்தான் ஆகவேண்டும்."

இந்த மாதிரியே திரும்பத் திரும்ப உபதேசித்து, அந்த ஜனங்களை ஜவாஹர் பக்குவப்படுத்தினாராம்.

ஜவாஹர் அருமையாய் ஆங்கிலம் எழுதுவார். அவருடைய நடை மிக உயர்தரமான தென்றும் உலகிலேயே ஐந்தாறு பேர்தான் அவர் மாதிரி ஆங்கில மெழுதக்கூடியவர்கள் இருக்கிறார்கள் என்றும் ஜான் கந்தர் என்ற பிரபல அமெரிக்க எழுத்தாளர் கூறுகிறார். ஜவாஹரின் பூர்விக சொத்தெல்லாம் அநேகமாய்த் தேச கைங்கர்யத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது. தம் எழுத்துக்களின் மூலம் கிடைக்கும் பணத்தைக்கொண்டே அவர் ஜீவிக்கிறார்.

ஜவாஹருக்குப் பிரிட்டிஷாரிடம் பகைமை கிடையாது. பிரிட்டனின் ஏகாதிபத்திய வெறியையும் இந்தியாவைப் பிரிட்டன் சுரண்டுவதையுந்தான் அவர் வெறுக்கிறார். அப்படியிருந்தும், காந்திஜியிடம் உள்ள பயத்தைவிட, ஜவாஹரிடம்தான் பிரிட்டிஷாருக்கு அதிகப் பயமாம். காரணம் அவருடைய அபேதவாதந்தான். ஆயினும், இந்திய அபேதவாதிகளுடன் ஒன்றுபடாமலும் காந்தி தர்மத்திலே அடியோடு மூழ்கிவிடாமலும், ஜவாஹர் தன்னந் தனியராய் நிற்பது ஒரு விசித்திரமல்லவா?

# மௌலானா அபுல்கலாம் ஆஜாத்

இந்தியாவில் மட்டுமல்ல; எங்கெங்கே அரபு பாஷையும், பெர்ஷிய பாஷையும் பேசப்பட்டு வருகின்றனவோ அங்கெல்லாம் கீர்த்தியும் செல்வாக்கும் பெற்றவர் மௌலானா அபுல்கலாம் ஆஜாத். "எப்போதாவது உலக மதங்கள், நாகரிகங்கள் இவைகளின் மகாநாடொன்று, ஆக்ராவில் உள்ள அக்பர் மசூதியின் பெரிய ஹால் ஒன்றிலே கூடுமானால், அதிலே நான் கலந்துகொண்டால், அந்த மகாநாட்டுத் தலைமைவகிக்க மௌலானா அபுல்கலாம் ஆஜாதைத்தான் நான் பிரரேபிப்பேன்" என்று ராஜாஜி ஒரு சமயம் அவரைப் புகழ்ந்துள்ளார். ஏன் என்றால், அவ்வளவு அரிய பண்டிதர் மௌலானா ஆஜாத். அவருடைய தகப்பனார், பாட்டனார் ஆகிய முன்னோர்கள் அனைவருமே பல தலைமுறைகளாய் முஸ்லீம் மத நூல்களில் சிறந்த பண்டிதர்கள்.

மௌலானா ஆஜாதின் தந்தை முகம்மது கைருத்தீன், மதப் பண்டிதரும் சூபியுமாக டில்லியில் வாழ்ந்தார். டில்லியில் மட்டுமன்றி, குஜரத், கத்தியவார், பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களிலெல்லாம் அவருக்கு ஆயிரக்கணக்கான சிஷ்யர்கள் இருந்தார்கள், முஸ்லீம்களேயன்றி, பல ஹிந்துக்களும் அவருடைய சிஷ்யர்களாயிருந்தார்கள். 1857-ஆம் வருஷம் 'சிப்பாய்க் கலக' காலத்தில் பிரிட்டிஷ் ஸோல்ஜர்கள் புரிந்த அட்டூழியங்களைச் சகியாமல், முகம்மது நபியின் அவதார ஸ்தலமான மெக்காவுக்கு, கைருத்தீன் போய்விட்டார். மௌலானா ஆஜாத் மெக்காவில்தான் 1888-ஆம் வருஷம் பிறந்தார். அரபுதான் உண்மையிலே ஆஜாதின் தாய் மொழி. ஏனென்றால், அவருடைய தாயாருக்கு வேறே எந்த பாஷையும் தெரியாது. தந்தையிடமிருந்துதான், ஆஜாத் உருது பாஷை கற்றார்.

இந்தியாவில் இருந்த சிஷ்யர்கள் வேண்டிக்கொண்டதால், ஆஜாதின் தந்தை கைருத்தீன், 1898-ஆம் வருஷம் மீண்டும் கல்கத்தாவில் வந்து குடியேறினார். ஆஜாதுக்குச் சிறு வயதில் அஹம்மது என்று பெயர். பிரோஷ் பக்த் என்றும் அவரைத் தந்தை அழைப்பார். மகனுக்கு ஆங்கிலக் கல்வி கூடாதென்று

கைருத்தீன் தீர்மானித்தார். கெய்ரோவில் உள்ள 'அல்—அஷார்' என்ற சர்வ கலாசாலைக்கு மகனை அனுப்பினர். அங்கே தேர்ச்சி பெற்று ஆஜாத் திரும்பிவந்தார். பதினறு வயதிலேயே அவரை ஒரு பெரிய மேதை என்று எல்லோரும் கொண்டாடத் தொடங்கினர்கள். பதினறு வயதில், ஆஜாத் ஓர் உபாத்தியாய ராகிவிட்டார்.

அவரிடம் பாடம் கேட்ட மாணுக்கர்களில், வயது முதிர்ந்த ஒரு பட்டாணியர் இருந்தார். தர்க்க சாஸ்திரம் சம்பந்தமான 'காயாஸ்' 'இஸ்தாக்ரா' என்ற இரண்டு வார்த்தைகளுக்கும் ஆஜாத் அர்த்தம் சொல்லிக்கொடுத்தார். "காயாஸ் என்ருல் பொதுவிலிருந்து சிறப்புக்கு; அதாவது மேலிருந்து கீழே. இஸ்தாக்ரா என்ருல், சிறப்பிலிருந்து பொதுவுக்கு; அதாவது கீழிருந்து மேலே" என்று ஆஜாத் பன்னிப்பன்னிச் சொல்லியிருந்தார். அடுத்த நாள் அந்தப் பாடத்தில் கேள்வி கேட்டபோது, பட்டாணியர் அத்தனையையும் தலைகீழாய் மாற்றிச் சொன்னர். ஆஜாத் ஆத்திரங்கொண்டு "உமக்குப் படிப்பு வராது. வீட்டுக்குப் போய்ப் புல்லைத் தின்னும்" என்று திட்டிவிட்டார். பட்டாணியர் ஒரு நாள் பூராவும் உணவு கொள்ளவில்லை. இதைக் கேள்வியுற்ற கைருத்தீன் பெருங் கோபத்தோடு மகனிடம் வந்தார். "உன் செயல் உனக்கு வெட்கமாயில்லையா? பட்டாணியருக்கு உன் தகப்பனைப் போல் வயசாயிற்றே. போய் அவரிடம் மன்னிப்புக் கேள். சாப்பிடும்படி அவரை வேண்டிக் கொள்" என்ருர். ஆஜாத் அப்படியே செய்தார். பட்டாணியரோ "நீங்கள் என் உபாத்தியாயர். என்னைத் தண்டிக்க உங்களுக்கு உரிமையுண்டு. என்னை நீங்கள் மன்னிப்புக் கேட்க அவசியமில்லையே" என்று சொன்னர். ஆஜாத் மன முருகிவிட்டார். பட்டாணியர் உணவுகொள்ளும் வரையில், அவரை விட்டு ஆஜாத் நகரவேயில்லை.

ஆஜாத் பதினைந்து வயதில் 'லிஸானஸ் ஸித்திக்' (உண்மையின் குரல்) என்ற பெயருடன் ஓர் இலக்கியப் பத்திரிகை நடத்தினர். அதன் புகழ் பரவியது. லாகூரில் 'அஞ்சுமானி ஹிமாயதி இஸ்லாம்' என்று ஒரு சங்கம் உண்டு. அதில் இவரை 1904-ஆம் வருஷம் ஒரு பிரசங்கத்துக்குக் கூப்பிட்டார்கள். பிரபல கவிஞர் ஹாலி, உன்னதமான உர்தூ எழுத்தாளர் நாஜிர் அஹமது, கீர்த்தி மிக்க கவிஞர் முகம்மது இக்பால் ஆகிய பல பிரமுகர்கள் இந்தப் பிரசங்கத்தைக் கேட்க வந்தார்கள். கவிஞர் ஹாலியின்

ஒரு புத்தகத்தைப்பற்றி ஏற்கெனவே ஆஜாது தமது பத்திரிகையில் மிக விரிவாகவும் அருமையாகவும் ஒரு மதிப்புரை எழுதியிருந்தார். அந்தப் பொருட் செறிவுள்ள மதிப்புரையை எழுதிய ஆசிரியரைப் பார்க்க வேண்டுமென்று கவிஞருக்கு ஆசை. அவருக்கு ஆஜாத் அறிமுகம் செய்விக்கப்பட்டபோது, இந்தச் சிறு பையனை ஆஜாத் என்று அவர் எண்ணவில்லை; ஆஜாதின் மகன் என்று நினைத்தார். இவரே ஆஜாத் என்று அறிந்ததும், அவர் எல்லையில்லா ஆச்சரியமடைந்தார். பிரசங்கம் நடந்த போதோ, அறிஞர் அனைவருமே மேலும் பிரமித்து விட்டார்கள்.

ஆஜாத் சிறு வயதிலே கவிகளும் எழுதுவார். காலீப் என்ற மகா கவியின் சிஷ்யரான நாதிர்க்கான் என்பவருக்கு இதில் நம்பிக்கையில்லை. ஆஜாத் எவையோ பழங் கவிதைகளின் அடிகளைத் திருடிக் கோத்துப் பாட்டுப் பண்ணிவிடுகிறார் என்று அவர் எண்ணினார். ஒரு நாள் ஒரு புத்தகக் கடையின் எதிரே, ஆஜாதை நாதிர்க்கான் சந்தித்தார். "நீ என்னவோ பாட்டு மேல் பாட்டாய்க் கட்டித் தள்ளுகிறாயாமே. எல்லாம் நீயே கட்டுபவையா? எங்கேயாவது திருடுகிறாயோ?" என்று கேட்டார். "நான்தான் கட்டுகிறேன்" என்று சொன்னார் ஆஜாத். "அப்படியானால், இதோ ஒரு தாரா இருக்கிறது: யத் ந ஹோ, ஷத் ந ஹோ, அபத் ந ஹோ — இதை வைத்துக் கொண்டு பாட்டுக் கட்டு, பார்க்கலாம்" என்றார் நாதிர்க்கான். மழை மேகம்போல் பல அடிகளைக் கமனம் செய்து சொரிந்துவிட்டார் ஆஜாத். நாதிர்க்கானின் பரவசம் சொல்லி முடியாது. "ஸுபான் அல்லா, ஸுபான் அல்லா!" என்று கூச்சலிட்டுக்கொண்டு, பகிரங்கமான பஜாரில் கடை வாசலில் குதிக்கத் தொடங்கிவிட்டார். ஆஜாத் அந்தக் காலத்தில்தான் 'ஆஜாத்' என்ற புனை பெயருடனே பாட்டுகள் கட்டிவந்தார். அதுவே இன்றும் நிலைத்துவிட்டது.

1908-ஆம் வருஷம் ஆஜாதின் தந்தை காலமானார். அதன் பின்பு, ஒரு நண்பர் சொன்ன யோசனையின்பேரில், ஆஜாத் ஆங்கில இலக்கணப் புத்தகமும் அகராதியும் வைத்துக்கொண்டு ஆங்கிலம் கற்றார். அந்தக் காலத்தில் வங்காளப் பலாத்காரப் புரட்சிக்காரர் பலரிடம் ஆஜாத் நேசம் கொண்டார். ஆனால், அவர்களின் இயக்கத்தில், எவ்வளவு தூரம் இவர் சம்பந்தம் கொண்டார் என்று திட்டமாய்ச் சொல்வது சாத்திய

மில்லை. அப்போதுதான் தேசீய இபக்கம் வலுத்தது. பிரித்தாளும் தந்திரத்தை, சர்க்கார் தீவிரமாய்க் கையாண்டார்கள். முஸ்லீம்கள் தேசீயத்தை விட்டு விலகியிருப்பது, ஆஜாதுக்கு அளவிறந்த துயரம் தந்தது. அவர்களைத் தேசீயத்துக்குத் தூண்ட 'ஆல் ஹிலால்' (பிறை) என்ற பத்திரிகையை 1912-ஆம் வருஷம் ஆஜாத் ஆரம்பித்தார். அதன் வருஷச் சந்தா ரூபாய் பன்னிரண்டு. அந்தக்காலத்தில் இது பெரிய தொகையாகும். அப்படியிருந்தும் ஆறே மாதத்தில், அதன் சந்தாதாரின் எண்ணிக்கை பதினோராயிரம் ஆக உயர்ந்துவிட்டது. சந்தாதாரில் மிகப் பெரும்பான்மையோரும் முஸல்மான்கள். ஆஜாதின் எழுத்து, குத்தலும் விறுவிறுப்பும் இலக்கிய நயமும் செறிந்து விளங்கியது. சென்ற மகா யுத்த காலத்தில் அதன் சந்தாதார் தொகை இருபத்தையாயிரம் ஆயிற்று. அந்த இருபத்தையாயிரம் பிரதிகளில் ஒவ்வொரு பிரதியையும், பலபேர் கூடிக் கொண்டு வாசிப்பார்கள். நாட்டின் பல பாகங்களிலே ஆஜாதின் பத்திரிகைக்குச் செல்வாக்கு ஏற்பட்டது. அலஹபாத் ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகையான 'பயனீர்', ஆஜாதின் பத்திரிகையைப் பிரமாதமாய்த் தாக்கியது. ஆஜாதின் பத்திரிகையை அடக்க வேண்டுமென்று பார்லிமெண்டிலும் பலர் கேள்வி கேட்டார்கள். இந்திய சர்க்கார் சீறி யெழுந்தார்கள். ஆஜாதின் பத்திரிகை முதலில் கட்டிய ஜாமீனைப் பறிமுதல் செய்தார்கள். புதிதாய்ப் பதினாயிரம் ரூபாய் ஜாமீன் கேட்டார்கள். ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், டில்லி, பஞ்சாப், பம்பாய் ஆகியவற்றில் எல்லாம் அது நுழையக்கூடாது என்று தடையுத்தரவும் போட்டார்கள். ஆஜாதையும் வங்காள மாகாணத்தை விட்டு வெளியேற்றினார்கள். 'ஆல் ஹிலால்' நின்றுவிட்டது. 1916-ஆம் வருஷம் பீஹாரைச் சேர்ந்த ராஞ்சியில், ஆஜாதைப் பந்தோபஸ்துக் கைதியாகவும் சர்க்கார் சிறைப்படுத்திவிட்டார்கள். 1919-ஆம் வருஷந்தான் அவர் விடுதலையடைந்தார்.

1921-ஆம் வருஷம் வின்ட்ஸர் கோமகனான வேல்ஸ் இளவரசர் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்தார். அவரது பிரயாணத்தைப் பகிஷ்கரிப்பதில், ஆஜாதும் தேசபந்து தாஸும் முக்கியமான பங்கு எடுத்துக்கொண்டார்கள். இருவரும் சிறைத் தண்டனை யடைந்தார்கள். 1922-ஆம் வருஷம் முஸ்லீம் லீக், அகில இந்தியக் கிலாபத் கமிட்டி இரண்டுக்கும் மௌலானா

ஆஜாதுதான் தலைவரா யிருந்தார். 1923-ஆம் வருஷம் நடந்த காங்கிரஸுக்கு அவர் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது அவருக்கு வயது 35. இவ்வளவு சிறிய வயதில் காங்கிரஸ் தலைமைப் பதவி வகித்தவர் இதுவரையில் அவர் ஒருவர்தான். காந்திஜி அப்போது சிறையிலிருந்தார். தேச பந்து தாஸின் தலைமையில், சுயராஜ்யக் கட்சி தோன்றி, சட்ட சபைப் பிரவேசத்தை வற்புறுத்தியது. ராஜாஜியின் தலைமையில் மாறுதல் வேண்டாதார் கட்சி, அதை எதிர்த்தது. இரு கட்சி களுக்கும் சமரசமாக ஒரு தீர்மானத்தை ஆஜாதுதான் தயாரித்து நிறைவேற்றச் செய்தார். 'சட்டசபையில் நம்பிக்கை யுள்ளவர் அதற்குள் செல்லட்டும்; அதில் நம்பிக்கையில்லாதவர் நிர்மாணத் திட்டங்களில் ஈடுபடட்டும்' என்பதுதான் அந்தச் சமரசம். பின்னால் ஒவ்வொரு சட்ட மறுப்பியக்கத்திலும் சம்பந்தப்பட்டு, ஆஜாத் சிறை சென்றார். 1937-ஆம் வருஷம் பல மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்ட போது, காங்கிரஸின் அகில இந்தியப் பார்லிமெண்டரி சப்—கமிட்டி அங்கத்தினர் மூவரில் அபுல்கலாம் ஆஜாதும் ஒருவர். ராஜன் பாபுவும், சர்தார் படேலும் மற்ற இருவராவர். 1940-ஆம் வருஷம் 183 ஓட்டுகளுக்கு எதிரே 1,854 ஓட்டுகள் பெற்று, மீண்டும் ஆஜாத் ராஷ்டிரபதியானார். 1946-ஆம் வருஷ மத்தியில் தமது பதவியைப் பண்டித ஜவாஹர்லால் நேருவிடம் ஒப்படைத்தார். இப்போது (1947-ல்) நேரு சர்க்காரில் கல்வி மந்திரி பதவி ஏற்றிருக்கிறார்.

ஆஜாதின் தியாகம் அளவிட முடியாதது. ஒரு சமயம் முஸ்லீம் மத அதிகாரிகள் பலரும் லாகூரில் விசேஷ மகாநாடு ஒன்று கூட்டி, அகில இந்தியாவுக்கும் இஸ்லாம் மதத் தலைவராக 'இமாம்' என்ற பதவியை அவருக்கு அளிக்க முன்வந்தார்கள். அவர் மறுத்துவிட்டார். சில நாளில் அவர் சிறை சென்று 1923-ஆம் வருஷம் விடுதலையடைந்தபோது மீண்டும் 'இமாம்' பதவியை அவருக் களிக்க, ஜமையத்—உல்—உலிமா சபையார் முன் வந்தார்கள். அப்போதும், அவர் அதை மறுத்துவிட்டார்.

மௌலானா ஆஜாத், நேர்த்தியான உர்தூவில்தான் பேசுவார். ஆங்கிலத்தில் அதிகமாய்ப் பேசமாட்டார். ஆயினும், பற்பல ஆங்கிலக் கவிதைகளையும் நவீனமான இலக் கியங்களையும் ஏராளமாய்ப் படித்திருக்கிறார். காந்திஜியிடமும் காங்கிரஸ் காரியக் கமிட்டியிடமும் அவருக்கு எப்போதும் அப்ரிமிதமான செல்வாக்கு. அவரது சம்பாஷணை பொருள்

செறிந்திருக்கும். அவர் புத்திக்கூர்மை வாய்ந்தவர். இதனல்தான் "ஆஜாத் காங்கிரஸின் மூளை; ராஜன் பாபு அதன் இதயம்; படேல் அதன் நிர்த்தாட்சண்யமான முஷ்டி" என்று ஜான் கந்தர் வர்ணித்திருக்கிறார். ஆஜாத் இந்தியாவின் உத்தம புத்திரர்களில் ஒருவர்.

# யோகி அரவிந்தர்

பூமி குளிர்வதற்கு முன், நெருப்புப் பிழம்பாய் இருந்தது. இந்தியத் தேசியமும் ஒரு காலத்தில் அப்படித்தான் அனல் கக்கிக் கொண்டிருந்தது. அந்தக் காலத்தின் சூத்திரதாரிகளில் ஒரு முக்கியஸ்தர் பாபு அரவிந்த கோஷ்.

ஸ்ரீ அரவிந்தர் 1872-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-உ கல்கத்தாவிலே ஜனித்தார். அவருடைய தகப்பனாரான ஸ்ரீ கிருஷ்ண தனகோஷ், ஐ. எம். எஸ். பட்டம்பெற்ற பெரிய வைத்தியர். மேனாட்டு நாகரிகத்தில் மோகம் மிகுந்தவர். ஆகையால், அரவிந்தருக்கு ஏழு வயதாயிருக்கும்போதே, அவரையும் தம்முடைய மற்றும் இரண்டு மூத்த புதல்வர்களையும், ஸ்ரீ கிருஷ்ண தனகோஷ், படிப்புக்காக இங்கிலாந்துக்கு அனுப்பி விட்டார்.

முதலிலே மாஞ்செஸ்டரில் ஓர் ஆங்கிலக் குடும்பத்தோடு அரவிந்தர் வசித்தார். பின்னால், லண்டன் ஸெயிண்ட் பால் கலாசாலையில் சேர்ந்து படித்தார். கடைசியில் கேம்பிரிட்ஜ் கல்லூரியில் இரண்டு வருஷங்கள் கல்வி பயின்றார். படிப்பிலே அவர் மிகவும் திறமைகாட்டினார். சின்னக் குழந்தையாயிருந்த போதே, பிரஞ்சு பாஷையைக் கற்கத் தொடங்கிவிட்டார். தாமாகவே ஜெர்மன் பாஷையையும் இதாலி பாஷையையும் கற்று, கத்தே, டாண்டி ஆகிய பேராசிரியர்களின் நூல்களை மூலத்திலேயே படித்துவிட்டார். கிரேக்க பாஷையிலும் லத்தீன் பாஷையிலும் புலமையடைந்தார்.

1890-ஆம் வருஷம் இந்தியன் ஸிவில் ஸொர்வீஸ் போட்டிப் பரீட்சையில் தேறினார். அதன்மேல் இரண்டு வருஷப் பயிற்சிக் காலத்துக்குப் பிறகு, குதிரை யேற்றப் பரீட்சைக்கு ஆஜராகத் தவறிவிட்டார். அதனால், இந்தியன் ஸிவில் ஸொர்வீஸுக்கு யோக்கியதை யில்லை யென்று, அவரை அதிகாரிகள் தள்ளி விட்டார்கள். இச் சமயம் லண்டனில் பரோடா மகாராஜா கெயிக்வார் இருந்தார். அவரை, பாபு அரவிந்தர் போய்க் கண்டார். தமது பரோடா சமஸ்தானத்தில், ஸ்ரீ அரவிந்தருக்கு அந்த மன்னர் உத்தியோகம் அளித்தார்.

1893-ஆம் வருஷம் முதல் 1906-ஆம் வருஷம் வரையில், பதின்மூன்று வருஷ காலம் அந்தச் சமஸ்தானத்திலே பாபு அரவிந்தர் சேவை புரிந்தார். முதலிலே ரெவின்யூ இலாகாவிலும், பிறகு மகாராஜாவின் அரசாங்க மாளிகையிலும், அதன் பின்பு பரோடாக் கல்லூரியில் முறையே ஆங்கிலப் புரொபஸராகவும் உதவிப் பிரின்ஸிபாலாகவும் வேலை பார்த்தார். இங்கிலாந்தில் இருக்கையில், தகப்பனாரின் கண்டிப்பான கட்டளைப்படி, முற்றிலும் மேனாட்டுக் கல்வியே கற்று, துளியும் கீழ்நாட்டுக் கல்வியின் வாசனையற்று வாழ்ந்த அரவிந்தர், இப்போதுதான் முதல்முதலாகக் கீழ்நாட்டுக் கலைகளையும் சமஸ்கிருத பாஷையையும் வேறு பல இந்திய பாஷைகளையும் கற்கத் தொடங்கினார். இந்தக் காலத்திலே அவர் பல கவிகளும் கட்டலானார். புதுச்சேரியிலிருந்து பின்னால் பிரசுரமான அவருடைய பல கவிகள் இந்த நாட்களில் எழுதப்பட்டவையாகும்.

பரோடாவில் இருந்த காலத்திலேயே, அரசியலில் அவருக்குச் சிரத்தை விழுந்தது. ஆனால், பகிரங்கமாக அதில் பங்கு எடுத்துக்கொள்ள முடியவில்லை. 1905-ஆம் வருஷம் வங்காளப் பிரிவினையை எதிர்த்துப் பிரமாதமான கிளர்ச்சி நாட்டிலே எழுந்தபோது, அரவிந்தரால் சும்மா இருக்க முடியவில்லை. பரோடா உத்தியோகத்தை ராஜீனமாச் செய்துவிட்டு, பகிரங்கமாக அரசியலில் இறங்கினார்.

ஆயினும், 1902-ஆம் வருஷத்திலேயே அவரது ராஜீய சேவை ஆரம்பமாகி விட்டது. ரகசியமாகச் சில வருஷங்கள் வேலை செய்துவந்தார். அயர்லாந்தில் நடந்த ஷின்பீனர் இயக்கத்தைப் போல, ஒரு சுதேசி இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டிய ஏற்பாடுகளை அவர் செய்யலானார். 1906-ஆம் வருஷம் வங்காளத்தில் புதிதாய் ஆரம்பிக்கப்பட்ட தேசியக் கல்லூரியின் பிரின்ஸிபாலாக, கல்கத்தாவுக்குப் போய்ச் சேர்ந்தார். அதுவரையில் இந்திய தேசீயக் காங்கிரஸ் மகாசபை, மிதவாதிகளின் கையில் இருந்தது. காங்கிரஸைக் கைப்பற்றி, நேரடியான ஒத்துழையாமையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அப்போது உதித்த புதிய தேசீய வாதிகளின் கட்சியில் ஸ்ரீ அரவிந்தர் சேர்ந்துகொண்டார்.

சர்க்காருக்குள்ளே ஒரு சர்க்காராகக் காங்கிரஸைச் செய்து விடவேண்டும்; சுயராஜ்யம் கிடைக்கும் வரையில், சுதந்தரப்

போரை விடாமல் அந்தக் காங்கிரஸ் நடத்திவர வேண்டும்—இது தான் அரவிந்தரின் ஆசை. 'வந்தே மாதரம்' என்ற தினசரிப் பத்திரிகையின் ஆசிரியரா யிருந்துகொண்டு, மிக விறுவிறுப்பாய் அதை அவர் நடத்தினர். இந்தியா பூராவும் அந்தப் பத்திரிகை பரவியது. 1907-ஆம் வருஷத்திலிருந்து 1908-ஆம் வருஷம் வரை யில் தாம் சிறையில் இருந்த காலத்தில்கூட, அதன் கொள்கையை அவரே கண்காணித்துவந்தார். 1908-ஆம் வருஷம் அந்தப் பத்திரிகையை நிறுத்தவேண்டி வந்தது. அந்த அற்ப காலத்துக் குள்ளே இந்தியாவின் அரசியல் பிரக்ஞையையே அதுஅடியோடு புதிய மாறுதலடையச் செய்துவிட்டது.

1907-ஆம் வருஷம் அரவிந்தர்மீது ராஜத் துவேஷக் குற்றம் சாட்டி, அதிகாரிகள் வழக்குத் தொடர்ந்தார்கள். அந்த வழக்குத் தள்ளுபடியாகிவிட்டது. 1907-ஆம் வருஷம் சூரத்திலே தேசீய வாதிகளின் மகாநாட்டுக்கு அவர் தலைமைவகித்தார். அப்போதுதான் காங்கிரஸுக்குள்ளே மிதவாதிகளுக்கும்—அமித வாதிகளுக்கும் ரகளை நடந்தது.

அரவிந்தருடைய சகோதரரான பரீந்திரரின் தலைமையில் வேலை செய்துவந்த பயங்கரப் புரட்சிக்காரர் கோஷ்டி யொன்றின் செயல்களிலும், 1908-ஆம் வருஷத்திய அலிபுரம் சதி வழக்கிலும், அரவிந்தரையும் சம்பந்தப்படுத்தி, அதிகாரிகள் அவரைக் கைதுசெய்தார்கள். அப்போது அரவிந்தரின் வக்கீ லாகத் தேசபந்து தாஸ் ஆஜராகி விசாரணை நடத்தியது மிகப் பிரபலமாகும். அரவிந்தருக்கு விரோதமாக எவ்விதச் சாட்சியங் களும் கிடைக்காததால், அப்போதும் அவர் விடுதலை யடைந்தார். ஆயினும், விசாரணைக் நாட்களில் ஒரு வருஷ காலம் அலிபுரம் சிறையிலிருந்தார்.

1909-ஆம் வருஷம் வெளியே வந்ததும், இயக்கம் சிதைந்து கிடந்தது; தலைவர்க ளெல்லாம் சிறைவாசமும் அக்ஞாதவாசமு மாய்ப் பிரிந்துவிட்டார்கள். அரவிந்தர் தாம் ஒண்டியாகவே ஆங்கில வாரப் பத்திரிகையான 'கர்மயோகி'யையும் வங்காளி வாரப் பத்திரிகையான 'தர்மா' என்பதையும் ஆரம்பித்து, உருக் குலைந்த இயக்கத்தைப் புதுப்பிக்க ஒரு வருஷ காலம் உழைத்தார். ஆனல், தேசம் தமது திட்டத்துக்கு இன்னும் பக்குவம் அடையவில்லை என்று இறுதியாக முடிவுசெய்தார். தவிரவும், ஒரு வருஷச் சிறைவாச காலத்தில் அவரது ஆத்ம வேட்கையும் வலுத்திருந்தது. ஆகையால், 1910-ஆம் வருஷம்

பிப்ரவரி மாதம் இந்திய அரசியலையே விட்டு விலகி, சந்திரநாகூரில் ரகசியமான ஓரிடத்தில் போய் வசித்தார். ஏப்பிரல் மாதம் அங்கேயிருந்து கப்பல் மார்க்கமாகப் புதுச்சேரிக்குப் போய்ச் சேர்ந்தார்.

மழை விட்டும் துவானை விடவில்லை என்பதுபோல, அவர் பிரெஞ்சு எல்லைக்குப் போய்ச் சேர்ந்த பின்பும்கூட, அதிகாரிகள் சும்மா இருக்கவில்லை. 'கர்மயோகி'யில் அவர் கையெழுத்திட்டு எழுதியிருந்த ஒரு கட்டுரைக்காக அந்தப் பத்திரிகையின் அச்சுக்கூடச் சொந்தக்காரரின்மீது ஒரு வழக்குத் தொடர்ந்தார்கள். அதில் கீழ்க் கோர்ட்டிலே விதிக்கப்பட்ட தண்டனை, அப்பீலிலே ரத்தாயிற்று. இப்படியாக அரவிந்தருக்கு விரோதமான மூன்று வழக்குகளிலும், அவருக்கே வெற்றி கிடைத்தது குறிப்பிடத் தக்கதாகும்.

அரவிந்தர் தம்முடைய மனைவிக் கெழுதிய சில கடிதங்கள், அலிபுரம் குண்டு வழக்கிலே, சாட்சியங்களாய்த் தாக்கல் செய்யப்பட்டன. அதனின்றும் அரவிந்தரின் மனப்போக்கு ஓரளவு புலனாகும். தமக்கு மூன்று பைத்தியங்கள் இருப்பதாக ஒரு கடிதத்தில் அவர் குறிப்பிடுகிறார்: (1) துன்புறும் மக்களுக்கு உதவிபுரிய வேண்டும்; (2) நேருக்கு நேரே பரமாத்மாவைக் காண வேண்டும்; (3) பாரதமாதாவுக்கு ஆத்ம பலத்தைக் கொண்டு விடுதலை தேடவேண்டும்—இவைதான் அவருடைய பைத்தியங்கள். "இவற்றிலே நீயும் என்னுடன் வருவாயா?" என்று மனைவியைக் கேட்டார். மிருணாளினி அப்படி வரவில்லை.

நேருக்கு நேரே பரமாத்மாவைக் காண்பதற்கான யோகாப்பியாசத்தை, அன்று முதல் இன்று வரையில், அரவிந்தர் புதுவையிலே செய்துவருகிறார். புதுவை அரவிந்த நிலையம் இன்று ஒரு புண்ய க்ஷேத்திரமாகவும் ஆத்ம ஞான பீடமாகவும் விளங்குகிறது. எங்கெங்கே யிருந்தோ, பலர் அங்கே சென்று, ஆத்ம விடாய் தீரப்பெறுகிறார்கள்.

# கான் சகோதரர்கள்

மீண்டும் இதர மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்படுமுன்னதாகவே, எல்லைப்புற மாகாணத்தில் மட்டிலும் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டுவிட்டது. டாக்டர் கான் சாஹேப் பிரதம மந்திரியானார். அவருடைய சகோதரரான அப்துல் கபார்க்கான் — 'எல்லைப்புற காந்தி' என்று கீர்த்தி பெற்ற உத்தமன் — விடுதலை அடைந்தார்.

கான் சகோதரர்கள் உத்தம தேசபக்தர்கள். காங்கிரஸின் தலைசிறந்த தலைவர்கள். காந்திஜி கிழித்த கோட்டைத் தாண்டாமல் நடக்கும் தேசிய வீரர்கள். அவர்கள் எத்தனையோ தியாகம் செய்தார்கள். எத்தனை முறையோ சிறை சென்றார்கள். வீண் பழிக்கெல்லாம் ஆளானார்கள். அஞ்சா நெஞ்சம் படைத்த சிங்கங்களாகவே இன்று வரை வாழ்ந்து வருகிறார்கள். 'உண்மையான இரு தேவ ஊழியர்கள்' என்று அவர்களை வர்ணிக்கிறார் மகாதேவ தேசாய் தமது புத்தகத்திலே.

மூத்தவராகிய டாக்டர் கான்சாகேப், 1883-ஆம் ஆண்டிலும், இளையவராகிய அப்துல் கபார்க்கான் 1890-ஆம் ஆண்டிலும் பிறந்தார்கள். கான் சாகேப், மேல்நாடு சென்று உயர்தரக் கல்வி பெற்று, ஆங்கிலமாது ஒருத்தியையும் மணந்து கொண்டார்.

இளையவரின் படிப்பு மெட்ரிகுலேஷனோடு நின்றது. சுயகுலப் பெண்ணையே மணந்துகொண்டார். மூத்தவர் நவீன நாகரிக வாழ்க்கையில் பரிச்சயமுள்ளவர். இளையவர் துறவு மனப்பான்மை கொண்டவர்; முற்றிலும் காந்தீயத்திலே மனம் ஊன்றியவர்.

இந்த இருவரின் தலைமையிலும், 'குதாயீ கித்மத்கார்' என்ற அபூர்வமான தொண்டர் படை யொன்று எல்லைப் புறத்தில் நிர்மாண மாயிற்று. 'குதாயீ கித்மத்கார்' என்றால், 'ஆண்டவனின் ஊழியர்கள்' என்று அர்த்தமாகும். இந்தத் தொண்டர்கள், எல்லைப்புற மக்களுக்கு அருஞ் சேவை புரிகிறார்கள்.

கான் சகோதரர் இருவரும் சர்வமத சமரச நோக்கம் கொண்டவர்கள். இந்து — முஸ்லீம் ஒற்றுமையிலே, அளவற்ற பற்றுக் கொண்டவர்கள். இவர்களுடைய சர்வமத சமரசத்துக்கு இரண்டு பிரத்யட்ச உதாரணங்கள் கூறலாம். கான் சாகேப் ஆங்கில மாதை யல்லவா மணந்து கொண்டார்? அவள் எந்த மதத்தை வேண்டுமானுலும் சுதந்தரமாய் அனுஷ்டிக்கலாம் என்று வாக்குறுதி அளித்தே, அப்படி அவர் மணந்து கொண்டார். இளையவர் திருக் குர்ராணைப் போலவே, பகவத் கீதையையும் பெரு மதிப்போடு படித்து வருபவர்.

சட்டசபைக்கு நிற்பது, பதவி ஏற்பது முதலிய வேலைகளெல்லாம் மூத்தவரைச் சேர்ந்தது. அவையெல்லாம் இளையவருக்குப் பிடிக்காது. அவர் மகாத்மா காந்தியின் நேர் சிஷ்யர். நிர்மாண வேலை ஒன்றிலேதான் அவருடைய முழு மனதும் ஈடுபட்டிருக்கிறது. கான் சகோதரர்கள் தேசத்தின் இரண்டு கண்மணிகள். அவர்கள் இன்று காட்டியிருக்கும் வழியை, தேசமெங்கும் கடைப்பிடிக்க இடம் ஏற்படுமா? அவர்கள் தொடங்கி யிருக்கும் உத்தம காரியம் நிர்விக்கினமாய்த் தேச மெங்கும் பரவி, புது வாழ்வைக் கோலுமா? அவை அவ்விதப் பலன் தரும் என்றே நாம் நம்புவோம். ஏனென்றல் அவர்கள் இருவரும் 'தேவ ஊழியர்கள்.'

# வைஸிராய் வேவல்

**போர்** வீரனாக இருந்தபின் வைஸிராய் பதவிபெற்று, அதை வகித்து வருபவர் தளபதி வேவல். இது இந்திய சரித்திரத்திலேயே ஒரு புதுமையாகும். அவர் ஒற்றைக்கண்ணர் தான். என்றாலும், ஆப்பிரிக்க வனாந்தரத்திலே வெற்றிவாகை சூடிய பெரிய வீரர் அவர். அவருக்கு ஒரு கண் போனது சென்ற மகா யுத்தத்தில் நடந்த யைப்பிரஸ் போரிலே. மகா நெப்போலியனை முறியடித்த நெல்ஸனுக்கும்தான் ஒரு கண் இல்லை; ஆயினும் என்ன? சரித்திரத்திலே அவருடைய பெயர் ஏறிவிட வில்லையா? ஒரு தளபதியை, எதிரியே புகழ்வ தென்றால், பெரிய ஆச்சரியம் அல்லவா? தளபதி வேவலை, ஜெர்மன் ராணுவத் தலைவரான ஹிட்லர் என்பவரே புகழ்ந்தார். "பிரிட்டிஷார் படைத்திருக்கும் தளபதிகளுக்குள்ளே தலை சிறந்தவர் வேவல் தான்; அவர் மிக மிகச் சிறந்தவர்" என்று ஹிட்லர் சொன்னார்.

தளபதி வேவல் 1883-ஆம் வருஷம் பிறந்தார். அவருடைய தகப்பனார் ஒரு மேஜர் ஜெனரல். பாட்டனாரும் ஒரு போர் வீரர்தான்; ஸ்பெயினிலும் வெனிஸ்-லாவிலும் சேவை செய்து, பணம் சம்பாதித்தவர். ஆகையால், தளபதி வேவல், பரம்பரைப் போர்வீரர் ஆவார்.

தளபதி வேவலின் மாமனார் மட்டிலுமென்ன; அவரும் ஒரு கர்னல். வேவலின் மனைவி ஜோன் நல்ல உழைப்பாளி. வேவல் தம்பதிகளுக்கு மூன்று பெண்களும் ஒரு மகனும் உண்டு. மூத்த மகளான பாமீலா ஒரு நர்ஸ். மற்ற இரு பெண்களும் ஆப்பிரிக்காவில் தகப்பனாரின் ராணுவத் தலைமைக் காரியாலயத்திலே காரியதரிசிகளாய் வேலை பார்த்தார்கள். ஒரே மகனை ஆர்ச்சி, குடும்ப தர்மத்தை ஒட்டி, போர் வீரனாக வேலை பார்த்தான்; பிளாக் வாட்ச் என்ற பிரபல ரெஜிமெண்டில் ஓர் ஆபீஸர் பதவி பெற்றான்.

தளபதி வேவல் சிறுவயதா யிருந்த போது, முதல் முதலில் பிளாக் வாட்ச் ரெஜிமெண்டில் சேர்ந்து தென்னாப்பிரிக்க போயர் யுத்தத்துக்குப் போனார். வின்செஸ்டர் கல்லூரியில்

படித்து, ஸாண்ட் ஹர்ஸ்ட் ராணுவக் கல்லூரியில் பயிற்சிபெற்ற பின்பு, 1901-ஆம் வருஷம் அவ்வாறு தென்னப்பிரிக்க சேவைக்குச் சென்றுர். அதன் பின் 1908-ஆம் வருஷம் கொஞ்ச காலம் இந்திய எல்லைப்புறப் பட்டாளத்தில் சேவை செய்தார். ஆனல், அதில் ஒன்றும் அப்படிக் கீர்த்தி சம்பாதிக்க வில்லை.

1916-ஆம் வருஷம் காக்கஸஸுக்கு ராணுவத் துணைவராக, வேவல் அனுப்பப் பட்டார். அங்கே இரண்டு வருஷ காலம் இருந்ததில், ருஷிய பாஷையை மிக நன்ருகப் பேசக் கற்றுக் கொண்டார். பின்னலும் ஐந்தாறு தடவை ருஷியாவுக்கு வேவல் சென்றிருக்கிருர். 1936-ஆம் வருஷம் இவர் அங்கே சென்றபோது, ருஷிய 'பாரசூட்' படைப்பயிற்சி நடந்து கொண்டிருந்தது. அதைக் கண்டு வியந்து பாராட்டி, இங்கிலாந்துக்கும் எழுதி யனுப்பினர். ஆனல், பிரிட்டிஷ் யுத்த மந்திரி காரியாலயத்தார், வேவலின் அபிப்பிராயத்தை அலட்சியம் செய்துவிட்டார்கள்.

சென்ற மகாயுத்தத்தின் போது, பீரங்கிப் படை மேஜராக, வேவல் பதவி பெற்றுர். யைப்பிரஸில் இடது கண்ணை இழந்தாலும், ராணுவச் சிலுவைப் பதக்கம் பரிசு பெற்றுவிட்டார். வேவலின் ராணுவக் குருநாதராக ஆலென்பியைத்தான் சொல்லுவது வழக்கம். 1917–18–ஆம் வருஷங்களில் பாலஸ்தீனில் ஆலென்பியின் ராணுவத் தலைமைக் காரியாலயத்தில் பிரதம உத்தியோகஸ்தராக இருந்து கொண்டு, ஆலென்பியின் போர் நுட்பங்களை வேவல் கற்றுர்.

1933-ஆம் வருஷம் மேஜர் ஜெனரலாக, வேவலின் பதவி உயர்ந்தது. அதற்குப் பின் ஐந்து வருஷங்களுக் கெல்லாம், லெப்டினண்ட் ஜெனரல் என்ற பதவி உயர்வும் அவருக்குக் கிடைத்தது.

வேவல் மிகவும் சூட்சும புத்தி உடையவர். பிரிட்டிஷ் யுத்த மந்திரி காரியாலயத்தார், ஒரு சமயம் போர்வீரர்களுக்குச் சில நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தினர்கள். கொசு வலை போன்ற பல பழம் பசலிச் சாமான்களை யெல்லாம் சேன வீரர்கள் எப்போதும் வைத்திருக்க வேண்டுமென்று ஒரு நிர்ப்பந்தம் இருந்தது. இந்த முட்டாள்தனத்தை உடைக்க வேண்டுமென்று வேவல் விரும்பினர். சாதாரண ராணுவப் பயிற்சி ஒன்று நடந்தபோது, தமது படையை, இந்த ஓட்டை உடைசல்

சாமான்கள் அத்தனையோடும் ஒரு ரஸ்தாவிலே விரட்டிவிட்டார். அதனால் சாலையிலே 15 மைல் தூரம், துப்பாக்கி தாங்கி நடக்கும் காலாள் வீரரும், கோவேறு கழுதை வண்டிகளும், வேறு தளவாடங்களுமாய் ரஸ்தாவின் வண்டிப் போக்குவரத்துக ளோடு மோதி ஒரே அவந்தரை யாகிவிட்டது!

இதைக் கண்டு, அவர்மீது யுத்த மந்திரி காரியாலயத் தாருக்கு உள்ளுக்குள்ளே எரிச்சல் உண்டாயிற்று. அவரை மெல்லப் பாலஸ்தீனுக்குச் சேனைத் தலைவராக அனுப்பிவிட் டார்கள். அங்கே போகும் ராணுவத் தலைவர்களுக்கு நல்ல பெயர் கிடைப்பதில்லை. வேவலும் அங்கே ரத்தவிளாறாய் ஓடச் செய்து, 'பெரிய ரத்தவேட்டை நாய்' என்று மக்களிடம் பெயர் வாங்கினர். என்றாலும், கலகங்களை அடக்கிய வீரர் என்ற பாராட்டுதலை, பிரிட்டனிடம் அவர் சம்பாதித்து விட்டார்.

மூனிக் முட்டாள்தனத்தைப் பிரிட்டிஷ் சர்க்கார் உணர்ந்து கொண்ட உடனே, தளபதி வேவலை அழைத்து, இங்கிலாந்தின் தெற்குப் பகுதியின் படைகளுக்குத் தலைவராக நியமித்தார்கள். ஏனென்றால், அதுதானே அப்போது மிகவும் 'வபை'யான பாகம்? ஆனால், மத்தியக் கீழ்த்திசையின் நிலைமைதான் மிக்க அபாயமான தென்று பிறகு தோன்றியதால், அவரை, பிரிட்டிஷ் யுத்த மந்திரி காரியாலயத்தார், எகிப்துக்கு அனுப்பினார்கள். மால்டா, கிரீட் ஆகிய இடங்களி லிருந்து, தெற்கே கென்யா, வட ரொடீசியா வரைக்குமுள்ள விஸ்தாரமான பிரதேசங்களி லிருந்த அத்தனை பிரிட்டிஷ் படைகளுக்கும் அவர் தலைவரானர்.

லிபியாவில் இதாலியப் படைகளைத் தாக்குவதில், தளபதி வேவல் கொஞ்சநாள் தாமதம் செய்தார். இது பிரிட்டனி லிருந்த சிலருக்குப் பிடிக்கவில்லை. வேவலை உடனே அங்கிருந்து அகற்றிவிட வேண்டுமென்றுகூட அவர்கள் கூச்சலிட்டார்க ளாம். "உடனே படையெடும்" என்று பிரிட்டிஷ் சர்க்காரின் ஓர் உத்தரவை ஜேபியில் போட்டுக்கொண்டு, வேவலிடம் ஆந்தனி ஈடன் ஒரு சமயம் தூது போனராம். அந்த உத்தரவு வேவலிடம் கொடுபட்டதா, இல்லையா என்று தெரியவில்லை. ஆனால், சரியான தருணம் வரும் வரையில் காத்திருந்த வேவல், இறுதியிலே தம்மிஷ்டப்படி படையெடுத்து, வெற்றிமேல் வெற்றி பெற்று உலகத்தையே பிரமிக்கச் செய்துவிட்டார்.

யுத்தம் ஆரம்பித்தவுடனே, தளபதி வேவல், கெய்ரோவில் உள்ள பெரிய ஹோட்டல் ஒன்றுக்குத் தமது காரியாலயத்தைக்

கொண்டுபோய்விட்டார். மூன்றும் மாடியில் சாமானியமான ஓர் அறையைத் தமக்கு வைத்துக் கொண்டார். மட்டமான ஒரு மேஜைமீது பல வர்ணப் பென்ஸில்களையும் பளபளப்பான பல பூகோளப் படங்களையும் பரப்பிக்கொண்டு, ஆராய்ச்சியில் முனைந்துவிட்டார்.

போன மகாயுத்தத்தின் போது, நம் வேவலும், இதாலியத் தளபதி கிராஸியானியும் ஆப்பிரிக்காவில் போரிடுகையில், ஒருவருக்கொருவர் நேசர்களாய்ச் சந்தித்தார்கள். குப்ரா வனத்தைக் கலகக்காரர்களிட மிருந்து தாங்கள் இருவருமாய்ப் பிடித்தபோது, ஒருவருக் கொருவர் நட்பு முறையில் கட்டாரிகள் மாற்றிக் கொண்டார்கள். அந்தக் கட்டாரிகளிலே, "ஒன்று பட்ட நாமே எஜமானர்கள்" என்ற வார்த்தைகளும் பொறிக்கப் பட்டிருந்தன. ஆனல், விதி யாரை விட்டது? இந்த வேவலும் அந்தக் கிராஸியானியும், அதே ஆப்பிரிக்க மண்ணில் எதிரிக ளாய்ப் போரிட, சமீபத்தில் நேர்ந்தது. இந்தப் போருக்குமுன் வரையில், வனந்தரப் போர் சம்பந்தப்பட்ட மட்டில் வல்லவர்கள் உலகிலேயே இருவர்தான் என்று மதிக்கப்பட்டு வந்தது. ஒருவர் வேவல்; மற்றவர் கிராஸியானி. அந்த இருவரில் கிராஸியானி தோற்றுவிட்டார். வேவலே வெற்றிபெற்று மிஞ்சியவர்.

இப்பேர்ப்பட்ட வேவல், 1941-ஆம் வருஷம் ஜுலை மாதத்திலிருந்து 1942-ஆம் வருஷம் ஜனவரி மாதம் வரையில், இந்தியாவின் பிரதம சேனதிபதியாக இங்கே பதவி வகித்தார். அதன்பின், ஜனவரியி லிருந்து மார்ச்சு மாதம் வரையில் தென் மேற்குப் பஸிபிக்கில் பிரிட்டனுக்கும் அதன் நேசநாடுகளின் படைகளுக்கும் தலைமைச் சேனதிபதியாக இருந்தார்.

1942-ஆம் வருஷம் மார்ச்சு மாதத்தி லிருந்து மீண்டும் இந்தியாவின் பிரதம சேனதிபதியாக, அவர் பதவி வகித்திருந் தார். 1943-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் இந்திய வைசிராய் பதவியை ஏற்றார்.

தளபதி வேவல் போர் வீரனக இருந்தவரையில் தலை சிறந்தவர் என்று பெயர் எடுத்துவிட்டார். இப்போது (1947-ல்) ராஜாங்க நிர்வாகியாக இருந்து வருகிறார். அவரது நிர்வாக காலத்தின் இடையில் பற்பல சம்பவங்கள் நடந்துவிட்டன; நடந்து வருகின்றன. அவைகளின் லாப நஷ்டங்களை இப்போது எடைபோடுவது உசிதமல்ல. அவர் ஊருக்குப் போகும்போது தான் பார்க்க வேண்டும்.

# சியாங் கே ஷேக்

"**சீ**னுவிலுள்ள அத்தனை தேசத் துரோகிகளையும் சுட்டுக் கொல்ல வேண்டும். இதுதான் நீங்கள் செய்ய வேண்டிய காரியம்" என்ருர் டொனுல்டு என்ற ஒரு நண்பர்.

"நம்மிடம் அதற்கு வேண்டிய மருந்தில்லையே, நமது துரதிர்ஷ்டம்" என்று பெருமூச்சுடன் வெகு வருத்தத்தோடு பதிலளித்தாராம் சியாங் கே - ஷேக்.

'**கீழ்நாட்டின் பலவான்**' என்று அழைக்கப்படும் **சியாங் கே ஷேக்**, ஓர் உப்பு விபாபாரியின் மகன்; அவருடைய மனைவி **ஸூங் மீ - லிங்**, ஒரு பைபிள் வியாபாரியின் மகள்.

1888-ஆம் வருஷம் செகியாங் என்ற மாகாணத்தில் பெங்குவா என்னுமிடத்தில் சியாங் கே - ஷேக் பிறந்தார். பணக்காரக் குடும்ப மல்ல; ஆனுல், அது வறுமையில் வாடித் தவிக்கவுமில்லை. மகாத்மா காந்தி, ஹிட்லர், ஸ்டாலின், கெமால் பாஷா, முஸோலினி ஆகியவர்களின் தாய்மார்களைப் போலவே, சியாங்கின் தாயும் மிகச் சிறந்த ஒரு பெண்மணி. மகனின் முன்னேற்றத்துக்காக அவள் பெரும்பாடு பட்டாள். குடும்பத்தினர் பூராவுமே கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதித்து, சியாங்கின் படிப்புக்குச் செலவழித்தார்கள். ஆனுல், பள்ளிக் கூடத்திலே சியாங்கின் புத்தி தீட்சண்யம் அப்படி யொன்றும் பிரகாசிக்கவில்லை.

சீனரின் வழக்கப்படி, சியாங்குக்கு மணம் செய்விப்பதற்காக, மாவோ என்ற ஒரு கன்னிகையை, சியாங்கின் தாய் தங்கள் வீட்டோடு வளர்த்து வந்தாள். சியாங்கின் பதினைந்தாவது வயதிலே, அவளை, சியாங்குக்கு மணமும் செய்வித்தாள். சியாங்குக்கு அவளிடம் பின்னுல் ஒரு குழந்தை பிறந்தது. தன் கணவன் மிக உயர்ந்த நிலைக்கு எழும்வரை பார்க்கத்தான் மாவோவுக்குப் பாக்கிய மிருந்தது. 1921-ஆம் ஞூ அவளைச் சியாங் தள்ளிவைத்து, விவாக விலக்கும் செய்துவிட்டார். ஆனுல், மாதம் ஒன்றுக்கு 3,000 வெள்ளி, அவளுக்கு ஜீவனும்சம் மட்டில் சியாங் அளித்து வருகிருர்.

தமக்குச் சுமார் பத்தொன்பது வயதாயிருக்கும்போது ராணுவப்படிப்புப் படிப்பதற்காக, சியாங் ஜப்பானுக்குச் சென்றார். மஞ்சுகோ சர்க்காரின் சிபார்சில்லாமல் ஜப்பானியக் கலாசாலையில் அவரைச் சேர்த்துக்கொள்ள முடியாதென்று அந்தக் கலாசாலை அதிகாரிகள் மறுத்துவிட்டார்கள். அவர்கள் சீனாவுக்குத் திரும்பினார். கொஞ்சகாலம் இங்கேயே படித்து விட்டு, மீண்டும் ஜப்பானுக்குச் சென்றார். ராணுவக் கலாசாலையில் பயின்றார். பிறகு, பல வருஷங்கள் ஜப்பானிய சேனையிலே சேவையும் புரிந்தார்.

சீனக் குடியரசின் பிதாவான டாக்டர் ஸன் யட் – ஸென் 1909-ஆம் வருஷம் ஜப்பானிலே அஞ்ஞாதவாசம் புரிந்துகொண்டிருந்தார். அவரைச் சியாங் சந்தித்தார். அந்தச் சந்திப்பிலிருந்து, சியாங்குக்கு, கட்டிலடங்காத் தேசபக்தி ஏற்பட்டது. ஜப்பானில் அச்சமயம் இருந்து வந்த சீனத் தேசபக்தர்களின் ரகசியச் சங்கம் ஒன்றிலே சியாங் சேர்ந்தார். 1911-ஆம் ஆண்டு சீனாவிலே புரட்சி ஏற்பட்டு, பீகிங்கில் மஞ்சு ஆட்சி கவிழ்ந்து, குடியரசு ஸ்தாபிதமான போது, புரட்சியில் கலந்து கொள்வதற்காக, சியாங் கே – ஷேக் கப்பலில் சீனாவுக்குப் புறப்பட்டு விட்டார். ஜப்பானிய சேனையை விட்டு, இப்படி, சொல்லிக் கொள்ளாமல் அவர் கிளம்பியது சட்ட விரோதந்தான். அது அவருக்கே தெரியும். ஆனாலும் என்ன? தாய் நாடன்றோ பெரிது? தாம் புறப்பட்டுச் சென்றபோது, தம் ஜப்பானிய ராணுவ உடுப்பையும் வாளையும் மட்டில் மிக நாணயமாய் மூட்டைகட்டி, தபாலிலே ஜப்பானிய அதிகாரிகளுக்கு அவர் அனுப்பிவிட்டார்.

1925-ஆம் வருஷம் டாக்டர் ஸன் யட் - ஸென் காலமடைந்ததும், சியாங் கே – ஷேக் சீனக் குடியரசின் தலைவரானார். துண்டு துண்டாகச் சிதறி, உள்நாட்டுக் கலகங்களுக்கு ஆளாகிச் சீரழிந்து கொண்டிருந்த சீனாவை எப்படி ஒன்றுபடுத்துவது? இந்த ஒரே கவலையில்தான் சியாங் கே – ஷேக் ஆழ்ந்திருந்தார். ஜனங்களை ஒன்றுபடுத்துவதில் ‘இரும்பும் உதிரமும்’ ஒப்பற்றவை என்று கருதிய உலகப் பிரசித்தரான ஜெர்மன் ராஜதந்திரி பீஸ்மார்க்கைப் போல, சீனா முழுவதையும் ராணுவத்தினால் வென்று ஐக்கியப்படுத்துவதே வழி யென்று சியாங் தீர்மானித்தார். ஸோவியத் ருஷியாவின் உதவியோடு, 1926-ஆம் ஆண்டு சியாங் தம்முடைய படையெடுப்புகளை ஆரம்

பித்து, அக்டோபரிலே வுங்சாங்கைப் பிடித்தார்; 1927-ஆம் வூ பிப்ரவரியிலே ஹாங்சோவைப் பிடித்தார்; மார்ச்சு மாதம் ஷாங்காய், நான்கிங் இரண்டையும் கைப்பற்றினர்; 1928-ஆம் வருஷம் ஜூலையில் பீகிங்கை வசப்படுத்தினர். வெற்றிக்கு மேல் வெற்றியாய்க் கிடைத்த இந்த ஜயங்கள் உலக முழுவதையும் பிரமிக்கச் செய்தன. சிதைந்து கிடந்த சீனவும் ஒன்றுபட்டது. ஆனல்......அந்த ஒற்றுமை நிலைக்கவில்லை; உள் நாட்டுப் புரட்சிகளும் கலகங்களும் ஓயவில்லை.

முன்னே போல்ஷ்விக்கப் புரட்சிக்காரர் என்று கருதப்பட்ட சியாங், இப்போது பணக்கார முதலாளிகளிடம் சிநேகம் கொண்டார். பொது உடைமைக்காரரிடம் பரம ஆத்திரம் காட்டினர். சுமார், 3,500 பொது உடைமை வாதிகளைப் படுகொலை புரிந்தார். தம் சொந்த மகனை சியாங் சிங்–குவோ என்பவரை மாஸ்கோவில் அஞ்ஞாத வாசம் புரியும்படி செய்தார். உள்நாட்டிலே, கலகங்களையும் புரட்சிகளையும் அடக்க, அங்குமிங்கும் ஓயாமல் படைகளை அனுப்பிக் கொண்டும் போரிட்டுக்கொண்டு மிருந்தார்.

இந்த நிலையிலே, ஸூங் மீ – லிங் என்ற கிறிஸ்தவப் பெண்ணிடம் சியாங் காதல் கொண்டார். ஆனல், அவள் சீனக்காரி தான். மிகவும் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவள். தம்முடைய ராஜாங்க அலுவல்களுக்கு நடுவே, புரட்சி வேலைகளுக்கு நடுவே, போர்களுக்கு நடுவே, திடீர் திடீரென்று, சியாங்குக்கு அவள் ஞாபகம் வந்துவிடும். அப்படியே போட்டது போட்டபடி விட்டுவிட்டு, இவர் அவளைப் பார்க்க ஓடுவார். தம்மை மணக்கும்படி அவளை மன்றாடுவார். ஆனல், "நீங்கள் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தால்தான் என் மகளை மணக்கலாம்" என்று ஸூங் மீ – லிங்கின் தாய் சொல்லிவிட்டாள்,

"ஒரு பெண்ணை மனைவியாய்ப் பெறுவதற்காக, ஒரு புதிய மதத்தில் நான் சேரமாட்டேன். ஸூங் என்னை மணந்து கொண்டாளானல், கிறிஸ்தவ சமய நூல்களை நான் படிக்கிறேன். படித்து அது நல்லதுதான் என்று கண்டால், அதில் சேர ஆட்சேபமில்லை" என்றார் சியாங்.

மணமும் நடந்தது. "இனி நான் மனத்திலே அமைதியுடன், பிரமாதமான புரட்சிப் பொறுப்பை வெகு சுளுவாக நிர்வகிப்பேன்" என்று சியாங் களிப்போடு கூறினர்.

மனைவியின் வசிய சக்தியால், காலக் கிரமத்தில் கிறிஸ்தவ மதத்தையும் சியாங் தழுவி விட்டார். ஆயினும் தம்முடைய முன்னோரை இப்போதும் அவர் மதித்து வழிபடுகிறார்; அந்தச் சீன வழக்கத்தை மட்டில் அவர் கைவிடவில்லை.

1936-ஆம் ஆண்டு சியாங்கின் வாழ்க்கையில் மோசமான தொரு சம்பவம் நிகழ்ந்தது. பொதுவுடைமை வாதிகளை அடக்கு வதிலே அவர் முனைந்திருந்த சமயத்தில், ஜப்பானியர் மஞ்சூரி யாவைப் பிடித்துக் கொண்டார்கள். ஷாங்காயையும் தாக்கி னார்கள். உள் கலகங்களை அடக்க முயன்று கொண்டிருந்த தலைவன் சியாங், வெளி எதிரியுடன் சமரஸம் செய்துகொண் டார். அவரைப் பின்பற்றியவர்களிலேயே சிலருக்கு இது பிடிக்கவில்லை. பாஸிஸ்டு என்றும் தேசத்துரோகி என்றும் இவரை அவர்கள் கருதிவிட்டார்கள்.

இந்த நிலையில் ஸியாங் என்னுமிடத்தில் பொதுவுடைமை வாதிகளை அடக்குவதற்காக மார்ஷல் சாங் ஸு—லியாங் என்பவரின் தலைமையில் சியாங் அனுப்பிய படைகள், பொது உடைமைக்காரருடன் போரிடுவதற்குப் பதிலாக, அவர்களுடன் கூடிக் குலாவ ஆரம்பித்துவிட்டன. அவைகளைக் கண்டிப்பதற் காக, சியாங் கே — ஷேக் ஸியானுக்கு ஓடினார். ஓடிய இடத்தில் ஸு—லியாங் என்ற அந்தத் தளபதி, தம் தலைவனை இவரையே கைது செய்து சிறைப்படுத்தி விட்டார். சியாங் கைது செய்யப் பட்ட காட்சி மகா விநோதமாகும். இவரைக் கைது செய்த தளபதி இவருடைய காலிலே விழுந்து வணங்கியே அப்படிக் கைது செய்தாராம். கைது செய்கையிலும் அவ்வளவு பக்தி!

“நான் சொல்லும் சிலயோசனைகளை அங்கீகரித்தால், உங்கள் கட்டளைப்படியெல்லாம் நடக்க நான் சித்தமாயிருக்கிறேன்” என்று சியாங்கிடம் அந்த வாலிபத் தளபதி கூறினார்.

“நீ என் ஊழியனா; அல்லது என் சத்ருவா? என் ஊழிய னானால், எதிர்பேசாமல் என் கட்டளைப்படி நடக்க வேண்டும். என் சத்துருவானால், ஒரு நிமிஷமும் தாமதியாமல் என்னைக் கொன்றுவிட வேண்டும். நீ வேறு என்ன சொன்னாலும், நான் செவி கொடுக்க மாட்டேன்” என்று கம்பீரமாய்ப் பதிலளித்தார் ‘கைதி’ சியாங்.

“இந்தச் சகாப்தத்தில் நீங்கள் ஒரு மகா புருஷர். எங்களுக் காகக் கொஞ்சம் விட்டுக் கொடுக்கலாகாதா?” என்று கெஞ்சினார் வாலிபத் தளபதி.

சியாங் துளியும் உறுதி தளரவில்லை. "என்னைக் கொன்று விடு; கொன்று விடு" என்றே மன்றாடினார்.

இடையில் தலைவன் சியாங்கின் டைரியை வாலிபத் தளபதி ஸூ—லியாங் எடுத்துப் படித்தார். அதனின்றும், சியாங் கே — ஷேக் தேசத் துரோகி அல்ல என்றும் தேசத்தினிடம் பரம வாஞ்சை யுடையவரே யென்றும் அவருக்கும் பொது உடைமை வாதிகளுக்கும் புலனாயிற்று. அவர்கள் மனமுருகி விட்டார்கள்.

ஆனால், இதற்குள் சீனாவின் இதர பாகங்களெல்லாம் அதிர்ந்து குமுறின. லட்சம் லட்சமாய்ப் பணம் கொடுத் தாயினும் வேறு எப்பாடு பட்டாயினும் தலைவனை மீளுங்கள் என்று தந்திக்கு மேல் தந்திகள் பறந்தன. சியாங்கை மீட்கப் பல படைகளும் போருக்குக் கிளம்பிவிட்டன. ஸூங் மீலிங்கின் குடும்ப நண்பரான டொனல்டு என்ற வெள்ளைக்காரரின் மூலம் சமரசப் பேச்சு ஆரம்பித்தது. ஸ்ரீமதி சியாங் கே — ஷேக் தானே விமானத்தில் பறந்து, ஸியானுக்கு ஓடினாள். ஒரு தினுசாய்ச் சமரஸமும் ஏற்பட்டது. ஆயினும், தலைவன் சியாங் எவ்விதத் தஸ்தாவேஜியிலும் கையெழுத்திடவில்லை; எத்தகைய வாக்குறுதிகளும் அளிக்கவுமில்லை.

"நான் செய்த தவறுக்கு என்னைத் தண்டியுங்கள், தண்டியுங்கள்" என்று கதறினார் அந்த வாலிபத் தளபதி. அதி லிருந்து அவர் பந்தோபஸ்தில் வைக்கப் பட்டார்.

இந்தச் சமரஸத்தின் பலனாக, பொது உடைமைக்கார ருடன் சியாங்குக்கு ஒரு ராஜி ஏற்பட்டது. ருஷியாவில் இருந்த சியாங்கின் குமாரர் சிங் - குவோவும் திரும்பி வந்தார்.

"வா, மகனே! உன் தாயைப் பார்க்க வேண்டாமா?" என்று அன்போடு வரவேற்றார் சியாங் கே — ஷேக்.

"அவள் என் தாயல்ல. உங்களை வணங்கிய பின், என் தாயும் உங்கள் மனைவியுமானவரிடம் செல்கிறேன்" என்று முகத்திலடித்தது போல் பதிலளித்துவிட்டு, சியாங்கின் முதல் மனைவியும் தம் சொந்தத் தாயுமான மாவோவிடம் சிங் — குவோ சென்று விட்டார்.

சிறைப்பட்டதால் தம் பெருமை குறைந்ததென்று கருதிய சியாங், தமது தலைமைப் பதவியைப் பன்முறையும் ராஜீனாமாச் செய்ய முயன்றார். ஆனால், தேசத்தார் அதை ஒப்பவில்லை.

சியாங் தம்பதிகள், தேசத்தைப் புனர்நிர்மாணம் செய்யும் வேலையில் பின்னும் இடையறாது ஈடுபட்டார்கள். சியாங்கின் ஆட்சியிலே, சீனா முழுவதற்குமே முதல் முதலாக ஒரு நாணயச் செலாவணி முறை ஏற்பட்டது. தேசமெங்கும் மகா நீளமான ரஸ்தாக்கள் போடப்பட்டு, பஸ்கள் ஓடலாயின. வெள்ளங்களைத் தடுக்கவும் பஞ்ச நிவாரணம் புரியவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் பட்டன. ஐரோப்பிய பீரங்கிகளையும், ஜெர்மன் ராணுவ அதிகாரிகளையும், அமெரிக்க இத்தாலிய விமானங்களையும் கொண்ட முதல்தரமான தேசீய ராணுவம் அமைக்கப்பட்டது. எல்லாம் இரவலான இவை யெல்லாம் ஏதோ அற்பக் காரியங்கள் போல் நமக்குத் தோன்றும். ஆனால், உருவற்று, சின்னாபின்னமாய்க் கிடந்த சீனாவிலே, இவை மகா ஆச்சரியமான முன்னேற்றத்தைக் குறிப்பனவாகும். சீன ராணுவ அமைப்பு வர வர அபிவிருத்தி யடைந்து வருவதைக் கண்ட ஜப்பான், "இனி மிஞ்ச விடலாகாது. சீனாவை இப்போது ஜயித்தால்தான் ஜயிக்கலாம். இதை விட்டால், இனி ஒருபோதும் ஜயிக்கவே முடியாது" என்றெண்ணி, 1937-ஆம் வருஷம் ஜுலையில் சீனாமீது போர் தொடுத்தது. இதற்கிடையிலே உலக மகா யுத்தம் நேர்ந்தது. ஜெர்மனியுடன் தோழமை கொண்ட ஜப்பான் அகலக்கால் வைத்து, அது அடைந்த கதியைத் தானும் அடைந்தது. இதுவே சீனாவுக்கும் அதிர்ஷ்டமாயிற்று. அந்நியனின் தொல்லை தீர்ந்தது. ஆனால், உள்நாட்டிலே பழையபடி பொதுஉடைமைக்காரர் பிணக்கு ஏற்பட்டிருக்கிறது. இது எப்படி முடியுமோ? இன்று சொல்ல இயலாது.

# ஈமன் டி வாலரா

ஐரிஷ் குடியரசுத் தலைவர் டிவாலரா ' உள்நாட்டுச் சரக் ' கல்ல ; அதாவது அயர்லாந்திலே பிறந்தவர் அல்ல. கார்ஸிகாவில் பிறந்த ஏழை நெப்போலியன், உலகத்தைப் பிரமிக்கச் செய்த பிரஞ்சு சக்ரவர்த்தியானன். ஆஸ்திரியாவில் பிறந்த ஒரு சித்தி ரக்காரன், உலக யுத்தத்தைக் கிளப்பிவிட்ட ஜெர்மன் சர்வாதி காரி ஹிட்லரானன். அப்படியே அமெரிக்காவில், ஒரு ஸ்பானிய னுக்கும் ஓர் ஐரிஷ்காரிக்கும் மகனைப் பிறந்த டிவாலரா, அயர் லாந்தின் இணையற்ற தலைவரானர்.

1882-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 14-ஆம் தேதி நியூ யார்க்கில் டிவாலரா பிறந்தார். இரண்டு வருஷத்துக் கெல்லாம் தந்தை காலமாகிவிட்டார். உடனே தாய்மாமனேடு அயர்லாந் துக்குக் குழந்தை டிவாலரா அனுப்பப்பட்டார்.

கிரமமான வயது வந்ததும், டிவாலராவை மாமன் படிக்க வைத்தார். படிப்பிலே மிகுந்த சூட்சுமம் ; விளையாட்டிலே மிகுந்த சூடிகை—இரண்டிலும் திறமை காட்டினர் டிவாலரா. பரிசுகளும் ' ஸ்காலர்—ஷிப் ' களும் நிறைய நிறைய வாங்கினர்.

பி. ஏ. பட்டம் பெற்ற பின்பு, ராக்வெல் கல்லூரியில் கணித போதகராக, அவர் பதவி பெற்ருர். அதில் டிவாலரா காட்டிய ஆச்சரியமான திறமை காரணமாக, கிரேபோர்ட் உபாத்திமைப் பயிற்சிக் கல்லூரியின் கணித பண்டிதராக, உத்தியோகம் அடைந்தார்.

டிவாலராவுக்கு அந்தக் காலத்தில் அரசியலில் துளிக்கூடப் பற்றுதல் இல்லை. ஆயினும், தாய் மொழியான கெய்லிக் பாஷையின் வளர்ச்சியில் மட்டும் அவர் மிகுந்த ஆர்வம் கொண் டார். கெய்லிக் லீக் என்ற தாய் மொழிச் சங்கத்தில் அங்கத்தின ரானர். அங்கே தமக்குப் பரிச்சயமான மிஸ் ஜோன் பிளானகன் என்னும் பேரழகியிடம், கெய்லிக் பாஷை பயிலத் தொடங்கினர். அவளையே காதலித்து மணமும் புரிந்து கொண்டார்.

1916-ஆம் வருஷம் தொடங்கி, டிவாலராவின் சரித்திரம், ஐரிஷ் புரட்சியின் சரித்திரமே யாகிவிட்டது.

ஐரோப்பிய தேசங்களுக்குள்ளேயே மிகப் பழமையான தேசம் அயர்லாந்துதான். கிறிஸ்து பிறக்க 1929 வருஷங்களுக்கு முன்பு, ஸிதியன் ஜாதியாரின் கூட்டமொன்று, முதன்முதலாக அயர்லாந்தில் போய்க் குடியேறியது. தங்கள் சொந்தமான நாகரிக மொன்று அவர்களுக்கு உண்டாயிற்று. இங்கிலாந்தில் காட்டுமிராண்டிகளாய் உடம்பெல்லாம் சாயம் பூசிக்கொண்டு பிரிட்டிஷ்காரர்கள் திரிந்த காலத்திலேயே, அயர்லாந்து வாசிகள் மிக்க நாகரிகமாய் வாழ்ந்தார்கள். பல சிற்றரசர் களும் அவர்களுக்கெல்லாம் தலைவனை ஒரு பேரரசனும் அயர் லாந்தில் ஏற்பட்டு, நாகரிக அரசாட்சி நடந்துவந்தது. கிறிஸ்து வுக்குப் பின் 11 நூற்றுண்டுகள் வரையில், பராதீனமின்றி வாழ்ந்தது அயர்லாந்து.

பன்னிரண்டாம் நூற்றுண்டில், ஒரு சிற்றரசன் மற்றெரு சிற்றரசனின் மனைவியை ஏமாற்றி அழைத்துச் சென்று விட்டான். அவளைத் திரும்பவும் அவளுடைய கணவனிடம் சேர்ப்பிக்குமாறு குற்றவாளியைத் தலைமை அரசன் வற்புறுத்தி னான். இதனல் வஞ்சம் கொண்ட குற்றவாளிச் சிற்றரசன், ஆங்கில மன்னனை இரண்டாம் ஹென்ரியின் உதவியை நாடினன். இதுவே வியாஜமாக அன்று உள்ளே நுழைந்த பிரிட்டிஷார், கொஞ்சம் கொஞ்சமாக அயர்லாந்தைச் சுரண்டி அதை அடிமையும் கொண்டுவிட்டார்கள். அதுமுதல், 1916-ஆம் வருஷத்திய ஐரிஷ் ஈஸ்டர் புரட்சி வரையில், விடுதலை பெற அயர்லாந்து ஓயாத பலாத்காரப் போராட்டம் புரிந்துகொண்டு தான் இருந்தது; தொடர்ந்தாற்போல் நீண்டகாலம் ஒருபோதும் ஓய்ந்திருந்ததில்லை.

ஈஸ்டர் கலகம் என்ற பிரசித்தமான புரட்சி 1916-ஆம் வருஷம் நடந்தது. புரட்சிப் பட்டாளங்களுக்குள் ஒன்றுக்கு டிவாலரா தலைவரானர். டப்ளின் நகரை ஒரு வார காலம் புரட்சிக்காரர்கள் வசப்படுத்திக்கொண்டார்கள். டிவாலராவின் புரட்சிப் பட்டாளம் மிக வெற்றிகரமாகப் போரிட்டது. ஆயினும், கடைசியில் புரட்சிக்காரர்கள் சரணகதி செய்யவேண்டியதாயிற்று. டிவாலரா சரணகதி செய்கையில், "வேண்டுமானல் என்னைச் சுடுங்கள்; என் மனிதர்களை ஒன்றும் செய்யாதீர்கள்" என்று உருக்கமாகக்

கேட்டுக்கொண்டார். பிரிட்டிஷ் சர்க்கார் கருணையின்றி, புரட்சித் தலைவர்கள் பலரையும் ஒரு வாரகாலத்துக்குள் தூக்கிலிட்டுக் கொன்றார்கள். டிவாலராவுக்கும் மரண தண்டனை தான் விதிக்கப்பட்டது. ஆனால், அவர் ஓர் அமெரிக்கப் பிரஜை என்று சொல்லி, அமெரிக்க சர்க்கார் குறுக்கிட்டதால், அவருடைய உயிர் தப்பியது. மரண தண்டனை, தீவாந்தர தண்டனையாய் மாறியது. அப்போது நடந்துகொண்டிருந்த ஐரோப்பிய யுத்தத்தில், அமெரிக்க உதவியைப் பிரிட்டன் நாடியதாலேயே, அமெரிக்காவின் சொல்லைத் தட்ட, பிரிட்டன் விரும்பவில்லை.

ஈஸ்டர் புரட்சிக்காரர்கள் அனைவரையும் விடுதலை செய்ய, பிரிட்டிஷ் பிரதம மந்திரி லாயிட்ஜார்ஜ் 1917-ஆம் வருஷம் முடிவு செய்தார். டிவாலராவும் விடுதலைபெற்றார். புதிதாய்த் தோன்றிய ஐரிஷ் சுதந்தர இயக்கமான 'ஷின்பீன்' இயக்கத்தில் டிவாலரா சேர்ந்து, அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1918-ஆம் வருஷம் மீண்டும் அவர் கைதுசெய்யப்பட்டார். சிறையிலிருந்து ஆச்சரியமான தந்திரம் செய்து 1919-ஆம் வருஷம் தப்பியோடினார். பிறகு, பிரமாதமான கலகம் எழுந்தது. பிரிட்டிஷ் போலீஸ், பிரிட்டிஷ் பட்டாளங்களுக்கும், டிவாலரா கோஷ்டியின் புரட்சி வீரர்களுக்கும், எங்கே பார்த்தாலும் ரணகளம் நடந்தது. அயர்லாந்தெங்கும் ரத்தக்களரி யாயிற்று. 1921-ஆம் வருஷம் சமரசப் பேச்சு நடத்தத் தயார் என்று, லாயிட் ஜார்ஜ் தெரிவித்தார். தம் துணைவர்கள் சிலரை லண்டனுக்கு, டிவாலரா அனுப்பினார். ஓர் உடன்படிக்கையோடு, அந்தத் தோழர்கள் திரும்பிவந்தார்கள்.

இந்தியாவிலே பாகிஸ்தான் பேச்சு எழுந்திருக்கிறதல்லவா? இதே மாதிரி அங்கேயும் ஒரு விவகாரம் பிரிட்டிஷாரால் தூண்டிவிடப்பட்டு, அதன் பலனாக, அந்த உடன்படிக்கை, அயர்லாந்தை இரண்டாகப் பிளந்தது. அயர்லாந்தின் வடக்கே அல்ஸ்டர் என்ற சிறு பகுதியில் புராட்டஸ்டண்டுக் கிறிஸ்தவர்கள் அதிகமாய் வசிக்கிறார்கள். மீதிப் பகுதியினர் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள். அல்ஸ்டரைத் தனி ராஜ்யமாய்ப் பிரித்து, அதன் சிண்டைப் பிரிட்டனே பிடித்துக்கொள்ள இடங்கொடுத்தது அந்த உடன்படிக்கை: மீதிப் பகுதிக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்துக் கிடைத்தது. அயர்லாந்து பூராவும் ஒரே தேசம் என்றும், தேசத்துக்குப் பூரண சுயேச்சையே வேண்டுமென்றும்

லட்சியம் கொண்ட டிவாலராவுக்கு, தம் தோழர்களே செய்து கொண்டு வந்துவிட்ட அந்த உடன்படிக்கை பிடிக்கவில்லை. டிவாலராவுக்கும் தோழர்களுக்குமே விவகாரம் வந்தது. உள் நாட்டுக் கலகங்களும் விளைந்தன. ஐரிஷ்காரர்களே ஒருவரை ஒருவர் வெட்டி மடிந்தார்கள். இப்போது வங்காளத்திலும் பீஹாரிலும் நடந்ததில்லையா குரூரங்கள்; இந்த மாதிரிதான்.

புதிய டொமினியன் சர்க்காரின் தலைவர் வில்லியம் காஸ்கிரேவ். அந்தச் சர்க்காரை டிவாலராவின் கோஷ்டியார் எதிர்த்தார்கள். அவர்கள் பலவிதப் பலாத்காரச் செயல்களும் புரிந்தார்கள். 1923-ஆம் வருஷம் டிவாலரா மீண்டும் சிறைப்பட்டு, 1924-ஆம் வருஷம் விடுதலையடைந்தார்.

அயர்லாந்துப் பார்லிமெண்டான 'டேல்' என்ற சபையின் அங்கத்தினர்கள், பிரிட்டிஷ் மன்னரிடம் பக்தியோடிருப்பதாக ராஜ விசுவாசப் பிரமாணம் செய்யவேண்டும் என்று விதியிருந்தது. டிவாலரா கோஷ்டியார் தேர்தலில் வென்றும் இந்த விதி காரணமாகச் சபையில் போய் உட்கார மறுத்தார்கள். இந்த முட்டுக்கட்டையை உடைப்பதற்காக, 1927-ஆம் வருஷம் காஸ்கிரேவ் சர்க்கார் அதி நூதனமான ஒரு சட்டம் செய்தார்கள். அதாவது, தேர்தலுக்கு அபேட்சகராக நிற்க விரும்பும் ஒவ்வொருவருமே முதலில் ராஜ விசுவாசப் பிரமாணம் செய்ய வேண்டும் என்பதுதான் அந்தச் சட்டம். இதைக் கண்டதும் டிவாலரா ஒரு புதிய யுக்தி செய்தார். ராஜவிசுவாசப் பிரமாணம் என்பது ஓர் அர்த்தமற்ற சூத்திரமேயாகும்; அதைச் செய்து சபையில் போய் உட்கார்ந்து, பின்பு அதையே அழிக்க முயல்வது என்று முடிவுசெய்தார். 1927-ஆம் வருஷம் தேர்தலில் வென்ற டிவாலரா கோஷ்டியார், முதல்முதலாக டேல் சபைக்குள் போய் உட்கார்ந்தார்கள். 1932-ஆம் வருஷம் அவர் கட்சிக்குப் பெருமித வெற்றி கிடைத்தது. அயர்லாந்தின் பிரதம மந்திரி பதவியையும் டிவாலரா ஏற்ருர். அதுமுதல் இது வரையில் அயர்லாந்தின் நிராட்சேபமான சர்வாதிகாரியாகவே அவர் இருந்துவருகிருர்,

டிவாலரா பதவி யேற்றது முதல், பிரிட்டிஷ் சிங்கத்தின் வாலைப் பல முறை முறுக்கிப் பதம்பார்த்துவிட்டார். அவர் செய்த சில மிக முக்கியமான காரியங்கள் வருமாறு:

(1) டேல் சபையின் அங்கத்தினர்கள் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்ய வேண்டும் என்றிருந்த விதியை ஒழித்தார்; (2) அயர்லாந்து ஸுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புக்கு மேலே, பிரிட்டிஷ் பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் கிடையாது என்று சட்டம் செய்தார்; (3) அயர்லாந்தின் ஏழை விவசாயிகளிடமிருந்து, பிரிட்டன் வருஷந்தோறும் 'லாண்ட் அன்யூவிட்டீஸ்' என்று 50 லட்சம் பவுன் நிலக் கடன் வசூலித்ததை நிறுத்தி, பிரிட்டனுக்கு நாமம் போட்டுவிட்டார்; (4) சுய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய முறையில், இறக்குமதிகளைக் குறைத்து, உள்நாட்டுத் தொழில்கள் பலவற்றை வளர்த்தார்; (5) பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரலையே நீக்கிவிட்டார்; (6) சமீப யுத்தத்திலே அயர்லாந்து நடுநிலைமை வகிக்கும்படி செய்தார்.

டிவாலரா அரசியலில் ஈடுபடுமுன்பு புரொபஸராயிருந்த காலத்திலிருந்தே மகாத்மா காந்தியைப் போலவே, 'கதர்' தான்—அயர்லாந்துக் குடிசைகளிலே நூற்று நெய்த முரட்டுத் துணியைத்தான்—உடுத்திக்கொள்வார். குதிரை சவாரியில், அவர் நிபுணர். குன்றுகளின்மீது தொற்றி ஏறுவதென்றால், அவருக்கு மிகவும் உற்சாகம். டப்ளின் நகரிலிருந்து, தினந்தோறும் 10 மைல் தூரம் குன்றுப் பிரதேசங்களில் உலாத்திவிட்டு வருவார். அவரோடு நடக்க, அவர் வீட்டிலுள்ள யாராலும் முடியாது.

அவர் அயர்லாந்திலோ இங்கிலாந்திலோ இருக்கையில், ஒரு சொட்டு மதுவும் பருகமாட்டார். குடியே அயர்லாந்தைக் கெடுத்திருக்கிறது என்று டிவாலரா கருதுகிறார். ஐரோப்பாக் கண்டத்துக்குச் செல்லும்போது மாத்திரம், லாகிரி அதிகம் இல்லாத சாராயம் அல்லது பீர் மிகவும் சொற்பமான அளவில் அபூர்வமாக அவர் குடிப்பதுண்டு. வாலிபத்தில் ஏராளமாய்ச் சுருட்டுக் குடிப்பார். இப்போது அது குடிப்பதே இல்லை. ஈஸ்டர்ப் புரட்சிக்குப் பின்பு, தீவாந்திர சிட்சை விதிக்கப்பட்ட கைதியாய்ச் சிறைக்குச் செல்லும் வழியில், அவரது கையிலே சுருட்டு இருந்தது. "சிறையிலே இந்த இன்பத்தை அவர்கள் எனக்கு மறுக்க நான் இடங் கொடுக்கக்கூடாது; ஆகையால், இதை இப்போதே நானாகவே விட்டுவிடுகிறேன். இனி ஒரு போதும் நான் சுருட்டுக் குடிப்பதேயில்லை" என்று சொல்லி, சுருட்டை வீசியெறிந்தார். அதோடு அந்த வழக்கம் அவரை விட்டோடியது. பணத்தில் அவருக்குத் துளிக்கூட மோகம்

கிடையாது. சொந்த சொத்து ஒன்றும் அவருக்கு இல்லை. எவ்விதமான தமாஷாக்கள், போகங்களுக்கும் அவர் செலவு செய்யமாட்டார். சங்கீதத்தில் மிகுந்த பற்றுதல். கணிதத்தில் அபார மோகம். அளவிறந்த தெய்வ பக்தியுடையவர். இயன்ற போதெல்லாம் பிரார்த்தனை செய்வார். 'அவருடைய வாழ்க்கையே ஒரு நீண்ட பிரார்த்தனைதான்' என்று நண்பர்கள் சொல்லுகிறார்கள்.

டிவாலராவுக் கேற்ற மனைவியே அவருக்கு வாய்த்தாள். சாதாரணமான ஒரு வீட்டில், எளிமையாக, டிவாலராவின் குடும்பத்தார் வசிக்கிறார்கள். ஏழு குழந்தைகள். வீட்டிலே ஒரே ஒரு பெண் வேலைக்காரிதான் உண்டு. 1932-ஆம் வருஷம் வரையில் அந்த ஒருத்தியும்கூடக் கிடையாது; வீட்டு வேலைகள் அனைத்தையும் டிவாலராவின் மனைவியே செய்துவந்தாள். உல்லாஸ விருந்துகளுக்கு டிவாலரா தம்பதிகள் அதிகமாய்ச் செல்லுவது கிடையாது. பதவி காரணமாய்ச் செல்லவேண்டிய மிகச் சில விருந்துகளுக்குங்கூட, வேண்டா வெறுப்புடனே தான், டிவாலராவின் மனைவி செல்வாள். "இந்த விருந்துகளுக்கெல்லாம் செல்வதற்காக உத்தியோக மனைவி ஒருத்தியை, அயர் சர்க்கார் என் கணவருக்கு அளிக்கலாகாதா?" என்று டிவாலராவின் மனைவி, தமாஷாய்ச் சொல்வாள்.

'டேவ், டேவ்' என்ற செல்லப் பெயராலேயே, தேசமெங்கும் மக்கள் டிவாலராவைக் குறிப்பிடுகிறார்கள். இந்தப் பாக்கியம் எல்லாத் தலைவர்களுக்கும் கிடைப்பதல்ல வென்றாலும், அவர் நேரிலே இருக்கும்போது மாத்திரம், அவருடைய மனைவியைத் தவிர வேறு யாரும், 'டேவ்' என்று நேரே அவரை அழைப்பது கிடையாது. அவருடைய நண்பர்களும் சகாக்களும், 'தலைவரே!' அல்லது 'ஜனாதிபதியே' என்றுதான் அவரை அழைப்பார்கள். காஸ்கிரேவ் சர்க்கார் ஆட்சி புரிந்த காலத்தில், ஒரு சமயம் இதில் அவர்களுக்குக் கோபம் வந்து. இதைத் தடுக்க ஒரு மசோதாவைக்கூட அவர்கள் கொண்டுவந்துவிட்டார்கள்! "குடியரசுத் தலைவரைத் தவிர, வேறு யாரையும் யாரும் 'ஜனாதிபதி' என்று அழைக்கக்கூடாது" என்பது மசோதா. இந்த மசோதாவைக் கண்டிக்க, டப்ளின் நகரில் டிவாலராவின் கோஷ்டியார் நடத்திய ஒரு கூட்டத்தில், ஒரு சீமாட்டி பேசுகையில், "டேவைத் தவிர, வேறு ஜனாதிபதியில்லை என்று இதுவரையில் கூறிவந்தேன்; இனிமேல் ஜனாதி

பதியைத் தவிர, வேறு டேவ் இல்லையென்று கூறி வருவேன்'' என்றாள். இந்தக் கேலியோடு அந்த மசோதா செத்தது.

டிவாலரா ஒரு சர்வாதிகாரியாகத்தான் இருந்துவருகிறார். என்றாலும், அவர் சிறந்த ஒரு ஜனநாயக வாதி. அவர் ஜனங்களை நம்புகிறார்; ஜனங்கள் அவரைப் பரிபூர்ணமாய் நம்புகிறார்கள். இன்று தினம் டேல் சபையில் பெரும்பான்மை ஆதரவைத் தாம் இழந்தாராலும், உடனே பதவியை ராஜிநாமாச் செய்ய டிவாலரா தயாராயிருக்கிறார். 1934-ஆம் வருஷம் சில புதிய வரிகள் விதிக்கப்பட்டபோது, கலகங்கள் விளைந்தன. கலகக்காரர்கள் தந்திக் கம்பிகளை அறுத்தார்கள்; சாலைகளில் மரங்களை வெட்டி வழி மறித்தார்கள். இவைகளைத் தடுக்க, அவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை; கூட்டு அபராதமும் விதிக்கவில்லை. ''கடுமையான நடவடிக்கை எடுங்களேன்'' என்று சில நண்பர்கள் அவரை வேண்டினார்கள். ''மாட்டேன். விஷமிகளைத் தடுக்கும் வேலையை ஜனங்களிடமே விடுங்கள்; அவர்களே அதைப் பார்த்துக்கொள்வார்கள்'' என்றார் டிவாலரா. ஏனென்றால், அவருடைய சர்க்கார் ஜனங்களின் சர்க்கார்.

டிவாலராவின் வாழ்க்கை பூராவும் ஒரே கருத்து, ஒரே லட்சியமே ஆட்கொண்டிருக்கிறது. ஐக்கியப்பட்ட சுதந்தர அயர்லாந்து—இதுவே அவரது லட்சியம். வட அயர்லாந்தில் அல்ஸ்டர் என்ற ஆறு ஜில்லாக்களை இன்னும் பிரிட்டன் தன் கையில் வைத்துக்கொண்டிருக்கிறது. ''அந்த ஆறு ஜில்லாக்களையும் திருப்பித் தந்தால், எங்கள் நடுநிலைமையைக் கைவிட்டு யுத்தத்தில் சேருகிறோம் என்று பிரிட்டனுக்குச் சொல்லுங்களேன்'' என்று யாரோ அவரிடம் சமீப யுத்தத்தின்போது யோசனை சொன்னார்கள். ''ஒற்றுமை உரிமையைப் பெறுவதற்காக, சுதந்தர உரிமையைப் பேரம் செய்வதா? மாட்டோம். இரண்டு உரிமைகளும் அயர்லாந்துக்கு உண்டு'' என்று வெடுக்கென்று பதிலளித்தார் டிவாலரா. ஆம்; சுதந்தரமே அவரது மூச்சுக் காற்று.

# தளபதி ஸ்மட்ஸ்

'**தோ**ல்வியே அறியாதவர்; ஆனால், மகாத்மா காந்தியிடம் மட்டும் தோற்றுவிட்டார்' என்று ஒரு வீரரைப் பற்றிச் சொல்வதுண்டு. அவர்தான் தென்னாப்பிரிக்க யூனியன் சர்க்காரின் தற்போதைய பிரதம மந்திரியான தளபதி ஸ்மட்ஸ். தென்னாப்பிரிக்க யூனியன் ஸ்தாபிதமானதற்கு மூல புருஷர்களில் ஜெனரல் ஸ்மட்ஸ் ஒரு முக்கியஸ்தர். அவருடைய வாழ்க்கை, வீரம் செறிந்தது; வெற்றி நிறைந்தது. அவர் ஒரு போர்வீரர், சட்ட நிபுணர், இலக்கியப் பண்டிதர், அரசியல் வாதி, ராஜ தந்திரி. இன்று பிரிட்டனின் உற்ற நண்பர்களில் ஒருவர்.

தென்னாப்பிரிக்க போயர் குடியானவக் குடும்ப மொன்றில் 1870-ஆம் ஹு ஜான் கிரிஸ்டியன் ஸ்மட்ஸ் பிறந்தார். இங்கிலாந்துக்குச் சென்று, கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் கல்வி பயின்று, முதல்தரமாய்ப் பரிட்சைகளில் தேறிப் புகழுடன் திரும்பினார். டிரான்ஸ்வாலில் வக்கீல் தொழிலில் பிரவேசித்தார். அப்போது வயது 28. ஆள்களை மயக்கும் ஜாலக்குகள் தெரியாத வராதலால், தொழிலில் பிரகாசிக்கவில்லை. தேசம் நிலைகுலைந்து கொண்டிருந்தது. ஆங்கிலேயருக்கும் போயர்களுக்கும் பிரமாத மான போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. அந்தப் போர்த் தீயில், தளபதி ஸ்மட்ஸ், தாவிக் குதித்து விட்டார்.

அந்தப் போரின் வரலாற்றை நண்பர்கள் அறிந்து கொள்வது அவசியம். தென்னாப்பிரிக்காவிலே ஆங்கிலேயர்கள் குடியேறினார்கள்; டச்சுக்காரர்களும் போய்க் குடியேறி னார்கள்; அந்த டச்சுக்காரர்களுக்குத்தான் போயர்கள் என்று பெயர். சுதேசி நீக்ரோக்களை இருவருமே வாட்டி வதைத்து அமுக்கினார்கள். தங்கள் தங்கள் ராஜ்யங்களை விஸ்தரித்தார்கள். அப்போது, அந்த ஆங்கிலேயருக்கும் டச்சுக்காரருக்குமே போர் மூண்டது. அதுதான் போயர் யுத்தமென்பது. 1899-ஆம் வருஷத்திலிருந்து 1902-ஆம் வருஷம் வரையில் இந்தப் போயர் யுத்தம் நடந்தது. டிரான்ஸ்வால், ஆரஞ்சு பிரீ ஸ்டேட்ஸ் என்ற இரண்டு குடியரசுகளும் போயர் ராஜ்யங்கள். கேப் காலனி, நேட்டால் இரண்டும் பிரிட்டிஷ் காலனிகள். இவைகளுக் கிடையே நடந்தது அந்தப் போர்.

போயர்கள் மிகுந்த வீரத்தோடு போரிட்டார்கள். அவர்களை நசுக்கித் துவைக்க மகா மூர்க்கமாய்ச் சண்டை யிட்டார் லார்டு கிச்னர். போயர்களின் எதிர்ப்புத் தளர்ந்தது. போயர்களின் பிளீம்பாண்டீன், பிரிட்டோரியா என்ற தலைநகர்கள் பிடிபட்டு, ஆங்கிலேயரின் வசமாயின. டிரான்ஸ்வாலின் சர்க்கார் இருந்த இடம் தெரியாமல் புதைந்துவிட்டது. போயர்களின் தலைவன் கிழ குரூகர் ஐரோப்பாவுக்கு ஓடி அக்ஞாத வாசம் புரியலானார். ஆயிரக்கணக்கான போயர்ப் போர்க் கைதிகள் ஹெலினத் தீவுக்கும் சிலோனுக்கும் அனுப்பப்பட்டுச் சிறை வைக்கப் பட்டார்கள். இந்த நிலையில் 250 போயர் வீரர்களைச் சேர்த்து ஒரு படை திரட்டிப் போர் முனையில் வந்து குதித்தான் 28 வயதுடைய ஒரு வாலிப வீரன். அந்த வீரனே தளபதி ஸ்மட்ஸ்.

தளபதி ஸ்மட்ஸின் போர்முறை மிகவும் விசித்திரமானது. அவர் மாயமான் போல வந்து தாக்கிவிட்டு, ஒளிந்து பிடிப்பது போல ஆங்கிலேயர்களின் கையில் அகப்படாமல் ஓடுவார்; கொசுவைப் போல் வந்து குத்திவிட்டுப் பறந்து செல்வார். எத்தனையோ முறை, மயிரிழையில் தப்பியோடி யிருக்கிறார். பதினாயிரம் பிரிட்டிஷ் சோல்ஜர்களைக் கொண்ட ஒரு படை, தெற்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் சூழ்ந்து, இவரது காலடியில் இவரை மோப்பம் பிடித்துத் துரத்திக் கொண்டே யிருந்தது. அத்தனைக்கும் இவர் 'டிமிக்கி' கொடுத்துக்கொண்டே யிருந்தார். 250 வீரரையே ஆரம்பத்தில் அடக்கிக் கொண்டிருந்த இவரது படை, திரண்டுவரும் மழை வெள்ளம் போல் வரவர அதிகரித்து, 3,000 போயர்களைக் கொண்டதாய் வளர்ந்து விட்டது. ஸ்மட்ஸ் படையின் வேலை என்ன? கேப் காலனியில் போய்க் கொள்ளை யடிப்பதும், அங்கேயுள்ள போயர்களைப் புரட்சி செய்யத் தூண்டுவதுமே யாகும். இதில் பல ஆபத்துக்கள் நேரிட்டன. சில சமயம் உடைக ளெல்லாம் இழந்து ஸ்மட்ஸ் படையினர் தவிப்பார்கள். செத்த அல்லது பிடிபட்ட ஆங்கில வீரர்களின் உடுப்புகளைக் களைந்து தாங்கள் உடுத்திக் கொள்வார்கள். உணவுக்குப் பலமுறை பஞ்சம் ஏற்பட்டது. ஸ்மட்ஸ் எதற்கும் சளைக்காமல் போரிட்டார்.

ஒருபுறம் ஸ்மட்ஸின் இந்தப் படையை அடக்க முடியாமல் திணறினாலும், மறுபுறத்தில் லார்டு கிச்னரின் அடக்குமுறைக் கொடுமை வலுத்தது. போயர்ப் பெண்களெல்லாம் கூட முகாம்

சிறைகளில் அடைக்கப்பட்டார்கள். சொல்லொணுத் துயரங்களுக்கு அவர்கள் ஆளானுர்கள். அந்த வீரப் பெண்கள் இத்தனையையும் பொறுத்துக் கொண்டார்கள். மது வெறி கொண்ட ஆங்கில சோல்ஜர் ஒருவன் போயர்ப் பெண்ணொருத்தியைப் போய்ச் சீண்டுவான். அவளது மானபங்கச் சோகப் புலம்பல் கேட்போரின் மனத்தை உருக்கும். இந்தமாதிரி அட்டூழியங்களும் நிகழ்ந்தன. இவற்றை யெல்லாம் கேட்ட ஏழாம் எட்வர்டு மன்னர், உள்ளம் வெதும்பி, லார்டு கிச்னருக்கு ஒரு தாக்கீது அனுப்பினுர். "போயர்களை நமக்கு அடிபணியச் செய்ய இதுவே வழி யென்ருல், என்னுல் இது சகிக்காது. போரை நிறுத்துங்கள். சமாதானம் செய்யுங்கள். அது எப்படிப்பட்ட சமாதானமா யிருந்தாலும் பாதகமில்லை" என்று கிச்னரை மன்னர் வற்புறுத்தினுர். போயர்களின் வீரத்தைக் கேட்ட பிரிட்டிஷ் பொதுமக்களும் அதிசயித்தார்கள். சமாதானமும் நடந்தது. "டச்சுக் காலனிகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு உள்பட வேண்டியது; கொஞ்ச காலத்துக் கெல்லாம் அவைகளுக்குப் பூரணப் பொறுப்பாட்சி கிடைத்துவிடும்" என்று கிச்னர் உறுதி கூறினுர். போயர்களும் நம்பினுர்கள்.

ஆனுல்; சமாதானத்துக்குப் பின்னும் அவர்களுக்குப் பொறுப்பாட்சி கிடைக்கவில்லை. தளபதி போதாவும், தளபதி ஸ்மட்ஸும் சட்ட சபைகளைப் பகிஷ்கரித்து, ஒத்துழையாமை செய்து, போராடி, பொறுப்பாட்சியைப் பிரிட்டனிடம் வாங்கினுர்கள். பின்னுல், இந்த இருவரது முயற்சியாலுமே, நான்கு காலனிகளும் சேர்ந்த தென்னுப்பிரிக்க யூனியன் சர்க்காரும் ஏற்பட்டது.

இடையில் 1906-ஆம் ஆண்டு மகாத்மா காந்தியின் சத்யாக்கிரகப் போர் தொடங்கியது. இந்தியர் அனைவரும் வருஷம் ஒன்றுக்குத் தலா மூன்று பவுன் வரி செலுத்த வேண்டும் என்றும் இந்தியரின் விவாகங்கள் செல்ல மாட்டா என்றும் இந்தியர்கள் லைசென்ஸ் வாங்க வேண்டுமென்றும் தென்னுப்பிரிக்காவில் ஓர் அடக்குமுறைச் சட்டம் வந்தது. அதை எதிர்த்தே இந்தச் சத்யாக்கிரகம் ஆரம்பமாயிற்று. இது 1914-ஆம் ஆண்டு வரையில் நடந்தது. இந்தியரின் கோரிக்கைகளுக்குத் துளிக்கூட விட்டுக் கொடுக்கக் கூடாதென்று, தளபதி ஸ்மட்ஸும் வேறு பல ஆங்கிலேயரும் மிக்க மூர்த்தன்யமாய் எதிர்த்து நின்ருர்கள். தளபதி ஸ்மட்ஸ் அப்போது, தளபதி போதாவின் சர்க்காரில்

காலனி மந்திரியாயிருந்தார். அவர் இரண்டொரு நம்பிக்கைத் துரோகங்களும் செய்தார்; "மூன்று பவுன் வரியையாவது ரத்து செய்யுங்கள். எனது சத்தியாக்கிரகப் படையெடுப்பை நிறுத்துகிறேன்" என்ற செய்தியைத் தளபதி ஸ்மட்ஸுக்கு மகாத்மாஜி சொல்லி யனுப்பினர். "உமது சங்காத்தமே நமக்கு வேண்டாம்; உம் இஷ்டப்படி நீர் செய்து கொள்ளும்—இவ்வாறு ஸ்மட்ஸ் சொல்லுகிறார்" என்று, அவருடைய காரியதரிசியின் மிடுக்கான பதில்தான் காந்திஜிக்குக் கிடைத்தது. பின்னல், அதே ஸ்மட்ஸ் பணிய வேண்டியதாயிற்று. காந்தி—ஸ்மட்ஸ் ஒப்பந்தம் ஏற்பட்டு, மூன்று பவுன் வரியும் ரத்தாயிற்று.

மகாத்மா காந்தி தென்னப்பிரிக்கச் சிறையி லிருந்தபோது, தம் கையால் தைத்த ஒரு ஜோடி பாதரட்சையைத் தளபதி ஸ்மட்ஸுக்குப் பரிசாக அனுப்பினராம். அதை இன்றளவும் ஸ்மட்ஸ் மிகவும் பத்திரமாய்ப் பாதுகாத்து வைத்துக் கொண்டிருக்கிறாராம்.

1914-ஆம் ஜெர்மன் போர் தொடங்கிய போதும், இந்தத் தடவை போலவே, தென்னப்பிரிக்கா என்ன நிலைமை வகிப்பது என்ற பிரச்னை எழுந்தது. "நமக்கும் இந்த யுத்தத்துக்கும் ஒரு சம்பந்தமு மில்லை. நாம் ஏன் இதில் வீணே தலையிட வேண்டும்? நடு நிலைமையே வகிப்போமே!" என்று போயர்களில் சிலர் வாதித்தார்கள். முன்னே பிரிட்டனேடு போரிட்ட வீரர்களான தளபதி போதாவும், தளபதி ஸ்மட்ஸும் மட்டில் 'பிரிட்டனுக்கு உதவி செய்தே தீர வேண்டும்' என்று உறுதியாய் நின்றார்கள். தென்மேற்கு ஆப்பிரிக்காவில் ஜெர்மன் காலனியுடன் நடந்த குட்டிப் போரில், அந்தக் காலனி சரணடைந்தது. அப்போது கைப்பற்றப்பட்ட பழைய ஜெர்மன் ஏகாதிபத்தியக் கொடி, இன்றும் தளபதி ஸ்மட்ஸின் வீட்டுப் படிப்பறைச் சுவரை அலங்கரித்துக் கொண்டிருக்கிறதாம்.

அடுத்தாற்போல, கீழாப்பிரிக்காவில் பிரிட்டிஷ் படைகளுக்குச் சேனதிபதியாகச் செல்லுமாறு தளபதி ஸ்மட்ஸைப் பிரிட்டிஷ் சர்க்காரே கேட்டுக் கொண்டார்கள். போயருக்கும் பிரிட்டிஷாருக்கும் பரஸ்பர நம்பிக்கையும் நிரந்தர சமாதானமும் ஏற்பட்டதற்கு அடையாளம் போல, அந்தக் கௌரவமான பதவியை ஸ்மட்ஸும் ஏற்றுக்கொண்டு, வெகு சீக்கிரமே ஜெர்மன் தளபதி வான் லெட்டோவை விரட்டி யடித்தார்.

ஆப்பிரிக்காவில் சூடிய இரண்டு வெற்றி வாகைகளோடு, 1917-ஆம் வருஷம் இங்கிலாந்தில் ஏகாதிபத்திய யுத்த மந்திரி சபைக் கூட்டத்துக்கு அவர் விஜயம் செய்தார். அப்போதலைய நிலைமை மிக்க அபாயமா யிருந்தது. தளபதி ஸ்மட்ஸ் இங்கிலாந்தில் பல இடங்களுக்கும் சென்று, தமது திறமையாலும் பெருமையாலும் பிரிட்டிஷ் மந்திரிகளுக்கும், பிரிட்டிஷ் மக்களுக்கும் புதிய நம்பிக்கையும் புதிய ஊக்கமும் புதிய தைரியமும் ஊட்டினர். முதல் ஏகாதிபத்திய மந்திரிசபை கலைய வேண்டிய சமயம் வந்தபோது, பிரிட்டிஷ் பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ், ஸ்மட்ஸை விடமாட்டேன் என்று சொல்லி, பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபையிலேயே அவருக்கு ஒரு ஸ்தானம் வழங்கிவிட்டார். இந்த நியமனம் உலகிலில்லாப் புதுமையும் சட்ட வரம்பை யெல்லாம் மீறியதுமாகும். தளபதி ஸ்மட்ஸ், பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தின ரல்ல; தமது சொந்தத் தென்னுப்பிரிக்க மக்களுக்கே பொறுப்பானவர். இப்படிப் பட்டவரைப் பிரிட்டிஷ் மந்திரியாய் நியமித்துக்கொள்ளச் சட்டப்படி முடியாதாகையால், லாயிட் ஜார்ஜ் ஒரு யுக்தி செய்தார். அதாவது, சம்பளமில்லாத கௌரவ மந்திரியாக, இவரை நியமித்து விட்டார். அந்தப் பதவியை வகித்த காலத்தில், தளபதி ஸ்மட்ஸ் பிரிட்டனுக்குச் செய்த சேவையை ஆங்கிலேயர் ஒருநாளும் மறக்க முடியாது. லண்டனை விமானத் தாக்குதலினின்றும் காப்பாற்றிய தற்காப்பு ஏற்பாடுகளைச் செய்த பெருமை முழுவதும் தளபதி ஸ்மட்ஸையே சேர்ந்ததாகும். வருங்காலத்தில் யுத்த விமானங்களின் அட்டகாசம் மகா கொடுமையா யிருக்கும் என்று அப்போதே அவர் தீர்க்க தரிசனமும் கூறிவிட்டார். சமாதானம் நடந்தபின்பு சர்வதேசச் சங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்று ஸ்மட்ஸ் பலமாய் வாதித்ததால்தான், அமெரிக்கக் குடியரசுத் தலைவரும் பிரிட்டிஷ் மந்திரிகளும் அதற்கு முடிவாய் இணங்கினர்கள் என்று சொல்ல வேண்டும். ஆனல், வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையில் தாமும் கையெழுத்திட்டவரா யிருந்தும், அதன் அநீதிகளைக் கண்டு ஏமாற்ற மடைந்தவராகவே ஸ்மட்ஸ் தம் நாட்டுக்குத் திரும்பினர்.

அவர் இப்படித் திரும்பிய ஒன்றிரண்டு வாரத்துக் கெல்லாம் தளபதி போதா காலமாகி விட்டார். உடனே ஸ்மட்ஸே தென்னுப்பிரிக்கப் பிரதம மந்திரியானர். 1924-ஆம் ஞு வரையில்

அந்தப் பதவியை வகித்தார். அந்த வருஷத்தில் நடந்த தேர்தலில் ஹெர்ட்ஸாக் கட்சியாரால் தோற்கடிக்கப்பட்டுப் பதவியை ராஜினமாச் செய்தார்.

ஆனல், 1933-ஆம் வருஷத் தேர்தலிலே ஹெர்ட்ஸாக்கை அவர் தோற்கடித்திருக்க முடியும். என்ருலும், சொந்த நன்மையைவிடத் தேச நன்மையே பெரிதென்று கருதி, ஹெர்ட்ஸாக்கின் கீழ் அவரது கூட்டு மந்திரி சபையில் பதவி வகித்துச் சேவை புரிய, தளபதி ஸ்மட்ஸ் இசைந்தார். இந்தக் 'கூட்டு வியாபாரம்' 1939-ஆம் வருஷம் வரையில் எந்தவித இடையூறுமில்லாமல் அழகாய் நடந்துவந்தது. ஹிட்லரின் போர் ஆரம்பமான உடனே, ஹெர்ட்ஸாக் கோஷ்டியார் நடுநிலைமை வகிக்க வேண்டுமென்ருர்கள்; ஸ்மட்ஸ் கோஷ்டியார் பிரிட்டனுக்கு உதவவேண்டுமென்ருர்கள். யூனியன் மந்திரி சபைக்குள்ளேயே இவ்வாறு பிளவு நேர்ந்தது. மந்திரி சபையிலும் சட்டசபையிலும் சொற்பப் பெரும்பான்மைப் பலத்தால், ஸ்மட்ஸ் வெற்றி பெற்று, மீண்டும் பிரதம மந்திரி பதவியை ஏற்று நிர்வாகம் நடத்தி வருகிருர்.

இந்த ஸ்மட்ஸின் ஆட்சியில் மீண்டும் இந்தியர்கள் கொடுமையாய் நடத்தப்படுகிருர்கள். 1943-ஆம் வருஷம் 'முடக்குதல்' சட்டம் என்று ஒன்று தென்னப்பிரிக்காவில் வந்தது. டர்பன் நகர இந்தியர், புதிதாய் யாரிடமும் நிலம் வாங்கக்கூடாது என்பது அதன் முக்கிய விதி. சேரி போலக் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டிலுமே இந்தியர்கள் வாழலாம். இந்தச் 'சேரி' ச்சட்டங்களையும் இதர கொடுமைகளையும் எதிர்த்து, 1946-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தில் விஜய லட்சுமி பண்டிட் விவாதம் செய்தார். தளபதி ஸ்மட்ஸ் நேரே வந்து, பண்டிட் விஜய லட்சுமிக்கு எதிர்வாதம் செய்தார். தளபதி ஸ்மட்ஸ் தோல்வியுற்ருர். விஜயலட்சுமியின் கட்சியே வெற்றி பெற்றது. இந்தியரைத் தென்னப்பிரிக்கா கொடுமையாய் நடத்துவது தவறு என்று, ஐ. நா. ஸ்தாபனம் ஒப்புக்கொண்டுவிட்டது. இந்தியா, தென்னப்பிரிக்கா இரண்டு நாடுகளின் சர்க்கார்களும் சமரசமாக இந்த விவகாரத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அது முடிவு கூறியுள்ளது. காந்தியிடம் மட்டுமன்றி வேறு யாரிடமும் 'தோல்வியே அறியாத' தளபதி ஸ்மட்ஸ் இன்று பண்டிட் விஜயலட்சுமியிடம் இரண்டாவது தோல்வி

அடைந்துவிட்டார். ஏனென்றால், அவர் கட்சி அநியாயக் கட்சி. அவர் என்ன செய்வார்? ஷா கூறியதுபோல், நிறத் திமிர் பிடித்த வெள்ளைக்காரர் நிறைந்த ஒரு நாட்டுக்குத் தலைமை வகிக்கும் ஒருவன், வேறு எப்படி நடக்கமுடியும்?

# ஜனாதிபதி ட்ரூமன்

**1945**-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 12-ஆம் தேதி அமெரிக்காவின் உதவி ஜனாதிபதி ட்ரூமன், தமது ஆபீஸ் அறையிலே உட்கார்ந்து அமைதியாக ஏதோ வேலை செய்து கொண்டிருந்தார். திடீரென்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் காலமானார் என்ற செய்தி கேட்டார். அப்படியே வொயிட் ஹவுஸில் முப்பத்து மூன்றாவது ஜனாதிபதியாகப் பதவியேற்றுப் பிரமாணமும் செய்தார். அச்சமயம் மிகச் சிலரே அங்கே கூடியிருந்தார்கள். அவர்களில் சிலர் கண்ணீரும் சொரிந்துகொண்டிருந்தார்கள்.

ஜனாதிபதி காலமானதும், உதவி ஜனாதிபதியே அந்தப் பதவியை ஏற்று நிர்வகிப்பது அமெரிக்காவில் வழக்கம். இதற்குமுன் ஏழு உதவி ஜனாதிபதிகள், அமெரிக்காவில் இம் மாதிரி ஜனாதிபதி பதவி ஏற்றிருக்கிறார்கள்.

மிஸ்ஸௌரியில், லாமார் என்னுமிடத்துக்கு அருகே, ஒரு விவசாயப் பண்ணையில் ஹாரி எஸ். ட்ரூமன் பிறந்தார். இந்த 1947-ஆம் வருஷம் மே மாதம் 8-ஆம் தேதி அவருக்கு 63 வயது பூர்த்தி ஆகிறது.

ட்ரூமன் சிறு பையனாயிருக்கையில், விளையாடப் போவதேயில்லை. லைப்ரரியில் உட்கார்ந்து நாள் பூராவும் படிப்பார். மீன் பிடிக்கவோ, வேட்டையாடவோ, நீஞ்சவோ போகமாட்டார். பள்ளிக்கூட 'லைப்ரரியில் உள்ள புத்தகங்களைப் படிப்பதோடு விடுவதில்லை. பொது லைப்ரரிகளிலும் போய்ப் படிப்பார். சரித்திரப் புத்தகங்களிலே மிகுந்த ஆவல். யுத்தங்களையும் யுத்த வீரர்களையும் பற்றிப் படிப்பதில் அவருக்குப் பரம ஆசை. அமெரிக்கத் தளபதிகளைப்பற்றி யெல்லாம் அவர் படித்திருக்கிறார்; அமெரிக்கச் சண்டை விவரங்களை யெல்லாம் கற்றிருக்கிறார்.

பத்து வயதுச் சிறுவனா யிருக்கையில், வாரம் மூன்று டாலர் சம்பளத்தில் அவர் வேலைக்கமர்ந்தார். 1903-ஆம் வருஷம் ஒரு பாங்கியில் சற்று மேலான சம்பளத்தில் உத்தியோகம் பார்த்தார். 1906-ஆம் வருஷம், தங்கள் குடும்பப் பண்ணையிலேயே ஒரு கூட்டாளியாய் வேலை செய்யுமாறு இவருடைய தந்தை இவரை அழைத்தார். ட்ரூமன் அதற்கிசைந்து பண்ணைக்குத் திரும்பினார். பத்து வருஷ காலம் அப்படிக் கழிந்தது.

போன மகா யுத்தம் தொடங்கியது. உடனே, ட்ரூமன் ராணுவத்தில் சேர்ந்தார். 1918-ஆம் வருஷம் ஒரு பீரங்கிப் படையின் காப்டனாகப் பதவி பெற்றார். பின்னால், கர்னல் பதவியும் அடைந்தார்.

ட்ரூமன் சிறந்த போர் வீரர். தம்மால் போக முடியாத எந்த இடத்துக்கும் தம் கீழுள்ள வீரர்களை அவர் போகச் சொல்ல மாட்டார். 'கணக்குப் பித்து ட்ரூமன்' என்று அவருக்கு ஒரு பரிகாசப் பெயர் உண்டு. தம் கீழுள்ள சர்க்கார் சொத்து அனைத்துக்கும் இம்மி பிசகாமல் கணக்கு வைத்துக் கொள்வதில் அவர் வெகு கண்டிப்பாய் நடந்து வந்தார். அவரது படையின் பீரங்கிகளில் ஒன்று ஒரு சமயம் எதிரியின் குண்டால் உடைந்து தூளாய்ப் போய்விட்டது. அதில் அகப் பட்ட தூள்களையெல்லாம் அவர் பொறுக்கி வைத்துக் கொண் டார். எதற்கு? தம் நஷ்டக் கணக்குக்கு ருசுக் காட்டுவதற் காகத்தான்!

பெஸ் வாலஸ் என்ற பெண்மணி, அவருடைய பாலியக் காதலி. 1919-ஆம் வருஷம் அவளை அவர் மணந்து கொண்டார். அவர்களுக்கு இப்போது மேரி மார்காரெட் என்ற ஒரு பெண் இருக்கிறாள்.

மிஸ்ஸௌரியில் ஜாக்ஸன் கவுண்டி நீதிஸ்தலத்துக்கு ஜட்ஜியாக 1922-ஆம் வருஷம் ட்ரூமென் தேர்ந்தெடுக்கப்பட்டார். மிஸ்ஸௌரியின் சட்டப்படி, இந்தப் பதவிக்குச் சட்ட ஞானம் தேவையே யில்லை. என்றாலும், சட்டப் படிப்புப் படித்தால் தான் தமது ஜட்ஜி பதவியைத் திறம்பட வகிக்கலாம் என்று ட்ரூமென் எண்ணினார். இரண்டு வருஷ காலம், கன்ஸாஸ் நகரச் சட்ட கலாசாலையில் படித்தார்.

ஆனால், அடுத்த தேர்தலில் இவருடைய ஜட்ஜி பதவி போய் விட்டது. என்றாலும், 1926, 1930 இரண்டு வருஷங்களிலும், மீண்டும் மீண்டும் அந்த ஜட்ஜி பதவியை இவர் பெற்றார்.

1934-ஆம் வருஷம் முதல் முதலாக, செனேட் சபைக்கு ஓர் அங்கத்தினராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1940-ஆம் வருஷம் நவம்பர் 5-ஆம் தேதி மீண்டும் செனேட் மெம்பரானார். இந்தப் பதவிக் காலம் 1947-ஆம் வருஷம் ஜனவரி 3-ஆம் தேதி முடிவடைந்தது.

செனேட்டில் ட்ரூமன் அதிகமாகப் பேசுவதில்லை. ஆனல், பஸ் போக்குவரத்துச் சம்பந்தமாக மாகாணங்களுக்கிடையில் லைசென்ஸ் அளிப்பதைப் பற்றிய ஒரு திட்டம் அவரால் தயாரிக்கப்பட்டு அமுலுக்கு வந்தது. பொது மக்களின் விமானப் போக்கு வரத்து, இதர போக்கு வரத்துகள் சம்பந்தமான 1940-ஆம் வருஷத்திய சட்டத்தைத் தயாரித்த ஒரு கமிட்டியில் அவர் முக்கியமான பங்கெடுத்துக் கொண்டார். மசோதா நிலையில் 'வீலர் - ட்ரூமன் மசோதா' என்று அதற்குப் பெயர் வழங்கியது.

1941-ஆம் வருஷம்தான் முதல் முதலாக ட்ரூமனுக்குப் பிரபலம் ஏற்பட்டது. ராணுவக் கண்டிராக்டு முதலிய தற்காப்புச் செலவினங்களில் அநியாயமாய் நஷ்டமும் மோசடிகளும் நடக்கின்றன என்று அவர் எடுத்துரைத்தார். அதன்மேல், 'தேசியத் தற்காப்புத் திட்டப் பரிசீலனைக் கமிட்டி' என்ற ஒரு கமிட்டியை அவர் தலைமையில் செனேட் நியமித்தது, இதற்கு, 'ட்ரூமன் கமிட்டி' என்று பெயர். இந்தக் கமிட்டி பற்பல விதமான ராணுவச் செலவினங்களையும் ஆராய்ந்து, மோசடி, வீண் விரயங்களை யெல்லாம் கண்டு பிடித்ததால் ஏற்பட்ட மிச்சத்தை நூறு கோடியிலிருந்து ஆயிரத்தைந்நூறு கோடி டாலர்வரை மதிப்பிடுகிறார்கள்.

ட்ரூமனுக்கு மயிர் நரைத்துவிட்டது. என்றாலும், புன் முறுவல் ததும்பும் முகம். இங்கித சுபாவம். மூக்குக் கண்ணாடி தரித்திருப்பார். அவருக்குப் பியானோ வாசிக்கத் தெரியும். பணம் வைத்து ஆடும் போக்கர் என்ற சீட்டாட்டத்தில் வல்லவர். அவர் பதவிக்கு வந்தவுடனே, உலகத்துக்கு அளித்த உறுதி இது தான்:

"கிழக்கு, மேற்கு இரண்டு போர் முனைகளிலும், யுத்தத்தை நாம் தொடர்ந்து நடத்துவோம்; நமது முழுச் சக்தியையும் ஈடுபடுத்தி வெற்றி காண்போம். இதை உலகம் உறுதியாய் நம்பலாம்."

யுத்தம் வெற்றியோடு முடிந்தது. அதற்கு அமெரிக்கா உதவிய பங்கு மதிப்பரியது. அதே உதவி சமாதான ஸ்தாபிதத்திலும் கிடைக்குமா?

# வின்ஸ்டன் சர்ச்சில்

இருண்ட இரவிலே திடீரென்று வானத்தில் ஓர் ஆகாசவாணம் தோன்றுகிறது; 'பளிச்சுப் பளிச்' சென்று மின்னுகிறது; மறைகிறது; மீண்டும் தோன்றுகிறது; அணைவது மாத்திரம் ஒரு நாளுமில்லை—இத்தகையதோர் அதிசய ஆகாசவாணத்துக்கு இணையாக, பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஸ்ரீ வின்ஸ்டன் சர்ச்சிலை ஏ. ஜி. கார்டினர் என்ற பிரபல ஆங்கில ஆசிரியர் ஒப்பிடுகிறார். ஸ்ரீ சர்ச்சிலின் அரசியல் வாழ்க்கை அப்படிப்பட்டது. அவருக்குப் பல முறை அரசியல் சாவு ஏற்பட்டது; ராஜீய நிபுணர்கள் அவருக்குப் பல முறை அரசியல் மரணச் சடங்கு நடத்திவிட்டார்கள். "சர்ச்சில் இதோடு தொலைந்தார். இனி அவருக்கு அரசியலிலே இடங்கிடையாது" என்று திரும்பத் திரும்ப அவர்கள் சரம கவி பாடினார்கள். ஆனால், ஒவ்வொரு முறையும் ஸ்ரீ சர்ச்சில் "நான் போனது போலவே வந்தேனே!" என்று திரும்பி வந்து விட்டார்!

லார்டு ரொண்டால்ப் சர்ச்சில் என்பவரின் மகனாக, 1874-ஆம் வருஷம் ஸ்ரீ வின்ஸ்டன் சர்ச்சில் பிறந்தார். வின்னி சர்ச்சில் சிறு வயதிலேயே ஹாரோ கலாசாலையில் கல்வி பயின்றார். பள்ளிக்கூடத்திலே 'பரம மண்டு' என்று பெயர் வாங்கினார். அவருக்குப் படிப்பிலே மனஞ் செல்லவில்லை. யுத்தத்திலேதான் ஆசை.

'வின்னி' க்கு மூளை கிடையாது என்று ரொண்டால்ப் கருதினார். ஆகையால், சட்டப் படிப்பிலே வீணே பணத்தைச் செழிவழிப்பானேன்? அவருக்கு அதில் இஷ்டமில்லை. 'வின்னி' க்கும் அதுவே கொண்டாட்டமாயிற்று. சேனையிலே சேர்ந்து 'சிப்பா' யாகிவிட்டார்!

போர் வீரனுக்கு வேண்டிய ராணுவப் பயிற்சிகளைச் சும்மா ஊரிலிருந்தபடியே பெற்றுக்கொள்வதில் அவருக்குத் திருப்தி கிடையாது. காலனிகளில் நடந்த சிறு சிறு போர்களில் எல்லாம் நேரே போய்க் கலந்துகொள்ள வேண்டுமென்று பிடிவாதம் செய்தார். அதிகாரிகள் அனுமதித்தாலும் சரி, அனுமதிக்கா விட்டாலும் சரி, இந்தக் குட்டிப் போர்க்களங்களுக் கெல்லாம்

அவர் எப்படியாவது போகாமல் நிற்பதில்லை. கியூபாவில் நடந்த ஸ்பெயின் போர், 1897–98-ஆம் வருஷங்களில் இந்திய எல்லைப் புறத்தில் நிகழ்ந்த சண்டை, பின்னால் சூடானில் நேர்ந்த போர் முதலியவற்றிலெல்லாம் அவர் கலந்துகொண்டார். போயர் யுத்தத்திலே போர் வீரனாகப் போர்க்களத்தில் புக முடியவில்லை; 'மார்னிங் போஸ்ட்' பத்திரிகையின் நிருபராக, அங்கேபோய்ச் சேர்ந்துவிட்டார். ஆனால், இவர் போர் முனைக்குச் செல்லும் போது வழியிலே லூயி போதா என்ற ஒரு போயர் இவரைச் சூழ்ச்சியாய்ப் பிடித்துக் கைதுசெய்துவிட்டார். பின்னால், போயர்களின் முகாம் சிறை யொன்றில் இருந்து, 'வின்னி' தப்பித்து ஓடிவந்தார். இந்த அனுபவத்தை யெல்லாம் அவர் ஒரு புஸ்தகமாய் வரைந்தார். இதிலிருந்து சிறந்த நூலாசிரியர் என்ற கீர்த்திபெற்றார். புஸ்தகங்கள் எழுதிப் பணம் சம்பாதிக்கவும் தொடங்கினார்.

1900-ஆம் ஆண்டு தான் வின்ஸ்டன் சர்ச்சில் பார்லிமெண்டிலே முதல்முதலாய் நுழைந்தார். அப்போது கன்ஸர்வேடிவ் கட்சியிலே யிருந்தார். ஆனால், கொஞ்ச காலத்துக்கெல்லாம் ஸர் ஆஸ்டின் சேம்பர்லீன் சில புதிய தீர்வைத் திட்டங்களைக் கொண்டு வந்தபோது, அவற்றை 'வின்னி' பலமாக எதிர்த்துக் கண்டித்தார். காலக்கிரமத்தில் லிபரல் கட்சியில் சேர்ந்தார். பின்னால், பல வருஷங்கள் கழித்து, மீண்டும் கட்சி மாறி கன்ஸர்வேடிவ் ஆனார். கட்சி மாறுவதென்பது அவருக்குப் பெரிய காரியமல்ல. 'டான்ஸ்' ஆடும்போது ஒவ்வொரு சுற்றுக்கும் ஒரு புதிய ஆளுடன் ஜோடி சேர்ந்து கொள்வது மேல்நாட்டாரின் வழக்கமில்லையா; அதேமாதிரிதான் கட்சி மாறுவதும் சர்ச்சிலுக்குத் தண்ணீர் பட்டபாடு. அவருக்கு ஒரே ஒரு கட்சியில்தான் நம்பிக்கை; அதாவது, தமது தொப்பியின் கீழே சேரும் மனிதர்களின் கட்சி ஒன்றுதான் சரியான கட்சியாயிருக்க முடியும் என்பது அவருடைய எண்ணம்.

பல தடவைகளிலும் அவர் பிரிட்டிஷ் சர்க்காரில் உத்தியோகங்கள் வகித்திருக்கும் ஜாபிதா இதுதான்:

1906—08 காலனிகளின் உதவி மந்திரி

1908—10 வர்த்தக மந்திரி

1910—11 உள்நாட்டு மந்திரி

1911—15 கடற் படை மந்திரி
1915 லங்காஸ்டர் டச்சியின் சான்ஸெலர்
1917 வெடி மருந்து மந்திரி
1919—21 யுத்த இலாக்கா, விமானப் படை இரண்டுக்கும் மந்திரி
1921—22 காலனி மந்திரி
1924—29 பொக்கிஷ மந்திரி
1940—45 பிரிட்டிஷ் பிரதம மந்திரி

முதல் உலக யுத்தத்தின்போது, தொடக்கத்தில் கடல் படை மந்திரியாயிருந்து, பிறகு—தரைப் படை, விமானப் படை ஆகிய எல்லாப் படையையும் கைப்பற்றி, முழு யுத்த மந்திரியும் ஆகி விட்டார் சர்ச்சில். அதைப்பற்றி ஒரு தமாஷ் பாட்டுக்கூட ஆங்கிலத்தில் வழங்கியது. "டண்டியில் ஒரு வாலிபன் இருந்தான். அவனிடம் கடற்படையை ஒப்புவித்தார்கள். அவன் தரைப் படையையும் விமானப் படையையும் கைப்பற்றிக் கொண்டான். எதற்காகத் தெரியுமோ? மூன்று படை களுக்கும் சம நியாயம் கிடைக்க வேண்டாமோ? அதற்காகத் தான்" என்பது அந்தப் பாட்டின் கருத்து. அதேமாதிரிதான் சமீப யுத்தத்திலும் நடந்தது. சேம்பர்லின் மந்திரி சபையிலே கடல் படை மந்திரியாக நுழைந்த அவர், மெல்ல மெல்ல இதர படை இலாகாக்கள் மீதும் ஆதிக்கம் கொண்டு, இறுதியிலே பிரதம மந்திரியே ஆகிவிட்டார். போர் என்றால் அவ்வளவு உற்சாகம் சர்ச்சிலுக்கு. கைச் சண்டையில்லாதபோது, உக்ர மான வாய்ச் சண்டையாவது போடாவிட்டால் அவருக்குக் 'குஷி'ப்படாது.

சர்ச்சில் உள்நாட்டு மந்திரியா யிருந்த காலத்தில், இங்கிலாந் தெங்கும் ஒரு பொது வேலை நிறுத்த நெருக்கடி ஏற்பட்டது. அச் சமயம் சர்ச்சிலின் அறைக்குள் ஜான் பர்ன்ஸ் என்ற நண்பர் நுழைந்தார். ஸ்ரீ சர்ச்சில் இங்கிலாந்தின் படத்தை விரித்து, துருப்புகளை எந்தெந்தக் கேந்திர ஸ்தானங்களிலெல்லாம் நிறுத்த வேண்டும் என்று ராணுவ தந்திரத் திட்டங்கள் போட்டுக்கொண்டிருந்தார். நண்பரைக் கண்டதும் "என் னுடைய ராணுவ ஏற்பாடுகள் எப்படி, ஜான்!" என்று அந்த நண்பரை ஸ்ரீ சர்ச்சில் அபிப்பிராயம் கேட்டார். "காப்பி ஓட்டல் கலகத்தை, ஏதோ பெரிய யுத்தம் என்றல்லவா நீர்

நினைத்துவிட்டீர்! அழகுதான்" என்று சொல்லி, அந்த நண்பர் நகைத்தார். சர்ச்சிலுக்கு எதைக் கண்டாலும் யுத்தமாய்த் தோன்றிவிடும்! ஏனென்றால், அவர் ஒரு பிறவிப் போர் வீரன்.

வளைந்து தொய்ந்த தோள்கள்; உதிர்ந்து குறைந்த கேசம்; சிந்தனையால் கடுத்த முகம். இத்தனை யெல்லாம் இருந்தாலும், நடையிலும் அசைப்பிலும் வாலிப முறுக்குத்தான். ஹாரோ கலாசாலையிலே மாணவனா யிருந்தபோது தொப்பி வகைகளிலும் கைப் பிரம்பிலும் எவ்வளவு மோகமோ அதே மோகம் இன்று வரையிலும் அவருக்குண்டு. தினுசு தினுசாய்த் தொப்பிகள் தரிப்பார்; கைப் பிரம்பில்லாமல் அவர் உலாவமாட்டார்.

சர்ச்சில் அற்புதமாய்ப் பிரசங்கிப்பார். அவருடைய சாதாரண சம்பாஷணைகள் கூடப் பிரசங்கமாகவே யிருக்கும். அவருடன் யாராவது சம்பாஷிக்கச் சென்றால், அவர்தான் பேசிக்கொண்டிருப்பாரே யல்லாமல் வந்தவர் பேச இடங் கொடுக்கவேமாட்டார். பிறர் பேசுவது அத்தனையும் சுத்த அபத்தமாகத்தான் அவருக்குப் படும். பேச்சில் மாத்திர மல்ல, ஆட்சியிலும் அவர் வல்லவர். இடையிலே கட்டுரைகளும் எழுதுவார்; கல் லடுக்கிக் கட்டிடங்கள் கட்டுவார்; சித்திரங் களும் தீட்டுவார்.

இப்பேர்ப்பட்ட தீர புருஷனிடம் தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் தோணி இரண்டாவது யுத்த காலத்தில் ஒப்படைக் கப்பட்டிருந்தது; ஹிட்லர் என்ற பெரும் புயலினின்றும் தப்பி, சமாதானக் கரை சேர்க்கும் மீகாமனாக, அவரையே பிரிட்டன் நம்பியது. வளைந்த தோளாயினும் வணங்கா உரம் படைத்த ஸ்ரீ சர்ச்சில் அந்த நம்பிக்கையைக் காப்பாற்றிவிட்டார். யுத்தம் 1945-ஆம் வருஷ மத்தியில் முடிவுற்றது. சர்ச்சிலுக்கு வேலை யில்லாமல் போய்விட்டது. அந்த வருஷம் ஆகஸ்டு மாதம் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு நடந்த பொதுத் தேர்தலில் அவருடைய கன்ஸர்வேடிவ் கட்சி அடியோடு முறிபட்டது. சர்ச்சிலின் மந்திரி சபை தலை குப்புறக் கவிழ்ந்தது. ஆட்லியைத் தலைமையில் கொண்ட தொழிற் கட்சி மந்திரி சபை அமைந்தது. சர்ச்சில் பழைய பெத்தான் ஆகிவிட்டார். முன் போலவே பொறுப்பற்ற பேச்சுகளைக் கக்கிவருகிறார். இது அவர் வழக்கம்.

# பீவர் புரூக்

**யு**த்தத்தை வெல்வதற்குச் சர்ச்சில் செய்த மிகச் சிறந்த காரியங்களில் ஒன்று, லார்டு பீவர் புரூக் என்ற பத்திரிகை மன்னனின் விமான மந்திரி பதவியை ஏற்கும்படி செய்ததாகும்.

" இந்த உத்தியோகத்தை நீங்கள் ஏற்கவேண்டும் " என்று சர்ச்சில் சொன்னாராம்.

" புண்ணியமா, புருஷார்த்தமா? எதற்காக நான் ஏற்க வேண்டும்?" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டே கேட்டாராம் பீவர் புரூக். இந்த உத்தியோகத்தில் அவருக்கு ஆசை கிடையாது. ஆனால், பல் வேறு காரியங்களைச் செய்யாமல் அவரால் சும்மா இருக்க முடியாது. அரசியல், பொருளாதாரம், கலை, இலக்கியம், மனோதத்துவம், ஹாமர்ஸ்மித்திலுள்ள தமது நாடகக் கொட்டகை, மூன்று பெரிய சமாசாரப் பத்திரிகைகள் இத்தனை 'பொம்மை' களையும் வைத்துக்கொண்டு விளையாடும் துறுதுறுத்த குழந்தை அவர். யுத்த விமானங்கள் என்ற புதிய 'பொம்மை' யும் கைக்கு வந்தால், அவருக்குக் கொண்டாட்டமே அல்லவா?

பீவர் புரூக் 'லார்டு' பட்டம் சூடிக் கொண்டதற்கு முந்தி அவருடைய பூர்வாசிரமப் பெயர் மிஸ்டர் வில்லியம் மாக்ஸ்வெல் அயிட்கின் என்பதாகும். கானடாவில் எளிய ஸ்காட்லாந்துப் பாதிரியார் ஒருவரின் ஆறுவது குழந்தை அவர். இப்போது வயது அறுபதுக்கு மேல் ஆகிறது.

வாழ்க்கையிலே அவருடைய முதல் ஆசை, பணம் சம்பாதிப்பதுதான். இருபதாவது வயதிலே பரம தரித்திரனாயிருந்தார்; இருபத்தெட்டாம் வயதில் கோடீசுவரனாகி விட்டார்.

எப்படி?

முதலிலே ஜான் ஸ்டேர்ஸ் என்ற பிரபல இரும்பு – நிலக்கரி முதலாளியிடம் காரியதரிசியானார். அவரது பூர்ண நம்பிக்கையையும் பெற்றார். அவர் இவரைக் கைதூக்கி விட்டார். தமது செழிப்புக்கெல்லாம் அந்த முதலாளிதான் காரணம் என்று பீவர் புரூக் இன்றும் ஒப்புக் கொள்கிறார். ஸ்டேர்ஸிடம் சேவை

புரிந்த கொஞ்ச நாளைக்கெல்லாம், பீவர் புரூக் தாமே சொந்தத்தில் தொழில் புரிந்து, பெரும் பெரும் கம்பெனிகளை இயக்கியும் இசைத்தும் செல்வம் சேர்த்தார்.

இப்படிப் பெரிய முதலாளியான பின்பு, 1910-ஆம் ஆ ஏதோ வியாபார நிமித்தமாக, பீவர் புரூக், ஒரு சமயம் லண்டனுக்கு வந்தார். வந்த இடத்திலே அவரை அரசியல் பிடித்துக் கொண்டது. அதுவும் ஒரு விநோதமாகும்.

லண்டனில் போனர்லா என்ற மற்றொரு பிரபல கனடியரின் சிநேகம் பீவர் புரூக்குக்கு ஏற்பட்டது. அச்சமயம் பிரிட்டனில் பொதுத் தேர்தல் நடந்து கொண்டிருந்தது. அந்தத் தேர்தலில் போனர்லா ஓர் அபேட்சகராக நின்றார். தமது தேர்தல் போராட்டத்திலே தமக்கு உதவி செய்ய வேண்டுமென்று, பீவர் புரூக்கை, போனர்லா கேட்டுக் கொண்டார். நண்பருக்கு உதவி புரிந்தது மாத்திரமல்ல; தாமுமே ஒரு தொகுதிக்கு அபேட்சகராக பீவர் புரூக் நின்றுவிட்டார்! இந்தக் கோமாளித் தனத்தைக் கேள்விப்பட்டவரெல்லாம் அப்போது 'கொல்' லென்று நகைத்தார்கள். பீவர் புரூக்கோ, இங்கிலாந்துக்கு அந்நியர். பேச்சோ, கனடியப் பேச்சு. அரசியல் அறிவும் பூச்சியம். பணத்தைப் பற்றிப் பேசும் போது, பவுன்-ஷில்லிங்-பென்ஸ் கணக்கு அவருக்கு வராது; கனடிய நாணயமான டாலர், ஸெண்டுகள் கணக்கிலேயே பேசி விடுவார். என்றாலும், கட்டுப்பாடாய் ஆள்பிடித்து வேலை செய்வதில் மகா நிபுணன். தேர்தலில் வெற்றியே பெற்றார்.

பார்லிமெண்டில், அவர் அப்படி ஒன்றும் பிரகாசிக்க வில்லை. ஆயினும், 1911-ஆம் ஆ எவ்வாறோ ஸர் பட்டம் பெற்றார். 1914-ஆம் ஆ யுத்தம் வந்துவிட்டது. பிரான்ஸிலே போர் முனையில் கனடியப் படைகளுக்கு விளம்பர அதிகாரியாக, காக்கி உடுப்பு சகிதம் போய்ச் சேர்ந்தார். அங்கே போய் அவரால் சும்மா இருக்க முடியவில்லை. களத்தில் கனடியப் படைத் தலைவராயிருந்த ஜெனரல் ஆல்டெர்ஸானுக்குக் 'கல்தா' க் கிடைத்தது. காரணம் பீவர் புரூக் வைத்த வர்த்தி தான் என்றார்கள்.

ஏதாவது சூத்திரக் கயிறு போட்டு இழுத்துக்கொண்டே இருப்பதில் அவர் மகா கைகாரர். 1916-ஆம் ஆ ஆஸ்குவித் மந்திரிசபை கவிழ்ந்து, லாயிட் ஜார்ஜ் மந்திரி சபை அமைந்தது

அவரால்தான். தாம் பிரதம மந்திரி யானவுடனே லாயிட் ஜார்ஜ் செய்த முதல் காரியம், பீவர் புரூக்குக்கு 'லார்டு' பட்டம் சூட்டியதாகும். அரசியலா யிருந்தாலும் நன்றி மறக்கலாமா, என்ன ?

1918-ஆம் ஆூ லாயிட் ஜார்ஜின் புது மந்திரி சபையில் விளம்பர மந்திரி பதவி பீவர் புரூக்குக்குக் கிடைத்தது. ஆனல், சிலமாத காலத்தில் தேக அசௌக்கியம் காரணமாக அந்தப் பதவியைத் துறந்துவிட்டார்.

போன யுத்தத்தின் கடைசி வருஷத்தில், 'டெய்லி எக்ஸ்பிர'ஸின் நிர்வாக உரிமைகளை 87,500 பவுனுக்கு வாங்கினர். 'டெய்லி எக்ஸ்பிர'ஸின் நெ. 1 வாசகர் அவர்தான்; அதன் நெ. 1 கட்டுரையாளரும் அவர்தானும்.

பிரிட்டனில் ரோதர்மீர், நார்த்கிளிப் என்ற பத்திரிகை மன்னர்களைப் போல, பீவர் புரூக்கும் சிறிது காலத்திலே ஒரு பத்திரிகை மன்னராகி விட்டார். அவர் கையிலே இன்று மிகச் செல்வாக்குள்ள மூன்று பத்திரிகைகள் இருக்கின்றன. 'டெய்லி எக்ஸ்பிரஸ்' ஒன்று; 'ஈவனிங் ஸ்டாண்டர்டு', 'ஸண்டே எக்ஸ்பிரஸ்' என்பவை மற்றிரண்டுமாகும்.

பார்லிமெண்டில் பேச்சுப் பேசி அடையமுடியாத அதிகார ஸ்தானத்தை எப்படி எட்டுவது? அதற்கொரு குறுக்கு வழியை அவர் கண்டு பிடித்தார். அதுதான் பத்திரிகைச் செல்வாக்கு. பத்திரிகைகளின் செல்வாக்கைக் கொண்டு, இஷ்டப்படி பொதுஜன அபிப்பிராயத்தை இழுத்த இழுப்புக் கெல்லாம் மாறும்படி அடிக்கலாம் என்று அவர் கண்டு கொண்டார். கொள்கையோ, கட்சியோ எதுவும் அவருக்குக் கிடையாது. எந்தச் சர்க்காரும் பார்லிமெண்டுக்குக் கட்டுப்பட்டாலும் கட்டுப்படாவிட்டாலும் சரி; பத்திரிகைகளின் கட்டளைகளை மட்டில் சிரமேல்தாங்கி நடக்க வேண்டும். இல்லாவிட்டால், அந்தச் சர்க்காரை பீவர் புரூக் கவிழ்த்து விடுவார். ஜனநாயகத்திலே மந்திரிசபை என்பது பார்லிமெண்டின் 'அனுபந்தம்' என்ருல், பீவர் புரூக் தர்பாரிலே அந்த மந்திரி சபை பத்திரிகைகளின் 'அனுபந்த'மா யிருக்க வேண்டும்!

ஆனல், தமது பத்திரிகையின் ஆசிரியர்களையோ சித்திரக்காரர்களையோ, எடுத்ததற்கெல்லாம் அவர் கண்காணம் செய்து கொண்டிருப்பதில்லை. அவர்கள் சுதந்தரமாய்த் தத்தம் அபிப்

பிராயங்களை வெளியிடும்படி விட்டு விடுவார். 'ஈவனிங் ஸ்டாண்டர்டு,' பீவர் புரூக்கின் பத்திரிகைதான். அதன் பிரபல கேலிச் சித்திரக்காரரான லோ, தம்முடைய முதலாளியான பீவர் புரூக்கையே நையாண்டி செய்து எத்தனையோ தடவை படங்கள் வரைந்து அந்தப் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். ஏகாதிபத்திய நாடுகளுக்குள்ளே ஒன்றுக்கொன்று ஏற்றுமதி இறக்குமதித் தீர்வைகள் துளியும் விதித்துக் கொள்ளாமல் சுதந்தரமாய் வியாபாரம் நடத்த வேண்டுமென்று பீவர் புரூக் ஒரு காலத்தில் மகா உக்ரமாய்க் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தார். இந்தக் கிளர்ச்சியையும்கூட லோ தம்முடைய படங்களால் மகா பலமாய்க் கேலி செய்து கொண்டிருந்தார்! ஊரார் எதிர்த்தால் போகிறதென்னலாம்; தம் ஆட்களே இப்படித் தம்மைக் கேலி செய்தால், பொறுப்பவர் உண்டோ? பீவர் புரூக்கோ துளியும் கோபிக்கவில்லை. அவ்வளவு தாராள மனோ பாவமும் பத்திராசிரியர்களின் சுதந்தரத்தில் பற்றுதலும் உடையவர் அவர். தாம் மட்டில், தம் மனப்போக்கின்படி ஒரே சுருதியில், படிப்பவரெல்லாம் சலித்துப் போகும்படி, தம் கட்டுரைகளை, பீவர் புரூக் எழுதிக்கொண்டே வந்தார்.

தமது பத்திரிகாலயத்தில் லார்டு பீவர் புரூக் ஒரு விசித்திர மான சீர்திருத்தம் செய்தார். தலைமை ஆசிரியரின் அறை, சப்தப் பிராகாரத் திருக்கோயிலின் கர்ப்பக்கிரகம் மாதிரி இல்லாமல், சகல ஆசிரியர்களையும் உதவி ஆசிரியர்களையும் அவர்களின் சிப் பந்திகளையும் பிரம்மாண்டமான ஒரே கூடத்துக்குள் அடைத்து விட்டார். யாராவது அந்நியர் வந்தால், இவர்களில் யார் பிரதம ஆசிரியர், யார் ஆபீஸ் பையன் என்று கூடக் கண்டுபிடிக்க முடியாது; எதற்காக இப்படிச் செய்தாரென்றால், வேலையிலே விரைவு ஏற்படுவதற்காகத்தான். பிரதம ஆசிரியர் ஒரு மூலையிலும் உதவி ஆசிரியர்கள் வெவ்வேறு மூலைகளிலும் இருந்தால், சௌக ரியமாகத்தான் இருக்கும்; தூக்கங்கூட வரும். ஆனால், வேலை துரிதமாய் நடக்காது. இக்காலத்திலோ பத்திரிகாலயங்களில் அவசரந்தான் மகா முக்கியமான அம்சம். அதை எண்ணியே பீவர் புரூக் இந்த ஏற்பாட்டைச் செய்தார்.

பீவர் புரூக் விமான மந்திரி பதவியை ஏற்றவுடனே முதல் முதலில் போட்ட கோஷம் இதுதானாம்: "வரவு செலவைச் சரிக்கட்டும் முறையிலா விமான உற்பத்தி! நான் அப்படிச் செய்யப் போவதில்லை! வரவு செலவுக் கணக்கைச் சீர்குலைக்கவே

போகிறேன்! அவசர அவசரமாய் விமானங்களைக் கட்டும் ஒன்றே என் விருப்பம்! அழகான வரவு செலவுக் கணக்கு எனக்கு வேண்டாம்.''

மந்திரி சபையில் நுழைந்தபோதே தொழிற்சாலைகளிலும் பரபர என்று அவர் நுழைந்துவிட்டார். தமது சொந்த விளம்பரத்தை அவர் விரும்பவே யில்லை. பதவி கைக்குவந்த சில மாதங்களுக்குள்ளேயே நாள்தோறும் நாள்தோறும் அதிவேகமாய்ப் புதுப்புது விமானங்கள் கட்டிவரும் கணக்கை அவர் மந்திரிசபை முன் சமர்ப்பித்துச் சிறந்த அபிவிருத்தி காட்டினர். இன்று அசுர விமானப் போரே, யுத்தத்தில் பிரதான அம்சமாய் விளங்குகிற தல்லவா?

மந்திரிசபைக் கூட்டங்களுக்கு பீவர் புருக் செல்லும்போது, அவருடைய முகம் மாத்திரம் மிகவும் கவலை குடிகொண்டதாகவே காணப்படுமாம். "வாசலிலே எமன் வந்து காத்திருக்கிறன்" என்று சொல்லத்தான் வருகிறரோ என்று மற்ற மந்திரிகளுக்குத் தோன்றுமாம். ஆனல், கூட்டத்திலே அவர் ஆஜர் செய்யும் புதிய விமானக் கணக்குகளைப் பார்த்தால், மிக வியப்பா யிருக்குமாம், அவருடைய நிர்வாகத்தில் தயாரான புதிய விமானங்களின் கணக்கு, கைத்தொழில் உலகத்திலேயே அதுவரை நடந்திராததொரு பெரும் அற்புதமாகும் என்கிறர் ஓர் ஆசிரியர். என்றலும், 1940—42-ஆம் வருஷங்களில் விமான மந்திரியா யிருந்த இவரை, அதன் பின்பு, ராஜ முத்திரையைக் காக்கும் மந்திரியாக, சர்ச்சில் இறக்கி வைத்தார். அதன் ரகசியம் தெரியவில்லை. இன்று பீவர் புருக் பழையபடி தம் பத்திரிகைகள் உண்டு, தாம் உண்டு என்று அமைந்து வாழ்கிறர்.

# அமெரி

யுத்த காலத்தில் சர்ச்சிலின் தலைமையில் தீரமாகவும் உறுதியாகவும் பிரிட்டன், ஹிட்லரை எதிர்த்து நின்றதென்றால், அதற்கு மூல புருஷர் ஸ்ரீ அமெரி என்றுதான் சொல்ல வேண்டும். சேம்பர்லீனின் வழவழாக் கொள்கையை ஈர இரக்கம் இல்லாமல் கண்டித்து, அவரது மந்திரி சபையைக் கவிழ்த்தவர்களில் மிக முக்கியமானவர் ஸ்ரீ அமெரிதான்.

இந்த அமெரி, முதல்தரமான ஏகாதிபத்திய வெறியர். கன்ஸர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவர். இவருடைய ஜனன பூமி இந்தியாதான். பெற்றோர் கலப்படம். அதாவது டாக்டர் காட்லீப் வில்லியம் லீட்னர் என்ற ஹங்கேரியரின் சகோதரி இவருடைய தாயார். சார்லஸ் எப். அமெரி என்ற ஆங்கிலேயர் தந்தை. சார்லஸ் எப். அமெரி இந்தியக் காட்டிலாகாவிலே ஓர் உத்தியோகஸ்தர். இந்தத் தம்பதிகளின் திருக்குமாரனாக மாஜி இந்தியா மந்திரி அமெரி, 1873-ஆம் ௵ இந்தியாவிலே கோரக்பூரில் பிறந்தார்.

மாஜி இந்தியா மந்திரி அமெரியின் அம்மானான டாக்டர் லீட்னர் ஒரு யூதர். அவருக்குக் கீழ் நாட்டுப் பாஷைகளில் நல்ல புலமையுண்டு. இருபத்தஞ்சு பாஷைகள் பேசுவார். அவர் லாகூர் சர்க்கார் காலேஜின் பிரின்ஸிபாலாக வேலை பார்த்தார். அப்போதுதான் அவருடைய சகோதரியை, சார்லஸ் எப். அமெரி சந்தித்துக் காதலுற்று மணந்து கொண்டார். இப்படி ஹங்கேரிய-யூத-ஆங்கிலக் கலப்படப் பெற்றோரைப் படைத்த இந்தியா மந்திரி அமெரிக்கு, பரிபூரண ஆங்கிலத் தேசியமும், ஏகாதிபத்திய வெறியும் மிகுந்தது ஆச்சரியமல்ல. மனோ தத்துவ சூட்சுமம் இதுதான். தமது பூர்வோத்திரத்தில் இருக்கக்கூடிய அந்நிய ரத்தக் கலப்பின் மருவைத் துடைத்துத் தூய்மை செய்ய வேண்டுமென்ற ஓர் ஆசை அவர் உள்ளத்துக்குள்ளே அவரும் அறியாமலே எழுந்திருக்க வேண்டும். அதனால் தான் அவர் கலப்பற்ற ஆங்கிலத் தேசிய ஆவேசங் கொண்டிருக்கிறார் என்று தோன்றுகிறது.

கர்னல் அமெரி ஒரு காலத்தில் லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகையில் ஓர் உதவியாசிரியராக வேலை பார்த்தார். சென்ற

யுத்தத்தின் போது, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய யுத்த மந்திரி சபையில், உதவிக் காரியதரிசியாகப் பதவி வகித்தார். ஸ்பார் புருக் தொகுதிக்கு 1911-ஆம் ஞு முதல் காமன்ஸ் சபையில் மெம் பரா யிருந்து வந்தார். 1922-ஆம் ஞு முதல் 1924-ஆம் ஞு வரை யில் பிரிட்டிஷ் கடல்படை மந்திரியாயிருந்தார். 1924-ஆம் ஞு முதல் 1929-ஆம்ஞு வரையில் குடியேற்ற நாட்டு மந்திரி பதவியை வகித்தார். கீழ் நாடுகளில் நிறையப் பிரயாணம் செய்திருக் கிருர். அநேகமாக, பிரிட்டனின் சகல குடியேற்ற நாடு களுக்கும் விஜயம் செய்திருக்கிருர். ராஜீயம், சரித்திரம் சம்பந் தமான பல புஸ்தகங்கள் எழுதியிருக்கிருர்.

பார்லிமெண்டு அங்கத்தினர்களுக்குள்ளே, பிரபலமாய் விளங்கியவரில் ஒருவர் ஸ்ரீ அமெரி. "உயரத்திலும் முக பாவத் திலும் ஸ்ரீ பால் ரெய்னுடை ஒத்தவர்" என்று அமெரிக்கு, மாஜி பிரஞ்சுப் பிரதம மந்திரியை, 'பிக்சர் போஸ்ட்' என்ற சீமைப் பத்திரிகை ஒரு சமயம் உபமானம் கூறியது.

அமெரி தமது அரசியல் வாழ்வை நாற்பத்து நாலு வருஷங் களுக்கு முன்னே ஆரம்பித்தார். அதற்கு முன்பு ஆக்ஸ்போர்டு கல்லூரியில் படிக்கையிலேயே அவருடைய புத்தி தீட்சண்யம் மிகவும் பிரகாசித்தது. எப்போதுமே நெஞ்சழுத்தம் கொண் டவர். கொஞ்சம் முரட்டுத் தனங்கூட உண்டு.

ஒரு சமயம் பொதுக் கூட்டமொன்றில் பிரசங்கம் புரிந்து கொண்டிருந்தார். இடையிலே யாரோ ஒருவர் எழுந்து, "நீ ஒரு பொய்யன்!" என்று கத்தினர். இந்த அவதூறைக் கேட்டதும் அமெரிக்கு மகா ஆத்திரம் வந்தது. மேடையி லிருந்து துள்ளிப் பாய்ந்தார். அந்தத் துடுக்கனை மண்டை யிலே அடித்து வீழ்த்தினர். கைச் சண்டையில் மாத்திரமல்ல; வாய்ச் சண்டையிலும் இதே மாதிரி பதற்றம் காட்டுவார் அமெரி. காமன்ஸ் சபையிலே ஒரு நாள் ஏதோ விவாதம் நடந்து கொண்டிருந்தது. தொழில் கட்சி அங்கத்தினரான புச்சானன் பிரசங்கித்து முடித்தார். அந்தப் பிரசங்கத்தை "மனக் கோழையின் பேச்சு" என்று பரிகசித்தார் கர்னல் அமெரி. புச்சானனுக்கு ஆத்திரம் வந்தது. "அட பன்றியே! சோதாவே" என்று அமெரியை அவர் திட்டினர். "என்னையா சொன்னய்?" என்று கர்ஜித்தார் அமெரி. "ஆமாம்" என்று அழுத்தந் திருத்தமாய்க் கூறினர் புச்சானன். "அப்படியானல் இதை வாங்கிக் கொள்" என்று சொல்லிய அமெரி, புச்சானனின்

முகத்திலே விட்டார் ஓர் அறை. இதர அங்கத்தினர்கள் குறுக் கிட்டுத் தடுத்திரா விட்டால், காமன்ஸ் சபையிலே அன்று மூக்கிழந்த மூளிகள் சில ஏற்பட்டிருக்கும்.

பொது மேடையில் பேசும்போது, தம் எதிரிகளைக் கண்ட படி ஏச, அமெரி தயங்கவே மாட்டார். மன்னரின் பெயரைக் கூட ஒரு விவகாரத்தின்போது சந்திக்கிழுத்து விட்டார். பொது ஜனங்களிடம் அமெரிக்கு மிகுந்த செல்வாக்குக் கிடையாது. ஆனல், தம் கட்சித் தலைவர்களிடம் அவருக்குப் பிரமாதமான செல்வாக்கு உண்டு. சகாக்களை யெல்லாம் தம் இஷ்டப்படி ஆட்டி வைத்து விடுவார். 1923-ஆம் வருஷத்தில் பாதுகாப்புத் தீர்வை போடும் திட்டத்துக்கு ஸ்ரீ பால்டுவினைத் தூண்டி விட்டவர் அமெரி தான். தாம் கடல்படை மந்திரியா யிருந்த போதுதான் சிங்கப்பூர்க் கப்பல் படைத் தளத்தை ஆரம்பித்தார். அமெரியின் விடா முயற்சியால் தான் ஸ்ரீ மக்டனல்டு மந்திரி சபை கவிழ்ந்து, ஸ்ரீ பால்டுவின் மந்திரி சபை அமைந்து, தாமும் காலனி மந்திரியானர். கடல்படைக்குப் புதிய கப்பல்கள் கட்டும் பிரச்னையில் ஸ்ரீ சர்ச்சிலைத் தோற்கடிக்க முக்கியக் காரணமா யிருந்தவர் அமெரிதான். இப்படித் தலைவர்களிடம் அவருக்கு மிகுந்த செல்வாக்கிருப்பதன் காரணம் என்ன? அவர் தம் கொள்கைகளிலே உறுதியான பற்றுதல் உடையவர். அதனல்தான் அவருக்கு இந்தச் செல்வாக்கு.

1931-ஆம் ஞு தேசீய சர்க்காரில் அவருக்குப் பதவி யளிக் காமல் ஒதுக்கி வைத்து விட்டார்கள். அது முதல் சர்க்காருக்கு அழஅழப் புத்தி சொல்லும் ‘நேச’ராகி விட்டார் அமெரி. இரண் டாவது உலக யுத்தம் ஆரம்பிக்கப் பல வருஷங்களுக்கு முன் பிருந்தே, கன்ஸர்வேடிக் கட்சிக்குள்ளே, ஒரு சிறு கோஷ்டி யார் ஓயாமல் சர்க்காரின் அயல் நாட்டுக் கொள்கையைத் தாக்கி வந்தார்கள்; தீரமாகவும் உறுதியாகவும் பழைய அயல் நாட்டுக் கொள்கையையே அனுஷ்டிக்க வேண்டுமென்றும் ஆயுதங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் அவர்கள் வற்புறுத்தி வந்தார்கள். அந்தச் சிறு கோஷ்டியாருக்குள்ளே அமெரியும் ஒருவர்.

1939-ஆம் ஞு செப்டம்பர்-மீ 2உ, காமன்ஸ் சபை மிகுந்த கலக்கத்தோடு கூடியது. அங்கத்தினர்களின் முகத்திலெல்லாம் ஈயாடவில்லை. ஆறு மணி நேரத்துக்கு முன்னே போலந்து எல்லையைக் கடந்து, ஜெர்மன் துருப்புகள் அந்த நாட்டை

ஆக்ரமணம் செய்துவிட்டன. அப்படியிருந்தும், பிரான்ஸும், பிரிட்டனும், தாங்கள் போலந்துடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, ஜெர்மனிமீது யுத்தம் தொடங்குவதாக இன்னும் அறிக்கை செய்யவில்லை. நிகழ்ந்த நிகச்ழ்சிகளைப் பற்றி, பிரதம மந்திரி சேம்பர்லீன் விளக்கிச் சொன்ன வழ வழாப் பிரசங்கம், சபையோருக்குத் திருப்தியளிக்க வில்லை. எதிர்க் கட்சித் தலைவர் ஸ்ரீ ஆர்தர் கிரீன்வுட் ஆஜரில்லாததால், அவருடைய வேலையை ஸ்ரீ ஆட்லி மேற்கொண்டு பேச எழுந்தார். அச்சமயம் அமெரி மகா வேதனையோடு "ஐயோ! பிரிட்டனுக்காக நீங்கள் பேசுங்களேன்; வேறு யாருமே பேச மாட்டேனென்கிறார்களே!" என்று கத்தினார். இந்த வார்த்தைகளைப் பார்லிமெண்டு நிகழ்ச்சிகளின் பிரசுரமான ஹன்ஸார்டில் போடாமல் நீக்கி விட்டார்கள். என்றாலும், பிரிட்டனில் மிகப் பெரும்பாலோர் இவற்றைக் கவனித்து, இன்றும் ஞாபகத்தில் வைத்திருக்கிறார்கள்.

யுத்தத்தின் ஆரம்ப மாதங்களில், ஸ்ரீ சேம்பர்லீனின் யுத்த முயற்சிகளை அமெரி கண்டித்து வந்தார். 'டைம்ஸ்' பத்திரிகையில் அநாமதேயக் கட்டுரை யொன்று எழுதி, சேம்பர்லீனின் நிர்வாகத்தை அமெரி தாக்கினார். அந்தக் கட்டுரையே, ஸ்ரீ சேம்பர்லீனுக்கு விரோதமாய்த் தேசத்திலும் பார்லிமெண்டிலும், அபிப்பிராயங்கள் எழும்படி கிளப்பி விட்டது. புதிய சிறிய யுத்த மந்திரி சபையொன்றை அமைக்க வேண்டுமென்று ஸ்ரீ அமெரி வற்புறுத்தினார். ஆனால், ஸ்ரீ சேம்பர்லீன் மகா பிடிவாதமாய் அந்த யோசனையை மறுத்து விட்டார்.

என்றாலும், நார்வேயில் ஏற்பட்ட தோல்வியால், நெருக்கடி வலுத்தது. தேசத்திலே ஸ்ரீ சேம்ர்பலீனிடம் அதிருப்தி மிகுந்தது. முற்போக்கான கன்ஸர்வேடிவ்களுக்கு ஸ்ரீ அமெரி வழி காட்டினார். பார்லிமெண்டிலே மகா கடுமையாய் ஒரு பிரசங்கம் புரிந்தார். 'லாங் பார்லிமெண்டை'க் கலையும்படி கட்டளையிட்டபோது கிராம்வெல் என்ன வார்த்தைகளை உச்சரித்தாரோ அதே வார்த்தைகளை ஸ்ரீ அமெரியும் இந்த சந்தர்ப்பத்தில் உபயோகித்தார்: "கடவுள் பெயரால் ஆணை யிடுகிறேன்; நீர் போய் விடும்" என்று, ஸ்ரீ சேம்பர்லீனை நோக்கிக் கர்ஜித்தார். கன்ஸர்வேடிவ் கட்சிக்குள்ளேயே பலருக்குத் துணிச்சல் வந்து, கட்சிக் கொறடாக்களின் கட்டளைகளையும் மீறி, ஸ்ரீ சேம்பர்லீனுக்கு விரோதமாய் ஓட்டுப் போட்டார்கள். ஸ்ரீ சேம்பர்லீன் மந்திரி சபை கவிழ்ந்து, ஸ்ரீ சர்ச்சில் மந்திரி

சபையும் அமைந்தது. ஸ்ரீ அமெரிக்கு மீண்டும் பிரிட்டிஷ் மந்திரி சபையிலே ஒரு ஸ்தானம் கிடைத்தது. அவர் இந்தியா மந்திரியானுர்.

ஸ்ரீ அமெரி இந்தியா மந்திரி பதவி ஏற்குமுன், இந்தியா விஷயத்தில் ரொம்பத் தாராள மனப்பான்மை காட்டினுர். பதவி ஏற்றபின்போ எல்லாம் தலை கீழாகிவிட்டது. விக்கிரமாதித்தன் கதையிலே வரும் சோளக்கொல்லைச் சிம்மாசனத்தைப் போல, இது அந்தப் பதவியின் மகிமை போலிருக்கிறது.

அமெரி பதவி யடையச் சில மாதங்களுக்கு முன், அவரை ஓர் இந்திய நிருபர் பேட்டி கண்ட போது, ஸ்ரீ அமெரி பின் வருமாறு சொன்னுர்: "**இந்தியா சுதந்திர மடையத் தகுதியான நிலைமைக்கு வந்து விட்டது,** இந்தியாவின் குறைகளைக் கூடிய சீக்கிரத்தில் தீர்த்துவிட வேண்டுமென்று பார்லிமெண்ட் மெம்பர்கள் யாவரிடையேயும் ஓர் உணர்ச்சி இருந்து வருகிறது. இந்தியப் பிரச்னையை நன்ருகப் பரிசீலனை செய்து பார்த்தாகி விட்டது. எல்லா வகுப்புகளுக்கு மிடையே ஒரு சமரசம் ஏற்பட்டு விட்டால், தனக்கேற்ற ஒரு திட்டத்தை வகுத்துக் கொள்ளக் கூடிய நிலைமைக்கு இந்தியா வந்து விட்டதென்றுதான் எல்லோரும் கருதுகிருர்கள். அவர்கள் வீடு கட்டிக்கொள்ள நாம் உதவி செய்தோம். அவர்கள் அதை மாற்றிக் கட்டிகொள்ள விரும்பினுல் பிரிட்டன் ஆட்சேபிக்கலாகாது.''

**நிருபர்:** '' காங்கிரஸ் கோரும் அரசியல் நிர்ணய சபை விரும்பத் தக்கது தானு?''

**ஸ்ரீ அமெரி:** '' பற்பல மாகாணங்களிலிருந்தும், ஐரோப்பியர்கள் உள்பட எல்லா வகுப்பினருக்கும் பிரதிநிதித்துவம் அளித்து பத்துப் பனிரண்டு பேர்கள் கொண்ட ஓர் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதுதான் இந்தியாவுக்கு ஏற்றதென்று நான் கருதுகிறேன்.''

அன்று இப்படிச் சொன்ன ஸ்ரீ அமெரி, பின்னுல் அடியோடு புரண்டுவிட்டார். பழைய ஏகாதிபத்திய பாஷையிலேயே பேசினுர். காங்கிரஸின் மகா நிதானமான நியாயமான கோரிக்கைகளை யெல்லாம் புறக்கணித்தார். ஒரு தேசிய மந்திரி சபையை அமைக்கக்கூட இசையவில்லை. சமரசமனேபாவம் துளியும் காட்டவில்லை. இந்திய அரசியல் நிலைமை மகா மோச

மாயிற்று. பின்னும் கல்லுப் பிள்ளையார் மாதிரியே அமெரி உட்கார்ந்தார், ஆனல், அது எவ்வளவு காலம் நடக்கும் ? யுத்தம் முடிந்தது. கன்ஸர்வேடிவ் கட்சி பெருந் தோல்வி அடைந்தது. அமெரி துரை, பார்லிமெண்டிலே ஓர் அங்கத்தினராய் வரக்கூட முடியாமல் தேர்தலிலே தோற்ருேடிப் போனர். இனி அவருக்கு எச்சமயம் வாய்க்குமோ அவரது ஏகாதிபத்திய வெறியைக் காட்ட ? அதை ஆண்டவனே அறிவார்.

# ஸ்டாலின்

ஆற்றங்கரையிலே ஒரு பழக்கடை. அதற்குள்ளே நுழைந்து ஒரு பெரிய கக்கரிப் பழத்தை அபகரித்துக் கொண்டு வெளிக் கிளம்புகிறான் ஒரு சிறுவன். கடைக்காரிகள் கண்டு விடு கிறார்கள்; சிறுவனை விரட்டுகிறார்கள். சிறுவன் இடியிடி என்று சிரித்துக் கொண்டே, பழத்தோடு ஆற்றிலே குதிக் கிறான். பழம் முன்னே மிதக்க, ஆனந்தமாய் நீந்தி, பழத்தை அக்கரைக்குத் தள்ளிக்கொண்டு போகிறான் சிறுவன். கடைக் காரிகள் கையைப் பிசைந்து, சிறுவனைச் சபித்துக் கொண்டு இக்கரையிலே நிற்கிறார்கள். சிறுவன் தனி ஆள் அல்ல. அக்கரை யிலே, தங்களுடைய இந்தத் தலைவனின் வருகையை எதிர் நோக்கி, குதூகலமாய் நிற்கிறார்கள் பல சிறுவர்கள். பழம் கரை சேர்ந்ததும், எல்லாச் சிறுவர்களுக்கும் குஷியாய் விநி யோகம் நடக்கிறது. எல்லாரும் தின்று களிக்கிறார்கள். இப்படிச் சிறுவர்களைச் சேர்த்துக் கொண்டு ஒரு காலத்தில் பால்ய லீலைகள் நடத்திய அந்தக் குறும்புக்கார வாலிபன்தான், இன்று ருஷ்யா வின் சர்வாதிகார பீடத்தில் அமர்ந்திருக்கும் ஜோஸப் ஸ்டாலின்.

ஸ்டாலினின் தகப்பனார் ஒரு தையல்காரர். ஆசியாக் கண் டத்தையும் ஐரோப்பாக் கண்டத்தையும் இணைக்கும் **காக்கஸ்** பிரதேசத்தில் **ஜியார்ஜியா** என்ற ருஷிய மாகாணத்தில் **கோரி** என்னும் ஊரில் 1879-ஆம் வருஷம் அந்த ஏழைத் தையல் காரரின் மகனாய்ப் பிறந்தார் ஸ்டாலின். சிறு வயதிலே மகா விஷமம். கிராமக் குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு ஸ்டாலின் ஒரு முறை யுத்த விளையாட்டு நடத்தியபோது, பல பெரிய வைக்கோல் போர்கள் எரிந்து விட்டன. யார் செய்த புண்ணி யமோ, ஊர் முழுதுமே பற்றி யெரியாமல் அப்போது தப்பியது அதிர்ஷ்ட வசமேயாகும். ஸ்டாலின் குழந்தை நடத்திய யுத்தம் வெறும் யுத்தமல்ல; வெடிமருந்தும் வைத்துக்கொண்டே நடந் தது. அதுதான் வைக்கோல்போர் பற்றிய காரணம்!

ஸ்டாலினின் இயல் பெயர் **ஜுகாச்விலி** என்பதாகும். ஆனால், **ஸோஸோ** என்ற செல்லப் பெயரால்தான் தாயார் அழைப்பாள். குழந்தையின் துஷ்டத்தனத்தைக் கண்டு பெற் றோருக்குச் சகிக்கவில்லை. **டிப்ளிஸ்** என்ற நகரிலே **பாதிரி**

படிப்புக் கற்பிக்கும் ஒரு பள்ளிக்கூடத்தில் ஸ்டாலினைச் சேர்த்தார்கள். பள்ளிக்கூடத்திலேயேதான் சாப்பாடும் வாசமும். பள்ளிக்கூடத்தில் சிறுவன் என்ன அட்டகாசம் செய்கிறானோ என்று பெற்றோருக்குப் பரம கவலை. ஒரு மாதம் கழித்து, பள்ளிக்கூடத் தலைவரைக் கண்டு, உள்ளுக்குள் பயந்து கொண்டே, "குழந்தை எப்படி இருக்கிறான்?" என்று அவர்கள் கேட்டார்கள். "மகா பதவிசு. ரொம்பவும் புத்திசாலித்தனமாய்ப் படிக்கிறான்" என்ற ஆச்சரியமான பதில் கிடைத்தது. வெளியிலே மகா விஷமம் செய்த சிறுவன், பள்ளிக்கூடத்திலே ஊக்கமாய்ப் படிக்கலானான்! நான்கு வருஷங்கள் இதே ஊக்கம், இதே நாணயம், இதே யோக்கியமான நடத்தை. பிறகு, பிறகு—?

அப்போது ஜாரின் ஆட்சிக்கு விரோதமாய்ச் சதிகள் ஆரம்பித்தன; போலீஸின் கண்காணிப்பும் அழுலும் வலுத்தன. டிப்ளிஸ் பாதிரி பாடசாலையிலும் சோதனை நடந்தது. ஸ்டாலினின் சகோதர மாணவர் இருவரைப் போலீஸ்காரர் பரபர என்று இழுத்துக்கொண்டு போனார்கள். இந்தக் காட்சி, ஸ்டாலினின் உள்ளத்தைக் கிளறி விட்டது. கலாசாலையை விட்டு உடனே வெளியேற அவரது மனம் ஆர்வமுற்றது. கட்டுக்கடங்காத துஷ்டத்தனத்தை மீண்டும் ஆரம்பித்தார். மாணவர்களுக்குள்ளே ஒரு புரட்சிக் கமிட்டி அமைத்து அதன் தலைவரு மானார். பாடசாலையின் அதிகாரிகள், இவரை அடக்க முடியாததால் பாடசாலையை விட்டே வெளியேற்றி விட்டார்கள்.

1897-ஆம் ஆண்டு டிப்ளிஸ் நகரில் ரகஸ்யப் புரட்சிக்காரர்களுடன் ஸ்டாலின் சேர்ந்தார். அங்கே தொழிலாளரின் கிளர்ச்சியை ஆரம்பிக்க எண்ணினார். அதற்கொரு யுக்தி செய்தார். 'இருள் பஜார்' என்ற ஒரு பெரிய கடை வீதி அங்கே உண்டு. அதில் சுமார் 20,000 தொழிலாளர் வரை வேலை செய்தார்கள். அந்த 'இருள் பஜா'ரிலே, தாமும் ஒரு தொழிலாளராய் அமர்ந்து மூட்டைகள் தூக்கிக் கூலிகள் வாங்கினார். சில நாளைக்குள்ளே சம்பள உயர்வு கேட்டார். அங்கே நீண்ட காலம் சேவை புரிந்த தொழிலாளர்கள்கூட இவ்வாறு சம்பள உயர்வு கேட்க அஞ்சுவார்கள். ஸ்டாலினின் இந்த அதிகப்பிரசங்கித்தனம் அந்த முதலாளிகளுக்குப் புதுமையா யிருந்தது. அவர்கள் இவரை அக் கணமே வேலையை விட்டுத் தள்ளினார்கள். இதிலிருந்து ஆரம்பித்த வேலை நிறுத்தம்

மகர் வெற்றிகரமாய் நடந்தது. தம்முடைய புரட்சி நடவடிக்கைகள் காரணமாகக் கொஞ்ச காலத்துக் கெல்லாம் ஸ்டாலின் சிறைப்பட்டு, மூன்று வருஷங்கள் ஸைபீரியாவுக்கு அனுப்பப்பட்டார். ஆனால், தண்டனை முடியு முன்பே அங்கே இருந்து தப்பியோடினார்.

1905-ஆம் வரு பின்லந்தில் டாம்மெர் போர்ஸ் என்னுமிடத்தில் புரட்சிக்காரரின் ரகஸ்யக் கூட்டம் ஒன்று நடந்தது. ஸ்டாலினும் அதற்குச் சென்றார். புரட்சித் தலைவன் லெனினை அங்கேதான் முதல் முதலாக ஸ்டாலின் சந்தித்தார். அதிலிருந்து புரட்சி இயக்கத்தின் முக்கியத் தலைவருள் ஒருவராக, ஸ்டாலின் மாறினார்.

புரட்சி பலிப்பதற்காக, தொழிலாளரை லெனின் கிளப்பி விட்டார்; வேறு என்னென்னவோ செய்து பார்த்தார். ஒன்றும் பலன் தரவில்லை.

" பணந்தான் வேண்டும்; அதற்கு எங்கே போவது? " என்று ஏங்கினார் லெனின்.

" நான் சம்பாதித்துத் தருகிறேன் " என்று தைரியங் கூறினார் ஸ்டாலின்.

" எப்படி சம்பாதிப்பீர்? " என்று லெனின் கேட்டார்.

" ஸ்வீகாரத்தின் மூலம் " என்று பதில் தந்தார் ஸ்டாலின்.

**'ஸ்வீகாரம்'** என்றால் **'கொள்ளையடித்தல்'** என்று அர்த்தம்! சிறு வயதிலேயே ஸ்வீகாரத் தொழிலில் நன்றாய்ப் பயின்றவரல்லவா ஸ்டாலின்? சர்க்கார் கஜானாவின் பணம் வழியிலே போய்க்கொண்டிருக்கும்போது அதைக் கொள்ளையடிக்க முற்பட்டார். மூன்று லட்சத்து நாற்பத்தியோராயிரம் ரூபிள்களை அதாவது அக்காலத்தில் சற்றேறக்குறை ஆறரை லட்ச ரூபாய் மதிப்புடைய ருஷ்ய நாணயங்களை ஒரு முறை கொள்ளையடித்துவிட்டார். அது சம்பந்தமாக, **டேவிட்** என்ற மாறு பெயரோடு சிறைப்பட்டார். சிறிது காலத்தில் தப்பியோடினார்.

மீண்டும் **கோபா** என்ற பெயரோடு பல லீலைகள் புரிந்தார். **ஸோஸோ, டேவிட், கோபா** என்ற மூன்று புரட்சிக்காரர்களும் வெவ்வேறு பெயர் வழிகள் என்பது போலீஸ்காரர்களின் எண்ணம், " **டேவிட்** என்ற புரட்சிக்காரனும் **கோபா** என்ற

புரட்சிக்காரனும் போட்டி போட்டு ஒருவனைவிட ஒருவன் மிஞ்சப் பார்ப்பதுபோல் தோன்றுகிறது'' என்றுகூட அவர்களுடைய ரிபோர்ட் ஒன்றிலே எழுதிவிட்டார்கள். பின்னால் **நிஜெராட்** என்று ஒரு பெயர். அதற்கப்புறம் **சிஜிகாவ்** என்று மற்றொரு பெயர். பின்னால் **இவானேவிட்ச்** என்ற புதுப்பெயர் —இப்படிப் பல திருநாமங்களுடன் பல திருவிளையாடல்கள் நடத்திய ஸ்டாலின், ஐந்து முறை சிறைப்பட்டார். அதில் நான்கு முறை புதுப் புதுப்பெயர்களுடன் முதல் தடவைக் குற்றவாளியாகக் கருதப்பட்டு, சொற்பமான காவல் தண்டனைகள் பெற்றார்; ஒவ்வொரு தடவையும் தப்பியும் ஓடிவிட்டார். ஐந்தாவது தடவைதான் அவருடைய சகல பழைய வரலாறுகளோடும் போலீஸார் அவரைக் கைது செய்தார்கள். அப்போது அவர் **பிராவ்டா** என்ற பத்திரிகையை ஆரம்பித்து நடத்திவந்தார். அதோடு, லெனின் இட்ட கட்டளைப்படி ருஷியப் பார்லிமெண்டில் உள்ள தங்கள் கட்சி அங்கத்தினர்களைக் கண்காணித்தும் வந்தார். அந்த அங்கத்தினர்களில், **மலினேவிஸ்கி** என்ற முக்கியஸ்தன் இருந்தான். அவனோடு மிகவும் நெருங்கிப் பழகினார் ஸ்டாலின். அவனே இவரைக் காட்டிக் கொடுத்த துரோகி என்று பின்னால் தெரிந்தது. 1917-ஆம் ஆண்டு இம்முறை ஸ்டாலின் கைதியாகி ஆயுள்பரியந்தம் சிறைத் தண்டனை பெற்று, ஸைபீரியாவுக்கு அனுப்பப்பட்டார். மகா கடுமையான பனிச்சாரலில் நாலு வருஷங்கள் வாடி வதங்கினார். தப்பித்தோடும் மார்க்கமே கிடையாது. ஆனால், உள்நாட்டுப் புரட்சியால், **ஜார்** மன்னர் முடி துறந்தார், புரட்சி சர்க்கார் ஸ்டாலினையும் பிறரையும் விடுவித்தது. ஆனால், அது அபேதவாதப் புரட்சியல்ல; ஜனநாயகப் புரட்சி.

**லெனின்** கோஷ்டியார் இன்னும் ஓயவில்லை. **லெனின் ட்ராட்ஸ்கி** போன்ற தலைவரெல்லாம் புதிய சர்க்காரின் காலத்திலும் அஞ்ஞாத வாசம் புரிய வேண்டிய தாயிற்று. ஸ்டாலின் மட்டில் உள்நாட்டிலேயே இருந்துகொண்டு சலியாது உழைத்தார். மீண்டும் சரியான காலத்தில் அவர்களும் வந்து சேர்ந்து கொண்டார்கள். லெனினின் புரட்சி வெற்றி பெற்றது. ஸோவியத் சர்க்காரும் அமைந்தது. ஸ்டாலினுக்கு, லெனின் அளித்த பதவி என்ன? கட்சிப் பொதுக் காரியதரிசி என்ற பதவிதான். அது அப்போது ஓர் அற்பப் பதவி. ஆயினும் அதன் மூலம் கட்சிக்குள்ளே பிரமாதமான செல்வாக்கை

ஸ்டாலின் திரட்டிக்கொண்டார். 1941-ஆம் ஞு மே மாதம் வரையில் ஸ்டாலினுக்கு ருஷிய சர்க்காரிலே எவ்வித உத்தியோகமும் கிடையாது; கட்சிப் பொதுக்காரியதரிசி பதவியே உண்டு. என்றாலும், ருஷியாவை ஆட்டிவைக்கும் சர்வாதிகாரி அவரே. 1941-ஆம் ஞு பிரதம மந்திரி பதவியை மாலடாவ் ராஜிநாமாச் செய்தார். அப்போது ஸ்டாலின் அந்தப் பதவியை ஏற்றார்.

லெனின் உயிரோ டிருக்கையிலேயே, ட்ராட்ஸ்கீக்கும் ஸ்டாலினுக்கும் பொறாமையுண்டு. லெனின் காலமானதும் அது முற்றியது; குரோதமும் வலுத்தது. அதிகாரப்போட்டியில் ஸ்டாலினே வென்றார். ட்ராட்ஸ்கீயின் கோஷ்டியாரை நசுக்கினர். ட்ராட்ஸ்கீயை நாட்டைவிட்டே விரட்டினர். அஞ்ஞாதவாசம் புரியும் ட்ராட்ஸ்கீயையும் சும்மா விட்டுவைக்க மனமில்லை; நாடு நாடாய் அவரைத் துரத்தினர். கடைசியில் மெக்ஸிகோவில் வசித்த ட்ராட்ஸ்கீ, சில வருஷங்களுக்குமுன் பாதகன் ஒருவனால் கொலை செய்யப்பட்டார். யார் அதற்கு மூலகாரணம் என்று இதுவரை வெளிவரவில்லை.

ஏற்கனவே ஜார் மன்னர்கள் வசித்த பிரமாண்டமான கிரெம்லின் அரண்மனையிலேயே இன்று ஸ்டாலின் வசிக்கிறார். ஆனால், அதில் மூன்றே மூன்று அறைகளைத்தான் தம் சொந்தத்துக்கு வைத்துக்கொண் டிருக்கிறார். தம்முடைய கிழத் தாயைச் சில வருஷங்களுக்கு முன் கிரெம்லின் அரண்மனைக்கு ஸ்டாலின் அழைத்துவந்தார். ஸ்டாலினுடைய இந்த வெற்றிகளையெல்லாம் கண்ட அவள் அதிசயித்து, "**ஸோஸோ** ரொம்ப நல்ல பையன். அவனுக்கு இந்தப் பெருமை யெல்லாம் எப்படிக் கிடைத்தது? ஜீவனத்துக்கு எப்படிச் சம்பாதிக்கிறான்?" என்று கேட்டாளாம். கிரெம்லின் அரண்மனை வாழ்வு ஒரு மாதத்துக்குமேல் அவளுக்குப் பிடிக்கவில்லை. பழைய டிப்ளிஸ் குன்றுகளுக்கே அவள் திரும்பிப் போய்விட்டாள்.

ஸ்டாலின் இரு முறை மணந்தார்: **காதரைன் ஸ்வான் டைஸ்** என்ற முதல் மனைவி சில காலத்திலே விலகிவிட்டாள். இரண்டாவது மனைவி, **நடேட்ஜா** என்பவளுக்கு ஸ்டாலினிடம் பரம பிரேமை. ஸைபீரியாவில் ஸ்டாலின் அஞ்ஞாதவாசம் புரிகையில், தானாகவே அவரிடம் சென்று தன்னை அவருக்கு மனப் பூர்வமாய் அர்ப்பணம் செய்து கொண்டாள். அவளது இளமையைப் பாழ் செய்ய, அவருக்கு மனம் வரவில்லை. அவர் முதலிலே மறுத்துவிட்டார். ஆனால், கூட வசிக்கமட்டில்

அவளுக்கு அனுமதித்தார். பின்னால் அவளை மனைவியாகவே அங்கீகரித்தார். ஸ்டாலினின் நன்மைக்குத் தன் ஜீவியத்தையே அவள் ஈடுபடுத்தினாள். ஸ்டாலின் சர்வாதிகாரியான பின்பு, அவர்மீது அவருடைய மனைவிக்கிருந்த செல்வாக்கைக் கண்டு, ஸ்டாலினின் சகாக்களெல்லாம் பொறாமை யுற்றார்கள். அவள் காலமானபோது, ஏதோ சூதால் கொலையுண்டாள் என்றெல்லாம்கூடச் சில வதந்திகள் கிளம்பின. குடல் அனுபந்த வியாதியாலேயே அவள் மாண்டாள் என்பதே உண்மையாம். அவள் மாண்டதும், ஸ்டாலின் பல மணி நேரம் அழுதழுது கண்ணீர் சொரிந்தார்.

பிரேத ஊர்வலம் நடந்தது. வழியிலே, திடீரென்று சில ரோஜாப் பூக்கள் பிரேதப் பெட்டியின்மீது மழைபோல் சொரிந்தன. ஸ்டாலின் அண்ணாந்து பார்த்தார். மலர்களைத் தூவியவள் ஓர் அழகிய உயர்குலப் பெண் என்று கண்டார். அவளுடைய சைகைகளும் அபிநயங்களும் அவரது நெஞ்சைத் தைத்தன. வீட்டுக்குத் திரும்பியதும் அவளை அழைத்துவரச் செய்தார். அவ்வளவுதான்; அவளுடன் தமது விதி பின்னிவிட்டதாக அறிந்தார். அன்று விளாடிமிர் ராவ்னா என்ற அந்தக் கோமகளைக் கலவாமல் இன்று ஸ்டாலின் ஒரு காரியமும் செய்வதில்லையாம். ஸ்டாலினுக்குப் பூர்ணமான உதவியும் அவள் புரிகிறாள். நடேட்ஜாவின் ஸ்தானத்தை அவள் வகிக்கிறாள். ஆனால், மணம் மட்டில் புரிந்து கொள்ளவில்லை. இதற்கிடையில் வேறொரு பெண்ணையும் ஸ்டாலின் விவாகம் செய்துகொண்டதாக யுத்த காலத்தில் ஒரு வதந்தி வந்தது. அவள் காக்கஸிலுள்ள ஒரு வாலிப அர்மீனியப் பெண்ணாம்!

ஸ்டாலினின் மூத்த மனைவிக்கு ஒரு மகனுண்டு. இரண்டாவது மனைவிக்கு வாஸிலி என்ற பையனும் ஸ்வெட்லானா என்ற பெண்ணும் உண்டு. முஸோலினியைப்போல, தம் குழந்தைகளுக்கு விசேஷப் பதவி எதையும் ஸ்டாலின் கொடுக்கவில்லை,

ஸ்டாலின் மும்முறை மூன்று ஐந்து வருஷத் திட்டங்கள் போட்டார். திட்டங்களெல்லாம் பூரண வெற்றி தந்ததாகச் சொல்ல முடியாது. ஆனால், ருஷியாவின் பழைய நிலைமையையும் இப்போதைய நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், பிரம்மாண்டமான முன்னேற்றம் என்றே எல்லாரும் சொல்லுகிறார்கள். நாட்டிலுள்ள முக்கால்வாசி நிலங்களைப் பொதுஉடைமை யாக்கிவிட்டார்கள். பல்வேறு கைத்தொழில்களும்

ஸ்தாபிதமாகி நடந்துவந்தன. இந்த நிலைமையில் இரண்டாவது உலக யுத்தம் வந்தது. அதில் நாஜிகளைத் தோற்கடித்த பெருமையில் முக்கால் பங்கு, ஸ்டாலினைத் தலைமையில் கொண்ட ஸோவியத் ருஷ்யாவைச் சேர்ந்ததாகும். ருஷியாதான் பெரும் நஷ்டம் அடைந்ததும். சர்வ தேச சமாதான ஸ்தாபனங்களிலும் பெருஞ் செல்வாக்குப் பெற ருஷியா முயல்வது இயற்கையே அல்லவா?

# கமலாதேவி

கமலாதேவி, 1903-ஆம் ஆ மங்களூரில், பிரபலமான ஸரஸ்வத் குடும்பமொன்றில் பிறந்தார். சிறுவயதிலே தம் வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கு மணம் செய்விக்கப்பட்டார். ஆனால், சென்னை குவீன் மேரி கல்லூரியில் கமலா படிக்கும்போது, அந்தக் கணவன் காலமாகிவிட்டார்.

பாலியப் பிராயத்தில் மங்களூரிலும், பிறகு குவீன் மேரி கல்லூரியிலும் கல்வி பயின்றார். பின்னால் லண்டன் சென்று, பெட்போர்டு கல்லூரியில், சமூக தத்துவம் சம்பந்தமான பட்டம் பெறுவதற்காகக் கல்வி பயின்றார்.

மங்களூரில் படித்துக்கொண்டிருந்தபோதே, கமலா தேவிக்கு நாடகக் கலையில் பற்றுதல் விழுந்தது. அந்தக் காலத்தில் உயர்குடும்பப் பெண்ணொருத்தி நாடகத்தில் சேர்ந்து நடிப்பதென்றால், தமிழ் நாட்டைப் போலவே, அங்கேயும் மகா கஷ்டமாகும். 'ஒரு தொழிலு மில்லாதார் நாடகக்காரரானர்' என்று தமிழிலே ஒரு பாட்டுக்கூட உண்டல்லவா? இதேமாதிரி மனோ பாவம்தான் கமலா பிறந்த பிரதேசத்திலும் நிலவியிருந்தது.

தாம் நாடகத்தில் சேர்ந்ததைப்பற்றி, கமலா இவ்வாறு சொல்லுகிறார்: "அந்த நாளில் நான் நாடகத்தில் சேர்ந்த உடனே, பிரமாதமான கூச்சல் கிளம்பிவிட்டது. என் குடும்பத்தாரும் என்னை நிக்ரகம் செய்தார்கள். எந்தப் புதிய காரியத்தையும் முதல் முதலில் செய்பவர்கள் கஷ்டப்படத்தானே வேண்டியிருக்கிறது? இப்போது அது மாறிவிட்டது. குடும்பப் பெண்கள் நாடகத்தில் சேர்வது மகா துர்லபமாயிருந்த காலம் ஒன்று இருந்தது என்பதைக்கூட ஜனங்கள் இப்போது மறந்துவிட்டார்கள். ஆனால், அதற்கு நாங்கள் எவ்வளவு பாடுபட்டோம், தெரியுமா?"

நாடகக் கலையில் வரவர அதிகமாய் மனம் செலுத்திய கமலாதேவி, சிறந்த நாடகாசிரியரும் மற்றொரு நாடகக் கலைஞரும் சரோஜினி தேவியின் சகோதரருமான வங்கக் கவிஞர் ஹரீந்திரநாத சட்டோபாத்யாயாவை அடையாற்றில் சந்தித்தார். இருவருக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டு, அது முற்றி,

விவாகத்தில் முடிந்தது. கலையிலே எழுந்த காதல். இருவரும் உணர்ச்சிக் களஞ்சியங்கள். ஆகையால், இந்த மணவாழ்க்கை நீடிக்கவில்லை. அது ஒரு சோகக் கதை. கடைசியிலே, இருவரும் விவாக விலக்குச் செய்துகொண்டு பிரிந்துவிட்டார்கள்.

சில வருஷங்களுக்குமுன் அமெரிக்கா முதலிய வெளி நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்துவந்த கமலாவை, நான் கண்டு பேசினேன். அவர் மிகவும் சரளமாக, கலகலப்பாய்ச் சம்பாஷித்தார்.

"ஆமாம். உங்களை அரசியலுக்கு இழுத்தது எது?" என்று கேட்டேன்.

"நாடகக் கலையில் எனக்குப் பெரும் பற்றுதல். அதனோடு, சமூகச் சீர்திருத்தமான பொதுஜன சேவை செய்யவேண்டுமென்ற ஆவலும் ஏற்பட்டது. ஆனால், அரசியலில் கலக்காமல் ஒரு சேவையும் செய்யமுடியாதென்று அறிந்தேன். அரசியல் சுதந்தரம் பெறுமல், எந்தச் சமூக சேவையும் சாத்தியமல்ல. ஆகையால்தான், நான் அரசியலில் கலக்க நேரிட்டது" என்று கமலா பதிலளித்தார்.

மேலும் பேசுகையில், கமலா சொன்னதாவது: "1920-ஆம் ஞு மகாத்மா காந்தி, கதர் இயக்கம் ஆரம்பித்தா ரல்லவா? அப்போதே நான் கதர் உடுத்த ஆரம்பித்துவிட்டேன். முதல் முதலாகக் கதர் அணியத் தொடங்கிய பெண் அநேகமாய் நான் தான் என்று நினைக்கிறேன். அதுமுதல் இதுவரையில் கதர்தான் உடுத்தி வருகிறேன். ஆனால், அப்போது காங்கிரஸில் சேர்ந்து முழு நேரமும் காங்கிரஸுக்குச் சேவை புரிந்து வரவில்லை.

"1929-ஆம் வருஷத்தில்தான் அதிக ஊக்கத்துடன் காங்கிரஸுக்குச் சேவைபுரியத் தொடங்கினேன். தொண்டர்படை திரட்டுவதில் பங்கெடுத்துக்கொண்டேன். 1930-ஆம் வருஷம் சத்தியாக்கிரகத்தில் சேர்ந்து, கைதியானேன். மற்றவரெல்லாம் விடுதலையடைந்தும், நான் மாத்திரம் 1934-ஆம் ஞு வரையில் விடுதலை பெறவில்லை. அந்த நான்கு வருஷ காலமும் தொடர்ச்சியாகச் சிறைப்பட்டிருந்தது, இயற்கையாகவே எனக்கு அரசியலில் அதிக உறவை ஏற்படுத்திவிட்டது."

கமலா இன்று அபேதவாதக் கட்சியில் ஒரு முக்கியஸ்தரா யிருப்பதால், காந்திஜியிடம் எவ்வித அபிப்பிராயங் கொண்டிருக்கிறார் என்றறிய, நான் விரும்பினேன்.

கேள்வி: "தாமே ஓர் அபேதவாதிதான் என்று காந்திஜி சில சமயம் சொல்லுகிறரே, அது சரியா? அதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?."

பதில்: "காந்திஜி தமக்கென்று ஓர் உடைமையும் வைத்துக் கொள்ளவில்லை. தனிப்பட்டவருக்குக் சொத்து இருக்கக்கூடா தென்றுதான் அபேதவாதிகளும் சொல்லுகிறர்கள். ஆனல். ஒரே ஒரு முக்கிய வித்தியாசத்தை இங்கே நீங்கள் கவனிக்க வேண்டும். தனிப்பட்டவருக்குச் சொத்துரிமை கிடையாது என்ற அஸ்திவாரத்தின்மீது சமுதாய அமைப்பு முறையே மாற வேண்டும் என்று அபேதவாதிகள் விரும்புகிறர்கள்; மகாத்மாஜி மாதிரி சிலர் மட்டில், சொத்து வைத்துக்கொள்வதைத் தாங்க ளாகக் கைவிடுவது பயனில்லை."

அபேதவாதிகளின் வேதம் கார்ல் மார்க்ஸின் நூல்கள்தான். இயந்திர மயமான பெரிய கைத்தொழில்கள் உச்ச நிலைமையை அடைந்த முதலாளி ஆதிக்க ஸமுதாயத்தின் முடிவு அபேதவாதத் தில் கொண்டுபோய் விட்டுத்தான் தீரும் என்பது அவர்களின் சித்தாந்தம். இந்தியா ஒரு விவசாய நாடு. இயந்திரக் கைத் தொழில்களோ வளரவில்லை. இதைத் தவிர, இந்தியாவின் மேதையும் விசேஷ நிலைமைகளும் வேறு இருக்கின்றன. இவற்றை யெல்லாம் நோக்கும்போது, இந்தியாவுக்கு அபேத வாதம் பொருந்துமா? இந்தியாவில் அபேதவாதத்தைக் கொண்டு வர வேண்டுமானல், அதற்கென்று ஏதாவது பிரத்தியேகமான முறைகளைக் கடைப்பிடிக்கலாமா? இதைக் கமலாதேவியிடம் கேட்டேன்.

"அபேதவாதத்தின் அடிப்படையான கொள்கைகளில் நம் ஜனங்களுக்கு நம்பிக்கை உண்டாக்குவதுதான் முக்கிய மாகும். 'கல்யாணம்' என்ற சடங்கில் அவர்களுக்கு எவ்வளவு நம்பிக்கை இருக்கிறது! அதேமாதிரி நம்பிக்கை அவர்களுக்கு அபேதவாதத்தில் உண்டாக வேண்டும். நாட்டுக்கு நாடு, சீதோஷ்ண நிலைமைகளில் உள்ள வித்தியாசங்களைப் போலவே சமூக வாழ்விலும் இயற்கை வசதிகளிலும் வித்தியாசங்கள் இருக்கத்தான் இருக்கின்றன. ஆதலால், நமது நாட்டில் அபேத வாதப் பிரசாரத்தின் பலனக, சமூக மாறுதல் எத்தகைய உரு வடையும் என்பதை நாம் இப்போது திட்டமாய்ச் சொல்ல முடியாது. நம் சமூகப் பழக்க வழக்கங்கள், சூழ் நிலைமைகள்

இவற்றை அனுசரித்த ஓர் உருவத்தை, தாஞகை அது அடையும் என்று மட்டிலும் சொல்லலாம்'' என்று கமலா பதில் அளித்தார்.

இதன்பின், கமலாவின் சுற்றுப் பிரயாணத்தைப் பற்றி எங்கள் சம்பாஷணை திரும்பியது. அமெரிக்காவில் கமலாவின் பிரயாணம் மிகவும் வெற்றிகரமாய் நடந்ததாம். எங்கே சென்ருலும், கமலாவை அமெரிக்கர்கள் மிக்க அன்போடு வரவேற்ருர்களாம். அப்போது ஐக்கிய அமெரிக்காவின் ஜஞதிபதியா யிருந்த காலஞ் சென்ற ரூஸ்வெல்டின் மனைவியான மிஸ்ஸ் எலீனர் ரூஸ்வெல்ட், நம் கமலாவுக்கு, சொந்த முறையில் ஒரு விருந்தளித்தார்.

நான் கேட்டேன்: "ஸ்ரீமதி ரூஸ்வெல்டுக்கு இந்தியாவிடம் சிரத்தை யுண்டா?"

"படித்த யாருக்குமே சர்வதேச விஷயங்களில் சிரத்தை உண்டு. அந்த முறையில், இந்தியாவிடம் ஸ்ரீமதி ரூஸ்வெல்டுக்கும் நம்மிடம் சிரத்தை இருக்கத்தான் இருக்கிறது'' என்ருர் கமலா.

"நம்முடைய ராஜீய அபிலாஷைகளில் அவருக்குச் சிரத்தை உண்டா?'' என்று நான் மீண்டும் கேட்டேன்.

"அதை எப்படிச் சொல்ல முடியும்?'' என்பது கமலாவின் பதில்.

அமெரிக்கப் பிரயாணத்தில் கமலாவுக்குச் சில ரஸமான அனுபவங்கள் நிகழ்ந்தன.

பிரிட்டிஷ் விளம்பர மந்திரியா யிருந்து, மந்திரி அந்தஸ் தோடேயே கீழ்நாட்டுக்குத் தூது வந்து சென்ருரே டப் கூப்பர், அவர் அப்போது அமெரிக்காவில் இருந்தார். டப் கூப்பர் எங்கே சென்ருலும், "இந்தியாவின் விஷயமென்ன?'' என்று ஓயாமல் அவரை அமெரிக்கர்கள் கேட்டார்களாம்.

சிக்காகோவில் டப் கூப்பர் பேசிய ஒரு கூட்டத்துக்குக் கமலாவும் சென்றிருந்தார். இந்தியா ரொம்பவும் அருமையாய் யுத்த முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும், மகாத்மா காந்தி கூட மிகவும் சாதகமாய் ஏதோ சொல்லி இருப்பதாகவும் டப் கூப்பர் கூறிஞராம். இது துளியும் சரியல்ல என்று தெரிவிக்க, கமலா விரும்பிஞர். டப் கூப்பருக்குச் சில கேள்விகளும் எழுதி அனுப்பிஞர். ஆனல், வேறு கேள்விகளுக்கெல்லாம் அவர் பதிலளித்தாரே யல்லாமல், கமலாவுக்குப் பதில் சொல்லவில்லை.

கூட்டம் முடிந்துவிடும் போல் இருந்ததால், மேடையை நோக்கி, கமலா விரைந்தோடினர். தலைவர் அவசர அவசரமாகக் கூட்டத்தைக் கலைத்தார். கமலா அதை ஆட்சேபித்தார். "வேண்டுமென்று கூட்டத்தை நான் கலைக்கவில்லை; உங்கள் கேள்விகளை நீங்கள் கேட்கலாம்" என்று சொல்லி, வழிக்கு வந்தார் தலைவர். கலைந்த கூட்டம் திரும்பவும் கூடியது.

மகாத்மாவின் வாக்கைப்பற்றிக் கமலா கேட்ட கேள்விக்குப் பதில் அளித்த டப் கூப்பர், "வைஸிராயுடன் பேசிய அந்தரங்கச் சம்பாஷணையில்தான் காந்தி அப்படிச் சொன்னர்" என்று யுக்தியாய்ச் சமாதானம் சொன்னர்.

இதன் உண்மையை யார் கண்டுபிடிக்க முடியும்? இருந்தாலும், இந்தியாவின் நிலைமையைப்பற்றி டப் கூப்பர் சொன்ன விஷயங்கள் சரியல்லவென்று மறுத்தார் கமலா.

டப் கூப்பருக்குக் கோபம் வந்துவிட்டதாம். கமலாவுக்கும் கோபம் மூண்டது. வார்த்தை தடித்தது. "இந்தப் பெண் என்னை அவமானமாய்ப் பேசுகிருளே!" என்று கதறினராம் டப் கூப்பர். "இந்தியாவை அவமதித்தால் நான் மாத்திரம் பொறுப்பேனே?" என்ருர் கமலா.

டப் கூப்பரை மெல்லக் கூட்டத்தை விட்டு வெளியே இழுத்துச் சென்ருர்களாம். ஜனங்களோ, "இந்தப் பெண்மணியின் கேள்விக்குப் பதில் எங்கே? எங்கே?" என்று கூச்சலிட்டார்கள்!

கூட்டத்துக்கு வெளியே ஒரு மூலைக்குப் பத்திரமாய் போய்ச் சேர்ந்த டப் கூப்பர், "ஆசியாக்காரர்களான உங்களுக்குச் சுதந்தரத்தைப் பற்றி என்ன தெரியும்?" என்று கத்தினர்.

"உங்கள் மேனட்டுக் கிருஸ்தவ நாடுகள், கொலையையும் சித்திரவதையையும் அல்லாமல், எங்களுக்கு வேறு என்னத்தைச் சொல்லிக் கொடுத்திருக்கின்றன?" என்று கமலா பதில் கூச்சல் போட்டார்!

இத்துடன் இந்தச் சம்பவம் முடிந்தது.

மற்ருெரு கூட்டத்தில் இந்தியாவுக்கு விரோதமாகப் பேச வந்த ஒருவரை, "இவர் இந்தியாவைப்பற்றி நன்ருய் அறிந்தவர். இந்தியாவில் சேவை புரிந்த ஓர் ஐ. ஸி. எஸ்." என்று கூட்டத் தலைவர் அறிமுகப்படுத்தினராம்.

ஆனால் அந்த ஆசாமி, கமலாவின் தலையைக் கண்டதும் கிலியடைந்து, "நான் கொஞ்சம் தப்பான வேஷம் போட்டிருப்பதாக அஞ்சுகிறேன். நான் இந்தியாவில் சேவை புரியவேயில்லை; பர்மாவில்தான் சேவை புரிந்திருக்கிறேன்" என்று உண்மையைத் தாமாகவே கக்கிவிட்டாராம்!

அமெரிக்காவில் ஒரு சமயம் போர்டு மோட்டார் உற்பத்தி முதலாளியான ஹென்ரி போர்டை, கமலா தேவி சந்தித்தார்.

ஏதோ பேச்சினிடையில், "எங்கள் காந்திக்கு ஸோயா பீன்ஸ் ரொம்பவும் பிடிக்கும்" என்றார் கமலா.

"அப்படியா!" என்று ஆச்சரியத்தோடு கேட்ட ஹென்ரி போர்டு, "எனக்கும் ஸோயாபீன்ஸ் என்றால், வெகு பிரியம். அதெப்படி எனக்குப் பிடிக்கும் வஸ்துவே காந்திக்கும் பிடித்திருக்கிறது!" என்று கேட்டுக் 'கலகல' என்று சிரித்தாராம்.

கமலாவின் கடல்பிரயாணத்தைப் பற்றி விசாரித்தேன்: "திரும்பி வருகையில், யாத்திரை சுகமாக இருந்ததா? யுத்தத்தின் கிலி, அட்லாண்டிக் சமுத்திரத்தில் வரும்போது உங்களுக்கு உண்டாகவில்லையா? 'கான்வாய்' என்ற காவல் கப்பல் உங்கள் கப்பலுக்குத் துணை வந்ததா?" என்றெல்லாம் விசாரித்தேன்.

"யாத்திரையா!" என்று உடம்பு நடுங்கிக்கொண்டே சொன்ன கமலா, "மகா அவஸ்தை! கப்பல் கவிழ்ந்து தொலைந்தாலும் பாதகமில்லை. வேறு கஷ்டங்கள் தான் சகிக்க முடியவில்லை. ஸான் பிரான்ஸிஸ்கோ நகரிலிருந்து ஹொனொலுலுவுக்கு ஒரு கப்பலில் போக ஏற்பாடு செய்திருந்தேன். அந்தக் கப்பலைத் திடீரென்று மற்றொரு திசையில் அனுப்பி விட்டார்கள். நினைத்த கப்பல் குறித்த இடத்துக்குப் போகாது. ஏறிய கப்பல் விரும்பிய இடத்தை அடையாது. இப்படி எத்தனையோ தடுமாற்றங்கள்! எங்கே போனாலும் இதே தடுமாற்றங்கள் தான். ஜப்பான் செல்லுங்கள்; ஷாங்காய் செல்லுங்கள். எந்த இடத்திலும் இப்படியே உபத்திரவம். ஷாங்காயில் அகப்பட்டுக் கொண்டேன். அங்கிருந்து புறப்பட விடமாட்டோமென்றார்கள். சீன சர்க்காருக்குத் தந்தியடித்தேன். தணிக்கை அதிகாரிகள் என் தந்தியை நடுவிலே விழுங்கி விட்டார்கள். கடைசியில் அங்கிருந்த சில அமெரிக்கர்களின் உதவியால், சுங்கிங் சர்க்காருக்குத் தகவல் எட்டி, அவர்கள்

ஒரு விமானத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். அங்கிருந்து ஹாங்காங்குக்கு வந்தால், பிரிட்டிஷ் சர்க்கார் அங்கே என்னைக் கைது செய்து விட்டார்கள். அந்த இடத்தில் சுமார் ஒரு மாதம் வரையில் அவதிப்பட வேண்டியதாயிற்று. இந்த உபத்திரவங்களால் எனக்கு 1000 ரூபாய் வரை அநாவசியச் செலவாகிவிட்டது. பிரயாண மென்றால், எனக்கு இப்போது ரொம்பவும் நடுக்கமா யிருக்கிறது. இனி நான் இந்தியாவை விட்டு நகரவே மாட்டேன்'' என்று முடித்தார்.

# கே. சீனிவாசன்

**கா**லை நேரம். சில தகவல்கள் வேண்டி, 'ஹிந்து'வின் துணை யாசிரியரைக் கண்டு பேசத் தொடங்கினேன். இரண்டொரு வார்த்தைகள் பேசு முன்பு, அவருக்கு அழைப்பு-வந்துவிட்டது. அவர் எழுந்து நகர்ந்துகொண்டே, "மன்னியுங்கள்; அவசர மான கான்பரன்ஸ். பிறகு சாவகாசமாய்ச் சந்திப்போம்" என்று சொல்லி அகன்று விட்டார்.

'கான்பரன்ஸ்' என்றதும் ஏதாவது அரசியல் மகாநாடோ, இசை மகாநாடோ என்று நண்பர்கள் நினைக்கவேண்டியதில்லை. அது ஆபீசுக்குள்ளேயே ஒரு கூட்டம். மேல்நாட்டில் மிகச் சிறந்த பத்திரிகாலயங்களில் அன்றன்று பத்திரிகை தயாரித்து முடிந்தபின், அதைப்பற்றி மறுநாள் அந்தப் பத்திரிகையின் முக்கிய ஆசிரியர்கள் அனைவரும் கூடி, விவாதிப்பார்கள். அதன் குணதோஷங்கள் ஆராயப்படும். அடுத்த இதழை இன்னும் சிறப்பாய் எப்படிக் கொண்டு வருவது என்று யோசிக்கப்படும். அன்றைய வேலைகளுக்குத் திட்டமும் கோலப்படும். இம்மாதிரி 'கான்பரன்'ஸுக்குத்தான் அவர் சென்றார் என நான் ஊகித் தேன். நான் அறிந்த மட்டில் சென்னையின் இதர தினசரிகளில் அன்றன்று இம்மாதிரி ஒரு 'கான்பரன்ஸ்' நடப்பதாகத் தெரிய வில்லை.

லண்டன் 'டைம்ஸ்' மாதிரி 'ஹிந்து'வை நடத்தவேண்டும் என்பது, ஸ்ரீ கே. சீனிவாஸனின் ஆவல். அப்படியே நடத்தியும் வருகிறார் என்று சொல்லவேண்டும். ஆகையால், பத்திரிகையைச் சிறப்புற நடத்த, இம்மாதிரி முறைகளை 'ஹிந்து' அனுஷ்டிப் பதில் ஆச்சரிய மில்லை.

ஸ்ரீ சீனிவாசன் ஒரு விதத்தில் பாக்கியசாலி. 'ஹிந்து' ஒரு பொக்கிஷம்—தேசத்தின் பொக்கிஷம். அதன் தர்மகர்த்தாவைப் போல் ஸ்தானம் வகிப்பவர் சீனிவாசன். லண்டன் 'டைம்'ஸை, தேசீய தர்ம சொத்தைப்போல் நிர்வகிக்க வேண்டுமென்று ஓர் ஏற்பாடுகூட நடந்திருக்கிறது. அதைத் தமக்கு உதாரணமாகக் கொண்ட சீனிவாசன், 'ஹிந்து'வையும் அப்படித்தானே நிர் வகிக்க விரும்புவார்? 'ஹிந்து' என்ற பொக்கிஷத்தைப் பழுதற்ற நிலைக்குக் கொண்டுவந்து, மகன் சீனிவாசனிடம் ஸ்ரீ கஸ்தூரி

ரங்கையங்கார் ஒப்புவித்துச் சென்ருர். இது மகனின் பாக்கியமே யல்லவா?

'ஹிந்து'வை உன்னத நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும் என்பது சீனிவாசன் ஆசை. அதில் வேலை செய்வோருக்கெல்லாம் பத்திரமும் சௌகர்யங்களும் இருக்க வேண்டும் என்பது அவர் கவலை. 'ஹிந்து'விலுள்ள ஒரு சாமான்யக் குமாஸ்தாவிடம் பேசிக்கொண்டிருந்தபோது, அவர் சொன்னர்: "பிராவிடண்ட் பண்டு முதலிய வசதிகளெல்லாம் எங்களுக்கு உண்டு. அதிலே 75-சதவிகிதம் கடனும் நாங்கள் வாங்கிக்கொள்ளலாம். இன்னும் எங்களுக்குப் பல சௌகர்யங்கள் கிடைக்கும். ஆனல், அதற்குள் இந்த யுத்தம் வந்து தொலைந்துவிட்டதே! காரியாலயத்தில் வேலை பார்க்கும் சாதாரணச் சேவகனுக்கும்கூட இருபது ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் கூடாது என்பது நிர்வாகிகளின் ஆசை. தற்போது, அந்தச் சௌகர்யங்கள் செய்ய வசதியில்லாமல் போய்விட்டது."

ஸ்ரீ கஸ்தூரி ரங்கையங்கார் கோயமுத்தூரில் வக்கீல் தொழில் புரிந்து கொண்டிருந்த காலத்தில், 1887-ஆம் வருஷம் அவருடைய மூத்த குமாரனுக ஸ்ரீ சீனிவாசன் ஜனித்தார். (இப்போது வயது 59.) சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜில்தான், ஸ்ரீ சீனிவாசன் கல்வி பயின்ருர். இதற்கிடையில், தந்தை 'ஹிந்து'வை வாங்கி நிர்வகித்து வரலானர்.

அந்தக் காலத்தில், 'ஹிந்து' மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தது. இருந்தாலும், விடா முயற்சியுடனும் ஊக்கமாகவும் ஸ்ரீ கஸ்தூரி ரங்கையங்கார் உழைத்துவந்தார். மகனையும் 'ஹிந்து' பத்திரிகாலயத்தில் புகுத்திவிட விரும்பினர். "இல்லை; நான் டாக்டர் ஆவதில்தான் எனக்கிஷ்டம்" என்ருர் மகன். இருந்தாலும் கடைசியில் தந்தையின் விருப்பத்துக்கு மகன் இணங்க வேண்டியதாயிற்று.

தகப்பனரின் முயற்சியில்லாவிட்டால், ஸ்ரீ சீனிவாசன் பத்திரிகைக்காரராக ஆகியிருக்க முடியாதல்லவா? இதைப்பற்றிய கேள்வியை ஸ்ரீ சீனிவாசனிடம் நான் கேட்க விரும்பிய போது, கொஞ்சம் தயங்கினேன்.

"கூச்சப்படாதீர்கள். உங்களுக்கு விருப்பமான கேள்வியைக் கேளுங்கள்" என்று புன்சிரிப்புடன் அவர் சொன்னர்.

கேள்வியையும் கேட்டேன்.

"வாஸ்தவம்; என் தகப்பனார் பத்திரிகைக்காரராக இருந்த தால்தான், நானும் பத்திரிகைக்காரனாக இருக்கிறேன்" என்று அவர் சொன்ன குரலிலே, ஒரு பெருமை தொனித்தது: "நானாக யோசித்து, ஒரு தொழிலைத் தேர்ந்துகொள்ள எனக்குச் சந்தர்ப் பமே இல்லை. இளம் பிராயத்திலேயே என் தகப்பனார் எனக்குப் பத்திரிகைத் தொழிலின் 'ஆனா ஆவன்னா'வைக் கற்பிக்கத் தொடங்கிவிட்டார். என் இஷ்டப்படி ஒரு தொழிலில் நான் இறங்கி யிருக்கக் கூடுமானால், அநேகமாய் இன்று ஒரு டாக்ட ராகத்தான் இருப்பேன். நான் டாக்டர்களிடம் தாராளமாய்ப் பழகுகிறேன். ஒரு வேளை அதுதான் எனது இந்த அபிப்பிராயத் துக்குக் காரணமோ என்னவோ!—நானுந்தான் இந்தத் தொழி லில் ஈடுபட்டு, சுமார் முப்பது வருஷம் ஆகிவிட்டதே."

சம்பாஷணை பூராவும், ஸ்ரீ ஸ்ரீனிவாசன் குழந்தைபோல் எளிய சுபாவத்துடனும் அன்புடனும் பேசினார்.

கேள்வி: "ஒரு முறை இங்கிலாந்துக்குச் சென்றீர்கள் அல்லவா, அங்கே பத்திரிகை நிலைமைகளை ஆராய? அங்கே உள்ள நிலைமைகளுக்கும் இங்கே உள்ள நிலைமைகளுக்கும் பெரிய வித்தி யாசங்கள் இருக்கின்றனவா?

பதில்: "ஒரு முறை என்ன? மூன்று முறை சென்றேன். 1931, 1933, 1938-ஆம் வருஷங்களில் போனேன். ஜெர்மனி யையும் ருஷியாவையும் தவிர, மற்ற ஐரோப்பிய நாடுகளையெல் லாம் பார்த்தேன். சில அம்சங்களில் அங்கே உள்ள பத்திரிகை களைவிட நாம் மேல். அவர்கள் ஒரு பிசகு செய்துவிட்டால், அதைத் திருத்தவே மாட்டார்கள். ஸர் ஸாப்ருவைப்பற்றி லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் முன்பு ஒரு சமயம் ஒரு பிசகு நேர்ந்தது. அதற்குத் திருத்தம் போடும்படி அவரும் எவ்வளவோ முயன்றார்; பலிக்கவில்லை. அங்கே ஒரு கட்சிப் பத்திரிகைகள் பிற கட்சியார் களுக்குத் தங்கள் பத்திரிகையில் இடங்கொடுக்கமாட்டா. நாமோ அப்படி அல்ல; தாராளமாய் நடப்போம்—ஆனால், ஒரு கைத்தொழில் என்ற முறையில், அங்கே பத்திரிகைத் தொழில் நம்மைவிடப் பிரமாதமாய்த்தான் வளர்ந்திருக்கிறது."

"இங்கிலாந்தில் விளம்பரக்காரர்கள், பத்திரிகைகளின் கொள்கையையே ஆட்டி வைப்பதாக விக்காம் ஸ்டீட் சொல்லு கிறாரே; உண்மையா?" என்று கேட்டேன்.

"இல்லை; அப்படி யொன்றுமில்லை. விளம்பரக்காரர்கள், தங்கள் பொருள்கள் சம்பந்தமான செய்திகளைப் போடச் சொல்லுவதுண்டே தவிர, வேறொன்றுமில்லை. ஆசிரியர்களுக்குப் பூரண சுதந்தரம் இங்கிலாந்தில் இருந்து வருகிறது" என்று சொல்லிவிட்டு, லண்டன் 'டைம்ஸ்' பிரதி ஒன்றை எடுத்து வரும்படி ஓர் ஆளிடம் சொன்னார். அது வந்ததும், அதிலே விளம்பரக்காரரின் செய்தியொன்று பிரசுரிக்கப்பட் டிருப்பதைக் காட்டி, "இவ்வளவுதான் விஷயம்" என்றார்.

"பின்னே விக்காம் ஸ்டீட் அப்படிச் சொல்வானேன்? பத்திரிகைத் தொழிலில் பெருங் கீர்த்தி வாய்ந்தவராயிற்றே அவர்?" என்று நான் மீண்டுங் கேட்டேன்.

"ஒரு வேளை இப்படி யிருக்கலாம்" என்று அவர் விளக்க ஆரம்பித்தார்: "பிரிட்டனில், ஒரே முதலாளி ஒரு பத்திரிகைச் சங்கிலியை வைத்திருப்பார்; அதாவது பல பத்திரிகைகள் அவரது கைக்குள் இருக்கும். குறிப்பிட்ட ஒரு பிரச்னையில் அந்த எல்லாப் பத்திரிகைகளும் ஏகமுகமான அபிப்பிராயம் சொல்லும். இது கெடுதல் அல்லவா? இந்த அர்த்தத்தில்தான், பத்திரிகைச் சுதந்தரம் அங்கே அபாயத்தில் இருப்பதாக, அவர் சொல்லி யிருக்க வேண்டும்."

"உங்களிடம் ஏராளமான வசதிகள் இருக்கின்றனவே; நீங்கள் ஏன் முதல்தரமான தமிழ்த் தினசரி ஒன்று போடலாகாது?" என்று நான் கேட்டேன்.

"ஏற்கனவே தான் 'சுதேசமித்திர'னும் 'தினமணி'யும் இருக்கின்றனவே. நான் ஒன்று எதற்காகப் போடவேண்டும்? பம்பாயில் ஒரு பத்திரிகை ஆரம்பிக்கும்படி கூடச் சில நண்பர்கள் சொன்னார்கள். ஒரே பத்திரிகையில் முழுக் கவனமும் செலுத்துவதுதான் சரி என்பது என் நம்பிக்கை" என்று அவர் பதில் அளித்தார்.

கேள்வி: "சமீபத்தில் 'ஹிந்து'வில் ஏதாவது அபிவிருத்தி செய்யும் உத்தேசமுண்டா?"

பதில்: "எல்லாம் யுத்தம் முடிந்த பிறகு தான். காலைப் பதிப்பில் ஏராளமான அபிவிருத்திகள் செய்ய இடமிருக்கிறது."

"ஆமாம், நம்முடையதைப்போன்ற ஓர் அடிமை நாட்டில்..." என்று என் அடுத்த கேள்வியை ஆரம்பித்தேன்.

நான் இந்தக் கேள்வியை முடிக்க அவர் இடங்கொடுக்கவில்லை. 'அடிமை நாடு' என்று நான் சொன்னது அவருக்குத் துளியும் பிடிக்கவில்லை. "அந்த வார்த்தையை உபயோகிக்காதேயுங்கள்—அடிமை உணர்ச்சி எனக்குத் துளிக்கூடக் கிடையாது" என்றார். உலக பந்தங்கள் எவ்வளவுதான் தங்களைச் சூழ்ந்திருந்தாலும், பந்தமற்ற விடுதலை உணர்ச்சியே நிறைந்த ஜீவன் முக்தர்களைப்போல், சுதந்தர உணர்ச்சியை அவருடைய சொற்கள் ஒலித்தன.

அடுத்தாற்போல் கொஞ்சம் விசித்திரமான ஒரு கேள்வியைக் கேட்டேன். சீமையிலே லார்டு பீவர்புருக் என்ற ஒரு பத்திரிகை மன்னன், பிரிட்டனின் விமான மந்திரியாக இருந்தார் அல்லவா? சுதந்தர இந்தியாவின் மந்திரி சபையில் ஸ்ரீ சீனிவாசனையும் அந்தமாதிரி ஒரு ஸ்தானம் வகிக்கும்படி கேட்டால், இவர் என்ன இலாக்காவை ஏற்றுக் கொள்ளுவார்?—இதைக் கேட்டேன்.

"சுதந்தர இந்தியாவிலா?—" என்று கேட்டுச் சற்று நின்றார்; பிறகு தொடர்ந்து, "எனக்கேன் அது? அப்படியானால், நான் இந்தப் பதவியை ராஜீனமாச் செய்து விட்டு, ஒரு ராஜீயவாதியாக அல்லவா மாற வேண்டும்! நான் மாட்டேன். ஒரு நல்ல பத்திரிகைக்காரனாக இருப்பதே எனக்குப் போதும்; அதில்தான் எனக்குத் திருப்தி" என்றார்.

கடைசியில், அன்றைய அரசியலைப் பற்றித் திரும்பியது பேச்சு.

"சத்தியாக்கிரகத்தை நிறுத்திவிட்டு, தன் ஸாதாரண அரசியல் வேலைகளில் காங்கிரஸ் மறுபடியும் ஈடுபட வேண்டும் என்று உங்கள் அரிய பத்திரிகை யோசனை கூறுகிறதே? சத்தியாக்கிரகம் ஆரம்பித்ததே சரியல்ல என்று உங்கள் அபிப்பிராயமா? அல்லது நிலைமைகள் இப்போது மாறிவிட்டன; ஆதலால், சத்தியாக்கிரகத்தை நீடிப்பது சரியல்ல என்று கருதுகிறீர்களா?" என்று கேட்டேன்.

"சத்தியாக்கிரகத்தை நாங்கள் ஒருபோதுமே ஆதரிக்கவில்லை. ஸ்ரீ ரங்கசாமி ஐயங்காரோ, நானோ அந்தக் காலத்திலிருந்தே ஆதரிக்கவில்லை. இன்று அந்நிய ஆதிக்கத்தை எதிர்க்கச் சட்டத்தை மீறினால், நாளைக்கு நமக்கும் அதே கதி தானே ஏற்படும்?" என்பது அவர் பதில்.

அஹிம்சா தர்மத்திலும் அவருக்கு நம்பிக்கையில்லை. “கீதை என்ன சொல்லுகிறது? கண்ணன் என்ன சொல்லுகிருன்? அக்கிரம ஹிம்சையிலிருந்து தற்காத்துக் கொள்ள ஹிம்சை கூடாதென்னலாமா? வஸிஷ்டர் யோக தண்டத்தை வைத்து விட்டு, எதிரியின் அம்புகளையெல்லாம் தடுத்தாரென்ருல், அந்தச் சக்திதான் எப்படி அஹிம்சையாகும்?” என்று ‘கட கட’ என்று கொட்டி விட்டார் சீனிவாசன்.

இத்துடன் சம்பாஷணை முடிந்தது. கடைசியில் நான் வந்தனம் செலுத்தி விடை பெறப் போகையில், என் கையிலிருந்த ‘சக்தி’ இதழைப் பார்த்தார். “பத்திரிகை மிக நன்ருயிருக்கிறது. அமெரிக்காவின் பிரபல வாரப் பத்திரிகையான ‘டைம்’ மாதிரி அழகாயிருக்கிறது” என்று பாராட்டினர்.

அப்புறம் நான் எழுந்து நகர்ந்தபோது, நகைத்துக் கொண்டே, “இந்தாருங்கள்; என்னை அதிகமாகத் தாக்கி விடாதீர்கள்” என்ருர்.

அப்போது எனக்கும் சிரிப்பு வந்துவிட்டது. இந்தியாவிலேயே தலை சிறந்ததும், பிரிட்டிஷ் சர்க்காரிடங் கூடப் பெருஞ் செல்வாக்கு வாய்ந்ததுமான ஒரு தினசரியின் ஆசிரியர், இப்படிக் கூறியது வெறும் உபசாரம் மட்டுமல்ல; பத்திரிகைத் தொழிலுக்கே அவர் வைத்திருக்கும் அபரிமிதமான மதிப்பைத்தான் அது காட்டியதாக, என் எண்ணம்.

# அவிநாசிலிங்கம்

இன்று உபவாசம்; நேற்று ரயில் பிரயாணத்தால் ஏற்பட்ட அசதி—அவருடைய இந்த நிலைமையில் நான் போய்ச் சந்தித்தேன்.

அந்த நாட்களில் ஸ்ரீ. அவிநாசிலிங்கம் எப்போது சென்னைக்கு வந்தாலும், மயிலாப்பூர் ஸ்ரீ. ராமகிருஷ்ண மடத்தில் தான் தங்குவார். மடத்தின் விசாலமான முன்புற ஹாலில், நாற்புறமும் சூழ்ந்த நிம்மதியான பசுஞ் செடிகளுக்கு நடுவே, களைத்த முகத்துடன் அவர் வந்து உட்கார்ந்தார். வாரத்துக்கு ஒரு நாள் அவரது உபவாச நாள்; மௌனமும் அன்று அனுஷ்டிப்பார். ஆனால், சென்னையில் வந்த காரியங்களைக் கவனிப்பதற்காக, மௌனம் மட்டில் இந்த வாரம் ஒத்திப் போயிருந்தது.

"உபவாசத்தால் அசதியா யிருக்கிறீர்கள் போலிருக்கிறதே! நான்..." என்று கொஞ்சம் மென்று விழுங்கினேன்.

அவர் மிக்க உற்சாகமாக, "அதைப் பற்றி உங்களுக்கென்ன? உபவாச காலத்தில் தான் ரொம்பவும் சுறுசுறுப்பாய் வேலை செய்ய முடியும். விரும்பும் கேள்விகளைக் கேளுங்கள்" என்றார்.

ஸ்ரீ. டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார், கோவையில் செல்வாக்கு மிக்க உயர்ந்த வர்த்தகக் குடும்பத்தில் பிறந்தவர். 1903-ஆம் ஞு மேமீ 5வ அவரது ஜனன தினம். பிரசித்தி பெற்ற ஸ்ரீ. டி. எ. ராமலிங்கம் செட்டியார், ஸ்ரீ அவிநாசியின் சிறிய தந்தை. ஸ்ரீ. கே. சுப்பிரமணியன் செட்டியார், ஸ்ரீ அவிநாசியின் தந்தை.

பாலியத்தில் கோவை லண்டன் மிஷன் ஹைஸ்கூலில் (இப்போது யூனியன் ஹைஸ்கூல் என்று அதன் பெயர் மாறி யிருக்கிறது) ஸ்ரீ. அவிநாசி கல்வி பயின்றார். பிறகு, சென்னைப் பச்சையப்பா காலேஜிலும் லா காலேஜிலும் படித்தார்.

காலேஜில் படிக்கையிலேயே பொதுக் காரியங்களில் அவருக்குத் தீவிர உற்சாக முண்டு. விக்டோரியா ஹாஸ்டலில் திலகரின் உருவச் சிலையை ஸ்ரீ. எஸ். சீனிவாஸையங்காரைக்

கொண்டு நிறுவச் செய்ததில் முக்கியமாகப் பொறுப்பெடுத்துக் கொண்டவர்களில் அவிஞசியும் ஒருவர். 1924-ஆம் ஞு மலையாளத்தில் கொடிய வெள்ளக் கஷ்டம் நேரிட்டபோது, கஷ்ட நிவாரண ஸேவை புரிய, ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தாருடன் சேர்ந்து ஸ்ரீ அவிஞசி அங்கே விரைந்தார்.

லா காலேஜ் படிப்பு முடிந்தது. 1926-ஆம் ஞு கோயமுத்தூரில் வக்கீல் தொழில் புரிய ஆரம்பித்தார். ஆனல், சென்னையில் படிக்கையிலேயே மற்றொரு தொடர்பு அவருக்கு ஏற்பட்டிருந்தது. அதுவே அவருடைய வாழ்க்கைக்கு ஜீவசுரம்போல் அமைந்துவிட்டது. ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் அவர் பெற்றிருக்கும் சம்பந்தத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.

1921-ஆம் ஞு வட நாட்டிலிருந்து, ஸ்ரீ பரமஹம்ஸரின் நேர் சிஷ்யர்களான பிரம்மானந்த சுவாமிகள், சிவானந்த சுவாமிகள் இருவரும் சென்னைக்கு விஜயம் செய்தார்கள். அப்போது அவர்களைத் தரிசித்துச் சம்பாஷித்ததிலிருந்து, ஸ்ரீ பரமஹம்ஸரிடத்திலும் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திலும் அவிஞசிக்குப் பெரும் பற்றுதல் ஏற்பட்டது. அது முதல் அடிக்கடி மடத்துக்குச் செல்லுவதும் பரமஹம்ஸருடைய உபதேசங்களைப் படிப்பதும் அவருக்கு வழக்கமாயின. ஸேவையும் பிரம்மசர்யமுமே மடத்தின் முக்கிய லட்சியங்களாகும். ஆகையால், ஸ்ரீ அவிஞசி தமது வாழ்க்கையிலும் அந்த லட்சியங்களைக் கைக்கொண்டார்.

மகன் மணம் செய்துகொள்ள வேண்டும் என்று பெற்றோருக்கு மிகுந்த விருப்பம். மகனே மிக்க உறுதியா யிருந்தார். ஆனல், 'நல்ல காரியத்துக்காகத்தானே தங்கள் மகன் பிரம்மசரியம் அனுஷ்டிக்கிருன்' என்று அவர்கள் ஒருவாறு ஆறுதல் அடைந்தார்கள்.

1930-ஆம் ஞு பிப்ரவரி ௴ 3௳ கோவை ராமகிருஷ்ண வித்யாலயத்தை ஸ்ரீ அவிஞசி ஸ்தாபித்தார். அப்போது அரசியலில் அவருக்குப் பிரேமை கிடையாது. வித்யாலயத்தின் வளர்ச்சியையே தமது வாழ்க்கை லட்சியமாக, அவர் இன்றும் கைக்கொண் டிருக்கிருர். அப்படியானல் அரசியல்? அது பின்னல் வந்தது; அதை அவர் ஒரு நாள் கைவிட்டு விடவுங் கூடும். ஆனல், தமது ஸ்ரீ ராமகிருஷ்ண குருகுலத்தை மாத்திரம் ஸ்ரீ அவிஞசி என்றும் வளர்த்துக்கொண் டிருப்பார்.

கோவை வித்யாலயம் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் ஒரு கிளை ஸ்தாபனமாக நடத்தப்படுகிறது. கோயமுத்தூருக்கு வடக்கே பதினேராவது மைலில், கோயமுத்தூரி லிருந்து மேட்டுப் பாளையத்துக்குச் செல்லும் ரயில் பாதைக்கும் ரஸ்தாவுக்கும் மத்தியில், அழகான மலைக் காட்சிகள் நிறைந்த இடத்தில் இது அமைந்திருக்கிறது. இதற்கும் பெரியநாய்க்கன்பாளையம் ரயில்வே ஸ்டேஷனுக்கும் ஒரு பர்லாங்கு தூரந்தான் இருக்கும். மலைக் காட்சிகளுக்கு எதிரில், பரந்த சமவெளியின் மத்தியில், வித்யால யத்துக்குச் சொந்தமான 29 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள நிலத்தின் ஒரு பகுதியில் எளிமையான சில கட்டிடங்கள் கட்டப்பட்டு, அவற்றில் வித்யாலயக் குழந்தைகள் வசிக்கின்றனர். மிக ஆரோக்கியமான ஸ்தலம்.

வித்யாலயம் குருகுல முறையில் நடந்து வருகிறது. மாண வர்கள் அனைவரும் வித்யாலயத்திலேயே வசிக்கிறார்கள். தமிழ் நாட்டின் பல ஜில்லாக்களி லிருந்தும் பல சமூக, பல வகுப்பு மாணவர்களும் வித்யாலயத்தில் யாதொரு வேற்றுமையு மின்றி ஒரே குடும்பம்போல் வாழ்கிறார்கள். ஆறு பாரங்கள் வரை இங்கே கல்வி போதிக்கப்படுகிறது. மாணவர்களுக்குத் தெய்வ பக்தி, தேசாபிமானம், கல்வி, பொது அறிவு, கலையறிவு, நூற்றல் பயிற்சி முதலியன அளிக்கப்படுகின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ விவேகானந்தர் ஆகிய இரு மகான்களின் உபதேச முறை களையும் பின்பற்றி, மொத்தத்தில் இந்த வித்யாலயம் தொண் டாற்றி வருகிறது.

கோவை வித்யாலயம் ஆரம்பமான அதே 1930-ஆம் வருஷத்தில், தேசம் பூராவையுமே கலக்கிய அற்புதம் ஒன்று நிகழ்ந்தது. அதுதான் மகாத்மா காந்தி தொடங்கிய உப்புச் சத்தியாக்கிரகம். அது எத்தனையோ வாலிப உள்ளங்களைக் கிளறிவிட்டது. அவினசியும் அப்போது அப்படி மனங்கிளர்ந்த ஒருவராவார். தண்டி யாத்திரையின் முடிவில் மகாத்மாஜி கைதியான செய்தி கேட்டு, அவினசி கண்ணீர் விட்டுவிட்டார். கண்மணி போன்ற தம் வித்யாலயத்தையும் விட்டுப் பிரிந்து அஞ்ஞாத வாசம் செய்யத் துணிந்தார். சத்தியாக்கிரகத் தீயில் குதித்தார். சிறையும் புகுந்தார்.

பிறகு, காந்தி—இர்வின் ஒப்பந்தம். விடுதலை. கராச்சிக் காங்கிரஸ். மீண்டும் சிறை வாசம். இந்த இரண்டாவது கூடலூர்ச் சிறை வாசத்தின் போதுதான், அதாவது 1932-ஆம்

வருஷம், மதுரை ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமனுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் ஸ்ரீ. அவிஞசிலிங்கத்துக்குக் கிடைத்தது. வெளியில் வந்தது முதல், கோவைக் குருகுலத்துக்கு, ஸ்ரீ. சுப்ப ராமனும் ஒரு காரியதரிசியாய் இருந்து வருகிறார்.

1934-ஆம் ஞு, சட்டசபைப் போராட்டத்தில் காங்கிரஸ் இறங்கியது. இந்திய அசெம்பிளிக்கு, காங்கிரஸ் அங்கத்தினராக ஸ்ரீ அவிஞசி தேர்ந்தெடுக்கப் பட்டார். ஸ்ரீ அவிஞசியின் வாழ்க்கை பூராவிலும் ஒரு விநோத முண்டு. அவருடைய படிப்பு, ஸேவை, அரசியல் எல்லாவற்றிலும், மற்றவரைவிட இளமையிலேயே அவர் பிரவேசித்து விட்டார். எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையா? தோழ மாணவர் அனைவரையும்விட அவரே இளைஞர். காலேஜா? அங்கேயும் அவர்தான் 'கடைக் குட்டி.' சட்ட சபையா? சகாக்கள் எல்லாருக்கும் சிறியவர் அவர்தான். சமீபத்தில் சென்னை மந்திரிகளிலும் 'கடைக் குட்டி' அவர்தானே, என்பது என் சந்தேகம். வயது போகட்டும். உருவம் எப்படி என்கிறீர்கள்? இப்போது பார்த் தாலும், ஏதோ காலேஜ் மாணவன் மாதிரிதான் தோன்று கிறார். இதனால் சில சமயம் சில விநோதங்கள் கூட நிகழ்வ துண்டு.

இந்திய அசெம்பிளித் தேர்தலில் அவர் வெற்றி பெற்ற உடனே, அவருக்கும் வேறு நான்கு நண்பர்களுக்கும் சேலம் முனிஸிபாலிட்டியார் ஒரு வரவேற்பு உபசாரம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால், இவர் அங்கே போன போது, 'கேட்'டி லிருந்தவன் இவரை யாரோ காலேஜ் மாணவன் என்று நினைத்து விட்டான். இவரை உள்ளே விடவில்லை. உபசாரம் பெற வந்த மற்ற நால்வரில் ஒருவர் பின்னால் வந்தார். "ஓ! இவர் நம் அவிஞசி யல்லவா" என்று அவர் சொன்ன பிறகு தான், கேட் ஆசாமிக்கு விஷயம் புரிந்தது.

"அசெம்பிளியில், நீங்கள் சாதித்த எந்தக் காரியத்தைப் பற்றிப் பெருமை கொள்ளுகிறீர்கள்?" என்று அவிஞசியை நான் கேட்டேன்.

"தனி முறையிலா? தனி முறையில் நான் என்ன சாதித் திருக்க முடியும்? காங்கிரஸ் கட்சி சாதித்த சகல காரியங் களிலுமே நான் பெருமை கொள்ளுகிறேன்" என்று அவர் பதிலளித்தார்.

மேலும் அவர் சொன்னதாவது : “ பொதுவாக, கேள்விகள் கேட்பது, நிதி, வர்த்தகம் ஆகிய விஷயங்களில்தான், அசெம் பிளியில் நான் முக்கியமாய்க் கவனம் செலுத்துவது வழக்கம்.” வாஸ்தவம். அசெம்பிளியில், ஏற்கனவே கேள்வி என்ருல், ஸ்ரீ சத்தியமூர்த்தியின் பெயர் அநேகமாய் அதன் தலைப்பிலே இல்லாம லிராது. ஸ்ரீ அவிஞசியும் ஓர் எம். எல். ஏ. ஆனபிறகு, கேள்விகள் தயாரிப்பதைச் சற்றேறக்குறைய இருவருமாய்ப் பங்கு போட்டுக் கொண்டு விட்டதைப் பத்திரிகைகள் மூலம் நாம் அனைவரும் அறிவோம்.

இந்திய அசெம்பிளியைக் காங்கிரஸ்காரர் பகிஷ்கரித்த காலத்தில், அசெம்பிளி வெறிச்சென்று போய்விட்டது. கேள்விகள் கேட்பார் கூடச் சரியாய்க் கிடையாது. ஒரு நாள் ஸ்ரீ சத்தியமூர்த்தியும் ஸ்ரீ அவிஞசியும் சந்தித்தார்களாம்.

“ பத்து நாளாகியும் 65-கேள்விகள் தாஞ வந்திருக் கின்றன ? ” என்று ஆச்சரியப்பட்டாராம் ஸ்ரீ அவிஞசி.

“ ஆமாம் அப்பா ! நீயும் நானும் இல்லாவிட்டால், அசெம் பிளியில் கேள்விகள் எங்கேயிருந்து வரும் ? ” என்று சொல்லிச் சிரித்தாராம் ஸ்ரீ சத்தியமூர்த்தி.

“ பிரம்மசரியம் அனுஷ்டிக்கிறீர்களே ? அதனல் என்ன லாபம் ? ” என்று அவிஞசியை நான் கேட்டேன்.

அவருடைய பதில் : “ பிரம்மசரியத்தால், நிறைந்த நம் பிக்கை பிறக்கிறது. எந்தக் காரியத்தையும் சாதிக்கலாம் என்ற ஒரு மனேதிடம் உண்டாகிறது.”

கேள்வி : “ பிரம்மசாரிகளுக்கு மணம் செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றுவதே யில்லையா ? ”

பதில் : சில சமயம் தோன்றலாம். நமது பகுத்தறிவைக் கொண்டுதான் அதை அடக்க வேண்டும். ஆத்மீக பக்தி வேண்டும் ; ஏதாவது பொது ஜன சேவை ஒன்றில் ஈடுபட வேண்டும். அப்போதுதான் பிரம்மசரியத்தைக் காப்பாற்ற முடியும். இந்த இரண்டும் இல்லாதவன், பிரம்மசரியம் அனுஷ் டிக்க முடியாது. ”

தமிழ்ப் பாஷை வளர்ச்சியில் ஸ்ரீ அவிஞசி பேரார்வம் உடையவர். இந்தியப் பொருளாதார நூல், கேதார் யாத்திரை என்ற இரண்டு தமிழ் நூல்களை அவரே எழுதி வெளியிட்டிருக்

கிறார். மகாத்மா காந்தியின் தென்னப்பிரிக்கச் சத்தியாக் கிரகத்தை, அவரும் ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமனும் சேர்ந்து மொழிபெயர்த்துத் தமிழில் வெளியிட்டிருக்கிறார்கள். சுவாமி விவேகானந்தர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் 'கல்வி' யைப் பற்றிக் கூறியுள்ள அரிய வாசகங்களை யெல்லாம் அழகாகக் கோவை செய்து, ஓர் அருமையான ஆங்கில நூலையும் அவினசி பிரசுரித்திருக்கிறார்.

அவருடைய இந்த முயற்சிகளைப்பற்றிக் கேட்டபோது, ஸ்ரீ அவினசி கூறியதாவது: "பொருளாதார நூல், தென்னப் பிரிக்கச் சத்தியாக்கிரகம் இரண்டும் கடலூர்ச் சிறையில் தயா ராயின. கேதார் யாத்திரையையும், சுவாமிஜியின் 'கல்வி' பற்றிய நூலையும் திருச்சிச் சிறையிலே தயாரித்தேன். இந்தப் புத்தகங்களைத் தயாரித்தது மட்டிலும் அல்ல, என் சிறந்த நண்பர்களை யெல்லாம் கூட முதல் முதலிலே சிறைகளில்தான் சந்தித்தேன். நிற்க, எங்கள் கோவைக் குருகுலம், பற்பல சயின்ஸ் நூல்களையும் தமிழிலே வெளியிட முயன்றுகொண் டிருக்கிறது."

இவ்வளவோடு கேள்வி—பதில்கள் முடிந்தன. அவினசியுடன் பேசும்போது நமக்குத் துளிக்கூட அந்நிய பாவம் ஏற்படுவதில்லை. மிக அன்போடும் வினயமாகவும் அவர் பேசுகிறார். அவருடைய பழக்க வழக்கங்களும் மிக எளியவைதான். அவர் அசெம்பிளி அங்கத்தினர் ஆன பிறகுதான், தமது முதல் போட்டோவைப் பிடித்துக்கொண்டாராம். அதுவும் எதற்காக? பத்திரிகைக் காரர்களின் உபத்திரவம் தாங்காமலும், ராஜாஜியின் வேண்டு கோளுக் கிணங்கியும்தான். அவரது வாழ்க்கையில் ஒரே ஒரு நாள்கூட வெற்றிலை போட்டதில்லையாம்; பிரம்மசாரியல்லவா?

சுபாவம்தான் எளியது. ஆனல், நன்மையில் நம்பிக்கையும் மனோதிடமும் உடையவர். ஒரு சமயம் அயலூர் நண்பர் ஒருவர் திடீரென்று "உடனே காரில் வாருங்கள்" என்று அவருக்கு டெலிபோன் செய்தாராம்.

ஸ்ரீ அவினசியும் அப்படியே சென்றார்.

அழைத்த நண்பர் இருதயக் கோளாறோடு படுத்தபடுக்கையா யிருக்கிறார். பக்கத்திலே டாக்டர். ஸ்ரீ அவினசியைக் கண்டதும், ஈனசுரத்தில் துக்கத்தோடு, "நண்பர் அவினசி! நான் இதோ சாகப்போகிறேன்; பிழைக்கமாட்டேன். நீங்கள்

ஓர் உதவிமாத்திரம் புரிய வேண்டும். என் பிரேதத்தை எப்படியாவது எங்கள் ஊரில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட வேண்டும்'' என்றார் நண்பர்.

“ இதென்ன விபரீதம் !'' என்று நினைத்த அவிநாசி, நிதானமிழக்காமல் நண்பரின் கையைப் பிடித்து, தாதுவைப் பார்த்தார்.

பிறகு, “ உமக்கொன்றுமில்லை ; தாது மிக நேர்த்தியாய் இருக்கிறதே. வீணே மனதைக் குழப்பிக்கொள்ளாதேயும்'' என்றார். இருதய பலவீனம் அடைந்தவர்களுக்கு மனத் திடம் ஊட்டுவதுதான் முக்கியமல்லவா ?

அவிநாசியின் உட்கருத்தைப் புரிந்துகொண்ட டாக்டரும் நோயாளியின் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு, “ஆமாம், ஆமாம். என்ன ஆச்சர்யம் ! தாது மிக நன்றாய் இப்போது பேசுகிறது. இனி ஒரு பயமுமில்லை'' என்றார்.

நண்பர் பிழைத்தார். இன்றும் அவர் க்ஷேமமாய் இருக்கிறார்.

ஸ்ரீ. அவிநாசியின் மனோதிடம் தொற்று நோய்போல் பிறரையும் பற்றிக் கொள்ளத்தக்கது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

இத்தகைய அவிநாசியின் ஜீவ லட்சியத்தைக் குறித்து மற்றுமொரு முறை குறிப்பிட்டாகவேண்டும். அதுதான் கோவைக் குருகுலம். கடைசியாக நான் விடை பெறும் போது, “ஒன்று கூற விரும்புகிறேன். நீங்கள் என்னைப் பற்றி எதுவும் பிரமாதமாய்ச் சொல்லவேண்டாம். எங்கள் கோவைக் குருகுலமான ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம் இருக்கிறது, பாருங்கள் ; அதைப்பற்றி வேண்டுமானால் கொஞ்சம் விவரமாய் எழுதுங்கள்'' என்று ஸ்ரீ. அவிநாசி கேட்டுக்கொண்டார்!

ஆமாம் ; கோவை ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம் என்பதென்ன ? அதுவும் அவிநாசியும் உடம்பும் உயிரும்போல. அதன் சிறப்பும் வளர்ச்சியும்தானே அவருடைய பெருமை ?

# விஜயலட்சுமி பண்டிட்

ராஜபோகத்துடன் வாழ்ந்த ஒரு குடும்பத்தின் ஆண், பெண் அடங்கலும், அந்த 'அரை வேட்டிப் பக்கிரி' காந்தி இருக்கிறாரே, அவரது மந்திர சக்தியில் கட்டுண்டு, பரம தியாகங்களைச் செய்து விட்டதென்றால், அது நேருஜியின் குடும்பம் தான். பண்டித ஜவாஹரின் தங்கையான விஜய லட்சுமி பண்டிதையும் அதில் ஒருவராவார்.

விஜயலட்சுமியைக் காண அலஹாபாது செல்லலாம்; அரண்மனை போன்ற 'ஆனந்த பவ'னைப் பார்க்கலாம்—இவ் விதம் நான் எண்ணமிட்டுக் கொண்டிருந்தேன். ஆனால், ஸ்ரீமதி விஜயலட்சுமி எனது ஆசைக்கெல்லாம் இடங்கொடுக்க வில்லை. "ஜனவரி மாதம் 4௳ சென்னைக்கு வருகிறேன். அங்கேயே சந்திக்கலாம்" என்று, என் கடிதத்துக்குப் பதில் எழுதிவிட்டார்.

தேச சேவையிலும் தியாகத்திலும் ஈடு இணையற்ற அந்தக் குடும்பத்தின் பெருமை இன்று உலகப் பிரசித்தமாகும். ஆகை யால், அதைப்பற்றி நான் இங்கே வர்ணிக்கத் தேவையில்லை.

விஜயலட்சுமி 1901-ஆம்ஆண்டு பிறந்தார். மோதிலால் நேரு வின் குடும்பத்திலே விஜயலட்சுமி 'செல்லக் குழந்தை'. அண்ணா ஜவாஹர் பல வருஷம் மூத்தவர். ஹிந்துக் குடும்பங்களில் 'செல்லக் குழந்தை'யாகப் பெண்ணை வளர்ப்பது ரொம்பவும் அபூர்வம் அல்லவா? "இம் மாதிரி செல்லங் கொடுத்து வளர்ப் பதால், பின்னால் இவள் மிகவும் கஷ்டப்படப் போகிறாள்" என்று விஜயலட்சுமியைப் பற்றி, நேரு குடும்பத்தின் நண்பர்க ளெல்லாம் கூறுவார்களாம்.

மோதிலால் தம்பதிகளுக்குத் தங்கள் மகளைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்ப விருப்பமில்லை. வருங் காலத்தில் தங்கள் குமாரி பிரபலமடையப் போவதாக, அவர்களுடைய நம்பிக்கை. அதற்கேற்ற கல்வியை அல்லவா புகட்டவேண்டும்? ஆகை யால், வீட்டிலேயே ஓர் இங்கிலீஷ்காரியைத் தாதியாக நியமித் தார்கள். விஜயலட்சுமியின் தேவைகளை யெல்லாம் கவனித்துக் கொள்வதும் வெளியே அவருக்குத் துணை செல்வதும், தாதியின்

வேலே. அரை டஜன் உபாத்தியாயர்கள் வந்து வந்து வெவ் வேறு பொருள்களைப் பற்றிய பாடங்களையும் வீட்டிலேயே விஜயலட்சுமிக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

காலையிலே எழுந்ததும், விஜயலட்சுமியின் முதல் வேலை குதிரை சவாரிதான். சின்னஞ் சிறு குழந்தையா யிருக்கை யிலேயே, அவர் குதிரை சவாரி செய்யப் பயின்ருர். அதிலே அவருக்கு மிகுந்த சந்தோஷம். பழைய 'ஆனந்த பவன'மும் மோதிலால் நேருவால் தேசத்துக்கு-காங்கிரஸுக்கு-நன்கொடை யளிக்கப்பட்டுத் தற்போது சுயராஜ்யபவனமா யிருப்பதுமான அந்த மாளிகையின் ஒரு பக்கத்தில் சிறிது இடத்தை, விஜய லட்சுமியின் குதிரை ஸவாரிப் பயிற்சிக்கென்றே ஒதுக்கிச் செப்பனிட்டு வைத்திருந்தார்கள்.

"குதிரை ஸவாரிப் பயிற்சியில் குழந்தைப் பருவத்திலே உங் களுக்கு ரொம்பவும் விருப்பம் என்று, 'இப்படியாக நான் மந்திரியானேன்' என்ற உங்கள் புத்தகத்தில் குறிப்பிட் டிருக் கிறீர்களே; இப்போதும் அந்தப் பழக்கம் உண்டா? அல்லது விட்டுவிட்டீர்களோ?" என்று அவரைக் கேட்டேன்.

"என்? எப்போதும் உண்டு. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இன்றும் நான் குதிரை ஸவாரி செய்துவருகிறேன். குன்றுகள், பசிய வனங்களுக்கெல்லாம் சென்று வருவேன்" என்று மிகுந்த உற்சாகத்துடன் அவர் பதில் அளித்தார்.

பொதுக் கூட்டங்களில் மிக ஆணித்தரமாகவும் 'பளிச்சுப் பளிச்' சென்றும் பேசுவதுபோலவேதான், தனியே சம்பாஷிக் கையிலும் விஜயலட்சுமி பேசுகிருர். அவருடைய ஒவ்வொரு பதிலின் ஆரம்பமும் ஏதோ சண்டைக்கு வருவதுபோலவே இருக்கும். "ஏதடா இது! அடுத்த கேள்வியைக் கேட்போமா, வேண்டாமா?" என்றுகூட நமக்குத் தோன்றும். ஆனல், பதிலின் தொடக்கம்தான் பெரும்பாலும் முகச் சுளிப்புடன் இருக்கும். பிறகு சுமுகமாகவே பதிலைப் பூர்த்தி செய்வார். அவருடைய சம்பாஷணையில் பாதி இப்படி, பாதி அப்படி - சுளிப் பும் சுமுகமும் மாறி மாறி யிருந்தன.

'ஆனந்தபவன்' காம்பவுண்டுக்குள் விளையாட்டுக்கள் ஆடு வது, கல்வி பயில்வது இந்த இரண்டோடும் அவரது பாலியம் சென்றது. சிறு வயதில் அவருக்கு மிகுந்த சுதந்தரம் இருந்த

தென்றாலும், ஸினிமாக்களுக்கு மாத்திரம் இங்கிலீஷ் தாதியின் சம்மதமில்லாமல் அவர் போக முடியாது. அந்தத் தாதியோ மிக நல்ல படங்களைக்கூடப் பார்க்கத் தக்கவை அல்ல என்று தள்ளுபடி செய்துவிடுவாளாம். ஆகையால், விஜயலட்சுமி ஸினிமாப் பார்ப்பது ரொம்பவும் அபூர்வம். நாட்டியமாடுவதில் அவருக்கு மிகுந்த ஆசையாம். ஆனால், அந்த ஆசையைக் கண்டிப்பாகக் கூடாதென்று பெற்றோர் தடுத்துவிட்டார்களாம். ஆனால், தம்முடைய மூன்று குமாரிகளில் எவளும் இப்போது இந்த நாட்டிய ஆசை கொள்ளக் காணோம் என்று விஜயலட்சுமி கூறுகிறார்.

ஷேக்ஸ்பியரின் நாடக பாத்திரங்களான ரோஸாலிண்டைப் போலும், போர்ஷியாவைப் போலும் தாம் ஆகிவிட வேண்டுமென்று இளமைப் பருவத்தில் விஜயலட்சுமிக்கு மிக்க ஆசை. தேச சரித்திரங்களைப் படித்தபோது, சரித்திர நாயகிகளான மேரி அன்டாய்னெட், எலிஜபெத் ராணி இவர்களை விஜயலட்சுமி தமக்கு உதாரணங் கொள்வாராம். பிரிட்டிஷ் துருப்புகளுக்கு நடுவே புகுந்து வாள் தாங்கி வீராவேசத்துடன் சாடும் ஜான்ஸி லட்சுமிபாயாகவே தம்மை அவர் கற்பனை செய்துகொள்வதும் உண்டாம். பதின்மூன்று பதினாலு வயதாயிருக்கும்போது, அன்னி பெஸண்ட், ஸரோஜினிதேவி ஆகியவர்களை விஜயலட்சுமி சந்தித்தார். வாலிபநாட்களில் ஸரோஜினிதேவி தான் விஜயலட்சுமியின் லட்சியப் பெண்மணியாக விளங்கினார்.

கத்தியவாரைச் சேர்ந்த ஆர். எஸ். பண்டிதர், காஷ்மீரப் பெண்மணியான விஜயலட்சுமியை 1920-ஆம் ௵ நவம்பர்-௴ சந்தித்தார். அவர்களின் அன்பு வளர்ந்தது. "நீ என்னை மணந்து கொள்வாயா? அநேக மைல் தூரம் நடந்து பற்பல பாலங்களைக் கடந்து வந்திருக்கிறேன். வருங்காலத்தில் நீயும் நானும் கை கோத்து இனி நம்முன் எதிர்ப்படும் பாலங்களை கடப்போமே?" என்று ஒருநாள் விஜயலட்சுமியை அவர் வேண்டினார். 1921-ம் ௵ மே-௴ 9-௳ இருவருக்கும் திருமணமும் நடைபெற்றது.

இளமையில் விஜயலட்சுமி அதிகமாகப் பொது ஸேவைகளில் ஈடுபடவில்லை. ஏதோ சிறு சிறு சமூகப் பணிகள் மட்டில் புரிந்து வந்தார். முதல் முதலாக, அவர் பொது ஸேவைக்கு முன் வந்தது 1932-ஆம் வருஷந்தான். அதாவது மகாத்மாஜியின் சத்தியாக்கிரகத்தில் கலந்து, தம் தந்தையும் அண்ணனும் பிற உறவினரும்

சென்ற சிறையைத் தாமும் அடைந்துவிட்டார். அப்போது 15-மாதக் காவல். யுத்தகால சத்தியாக்கிரகத்தில், 1940-ஆம் ஆு சேர்ந்து, நான்கு மாதச் சிறைப் பரிசு பெற்ருர்.

" நீங்கள் எத்தனை தடவை வெளிநாட்டுப் பிரயாணம் செய்திருப்பீர்கள்?" என்று அவரைக் கேட்டேன்.

" எத்தனை முறையா? அதை எப்படிக் கணக்கிட்டுச் சொல்ல முடியும்? எத்தனையோ முறை சென்றிருக்கிறேன். என் வாழ் நாளில் பாதிக் காலம் வெளிநாட்டுப் பிரயாணங்களிலேதான் கழிந்திருக்கிறது" என்று அவர் பதில் தந்தார்.

" சமூகத்தில் பெண்களின் அந்தஸ்து வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு விதமா யிருக்குமே. எந்த நாட்டில் பெண்களின் அந்தஸ்து மிக உயர்ந்த நிலையில் இருக்கிறது?" என்பது எனது அடுத்த கேள்வி.

" நான் அதை ஆராய்ந்த தில்லை. தவிர, நான் பார்க்காத நாடுகளும் அநேகம் இருக்கின்றன. ஆகையால், இதை நான் எவ்வாறு சொல்ல முடியும்? முடியாது" என்று அவர் மறுத்து விட்டார்.

சத்தியாக்கிரகத்துக்குப் பிறகு, 1935-ஆம் ஆு அலஹபாது முனிஸிபல் தேர்தல் நடந்தது. காங்கிரஸ் அபேட்சகர்களில் விஜயலட்சுமியும் ஒருவர். அமோகமான ஆதரவுடன் விஜயலட்சுமி வெற்றி பெற்ருர். பின்னல் கல்விக் கமிட்டிக்கும் தலைவ ராஞர்.

முனிஸிபல் தேர்தலுக்குப் பிறகு, மாகாணச் சட்டசபைத் தேர்தலிலும் காங்கிரஸின் சார்பாக நின்று, விஜயலட்சுமி வெற்றி பெற்ருர். பின்பு, சகல மாகாணங்களின் காங்கிரஸ் சட்ட சபை அங்கத்தினர்களையும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களையும் கூட்டிய ஒரு மகாநாடு நடைபெற்றது. மந்திரி பதவி ஏற்க வேண்டுமென்று ராஜாஜி பிரேரணை செய்தார். வாதப் பிரதிவாதங்கள் பலமாய் நடந்தன. எல்லாவற்றையும் அமைதியாய் வெகு நேரம் கேட்டுக்கொண் டிருந்த விஜயலட்சுமிக்குக் கடைசியில் தமது உணர்ச்சியை அடக்க முடியவில்லை. எழுந்து, பிரேரணையை எதிர்த்தார்; பதவி ஏற்கக் கூடாதென்று வாதித்தார். பதவிக் கோஷ்டியாருக்கு இது எரிச்சலாயிருந்ததாம். " ஒரு பெண் இதை எதிர்ப்பதாவது!"

என்றுகூட, அவர்களில் சிலர் சொன்னார்களாம், "நாங்கள் இதில் ஜயம் பெற்றே தீர்வோம். அப்போது உங்களைச் சரியான படி தண்டிக்கிறோம், பாருங்கள்" என்றும் ஒருவர் கோஷித் தாராம். பிரேரணை வெற்றிபெற்றது; விஜயலட்சுமியும் தண்ட னையை அடைந்தார். தண்டனை என்ன தெரியுமோ? ஒரு மந்திரி பதவி அவர் தலையிலே சுமந்ததுதான்!

"நீங்கள் ஒரு மந்திரியாக வேண்டுமென்ற யோசனை முதல் முதலில் யாரிடமிருந்து வந்தது?" என்று ஒரு கேள்வி கேட்டேன்.

"கராச்சித் தீர்மானத்தை அனுசரித்தே நான் மந்திரி யானேன். என் புத்தகத்தைப் படித்துப் பாருங்கள்; அதில் இருக்கிறதே விவரம்" என்றார் விஜயலட்சுமி.

புத்தகத்திலுள்ள விவரம் இதுதான்: 1937-ஆம் ஆண்டு ஜூலை-மீ ஒரு நாள் காலையில், பண்டித பந்திட மிருந்து இவருக்கு ஒரு தந்தி வந்தது. "மந்திரி சபையில் சேர்வீர்களா?" என்று அதில் அவர் கேட்டிருந்தார். பதவி ஏற்பது தவறு என்பது விஜயலட்சு மியின் திடமான அபிப்பிராயம், ஆனால், மேலே யுள்ளவர்களின் கட்டளையை மீறும் வழக்கம் அவரிடம் கிடையாது. அன்றியும், இந்த அழைப்பு, ஆணும் பெண்ணும் சமம் என்ற கொள்கையைக் காங்கிரஸ் அங்கீகரிக்கிறது என்பதற்கு ருசுவாகும். இந்தக் கார ணங்களால், மந்திரி பதவியை விஜயலட்சுமி ஏற்றுக்கொண்டார்.

மந்திரி காரியாலயத்துக்குள் பிரவேசித்த உடனே, 'கிடு கிடு' என்று உத்திரவுகள் போட ஆரம்பித்தார். முதல் முதலில் அவர் செய்த காரியம், மேஜை, நாற்காலிகளை ஒழுங்குபடுத்தியதாகும். அநாவசியமான தளவாடங்களை அப்புறப்படுத்தினார். ஒரு கிண் ணம் கொண்டுவரச் சொன்னார். காரியாலயத் தோட்டத்திலே நிறையப் பூத்திருந்த ரோஜா மலர்களைக் கிண்ணத்தில் நிறைத்து வைக்கச் சொன்னார். "பூவா! வழக்கமில்லையே! வழக்கத்துக்கு விரோதமாய் இங்கே ஒன்றும் செய்யக்கூடாது, அம்மணி!" என்று பிரலாபித்தார் குமாஸ்தா. "நானே போய்ப் பறித்து வருகிறேன்" என்று கிளம்பினார் விஜயலட்சுமி. 'தலைக்கு மேலே போய்விட்டது!' என்று எண்ணிய குமாஸ்தா, தாமே போய்ப் பூவைக் கொய்து வந்தார். முதலில் சுலபமான ஒரு தஸ்தாவேஜிக் கட்டை எடுத்துப் படித்து, விஜயலட்சுமி தமது அபிப்பிரா

யத்தை எழுதினார். பிறகு, சிக்கலான மற்ற தஸ்தாவேஜிகளும் அவருக்குச் சுலபமாயின.

பட்ஜெட் வந்தது. 'பூஜ்யம், பூஜ்யம், பூஜ்ய'மாக ஏகச் சுழிகள் அந்தத் திட்டத்திலே நிறைந்து கிடக்கக் கண்டதும், அவருக்குத் தலை சுழல ஆரம்பித்துவிட்டது. "இந்தப் புள்ளி விவரங்கள் என்னைத் திகிலடையச் செய்கின்றன. என் பார்லி மெண்டரி காரியதரிசி இவைகளை எனக்கு விளக்கினால் தேவலை" என்று ஒரு சீட்டு அனுப்பினார். பதில் உடனே வந்தது: "புள்ளி விவரங்கள் உங்களைத் திகிலடையச் செய்கின்றனவா? நான் நம்ப மாட்டேன். எத்தனையோ பட்டாளங்கள் வந்தாலும் அவைகளை யெல்லாம் எதிர்த்து நிற்க, கனம். மந்திரியார் தயார் என்று எனக்குத் தெரியும். என்னைத் தைரியமூட்டவே இந்தச் சீட்டை அனுப்பி யிருக்கிறீர்கள் என்று எண்ணு கிறேன்" என்ற பதிலுடன், புள்ளி விவரங்களையும் விளக்கி எழுதினார் அந்தக் காரியதரிசி.

"நீங்கள் மந்திரி பதவி வகித்துச் சாதித்த காரியங்களில் எது மிகச் சிறந்தது என்று கருதுகிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

முகத்தை ஒருபுறம் திருப்பிக் கொண்டு, அழுத்தமான குரலில், அதட்டுவதைப்போல, "இந்தக் கேள்வி எனக்குப் பிடிக்கவில்லை" என்றார் விஜயலட்சுமி.

'சரிதான்; இத்துடன் எழுந்து போக வேண்டியதுதான் போலிருக்கிறது' என்று எனக்குள் நான் எண்ணிக்கொண் டேன்.

இந்தச் சமயம் ஒரு சிநேகிதியை விடை கொடுத்தனுப்பச் சென்ற அவர், சாந்த முகத்துடன் திரும்பி வந்து, "என்ன சொன்னேன்? கேள்வி பிடிக்கவில்லை யென்று! அப்படி என் சொல்லுகிறேன் என்றால், தாங்கள் ஏதோ சாதித்து விட்டதாக எண்ணுகிறவர்களா யிருந்தால், ஏதாவது சொல்ல லாம். காங்கிரஸ் மந்திரி சபை பூராவுமே ஒன்றும் சாதிக்க வில்லை, சாதிக்க முடியவில்லை என்றே என் அபிப்பிராயம். முக்கியப் பிரச்னையின் ஒரே ஓர் ஓரத்தைத் தான் அதனால் தொட முடிந்தது. ஆகையால், தான், நான் இப்படிச் சொன் னேன்" என்று சமாதானம் கூறினார்.

கேள்வி: "தங்களுடைய ராஜீய சித்தாந்தம் என்ன? காந்தியிஸிம், ஸோஷலிஸிம், கம்யூனிஸிம் என்ற ஏதாவது ஓர் **இஸிம்** உங்கள் சித்தாந்தமாகுமா?"

பதில்: "எந்த **இஸிமு**க்குள்ளும் எனது ராஜீய சித்தாந்தம் அடங்காது. எனக்கு அபேதவாதக் கொள்கைகளிலும் சமத்துவத்திலும் நம்பிக்கையுண்டு. எந்த **இஸிம்** வேண்டும் என்ற கவலையை நாம் கொள்ளுமுன், இந்திய விடுதலைக்குப் போராடுவதே இப்போது நமது முக்கியமான கடமை."

"தங்கள் சகோதரரின் அபேதவாத அபிப்பிராயங்கள் உலகப் பிரசித்தம். அவர் சொல்லுவதை யெல்லாம் தாங்கள் அங்கீகரிக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

"இல்லை" என்று அழுத்தந் திருத்தமாய்ச் சொன்ன அவர், "ஏன் அங்கீகரிக்க வேண்டும்? யார் அபிப்பிராயங்களையும்—அது மகாத்மா காந்தியேயானாலும் சரிதான்—முழுவதும் நான் அங்கீகரிக்கவில்லை. ஒவ்வொருவருக்கும் அபிப்பிராய சுதந்தரம் வேண்டும். நான் சுதந்தரமான அபிப்பிராயங்கள் உடையவள்" என்று கூறினார்.

கேள்வி: "அபேதவாதத்துக்கும் அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட காந்தீயத்துக்கும் பொருத்தமுண்டா?"

"இதற்குப் பதில். சொல்ல முடியாது" என்று அவர் சற்று நின்றார்: "இதற்குப் பதில் சொல்லுவதானால், நீண்டதொரு கட்டுரை தான் எழுத வேண்டும். நான் ஏதாவது சொல்ல, நீங்கள் ஏதாவது போட்டுக் குழப்பி விடுவீர்கள்" என்று மறுத்துவிட்டார்.

நானும் விடவில்லை: "இரண்டுக்கும் ஏதேனும் பொருத்தமுண்டா, இல்லவே யில்லையா? அதை மாத்திரம் சொல்லுங்கள்" என்று மீண்டும் கேட்டேன்.

"அவைகளுக் கிடையே சில அடிப்படையான ஒற்றுமைகள் இருக்கின்றன. இவ்வளவுதான் சொல்ல முடியும்" என்று சுருக்கமாக அவர் குறிப்பிட்டார்.

"இன்னும் ஒரே ஒரு கேள்வி: காங்கிரஸ் தீர்மானம என்னவா யிருந்தாலும் சரி; நீங்கள் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டு மென்று, உங்களைச் சேர்ந்த முறையில் மகாத்மாஜீ

ஆக்ஞாபித்தால், என்ன செய்வீர்கள்?'' என்று கடைசியாகக் கேட்டேன்.

'' உடனே செய்வேன் '' என்று, சற்றும் தயக்கமின்றிச் சட்டென்று விஜயலட்சுமி பதில் அளித்தார். மேலும் தொடர்ந்து, '' நான் ஒரு சமாதான வாதி. சகல யுத்தங்களுமே கூடாதென்று எதிர்ப்பவள். ஆகையால், அந்தக் கொள்கையின் மீது சத்தியாக்கிரகம் செய்ய என்னைக் காந்திஜீ கட்டளையிட்டால், அப்படியே செய்வேன் '' என்றார்.

'' வந்தனம் '' என்று கூறி, இதனுடன் விடைபெற்றேன்.

# டி. கே. சி.

கவிஞர்களுக்குள்ளே அபூர்வமான சிலரை வரகவிகள் என்று சொல்லுகிறோம் அல்லவா, இதே போல ரஸிகர்களுக்குள்ளே அபூர்வ சக்தி படைத்தவர்களையும் **வர ரஸிகர்** என்று குறிப்பிடலாம் என்றால், அதற்கு ஓர் உதாரண புருஷராய்க் கொள்ளத் தக்கவர். ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் கவிதைச்சுவையும் கலைச்சுவையும் அவ்வள்வு அபரிமிதமாய் உடையவர் அவர். அவரிடம் உள்ளதொரு விசேஷ சக்தி என்னவென்றால், கவிதைச் சுவையைத் தாம் ஆழ்ந்து அனுபவிப்பார்; அது மாத்திரமன்றி, தம்மைப் போலவே தம்மைச் சூழ்ந்துள்ள பிறரும் அனுபவிக்கச் செய்துவிடுவார். இது மிக எளிதுபோல் நமக்குத் தோன்றும்; ஆனால், நாம் நினைக்கிறபடி அவ்வளவு எளிதல்ல. பண்டிதர்கள், தங்கள் புலமையைக் கண்டு நாம் பிரமிக்கும்படி செய்து விடுவார்கள். ஆனால், கவியின் இதயத்தை மாத்திரம் அவர்கள் அண்டுவதில்லை; அதோடு நில்லாமல், நாமும் அதை அண்டவிடாமல் அதற்குச் சுற்றி வேலியும் போட்டுப் பந்தோபஸ்துச் செய்துவிடுவார்கள். டி. கே. சி. அவர்களோ இதற்கு நேர்மாறானவர். அதனால்தான், பல இளைஞர்கள், கலைகளுக்கு அவரே தங்களுக்கு வழிகாட்டும் தலைவர் என்றுகூட இன்று கொண்டாடுகிறார்கள்.

அவருக்கு இப்போது சுமார் 64 வயதாகிறது. இவ்வளவு வயது முதிர்ச்சியிலும், கம்பராமாயணம், தமிழ்க் கவிதை, இசை என்ற பொருள்கள் வரும்போது, குழந்தையின் உற்சாகம் அவருக்கு வந்து விடுகிறது. கம்பன் வகுப்பு நடத்த வேண்டுமா, டில்லியா யிருந்தாலும் புறப்பட்டுவிடுவார். தமிழில் அவ்வளவு பேரார்வம் நிறைந்தவர்.

அவர் பிறந்தது ஸ்ரீவில்லிபுத்தூரில், தாய்வழிப் பாட்டி வீட்டில். வளர்ந்தது இயற்கைவளம் நிறைந்த தென்காசியில். அது கவிராயர்கள் நிறைந்த ஊர். ஸ்ரீ டி. கே. சி. சின்னஞ்சிறு பிராயத்தினரா இருக்கும்போது, அந்தக் கவிராயர்கள் பாடும் குற்றாலக் குறவஞ்சியையும் பிற தமிழ்ப் பாடல்களையும் கேட்டுக் கேட்டு, கவிதைப் பண்பில் மனம் லயித்துவிட்டார்.

ஏழாம் வகுப்பு வரையில் தென்காசியில் இருந்த கலாசாலையில் படித்தார். ஆனால், சிறு வயதிலே கிடைத்த ரஸானுபவத்தால் ஏற்பட்ட பண்பாட்டை, பள்ளிக்கூடப் பாடங்களால் முற்றிலும் துடைக்க முடியவில்லை. பின்னால் திருச்சி ஸெண்ட் ஜோஸப் காலேஜில் படித்து, பின்பு சென்னைக் கிறிஸ்துவக் காலேஜில் வாசித்து, பி. ஏ. பட்டம் பெற்றார். அந்தக்காலத்திலும், தமிழ்ப் பாடல்களில் அவருக்கு விசேஷ ஆர்வம். ஆனால், இவர் விருப்பத்துடன் படிப்பது கலாசாலைப் பாடங்களில் உள்ள பாடல்களை அல்ல; எங்கேயாவது பத்திரிகைகளில் மூலை முடுக்கில் ஏதாவது பாடல் வருகிறதா என்று தேடிப்பிடித்து, அதைத்தான் படிப்பார். பள்ளிக்கூடப் பாடல்களில் புராணங்கள், சங்க இலக்கியம் இவைகளுக்கு வரும் பதவுரை, இலக்கணக் குறிப்புகள் ஆகியவற்றைக் கண்டால், இவருக்கு மிகுந்த வெறுப்பு. பத்திரிகைகளில் வரும் தனிப் பாடல்கள் என்றால், எல்லாவற்றையும் அப்படியே இவர் விழுங்கிவிட மாட்டார். நல்ல பாட்டு என்று தமக்குத் தோன்றியவைகளை மட்டிலுமே திரும்பத் திரும்பப் படிப்பார். அந்தக் காலத்தில் இவரது மனதைக் கவர்ந்த பாடல்கள் சுமார் இருபது அல்லது முப்பதுதான் இருக்கும்.

சுமார் முப்பது வயதாயிருக்கும் போதுதான் கம்பராமாயணத்தில் டி. கே. சி.க்கு முதல் முதலாக அதிகமான பற்றுதல் விழுந்தது. படிக்கத் தொடங்கினார். இந்த அனுபவத்தைப் பற்றி, அவர் சொல்கிறார்:

"முதலில் ஏதோ ஒரு படலத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினேன். சில பாகங்கள் மிக உயர்வாயிருந்தன. வேறு சில பாகங்கள் மிக மட்டமா யிருந்தன. ஏன் இப்படிப் பெருத்த வித்தியாசம் இருக்கிறது என்று ஓர் எண்ணம் உண்டாயிற்று. துணிச்சலாய் ஒரு யுக்தி செய்தேன். தள்ள வேண்டியதை யெல்லாம் தள்ளி, நல்ல பாகங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு, ஒரு படலம் பூராவையும் முறையாய்ப் படித்தேன். கதையின் கட்டுக் கோப்பு, பாட்டுக்களின் ஒழுங்கான கதி, பாவம் இவைகளெல்லாம் மேலே மேலே ஆகாயத்தை நோக்கி ஏறுவதுமாதிரி இருந்தது. கம்பரது அற்புதமான கவிதா சக்தி மனதில் பட்டுவிட்டது. ஆகவே, இதே மாதிரி பல படலங்களையும், தள்ளுவதைத் தள்ளிக் கொள்ளுவதைக் கொண்டு, படித்தபோது, பொன் மயமானதொரு கோபுரம் போலக் கம்பராமாயணம் பிரகாசிக்கத் தொடங்கி

யது. ஆனால், இந்தக் கோபுரத்தில் அநேக பாகங்கள் இடிந்தும் தகர்ந்தும் போயிற்றென்றும் தெரியவந்தது. காரணம், பல பாடல்கள் சிதைந்தும் விட்டுப் போனதும்தான்—இப்படியாகக் கம்பரை இனங்கண்ட பிறகு, கம்பரை **நாம்** கற்றோமென்று சொல்ல முடியாது. **கம்பரே** தனித்த முறையில், தனித்த குர லோடு நம்மிடம் பேசுகிறார் என்ற உணர்ச்சி வந்தது.''

இவ்வாறு தமிழ்க் கவிதைச் சுவையில்—முக்கியமாகக் கம்பனிடம்—வர வர அதிகமாய் ஈடுபட்ட டி. கே. சி. அவர்களுக்கு, சென்னையில் பல நண்பர்கள் ஏற்பட்டதற்கு, ஒரு சம்பவம்தான் காரணமாயிற்று. சுமார் பதினெட்டு வருஷங்களுக்கு முன்னே நடந்தது அது. அப்போது ஸ்ரீ டி.கே.சி. சென்னைச் சட்டசபையில் ஓர் அங்கத்தினராக இருந்தார். அதாவது எம். எல். ஸி. தமிழ் இலக்கியச் சங்கத்தில் கம்பன் கவிதையைப் பற்றி ஒரு பிரசங்கம். மாஜி ஹைக்கோர்ட் ஜட்ஜி ஸ்ரீ வி. வி. சீனிவாசையங்கார் அதற்குத் தலைவர். ஸ்ரீ டி. கே. சி. யின் பிரசங்கம் முடிந்து, ஸ்ரீ. ஐயங்கார் வந்தனம் செலுத்தினர். அவர் கூறிய வார்த்தைகள் இவைதான் : '' கவிதை என்பது நம் மனத்திலே உணர வேண்டிய ஒரு விஷயமாகும். அதைப் பிறருக்கு நாம் உணர்த்த முடியாது. ஆனால், இன்றோ நம் முதலியாரவர்கள், உணர்த்த முடியாததை நமக்கு உணர்த்தி வெற்றியும் பெற்று விட்டார். இன்னும் ஒரு விஷயத்தையும் அவர் சாதித்துவிட்டார். ஆங்கிலக் கல்வியும் அரசியல் விவகாரங்களும் நம்மைச் சூழ்ந்திருந்தும்கூட, அவைகளையெல்லாம் மீறி நாம் நமது புராதனக் கலைச் செல்வத்தை ரஸிக்க முடியும்—அதன் அண்டாத ஆழத்தை எட்ட முடியும்—அதைப் பிறருக்குப் படும்படி எடுத்துச் சொல்லவும் முடியும் என்று ஸ்ரீ டி. கே. சி. நிரூபித்துவிட்டார்.''

இந்தப் பிரசங்கத்தி லிருந்து, சென்னையில் பல நண்பர்களுக்கு ஸ்ரீ டி. கே. சி. யிடம் தனி மதிப்பு ஏற்பட்டது. இக் காலத்தில்தான் ஹிந்து மத தர்ம பரிபாலன போர்டின் கமிஷனராகி, சில வருஷ காலம் அதை அவர் திறமையுடன் நிர்வகித்தார். பதவி ஒருபுறம் இருந்தாலும், இலக்கிய ரஸானுபவத்தை அவர் விடுவதேயில்லை. மயிலாப்பூரில் வாரத்துக் கொருமுறை லெக்ஸிகன் ஆசிரியர் ஸ்ரீ. வையாபுரிப் பிள்ளை, புரொபஸர் கே. ஸ்வாமிநாதன், ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், ஸ்ரீ பி. ஸ்ரீ., சில எழுத்தாளர்கள், பத்திராசிரியர்கள், மற்றும் பிரமுகர்கள்

எல்லோரும் கூடுவார்கள். ஸ்ரீ டி. கே. சி. அவர்கள் விளக்கும் கம்பராமாயணச் சுவையை யாவரும் பருகி மகிழ்வார்கள். இந்தக் கூட்டங்களுக்கு நானும் ஒன்றிரு முறைகள் சென்றிருக்கிறேன். முதல் முதலாக ஸ்ரீ டி. கே. சி. அவர்களை நான் கண்டதும் அங்கேதான்.

இந்தச் சம்பாஷணைக்காக, அவரை நான் கண்டபோது, அந்த நாட்கள் எனக்கு ஞாபகம் வராமல் இல்லை. அவரிடம் இலக்கிய உற்சாகம் சம்பந்தப்பட்ட மட்டில் எவ்வித மாறுதலையும் காணவில்லை. ஆனால், களைப்போடிருந்தார். எப்போதுமே சின்னஞ் சிறு குழந்தைபோல் யாரிடமும் சரளமாய், அன்புடன் பேசும் வழக்கமுடையவர். அவருடன் சுமார் நாற்பது நிமிஷம் வரையில் இம்முறை நான் சம்பாஷித்துக் கொண்டிருந்தேன். அதற்கு முந்திய ஆறேழு தினங்கள் இலக்கிய வகுப்பு நடத்தியது, பிரயாணம், வயது இவைகளின் பலனான சோர்வும் அலுப்பும் நிறைந்திருந்தும், நான் கொடுத்த சிரமத்தைப் பாராட்டாமல், துளி முகச்சுளிப்பும் இல்லாமல், அவர் என்னுடன் பிரியமாய்ப் பேசிக் கொண்டிருந்தார். ஆனால், இடையிடையே "போதும் அல்லவா?", "போதும் அல்லவா?" என்று மட்டும் கேட்டுக் கொண்டிருந்தார். நானும் "போதும்; இன்னும் ஒரே ஒரு கேள்விதான்" என்று மீண்டும் மீண்டும் சொல்லி, வெகுநேரம் இழுத்துவிட்டேன்.

"கம்பனைத் தவிர, பழைய இலக்கியங்களில் வேறு கவிகளையும் நீங்கள் ரசிப்பதுண்டல்லவா? அவைகளுக்குள்ளே எவை சிறந்தவை என்று நீங்கள் கருதுகிறீர்கள்?" என்று அவரை நான் கேட்டேன்.

"அதுவா? அது, பழைய உரையாசிரியர்களின் மேற்கோள் கவிகள் தான்" என்று தொடங்கினார்: "உரையாசிரியர்களின் மேற்கோள் கவிகள் சிலவற்றை அங்கங்கே பார்க்க நேர்ந்தது. அதிலிருந்து பூர்வமான கவிப்பண்பு என்ன என்று கண்டேன். அதன் மேல், உரையாசிரியர்களின் மேற்கோற்களான நல்ல கவிகளை யெல்லாம் தேடுவது என் வேலையாயிற்று. நான் பழைய கவிகளின் அற்புதத்தைக் கண்டது தொகை நூல்களில் அல்ல; இந்த உதிரிப் பாடல்களில் தான்" என்று கூறிச் சற்று நின்றார்.

பிறகு, மேலும் தொடர்ந்து கூறியதாவது: "நான் இந்த மாதிரி பாடல்களைப் பாராட்டிய போது, என்ன சொன்னார்கள்

தெரியுமா? இவருக்கு ரொம்பப் பழைய பாட்டாயிருந்தால் தான் பிடிக்கும் போல் இருக்கிறது என்றார்கள். பின்னல், பாரதியார், ஸ்ரீ. தேசிகவிநாயகம் பிள்ளை ஆகியவர்களின் பாட்டுக்களை நான் வியந்த போது, 'ஓஹோ! இவருக்கு ரொம்ப எளிய பாட்டுக்களா யிருந்தால்தான் பிடிக்கின்றன' என்று சொன்னார்கள்! கவிதைப் பண்புதான் எனக்கு முக்கியமே தவிர, பழையது புதியது என்ற வித்தியாசங்க ளெல்லாம் கிடையாது.''

கலையாவது, மண்ணாங்கட்டியாவது! அவற்றால், என்ன ஐயா, பலன்?—இவ்வாறு கேட்போர் உண்டல்லவா? இது பற்றி, ஸ்ரீ டி. கே. சி. யின் அபிப்பிராயத்தை அறிய விரும்பி னேன். என்றாலும், கொஞ்சம் நாஸூக்காகவே கேள்வியைப் போட்டேன்: "காவியங்களை மனிதன் அனுபவிப்பதற்கு அந்த அனுபவமே பலனா? வேறு பலன்களும் உண்டா?" என்பது என் கேள்வி.

அவர் சொன்னார்: "உண்மை எப்போதுமே பிரயோசனம் தான். உண்மை அல்லாதது பிரயோசனமே இல்லை. ஒருவ ருடைய இதயத்தில் உண்டாகிற உண்மையைக் காண்பதில், நமக்கு—மனுஷ்யனுக்கு—ஓர் அபார ஆசை. அதைத் தெரிந்த மாத்திரத்திலே இன்பம் உண்டாகிறது. கவி, சித்திரம், இசை முதலிய கலைகளில் நாம் காண்பது என்ன? கலைஞனது மனத்தில் உண்மையாக நிகழ்ந்த உணர்ச்சியையே காண்கிறோம். தன் மனத்தில் நிகழும் உண்மையான உணர்ச்சியை வெளியிடுவதில், கலைஞன் ஆத்திரங் கொள்ளுகிறான்; பாடு படுகிறான்; சில வேளை வெற்றியும் பெற்று விடுகிறான்! அவன் உணர்ந்த உணர்ச்சி, வெளியிடக் கொண்ட ஆத்திரம், பாடு பட்ட சிரமம், அடைந்த வெற்றி இவைகளை நாமும் ஒரு கவியிலோ, சித்திரத்திலோ, இசையிலோ உணர்ந்து விடுகிறோம். இது ஒன்றுதான் கலைஞ னுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம். இந்த அனுபவ ஒற்றுமை யைத் தவிர்த்து, வேறு விஷயங்களைக் கருதுவ தென்றால், ஒரு பெண்ணை விரும்பும் இளைஞன் ஒருவன் அவளுடைய அழகிய உருவத்தில் ஈடுபடாதபடி, தசை மாமிசங்களில் (நரமாமிச பட்சணியைப்போல்) ஈடுபட்ட கணக்குத்தான்.''

இப்படிச் சொல்லி, "என்ன, நான் சொல்வது புரிகிறதா? Literary Form (இலக்கிய உருவம்) அவசியம் என்று நான்

அடிக்கடி வற்புறுத்துவது இதைத்தான்'' என்று மேலும் விளக்கினர்.

இன்று தமிழ் நாட்டில் பரத நாட்டியக் கலைக்குச் சிறிது புத்துயிர் வந்திருக்கிறது என்றால், அதற்கு ஓரளவு ஸ்ரீ. டி. கே. சி. யும் காரணம் ஆவார். மயிலாப்பூரில் அவருடைய வீட்டில் தனிப்பட்ட நண்பர்களின் முன்னிலையில் பல தடவை பரத நாட்டியம் நடப்பதுண்டு. நாட்டியம் சம்பந்தமாகச் சில அபிநயபாவங்களைக் குறித்து அவர் எடுத்துச் சொல்லுவார். அவருடைய யோசனைகளைப் பின்பற்றி, அதனால் பயன் அடைந்தவர்களில், காலஞ்சென்ற வீணை தனம்மாளின் பேத்தியான ஸ்ரீமதி பாலசரஸ்வதியை முக்கியமாய்க் குறிப்பிடலாம்.

"பரத நாட்டியத்தை மேலும் வளர்க்க, நீங்கள் எவையேனும் சில யோசனைகள் கூற முடியுமா?'' என்று ஸ்ரீ டி. கே. சி. யை வினவினேன்.

"பரத நாட்டியத்தைத் தமிழர்கள் ஓர் இதிகாசமாக வளர்த்து வைத்திருக்கிறார்கள்; அது மிக அற்புதமானது'' என்று பெருமையோடு குறிப்பிட்ட அவர், மேலும் சொன்னதாவது: "பரத நாட்டியக் கலையில் நாலா பக்கமும் விரித்து வீசிப் பரந்த கொடிகள் அவ்வளவையும் முதலிலேயே குழந்தைகளுக்கு இந்தக் காலத்தில் சொல்லிக் கொடுக்கத் துவக்கிவிடுகிறார்கள். படிப்படியாக ஏறினால், இமயமலைச் சிகரத்தையும் எட்டிப் பிடித்துவிடலாம். அப்படிச் செய்தால், பரத நாட்டியத்தின் எல்லாக் கிளைகளுக்குள்ளும் போய்வர முடியும். ஆரம்பத்தில் குழந்தைகளுக்குச் சிறுசிறு நடனங்களையே கற்பித்து கற்பிக்கும்போதே ஆனந்தத்தோடு ஆடுகின்றனவா என்று பார்த்துப் பார்த்து மெள்ள மெள்ள மேலே போக வேண்டும். ஆனந்தத்தில் பிறந்த கலையைச் சித்திரவதைக் கருவியாகச் செய்துவிட்டால், பாத்திரத்துக்கு ஆனந்தம் எங்கே வரப்போகிறது? பாத்திரத்துக்குள் ஆனந்தம் இருந்தால் அல்லவா, ஆனந்த வெளியீடாக அது உதிக்கும்; பார்ப்பவர்களுக்கு அந்த ஆனந்தத்தை ஊட்டும்?''

தமிழிசை இயக்கத்தில் ஸ்ரீ டி. கே. சி. பெரிதும் ஈடுபட்டவர் அல்லவா? அந்த இயக்கத்தின் போக்கு எப்படி? அதன் முன்னேற்றத்தின் கதி அவருக்குத் திருப்தி அளிக்கிறதா?-இதைப் பற்றிக் கேட்டேன்.

அவர் சொன்னார் : "சாமான்யமாக ஜனங்களுக்கு இதயத்தில் இசை ஒட்டுகிறதென்றால், பாடல்களோடு சேர்ந்துதான் ஒட்டும். நல்ல உணர்ச்சியோடு கூடிய தமிழ்ப் பாடல்களைப் பாவத்தோடு பாடினால், எந்தத் தமிழனையும் அது கவர்ந்துவிடும். இதற்கு எவனும் விலக்கல்ல என்றே தோன்றுகிறது. நீங்கள் தான் ஒரு தடவை மயிலாப்பூரில் என் வீட்டுக்கு வந்தீர்களே; அப்போது இதைக் கண்டிருப்பீர்களே! உணர்ச்சிப் பாடல்களைக் குழந்தைகள் உள்பட அனைவரும் கேட்டுக் கேட்டு வந்தால், பத்து வருஷத்தில் தமிழ்ப் பாட்டுக்களை எல்லோருமே முனங்கவாவது முடியும். அந்நிலையில்தான் தமிழிசை இயக்கம் பூரண வெற்றி பெறும். இப்போது இயக்கம் ஓரளவு திருப்திகரமாகவே இருக்கிறது."

ராஜாஜிக்கு ஸ்ரீ டி. கே. சி. நெருங்கிய நண்பர். தாமே ராஜீயத்தில் அழுத்தமான அபிப்பிராயங்களும் உடையவர். காந்திஜீ ஓர் உணர்ச்சிக் களஞ்சியம் என்பது ஸ்ரீ டி. கே. சி. யின் கருத்து. இவ்வாறு அரசியலையும் தலைவர்களையும் பற்றிச் சொந்த முறையில் திட்டமான கருத்துக்கள் அவருக்கு உண்டானாலும், அரசியல் இயக்கத்தில் தீவிரமாய்க் கலந்துகொள்ள அவருக்கு விருப்பம் கிடையாது; என்றாலும் மனித சமூகத்தின் வருங் காலத்தைப் பற்றிய பொதுலட்சிய மொன்று அவருக்கு உண்டு.

அவர் சொன்னார் : "ஆதிகாலத்தில் தேசங்கள் துண்டு துண்டாய் நின்றன. ஆசியாவானாலும் சரி, ஐரோப்பாவானாலும் சரி, இப்போது துண்டு துண்டாய்ப் பிரிந்து நிற்பதற்கு வழியில்லை. உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் நடந்த ஒரு விஷயத்திலே, உலகம் முழுவதுமே சேர்ந்து கொள்ளுகிறது. அப்படி உலகம் கலந்து கொள்ளக்கூடாது என்று யார் சொன்னாலும் அது கலக்காமல் நிற்கப் போவதில்லை. வருங்காலத்தில் எந்தத் தேசமானாலும், இதர தேசங்கள் எல்லாவற்றோடும் கலந்துகொள்ளும் நிலைமையில்தான், அதன் அதன் வியாபாரம், சமுதாய இயல், சமய இயல் எல்லாம் அமையும். உலக சமஷ்டி என்னும் அரசியல் ஒரு நாள் வந்தே தீரும். தற்காலம் எல்லாரும் அதற்கு இடையூறுதான் செய்து கொண்டிருக்கிறார்கள்."

இத்துடன் ஏறக் குறைய என் கேள்விகள் முடிந்தன. விடை பெறும் சமயம்.

"இந்தாருங்கள். இதைக் குறித்துக் கொள்ளுங்கள்" என்று, ஏதோ மறந்து விட்டதை ஞாபகப்படுத்திக் கொண்டவர் போல், பின்வரும் விஷயத்தைக் கூறினர்: "தமிழ் நாட்டுக்கு நிலையாய் உள்ள செல்வங்களாகப் பல கோவில்களும் கோபுரங்களும் இருக்கின்றன. அவைகள் தங்களிடம் பொதிந்து வைத்துள்ள பண்பாடு மிக அபூர்வமானது. ஆயிரக் கணக்கான வருஷங்களாக வந்த பண்பாடுகள் கல்லுகளுக்குள்ளே, ஊறிக் கிடக்கின்றன. நம்முடைய கடமை, அத்தப் பண்பாட்டுச் செல்வங்களை (**Culture**), அந்தக் கல்லுகளுக்குள்ளிருந்து பிழிந்தெடுத்துப் பருக வேண்டியதுதான்."

செல்லரித்த மத சம்பிரதாயங்களின் சிறைகளாகக் கோயில்களை நாம் மதியாமல், கலைச் செல்வப் பொக்கிஷமாகக் கண்டு அனுபவிக்க வேண்டும் என்பதே அவருடைய கருத்து. இந்த முறையில், ஆலய நிர்வாகிகளும் தொண்டு செய்தால், எவ்வளவு மேலாயிருக்கும்!

# சுத்தானந்த பாரதியார்

மகா பாரதத்தை வியாச பகவான் என்ற ஒரே ஆசாமி எழுதி யிருக்க முடியாது என்று ஒரு கட்சி. ஏன் முடியாதென்ருல், எத்தனை கதைகள், எத்தனை வர்ணனைகள், எத்தனை கருத்துக்கள்—இந்த அளவிடற்கரிய பெருங் கற்பனைக் கடலை ஒரே மனிதன் எப்படிச் சிருஷ்டித்திருக்க முடியும் என்று அவர்கள் சொல்வார்கள். அவர்களை மடக்க ஓர் எதிர் வாதம் வேண்டுமானல், சுவாமி சுத்தானந்தரைத்தான் நான் உதாரணங் குறிப்பிடுவேன்.

சுவாமிக்கு 55-வயதுக்கு மேல் இராது. இது வரையில், 500 நூல்கள் வரை எழுதி யிருக்கிருர்; 20 ஆயிரம் கவிகள் புனைந்திருக்கிருர். அவருடைய நூல்களில் ஆங்கிலத்தில் இருப்பவை ஏறக்குறைய 30 இருக்கும். பிரஞ்சு பாஷையில் பல கவிதைகள் செய்திருக்கிருர்; இரண்டு வசன நூல்கள் வரைந்திருக்கிருர். இந்தியில் இரண்டு மூன்று புத்தகங்கள் எழுதி யிருக்கிருர். தெலுங்கில் இரண்டு மொழிபெயர்ப்பு நூல்கள் ஆக்கி யிருக்கிருர். பற்பல பத்திரிகைகளுக்கு நூற்றுக்கணக்கான கட்டுரைகள், கவிகள் வழங்கி யிருக்கிருர். இன்னும் கவி யெழுதுகிருர்.

தாய் மொழியான தமிழையன்றி, ஆங்கிலம், பிரஞ்சு, இந்தி, தெலுங்கு இந்தப் பாஷைகளும் அவருக்கு நன்ருக வரும் வங்கம், மலையாளம், கன்னடம், லத்தீன் இவைகளைப் புரிந்து கொள்ளுவார். உருது பயின்ருர். தாந்தேயைப் படிக்க, இதாலி மொழியையும் அவர் சிறிது எட்டிப் பார்த்ததுண்டு.

"எவ்வளவு பாஷைகளைக் கற்ருலு மென்ன? தாய்மொழி தான் சமயத்துக்கு உதவும்; மற்றவை மறந்து போகும். அடுத்தபடியாக, தாய்ப்பாலுடன் ஊட்டிய ஆங்கிலமும் கொஞ்சம் உதவும். எனது பாஷை நாக்கின் பாஷையல்ல. அது இருதய பாஷை" என்று அவர் சொல்லுகிருர்.

இப்படிச் சரக்கொன்றை போல், புத்தக மலர்களை ஓயாமல் உதிர்த்து நம்மைப் பிரமிக்கச் செய்யும் சுவாமி சுத்தானந்தர் வீர மறவர் விளங்கும் சிவகங்கையில் பிறந்தார். மதுரையிலும்

சிவகங்கையிலும் வளர்ந்தார். பெற்ருேர் சிவகங்கை ஜமீனில் ஒரு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தந்தை ஜடாதரர்; தாய் காமாக்ஷியம்மை.

சுத்தானந்தரின் பாலியப் பருவம், கதைகளிலே வளர்ந்தது என்று சொல்லலாம். பாகவதம் முதலிய புராணக் கதைகளை யும் கர்ண பரம்பரைக் கதைகளையும் இவருடைய பாட்டியும் தாயாரும் இவருக்குச் சொல்லுவார்கள். வேதாந்தப் பாடல் களையும் பாடுவார்கள். சுத்தானந்தரின் மனம் அவைகளிலே லயித்தது. கடவுளன்பு, தமிழன்பு, நாட்டன்பு இந்த மூன்றும் சிறு வயதிலேயே அவருக்கு மிகுந்தன.

வயது ஆறிருக்கும். இவருடைய தாயின் சகோதரரான மாமன் ஒரு லட்சாதிபதி. புத்திரபாக்கிய மில்லாதவர். சுத்தா னந்தரைத் தத்து எடுக்க, அவர் விரும்பினர். தமது செல்வ அறைக்கு, சிறுவனை இரகசியமாய் அழைத்துச் சென்ருர். மோகராக்கள், செடிப் பவுன்கள், பொன் மணி நகைகள், பை பையாகப் பணம்—இந்தக் குவியலைச் சிறுவனுக்கு முன் பரப்பினர்.

"செல்லம்!" என்று அன்போடு சிறுவனை மாமன் அழைத்தார். (செல்லம் என்பது தான் சுத்தானந்தரின் வீட்டுப் பெயர்.) "இதெல்லாம் உனக்குத்தான்" என்று சிறுவனுக்கு ஆசை காட்டினர்.

சிறுவன்: "எனக் கெதற்கு?"

மாமன்: "எனக்குப் பிள்ளையாக இரு. இத்தனையும் உன்னையே சேரும். ஐ. ஸி. எஸ். வரையில் உன்னைப் படிக்க வைக்கிறேன்."

சிறுவனுக்கு இது மிக வெறுப்பாக இருந்தது. மாமாவின் விபரீத யோசனைக்குக் காரணமென்ன? பணத் திமிர்தானே? சிறுவன் ஒரு யுக்தி செய்தான். இந்தப் பணத்தை யெல்லாம் வாரி யெடுத்துத் தெருவிலே கொண்டுபோய்ப் பிச்சைக்காரர் களுக்கு இறைத்து விட்டால், மாமா நல்ல புத்தி அடைவார் என்று அவனுக்குத் தோன்றியது.

"மாமா! நான் உன் பிள்ளையாக மாட்டேன். என் அம்மா அதோ கோயிலில் இருக்கிருள். அவள் லோகநாயகி.

அவளுடைய குழந்தைகள் வாசலிலே, பசி, குளிர் என்று அலறுகின்றனவே. நீ ஏன் இதை யெல்லாம் இப்படிப் பூட்டி வைத்திருக்கிறாய்? இவற்றைக் கொண்டுபோய் அவர்களுக்குப் போடுவோம், வா'' என்று சொல்லிய சிறுவன், பவுன்களை அள்ளத் தொடங்கினான்.

மாமா திடுக்கிட்டு, சிறுவனை வெளியே தள்ளி, கதவைச் சாத்திக் கெட்டியாகப் பூட்டி விட்டார்.

சுத்தானந்தருக்குப் பூணூல் போட்டார்கள். மந்திரங் களுக்கு என்ன அர்த்தம் என்று புரோகிதரைச் சிறுவன் கேட்டான். ''போடா அதிகப்பிரசங்கி! அர்த்த மெல்லாம் சொல்லக்கூடாது'' என்று அவர் மறுத்துவிட்டார்.

சிறுவனுக்குத் திருப்தி யில்லை. ஒரு பெரியவரிடம் சென்று அர்த்தங் கேட்டுக் கொண்டான். அத்தனை சந்தியாவந்தன மந்திரங்களையும் தமிழ்ப் பாட்டுகளாக மொழி பெயர்த்தான். வடமொழியை விட்டு, தமிழிலேயே சந்தியா வந்தனங்களைத் தான் செய்ததுமன்றி, பிற சிறுவர்களையும் அப்படியே பண்ணும் படி தயார் செய்துவிட்டான்! அந்தக் காலத்திலேயே சுத்தா னந்தருக்குத் தமிழிலே அவ்வளவு பற்றுதல்!

பள்ளிச் சிறுவனாக இருக்கையிலேயே, சுத்தானந்தருக்குத் தேச வெறியும் பிடித்துவிட்டது. நடு வகுப்பில் 'வந்தேமாதர' கோஷம் செய்வார். பள்ளிச் சுவர்களி லெல்லாம் 'வந்தே மாதரம்' என்றெழுதி விடுவார். உபாத்தியாயர் அடித்தால் ''வந்தேமாதரம்'' ''வந்தேமாதரம்'' என்று கத்திக்கொண்டே, அடிகளைத் தாங்கிக் கொள்ளுவார். ராஜீயக் கூட்டங்களுக்கு நோட்டீஸ் கொடுக்கச் சென்று விடுவார். சரித்திரப் பரீட்சை யில் சிப்பாய்க் கலகத்தைப் பற்றி வந்த கேள்விக்குப் பதில் அளிக்கையில். ''சுதந்தர யுத்தம்'' என்று இவர் அதை வர்ணித்து விட்டார்.

காட்டுப் புத்தூர் ஹைஸ்கூலில், சுத்தானந்தர் ஆங்கிலம், பூகோளம், சாரணம், ஸயன்ஸ் முதலியன சொல்லிக்கொடுத் தார். ஒரு நாள் மாணவருக்குத் தீக்குச்சி செய்து காட்ட மருந்து அரைத்தார். பாஸ்பரஸும் பொட்டிலுப்பும் சேர்த்து அரைக்கும் போது, டபார் என்று வெடிக்க, கல்வம் கையை இடித்துக் கீழே விழுந்தது. தப்பியது தெய்வச் செயல்.

கையில் காயம் பட்டது. அந்தச் சம்பவம் இவர் வாழ்வை உள்ளே திருப்பி விட்டது. சர்க்கார் உத்தியோகத்தில் தாம் இருக்கும் நினைப்பே யில்லாமல், கரூர், திருச்சி முதலான இடங்களில் இவர் தேச சேவை செய்து வந்தார். புகார் கிளம்பியது; ஒற்றரும் ஏற்பட்டார்கள். 1920-ஆம் ஆூ ஒத்துழையாமை, கிலாபத் இயக்கங்களில் சேர்ந்தார். உபாத்தியாயர் வேலையையும் விட்டு விட்டார். அப்போதே ஏறக்குறையத் துறவு மார்க்கத்தைக் கடைப்பிடித்து விட்டார்.

உத்தியோகத்தை விட்டதும், இவர் சில காலம் தேவகோட்டையில் ஒரு தேசியக் கலாசாலையில் 50 ரூ. சம்பளத்தில் வேலை பார்த்தார். பிறகு கிராம சேவை புரிந்தார். பழம், காய், கடலை, பால் முதலியவற்றையே உண்டு இயற்கை வாழ்வு வாழ்ந்தார். **'இயற்கை'** என்னுமொரு பத்திரிகையும் நடத்தினர்.

ஸ்ரீ வ. வெ. சு. ஐயர் சேரமாதேவி குருகுலம் ஆரம்பித்ததும், சுத்தானந்தர் அங்கே போய்ச் சேர்ந்தார். ஐயரின் **'பால பாரதி'** பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பில் பெரும் பகுதியையும் சுவாமி சுத்தானந்தரே மேற் கொண்டார். ஐயருக்குச் சுத்தானந்தரிடம் பெரும் மதிப்பும் பற்றுதலும் இருந்து வந்தன: ஐயருக்குப் பிறகு இவரே 'பாலபாரதி'யை நடத்தினர்.

ஐயர் காலமானதும், தஞ்சை **'சமரஸ போதினி'**யிலிருந்து, சுத்தானந்தருக்கு அழைப்பு வந்தது. **'சமரஸ போதினி'** வாரமிரு முறையின் ஆசிரியப் பொறுப்பைச் சுத்தானந்தர் ஏற்றார். சுத்தானந்தர் வரு முன் ஒரு மாத காலம் நானே அதன் ஆசிரியப் பொறுப்பேற்றிருந்ததுடன், அவர் வந்தது முதல் அவருக்குத் துணை நின்று நானும் அதில் பணி புரிந்தேன். அப்போதுதான் சுத்தானந்தரின் நெருங்கிய பழக்கம் எனக்கு ஏற்பட்டது. அவருடைய வாழ்க்கை முறைகள், நடவடிக்கைகள் எல்லாம் அப்போதே மிகவும் விசித்திரமாய்த் தான் இருந்தன. சுமார் பதினைந்து, பதினாறு வருஷங்களுக்குப் பின்பு இப்போது அவரைப் புதுவையில் அரவிந்தர் ஆசிரமத்தில் கண்டபோது, அன்றுபோலவே இன்றும் அவர் இருக்கக் கண்டேன்.

உபாத்தியாயர் வேலை பார்த்த காலத்தில் மிகவும் செட்டாக வாழ்ந்து, சுமார் 5000 ரூபாய் வரையில் சுத்தானந்தர் சேர்த்

திருந்தார். அதில் மிஞ்சிய சகல பணத்தையும் புதுவை அரவிந்த நிலயத்திலே சமர்ப்பித்து, தாமும் யோகத்தில் ஆழ்ந்துவிட்டார்.

அந்த நிலயத்தில் உள்ள ஸாதகர் ஒருவரை—முக்கியமாய்ச் சுத்தானந்தர் போன்ற ஒருவரை—போய்க் கண்டு வருவதென்ருல், சுலபமான காரியமன்று. உத்திரவின்றி அரவிந்த நிலயத்துக்குள் அந்நியர் எவரும் பிரவேசிக்க முடியாது.

அரவிந்த நிலயத்துக்குள் புகுந்ததும், முதல் முதலில் என்னை ஒரு ஸாதகர் விசாரிக்கலானர்.

"தங்களுக்கு என்ன வேண்டும்?"

"நிலயத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும்."

"சுற்றிப் பார்க்க இங்கே ஒன்றும் கிடையாது. நிலயத்தைப்பற்றி என்ன தகவல்கள் வேண்டுமோ, கேளுங்கள். சொல்லுகிறேன்."

"கேள்விகள் ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை. நீங்களாக என்ன தகவல்களைக் கூறினலும் சந்தோஷமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்."

"திட்டமான கேள்விகள் கேட்டால்தான் பதில் சொல்லுவேன். நானக ஒரு தகவலும் சொல்ல முடியாது."

இந்த விவாதத்தை இதற்கு மேல் வளர்த்த, எனக்கு இஷ்டமில்லை. "நிலயத்தின் லட்சிய மென்ன? அது, இது" என்று, சிரமப்பட்டுச் சில கேள்விகள் கேட்டேன்.

தெய்விகத்தை அடைவதே நிலய லட்சியமாம். அரவிந்தரே நிலய லட்சியத்தை உபதேசிக்கும் மகா குரு. நிலயத்தின் சகல நிர்வாகங்களும் அன்னையாலேயே நடத்தப் படுகின்றன. அரவிந்தர் மாடியறை ஒன்றில் ஏகாந்தமாய் வசிக்கிருர். வருஷத்தில் மூன்று நாள்தான் அவர் தரிசனம் அளிக்கிருர். ஆசிரம ஸாதகர்களும் கூட அவரை மற்ற நாட்களில் பார்க்க முடியாது. அவருடன் இவர்கள் கடிதப் போக்குவரத்து மாத்திரம் நடத்தலாம்.

ஆசிரமத்தில் சுமார் 250 ஸாதகர்கள் இருக்கிருர்கள். ஸாதகர்களுக்குச் சொந்தச் சொத்து எதுவும் கிடையாது. தங்கள்

சொத்தையெல்லாம் நிலயத்துக்குச் சமர்ப்பித்துவிட்டு, நிலயத்திலே எல்லாரும் ஒரே பக்த ஸங்கமாக வாழ்கிறார்கள்.

இந்தத் தகவல்களை எனக்குச் சொல்லியபின், ஸாதகர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை; என்னை அழைத்துக் கொண்டு, நிலயத்தைச் சுற்றிக் காட்டினார். நிலயவாசிகள் அனைவரும் நல்ல கல்விமான்கள். நிலயம் மிகவும் சுத்தமாயிருக்கிறது. உள்ளே பல செடிகொடிகள், பூக்கள் மலர்ந்து ரம்யமாயிருக்கின்றன. சந்தடியே கிடையாது. தேனீக்களைப்போல், நிலயவாசிகள் சுறுசுறுப்புடன் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கத்தில், நிலய சம்பந்தமான கொல்லு, தச்சு வேலைகள் நடக்கின்றன; இன்னொருபுறம் வீணாய்ப்போன காகிதம், துணித்துண்டு இவைகளை உபயோகமுள்ள சாமான்களாகச் செய்கிறார்கள்; மற்றொருபுறம் புத்தகசாலை; வேறோரிடத்தில் நிதிச்சாலை; இன்னொரு திசையில் பண்டசாலை—அது அதை அவரவர் மிகப் பொறுப்புடன் கவனிக்கிறார்கள். பூச்செடிகளை வளர்ப்பவரும் சமையல் செய்பவரும் ஸாதகர்கள்தானும். சாப்பாடு பொதுச் சாப்பாடு. வாழ்வு, தனக்கென்ற கவலையில்லாத வாழ்வு. இதுதான் அரவிந்த நிலயம். இந்த அரவிந்த நிலயத்தில் ஒரு தவயோகியாக வாழ்கிறார் சுவாமி சுத்தானந்தர்.

மாலை எட்டு மணிக்கு நிலயத்தில் பிரார்த்தனை. உள் ஸாதகர்கள், வெளி ஸாதகர்கள் அனைவரும் அச்சமயம் ஆசிரமத்தில் கூடுகிறார்கள். தியானம் முடிந்தபின், சுவாமி சுத்தானந்தரைக் காண உள்ளே சென்றேன். தனியறையில் ஓர் உயர்ந்த பீடத்தில் மான்தோல் ஆசனமிட்டு, சுவாமி அமர்ந்திருந்தார். எதிரே ஒரு திண்டில் நான் உட்கார்ந்தேன். சுவாமி மௌன விரதம் அனுஷ்டிப்பதால், கடிதத்திலேயே என் கேள்விகளும் அவருடைய பதில்களும் நிகழ்ந்தன.

சுவாமிகள் பற்பல பத்திரிகைளில் சேவை புரிந்திருக்கிறார். 'பாலபாரதி', 'இயற்கை', 'சமரஸபோதினி', 'சுயராஜ்யா', 'தொழிற்கல்வி' என்ற தமிழ்ப் பத்திரிகைகளிலும், 'பிரம்மசரியம்' என்ற ஆங்கிலப் பத்திரிகைளிலும் அவர் சேவை புரிந்திருக்கிறார்.

தமது பத்திரிகைப் பணி சம்பந்தமாகக் குறிப்பிடுகையில் "பேனாவைக் கொண்டு பிழைக்க முடியாத காலம் அது. எனக்

குப் பணக்கவலை யில்லாததால்தான் பிழைத்தேன்'' என்று சுவாமி குறிப்பிடுகிறார். ''இப்போதுள்ள பத்திரிகைகளில் சுதேசமித்திரன், ஆனந்தவிகடன், கலைமகள், ஹிந்துஸ்தான், சக்தி, ஹநுமான், கல்கி—இவை மிகவும் கவர்ச்சியா யிருக்கின்றன. சக்தி பல அம்சங்களுடன் கூடி ரஸமா யிருக்கிறது. **தற்போதைக்குத் தமிழ்நாட்டு 'மாடர்ன் ரிவ்யூ' எனத் தக்கது 'சக்தி' ஒன்றுதான்''** என்று அவர் சொல்லுகிறார்.

சுவாமிகள் துறவுபூண்டு பெற்ற ஆத்மானுபவத்தையும் புதுச்சேரி சேர்ந்த வரலாற்றையும் பற்றி விசாரித்தேன்.

''ஸ்ரீ அரவிந்தர் என்றால் எனக்குக் கிருஷ்ண பரமாத்மா தான்'' என்கிறார் சுவாமிகள். யோக சித்திக்காக, பல இடங்களில் சுவாமிகள் சாதனம் செய்திருக்கிறார். பல பெரியார்களிடம் யோக ரகசியம் கற்றார். ஞான சாதனம் செய்யும் நாட்களில், பகவான் ரமண மகரிஷிகளின் திருவுருவம் சுவாமிகளை வசீகரித்ததாம். திருவண்ணாமலை சென்று விருபாட்சிக் குகையில் சமாதி கூடியிருக்கும்போது, சுவாமிகள் சுத்தாத்ம சித்தி பெற்றார். இதில் அவருக்குத் திருப்தியில்லை; இதற்குமேலும் ஒரு படி இருப்பதாக உணர்ந்தார். துறவும் வாழ்வும், யோகமும் போகமும் ஒன்று சேர்ந்து பூரணம் பெற விரும்பினார். இச்சமயம் அரவிந்தரின் நூலான 'அன்னை' இவரை வசீகரித்தது. அரவிந்த தரிசனம் வேண்டி விண்ணப்பித்தார். ''வரலாம்'' என்று பதில் கிடைத்தது. அப்படியே நிலையத்தில் போய்ச் சேர்ந்து விட்டார்.

சுவாமிகள் 'சமரஸபோதினி'யில் இருந்த காலத்தில் பரங்கிப் பழம், கடலைக் கொட்டை முதலிய பச்சைப் பொருள்களை உண்டு இயற்கை வாழ்வு வாழ்ந்தார். இப்போது அந்த விஷயம் எப்படி என்றறிய, நான் விரும்பினேன். இப்போதும், பால், பழமே முக்கிய உணவாம். கடலைக் கொட்டையும் கொஞ்சம் சேர்ப்பதுண்டாம். அரவிந்தருக்குத் தயாரிக்கும் உணவில் பிரசாதம் வரும். அதுவே அமுதம். பசுங் காய்கறி, தேங்காய், கனிகள் சேர்ந்து தயாரிக்கப்படுவதே அரவிந்தருக்கு இவர் தயாரிக்கும் உணவு.

''தமிழ் இலக்கிய வளர்ச்சி சம்பந்தமாக, தங்கள் அபிப்பிராயம் என்ன? திசைச் சொற்களை அடியோடு ஒழிக்கலாமா? எதையும் எளிய தமிழிலேயே எழுத வேண்டுமென்று எண்ணுகிறீர்களா?'' என்று நான் கேட்டேன்.

**சுவாமியின் பதில்:** "இப்போது நீங்களெல்லாம் எழுதிவரும் தமிழ் நல்ல தமிழே. எளிது வலிது என்பதன்று: எலிஜபெத் காலத்துக்கு, சாஸரும் ஷேக்ஸ்பியரும் எளிது; ஜார்ஜ் காலத்தில், ஷாவும் எலியட்டும் எளிதாகும். காலத்துக் கேற்றபடி இயல் பாக ஊறிவரும் நடையே நல்ல நடை. இனி நாம் சங்ககாலத் தமிழே பேசிக்கொண்டிருக்க முடியாது. தமிழில் இன்னும் எவ்வளவோ புதிய சொற்களும், மலை மலையாகப் புதிய எண்ணங் களும் வரவேண்டும். சரஸமான எளியநடையே இப்போது பயனுகும். பொருள் நிரம்பிய சொற்களை எந்தப் பாஷையிலிருந் தாலும் எடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக 'ஸயன்ஸ்' என்ற பதத்தை, நான் அப்படியே வழங்குகிறேன். அதற்கு விஞ்ஞானம், கலை, இயற் கலை என்பது பொருந்தாது. பழக்கத் தில் வந்த பிற சொற்களை நம்மதாக்கிவிட வேண்டும். காலத்துக் கேற்றபடி எளிய நடை வேண்டும். ஆனல், எளியநடை யென்றல் இலக்கணப் பிழை உள்ளதன்று. உதாரணமாக, பி. ஆர். ராஜ மையரின் எழுத்துக்கள், ராமதீர்த்தரின் வாக்குகள், விவேகா னந்தரின் வாக்குகள், அருட்பா, தாயுமானவர், பாரதியார்பாடல் கள் இவை யெல்லாம் மிகமிக எளிய நடையிலே தான் உள்ளன. எளிய நடைக்கு உதாரணம் இவையே. ஸ்ரீ வ. ரா., கல்கி, தி. ஜ. ர., கு. ப. ரா., திருஞானம், சங்கு, நவயுகம், த. நா. குமாரசாமி முதலியோர் எழுதுவது மிகவும் நன்றுகவே யிருக் கிறது. தமிழில் நிரம்பக் கருத்துக்களைச் சேருங்கள்; சொல் தன்னல் வரும். இதிகாச சங்க-காலங்களைவிட உலகம் எவ்வ ளவோ முன் சென்று விட்டது. எத்தனையோ புதிய கருத்துக்கள் மனித வாழ்வுடன் பின்னிக் கிடக்கின்றன. இப்போது பழைய நூல்களையே சார்ந்திருக்க முடியாது. ஏராளமான புதிய நூல் களைச் சிருஷ்டிக்கவேண்டும்."

"இந்திய அரசியலில் தங்களுக்குச் சிரத்தை யுண்டா? 'சுயராஜ்யத்துக்கு அஹிம்சை, தற்காப்புக்குப் பலாத்காரம்' என்று ஒரு கட்சி காங்கிரஸிலே வலுத்திருக்கிறதே; இதுபற்றி உங்கள் கருத்தென்ன?" என்று வினவினேன்.

**பதில்:** "பாரத பூமிதான் என் உயிர். அதற்கே வாழ்வு, தவம், நினைவு. உண்பதும் என் அன்னைக்கே. அவள் உயிர்த் துடிப்பு, எனது உயிர்த் துடிப்பு. அவள் விடுதலை உலக விடுதலை. பாரத பூமி உலகின் இன்ப நிலயம், சக்தி நிலயம். அதன் வருங் காலம் மகத்தானது. உலகில் நித்தியானந்த ஜோதியை, சத்திய

தர்மயுகத்தை நாட்டவே, பாரத சக்தி முயல்கிறது. அதற்காக மஹான்கள் தவம் புரிகிறார்கள். மேடை, அச்சுத் தொண்டுகளை விட மஹான்களின் தபோபலத்தினால் அற்புதமான பலன்கள் ஏற்பட்டுள்ளன. இப்போது நடக்கும் போர் அசுர பலங்களின் போர். இந்தப் போர் மேகம் நமது நாட்டில் தற்காலம் படர்ந் தாலும் அக்கறை யில்லை. நமது தேசத்தில் உள்ள பரமாத்ம சக்தி உலகைவிடப் பெரியது. அது அவதரித்திருக்கிறது. அதன் வெற்றி நிச்சயம். நமது தேசம் விடுதலையாவது மட்டும் போதாது. அது உலகில் தர்மஸ்தாபனம் செய்யவேண்டும். அதற்கு ஒரு பெரிய தெய்வ சக்தி எழுந்து விளங்கும். நம்புங்கள். அந்தக் காலத்துக்காகவே நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம். பாரத சக்தியின் சேவை தெய்வ சேவை. அதன் பலம் தெய்வ பலம். குண்டு, பீரங்கிப் பலங்களெல்லாம் ஒரு நாள் அதை வணங்கியே தீரவேண்டும். பாரத தேசத்தை மறந்து தவமில்லை; வாழ்வில்லை. மேடைப் பேச்சே தேச சேவையன்று. மௌனமாக ஆத்ம பலத்தால் செய்யும் சேவை மிகப் பெரிது. (1) ஜாதிமதப் போர்கள் ஒழிந்து எல்லாரும் ஒற்றுமையாக வாழவேண்டும்; (2) வறுமை ஒழியத் தொழில் ஓங்கவேண்டும்; (3) மடமை தீரக் கல்வி பரவ வேண்டும்; (4) க்ஷத்திரிய பலத்துடன் பிரம்ம தேஜஸ் வேண்டும்; (5) ஆத்ம ஞானம் பெருகி ஆத்ம சக்தி வளரவேண்டும்; (6) அச்சம் ஒழிய வேண்டும்; (7) அவரவர் வேலைகளை யோகமாகச் செய்யவேண்டும்; (8) காலத்துக் கேற்ற தலைவனைப் பணிய வேண்டும். (9) பழம் பழக்கங்களையே உடும்புப் பிடியாகக் கொள்ளாமல் புதுமை புதுமை என்று முன் சென்று காலத்தை வெல்ல வேண்டும்; (10) பாரத சமுதாயம் வீரதீரர் சங்கமாக வேண்டும். இவையே நாம் முன்னேறும் வழிகளாம்.''

"சர்வமத சமரஸத்தையே தாங்கள் ஆதரிப்பீர்களென்று எண்ணுகிறேன். அப்படியானால் கலாசாலைகளில் அவரவர்களின் மதக் கல்வி போதிக்கப் படுவது சரியா, தவறா? தவறானால், மதக் கல்வியே கூடாதா? அல்லது பொது மதக் கல்வி வேண்டுமா? கலாசாலையின் மதக்கல்வியால் ஆன்மீக சாதகம் ஏதாவது கிட்டுமா?'' என்று அடுத்த கேள்வி கேட்டேன்.

**பதில்:** "சாதிமத எண்ணமே ஒழிய வேண்டும். முதலில் மனிதனை மனிதனாகப் பாவித்து மதிக்க வேண்டும். மதம் என்பது படிப்பல்ல, போதனையல்ல; சாதனம், அனுஷ்டானம்.

எல்லாரும் கூடி மௌனமாக உட்குவிந்து தியானம் செய்தல்—மற்றப்படி அவரவர் கடமையைப் பிறர் நோகாமல் செய்தல்—சத்தியம், அன்பு, தருமம், இரக்கம், வீரம், பொதுநலம், முதலிய நற்குணங்களை வாழ்த்தல்—இவற்றாலேயே சன்மார்க்கம் உயரும். சன்மார்க்கம் என்பது மதமல்ல. மதம் மனித சிருஷ்டி. கிறிஸ்துவும் புத்தரும் வருமுன்பே, வேதமும் கீதையும் உதிக்கு முன்பே, சன்மார்க்கம் இருந்தது. அது ஆத்மாவுடன் பிறந்தது. சத்—உண்மை, உள்ள பொருள், சுத்மான்மா ; மார்க்கம்—வழி. உண்மைப் பொருளை அடையும் வழியே சன்மார்க்கம். அது என்றுமுள்ளது. புள்ளிக் கூடங்களில் எல்லாருக்கும் பொதுவான நன்னெறிகளைப் பயில, சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதே சிறந்த போதனை. மதம் என்ற பேச்சே குழந்தைகளின் நினைப்பில் வரக்கூடாது. ஆனல், எந்த மதத்தையும் வெறுக்கக்கூடாது—அததன் சாரத்தைக் கிரகித்துச் சக்கையைத் தள்ளிவிடவேண்டும். விருப்பு வெறுப்பற்ற சமநிலையே ஸன்மார்க்கம். ஒருவன், தான் நம்பும் சமயத்தைப் பிற மத வெறுப்பில்லாது அனுஷ்டித்தால் அது நல்லதே.''

**கேள்வி :** '' ஹிந்துக்கள் சம்பந்தப்பட்ட மட்டில், எவை மிக முக்கியமான சமூகச் சீர்திருத்தங்கள் என்று தாங்கள் கருதுகிறீர்கள் ? ஏன் ? ''

**பதில் :** '' ஹிந்து சமுதாயம் பல சிக்கல்களால் வருந்துகிறது ; அது உருவாகவே யில்லை. அது உருவாகித் தலை நிமிர வேண்டுமானல், (1) கீதை, குறள் இரண்டையும் பைபிள் மாதிரி பரப்பவேண்டும்; ஒவ்வொருவரும் இந்த நூல்களைப் பாராயணம் செய்து அனுஷ்டிக்க வேண்டும் ; (2) 'நீ யார் ?' என்றால், 'பிராமணன், நாயுடு' என்னமல், ஒவ்வொருவனும் 'நான் பாரத புத்திரன், தமிழன், சன்மார்க்கி' என்னல் வேண்டும். பெயர்களுக்குப் பின் உள்ள வால்களெல்லாம் இனிக் கூடாது. இங்கே புதுவையில் அதை நீக்கிவிட்டார்கள் ; (3) தீண்டாமை அடியோடு ஒழியவேண்டும். பட்டணத்தில் எல்லாரும் கலந்து வசிப்பதுபோல, எல்லா ஊர்களிலும் சங்கரசாஸ்திரி முதல் சாம்பான்வரையில் கலந்து வசிக்க வேண்டும். திருக்குலத்தாரை உயர்த்த, அவர்களை உயர்ந்த முறையில் வாழச்செய்ய வேண்டும். ஆலயப்பிரவேசம் மட்டும் போதாது. இந்தக்காலம் கோயிலுக்குப் போகிறவர்களே அரிது. கோயில்களே எவ்வளவோ திருந்த வேண்டும். திருக்குலத்தார் ஏனைய சமூகத்தாருடன் தாராள

மாகப் பழக இடந்தர வேண்டும்; (4) நாடெங்கும் மடமை யிருள் படர்ந்திருக்கிறது; அது ஒழியக் கல்வி பரவவேண்டும். ஆண் பெண் இருவரும் நிறைவாகக் கற்கவேண்டும். தெருவுக்கு ஒரு பள்ளிக்கூடம் வேண்டும். வீடுகளெல்லாம் பெண் கல்விச் சாலைகளாக வேண்டும். மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டால், நமது நாட்டின் கற்றவர் நிலை கூடப் பரிதாபமா யிருக்கிறது. உதாரண மாக, பிரான்ஸில் 12 வயதுப் பையன் தாய்மொழி இலக்கணம் நன்றுயறிவான்; மோலியர், ராஸீன் நாடகங்களை நன்ருக ரஸிப்பான். 16 வயதுப் பையன், பௌதிக ரசாயன சாத்திரங் களில் நிபுணனுகிருன். இங்கே போதிக்கும் கல்வி சுத்த மோசம். நம்மவருக்கு ஆத்மீகக் கலையு மில்லாமல், மேல்நாட்டு லௌகிகக் கலையும் இல்லாமல், கல்வி இரண்டும் கெட்டானு யிருக்கிறது; கலை நூல்கள் நிரம்ப வெளிவர வேண்டும். கல்வி சூருவளிபோல் பரவவேண்டும். (5) வீடுதோறும் கைத்தொழில்கள் பரவ வேண்டும்; வறுமையை ஓட்டவேண்டும். வேலைக்குச் சோம்பக் கூடாது. (6) பெண்களுக்குத் தாராளமான சமவுரிமை வேண் டும். அவர்கள் ஆண்களின் கண்காணிப்பில் இருக்க வேண் டியதில்லை. ஆண்களைப் போலவே உடல் பயிற்சி, உலாவுதல், கற்றல், கேட்டல், பொது நலம்புரிதல் இவை பெண்களுக்கும் வேண்டும். (7) எல்லாரும் ஒரு குலம் போல அன்புடன் பழக வேண்டும். வீண் வாதமும் கிண்டலும் காலக் கொலையும் இல் லாமல் சுறு சுறுப்பாக அவரவர்களுக்கு இயல்பான கடமையைச் செய்ய வேண்டும்.''

“இந்த யுத்த முடிவில் உலக சமுதாயம் எந்த நிலை அடையு மென்று தங்களுக்கு ஏதாவது தரிசனம் (vision) உண்டா? ஆமென்ருல், எவையேனும் சில குறிப்புகள் தர இயலுமா? கோடி காட்ட முடியுமா?'' என்பது என்னுடைய கடைசிக் கேள்வி.

**சுவாமியின் பதிலாவது:** “இந்த யுத்தம் ஹிட்லர் யுத்தமன்று, மிகாடோ யுத்தமு மன்று. உலகில் அசுரப் பகைகள் மண்டிப் போயின. தர்ம பலம் மங்கிப் போனது. இப்போது போரில் புகுந்திருக்கும் அனைவரும் கொலையால் வயிறு வளர்ப்பவர்கள்; ஆடு மாடுகளை ஹதம் செய்து வயிறு வளர்ப்பவர்கள்; எளிய நாடுகளை நசுக்கிப் பிழிந்து இரத்தத்தை உறிஞ்சிக் கொழுப்ப வர்கள்; பாப ஜன்மங்கள் — மஹா பாப ஜன்மங்கள்; கீதை சொல்லும் ஆததாயிகள். கிரேக்கக் கதையில் கால்கோடி ஸர்ப்

பப் பற்களை (Dragon's Teeth) நட்டு வந்த அரக்கர், தம்முள்ளேயே பொருதி மடிந்தனர். அது போல் அசுர பலங்கள் தம்முள் போராடி மடிகின்றன. அசுர ஆயுதங்கள் அவர்களையே வேட்டையாடுகின்றன. இது களை பிடுங்குவது போன்றது. இந்தப் போர் முடிந்த பிறகுதான், உலகம் புதுமை பெறும். இப்போதிருக்கும் கசுமாலங்களெல்லாம் கழிந்து, புதுயுகம், புதுவாழ்வு, புதிய சமரஸம் பிறக்கும். இந்தப் போரால் பயப்படாதீர்கள். பாரத தேசத்துக்கு ஒரு கேடும் வராது. அதர்மம் அழிகிறது ; தர்மம் இனி நிமிரும். விஷ்ணுவின் காரியத்துக்கு ருத்ரன் வழி துலக்குகிறுன் மஹாலக்ஷ்மி வாசத்துக்கு ஊழிக்காளி காடு வெட்டி, தர்மபூமி தயாரிக்கிருள். 'லயன் க்ளீயர்' (line clear) ஆகிறது.''

வெகு நேரமாகிவிட்டது. ஆசிரம செளகர்யம் எப்படியோ; சுவாமிகளின் நித்ய ஸாதனத்துக்கு என்னுல் எவ்வளவு குந்தகமோ? எனவே, இத்துடன் நான் விடை பெற்றுக் கொண்டேன்,

# ருக்மிணி தேவி

காலமோ தூரமோ பிரித்துவைத்த சிலரைப்பற்றிப் பல சமயம் நமக்கு எவையேனும் விசித்திர எண்ணங்கள் உண்டாகின்றன. நேரிலே அவர்களைக் கண்டறியும்போது, அவையெல்லாம் சிதறி, நாம் ஆச்சரிய மடைகிறோம். ருக்மிணி தேவியைச் சந்தித்த போதும் எனக்கும் இதே அனுபவம்தான் ஏற்பட்டது.

‘ ருக்மிணி தேவி ஆங்கில மாதான பெஸண்ட் அம்மையால் நிர்வகிக்கப்பட்ட தியஸாபிகல் சொஸைட்டியைச் சேர்ந்தவர். ஆங்கில அறிஞர் டாக்டர் அருண்டேலை வாழ்க்கைத் துணைவராய்ப் பெற்றவர். பழக்க வழக்கங்கள் ஆங்கிலமாய்த்தான் இருக்கும். பாஷையும் அதுவேயாக இருக்கும். தமிழை எவ்வளவு மறந்திருப்பாரோ ?’ என்று நம்மில் பலர் சந்தேகிப்பது சகஜம். என் கேள்விகளை நானும் ஆங்கிலத்தில்தான் குறித்துக் கொண்டு சென்றிருந்தேன்.

ஸ்ரீமதி ருக்மிணி தேவியோ, வந்து உட்கார்ந்தவுடனே, என் குறிப்புகளைப் பார்த்துவிட்டு, “ என்ன ? இங்கிலீஷிலா கேட்கப் போகிறீர்கள் ? உங்கள் பத்திரிகை தமிழ்தானே ? தமிழில் சொன்னால் போதாதா ?—ஆனால், உங்கள் சௌகரியம்போல் கேளுங்கள். எனக்கு இரண்டும் ஒன்றுதான் ” என்று சொன்னார்.

வியப்பும் களிப்பும் அடைந்த நான், “ இல்லை... தமிழிலேயே கேட்கிறேன். அதுதான் எனக்கும் இரட்டிப்புச் சௌகரியம் ” என்று நான் கூறினேன்.

தமிழ் பேசுவது மட்டிலுமல்ல ; தமிழில் நன்றாய் எழுதப் படிக்கவும் அவருக்குத் தெரியும். தமிழ்நாட்டு நடையுடை பாவனைகளையே பூர்ணமாய் அவர் அனுஷ்டிக்கிறார்.

“ இதென்ன விநோதம் ? எனக்குத் தமிழ் தெரியாமலிருக்கும் என்று ஜனங்கள் ஏன் நினைக்கிறார்கள் ? தாயுமானார் பாடல்கள், ராமலிங்க சுவாமிகளின் திருவருட்பா இவைகளிலெல்லாம் எனக்கு மிகுந்த பற்றுதல். இவைகளை நான் நிறையப் படிக்கிறேன். தேச பாஷையான ஹிந்தியில் சாதாரணமாகப் பேச

என்னால் முடியும். ஏற்கனவே, தெலுங்கு நன்றாய்த் தெரியும். இப்போது கொஞ்சம் பழக்கம் விட்டிருக்கிறது. என்றாலும், இன்றும் தெலுங்கைப் புரிந்துகொள்ளுவேன். புரியாவிட்டால் அர்த்தபாவத்தோடு தெலுங்குப் பாடல்களுக்கு நான் எப்படி அபிநயம் பிடிக்க முடியும்?'' என்று ஸ்ரீமதி ருக்மிணி கூறினார்.

1904-ஆம் ஹு பிப்ரவரி௴ 20௳—அன்று மதுரையில் மகாமக விழா. மீனாட்சியம்மன் உலாப் புறப்பட்டு விட்டாள். கோவில் மணிகள் முழங்கின. நாதசுரம் இன்பகீதம் பொழிந்தது. இந்தப் புண்ணிய தினத்தில், ஒரு ஸம்ஸ்கிருத பண்டிதரின் வீட்டுக்கு முன்பு பல ஜனங்கள் கூடினார்கள். எதற்கு? அந்தப் பண்டிதரின் மனைவிக்குக் குழந்தை பிறந்த சந்தோஷத்தை விசாரிப்பதற்காகத்தான். அன்று அங்கே ஜனனமான அந்தக் குழந்தையே ஸ்ரீமதி ருக்மிணி தேவி. ஸ்ரீமதி ருக்மிணியின் தந்தை பிரபல வடமொழி வித்வானான திரு. எ். நீலகண்ட சாஸ்திரிகள். அவருடைய பூர்விகம் திருவிசைநல்லூர். தாய் சேஷம்மாள், தியாகையர்வாள் அவதரித்த திருவையாற்றைச் சேர்ந்தவர். இரண்டு ஊர்களுமே நம்முடைய புராதனக் கலைகளுக்குப் பேர் போனவை. இப்பேர்ப்பட்ட ஐதீகமுள்ள குடும்பத்தில், கலையொலி நிறைந்த வேளையில் ஜனித்த ஸ்ரீமதி ருக்மிணி, அவைகளுக்கிசையத் தாமும் ஒரு கலைச் செல்வியாய் வளர்ந்தது ஆச்சரியமல்ல.

மிகச் சிறு பிராயத்திலேயே அவருக்குப் பற்பல கலைகளிலும் பற்றுதல் உண்டு. சங்கீதம் பயின்று, சிறந்த பாடகி யாகிவிட வேண்டுமென்று அவருக்கு ஆசை. பள்ளிக்கூடத்தில் அவர் படித்த தில்லை; வீட்டுப் படிப்புத்தான். அவருடைய தந்தைக்கு அடையார் தியஸாபிகல் ஸொஸைட்டியில் தொடர்புண்டு. ஆகையால், ஆறு வயது முதலே ஸ்ரீமதி ருக்மிணி, அடையாருக்கு அடிக்கடி வந்து செல்வார். ஏழாவது வயதில் முதல் முதலாக, காலஞ் சென்ற பிஷப் லெட் பீட்டரை அவர் சந்தித்தார். குழந்தை ருக்மிணியைப் பற்றிக் கேள்விப்பட்ட லெட்பீட்டரே, அவளைப் பார்க்க விரும்பினார். அதன் மேல்தான் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

டாக்டர் அருண்டேலின் அத்தையான மிஸ். அருண்டேல், 1918-ஆம் ஹு அடையாரில் ஒரு தேநீர் விருந்து நடத்தினார். டாக்டர் அருண்டேலை முதல் தடவையாக அப்போதுதான்

ஸ்ரீமதி ருக்மிணி சந்தித்தார். அதிலிருந்து இருவருக்கும் நட்பு முதிர்ந்தது. 1920-ஆம் ஸு ஏப்ரல்மீ மணமும் செய்துகொண் டார்கள். ஒரு வெள்ளைக்காரரை, ஓர் இந்துப் பெண் மணந்து கொள்வதா என்று பலர் பலவிதமாய்ச் சீறினார்கள் ; அவதூறு களும் கிளப்பினார்கள். ஆனால், அந்த அற்புத ஸ்திரீ (டாக்டர் பெஸண்ட்) அதையெல்லாம் லட்சியம் செய்யாமல், 'நியூ இந்தியா'வில் சமாதானம் எழுதினார்.

டாக்டர் பெஸண்டை முதலாவதாக ஸ்ரீமதி ருக்மிணி நேருக்கு நேரே சந்தித்துப் பேசியது 1920-ஆம் வருஷத்தில்தான். அதிலிருந்து பெஸண்டை ஸ்ரீமதி ருக்மிணி ஆர்வத்தோடு பின் பற்றி அவருக்கு உதவியும் புரிந்து வந்தார்.

"டாக்டர் பெஸண்ட்தான் எனக்குக் கல்வி போதித்தார். அவர் எனக்குப் பேருதவி புரிந்திருக்கிறார். நாட்டியம் கற்கு மாறு எனக்குத் தைரிய மூட்டியவரும் அவர்தான்" என்று, ஸ்ரீமதி ருக்மிணி நன்றி கனியச் சொல்கிறார்.

அகில இந்திய வாலிப தியாஸபிஸ்டுகள் பெடரேஷனின் தலைவராக 1923-ஆம் ஸு ஸ்ரீமதி ருக்மிணி தேர்ந்தெடுக்கப்பட் டார். 1925-ஆம் ஸு உலக வாலிப தியாஸபிஸ்டுகள் பெடரேஷன் ஆரம்பமானபோது, அதற்கும் அவரே தலைவரானார். 1924-ஆம் வருஷம் முதல் முதலாக ஸ்ரீமதி ருக்மிணி தேவி, மேல் நாட்டுக்கு, டாக்டர் அருண்டேலுடன் பிரயாணம் செய்தார். அதிலிருந்து 1935-ஆம் ஸு வரையில், அநேகமாக வருஷந்தோறும் இருவரும் பிரசங்கங்கள் புரிந்துகொண்டு, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பா முதலிய பல நாடுகளுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்து வந்திருக்கிறார்கள். ஸ்ரீமதி ருக்மிணி மிக நேர்த்தியாய் ஆங்கிலம் பேசுவார். இந்தியாவைப் பற்றியும் இந்தியரின் கலைச் செல்வத்தைப் பற்றியும் அமெரிக்காவிலும் ஐரோப்பா முதலிய பிற நாடுகளிலும் பல பிரசங்கங்கள் புரிந்திருக்கிறார். "எனக்குப் பிறகு, நான் செய்த வேலையைப் புரிய மிகவும் தகுதிவாய்ந்தவள் ஸ்ரீமதி ருக்மிணிதான்" என்று கவி ரவீந்திரநாத தாகூர் சொல் வது வழக்கமாம்.

"1924-ஆம் ஸு ஆஸ்திரேலியாவில், பிரபல ருஷிய நாட்டியக்காரியான மாடம் பாவ்லோவா என்பவளின் பாலட் டான்ஸுகளைப் பார்த்தேன். அவளுடைய நாட்டியம் மகா பரிசுத்தமானது ; ஆத்மீக ஒளி வீசியது. அதிலே நான் என்

மனதைப் பறி கொடுத்தேன். இதிலே ஒரு வேடிக்கை, பாருங்கள். இதற்குப் பிறகு, நான் செய்த பல பிரயாணங்களில் என் கப்பலிலேயே பல தடவை அகஸ்மாத்தாக மாடம் பாவ்லோவாவும் வந்து பிரயாணம் செய்வாள். இப்படி அடிக்கடி நாங்கள் சந்தித்துத் துணை சேர நேர்ந்தது ஏதோ பூர்வ ஜன்ம வாசனையாய்த்தான் இருக்கவேண்டும் என்றுகூட எனக்குத் தோன்றுகிறது'' என்று ஸ்ரீமதி ருக்மிணி கூறினர்.

சின்ன வயதுமுதலே கர்நாடக சங்கீதப் பயிற்சியும் பிற கலைகளில் ஆர்வமும் உடைய ருக்மிணி தேவிக்கு, மாடம் பாவ்லோவாவின் பரிசுத்த நாட்டியத்தைக் கண்டதும், அந்தக் கலையில் ஒரு பிரேமை ஏற்பட்டது. தாமும் அதைக் கற்ருர். 1932-ஆம் வருஷமோ அல்லது 1933-ஆம் வருஷமோ, முதல் முதலாக, சென்னை மியூஸிக் அக்காடமியில் பந்தநல்லூர் சகோதரிகளின் பரத நாட்டியத்தை ஸ்ரீமதி ருக்மிணி பார்த்தார். அதையும் தாம் கற்கவேண்டுமென்ற வேட்கை அவருக்கு உதித்தது. ஆனல், பரதநாட்டியத்தில் சில ஆபாச அம்சங்கள் இருப்பதை அப்போதே அவர் கண்டார். என்ருலும், பரத நாட்டியத்தைத் தாம் பயின்று, அதன் ஆபாச அம்சங்களை ஒழித்து, உன்னதமாகச் செய்வது என்று சங்கல்பம் செய்து கொண்டார். கொஞ்சம் பயின்ற பிறகு, 1935-ஆம் ஷு பந்த நல்லூர் பரதநாட்டிய வித்வான் திரு. மீனுட்சி சுந்தரம் பிள்ளை யிடம் மேலும் பயிற்சி பெற்ருர். பின்னல், சாஹித்ய வித்வான் ஸ்ரீ பாபநாசம் சிவனைச் சந்தித்து, அவருடைய பாடல்களைப் பிரபலப்படுத்த வேண்டுமென்ற ஆவல் கொண்டார். 1936-ஆம் ஷு அடையாரில் தியாஸாபிகல் ஸொஸைட்டியின் டயமண்ட் ஜூபிலி விழா நடந்தபோது, சர்வதேசக் கலை அக்காடமி என்ற ஸ்தாபனம் ஸ்ரீமதி ருக்மிணியின் முயற்சியால் அமைந்தது. அதுவே பின்னல் **கலாக்ஷேத்திரம்** என்ற நாமம் பெற்றது. அதன் ஸ்தாபக அக்கிராசனர் ஸ்ரீமதி ருக்மிணி தேவிதான்.

ருக்மிணி தேவியின் பகிரங்கமான முதல் பரதநாட்டியக் கச்சேரி 1936-ஆம் ஷு மார்ச்சு மீ நடந்தது. அது தொடங்கி இந்தியா வெங்கும் சுற்றி, தமது கலைச் செல்வத்தால், ராஜாக்கள் கீர்த்திமான்கள், தலைவர்கள், பண்டிதர்கள், பொதுமக்கள் ஆகிய ஆயிரக் கணக்கான பல்வேறு ஜனங்களுக்கும் அவர் மகிழ்ச்சியூட்டி யிருக்கிருர். அவருடைய சுற்றுப் பிரயாணம் யாவும் மிகவும் வெற்றிகரமாய் நடந்தன.

1941-ஆம் ஆண்டு தாகூரின் விசுவபாரதி ஆசிரமத்தில் நடந்த சம்பவம் ஒன்றை மட்டிலும் இங்கே குறிப்பிடுவது பொருத்த மாகும். ஸ்ரீமதி ருக்மிணியின் நாட்டியத்தைக் கண்டு உள்ளம் கனிந்த கவி திலகர் தாகூர் "மாளவிகாக்னி மித்ரத்தில் காளி தாஸன் எதற்காக நாட்டியத்தைப் புகுத்தி யிருக்கிறுன் என்று இதுவரையில் எனக்குப் புரியவே யில்லை; இப்போது தான் அது புரிந்தது" என்றார். ஸ்ரீமதி ருக்மிணியின் நடனத்துக்கு இதை விடப் பெரிய புகழுரை வேறு எது?

"கையில் உள்ள பத்து விரல்களுக்குள்ளே நூற்றுக் கணக் கான—இல்லை, ஆயிரக் கணக்கான சொல் சித்திரங்கள் அடங்கிக் கிடக்கின்றன" என்று ஸ்ரீமதி ருக்மிணி ஒரு முறை கூறினார். இந்தச் சித்திரங்களைத் தீட்டுவதில் மிக வல்லவர் அவர். படம் எடுத்த ஸர்ப்பமும், சிறகு விரித்த கருடனும், அலர்ந்து சிரிக்கும் தாமரையும், மருண்டோடும் மானும் இன்னும் பல்வேறு ஜீவன்களும் பொருள்களும் அவருடைய விரல் முத்திரைகளிலே நினைத்தபோது வந்து நிற்கும். மற்றும் அவருடைய முகபாவம், நயன வின்யாஸம், நிருத்தியம் முதலிய சகல நாட்டிய அம்சங் களையும் பல பத்திரிகைகள் அவ்வப்போது புகழ்ந்தெழுதி யிருக்க கின்றன.

"நீங்கள் மேல் நாட்டில் நாட்டியம் செய்ததுண்டா?" என்று யாரோ ஸ்ரீமதி ருக்மிணியைக் கேட்டார்களாம்.

"இதுவரையில் செய்த தில்லை. ஏனென்றால், மேல் நாட் டாரின் பாராட்டுதலைப் பெறு முன்பாக என் சொந்தத் தாய் நாட்டின் பாராட்டுதலையே முதலில் பெறவேண்டும் என்று என் ஆசை" என்கிறார் அவர். ருக்மிணி தேவியின் தேசபக்தி அவ்வளவு தீவிரமானது.

1940-ஆம் ஆண்டு தென்னிந்திய ஜீவரட்சணை லீக்குக்கும் அவர் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜீவப் பிராணிகளிடத்தில் அவருக்கு மிகுந்த அன்பு. இது வெளியிலுள்ளோருக்கு அவ் வளவு தெரியாது.

கலை, அரசியல் முதலிய பல்வேறு பொருள்கள் குறித்தும், சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாக அவர் என்னிடம் பேசிக் கொண்டிருந்தார். அடையாறு வாசிகளில் பெரும்பாலோ ருடைய சம்பாஷணைகளிலும் கலையழகைப் பொதுவாய்க் காண

லாம். ஒரு முறை 'லோக குரு' கிருஷ்ணமூர்த்தியை நானும் வேறிரு நண்பர்களும் நேரில் சந்தித்துப் பேசும் பாக்கியம் கிடைத்தது. அவர் அப்போது எவ்வளவு அழகாய் நடந்து கொண்டார்! அது இன்னும் பச்சைப் பசுமையாய் எனக்கு ஞாபக மிருக்கிறது. அவ்விதமிருக்க, கலையையே வாழ்க்கை லட்சியமாய்க் கொண்ட அடையாற்றின் தலைவி ஸ்ரீமதி ருக்மிணி யின் சம்பாஷணை நயத்தைப் பற்றி வர்ணிக்கவும் வேண்டுமா? மிகுந்த அடக்கம், அன்பு இவற்றோடு, வெகு சரளமாக அவர் பேசினர்.

"நம்முடைய தினசரி வாழ்க்கையில், கலைக்கு ஏதாவது பயன் உண்டா? அது அவசியம் என்று நீங்கள் கருதுகிறீர்களா?" என்று நான் கேட்டேன்.

"கலையில்லாமல் வாழவே முடியாதே" என்று ஒரே அடியாக மறுத்த அவர், சற்றுத் தணிந்த குரலில், "சிலர் கலையின்றி வாழத்தான் வாழ்கிறார்கள். ஆனால், அது கூடாது. மனிதனுக் குக் **கல்சர்** ரொம்பவும் அவசியம்—**கல்சர்** என்பதைத் தமிழில் சொல்ல எனக்குத் தெரியவில்லை. அதை நீங்கள் எப்படி மொழி பெயர்ப்பீர்கள்?" என்று கேட்டார்.

"எங்களுக்கும் அந்த வார்த்தை கொஞ்சம் தகராறுதான். தனித் தமிழில் பேரன்பு கொண்டவரான காலம்சென்ற ஸ்ரீ டி. என். சேஷாசலம் அவர்கள் கூட, **கல்சர்** என்ற அற்புதமான வார்த்தைக்குத் தமிழ் அகப்படவில்லையே என்று சொல்லி, **கல்சர்** என்றே தமிழில் வழங்கினர். என்றாலும், இப்போது நாங்கள் (அதாவது தமிழ்ப் பத்திரிகைக்காரர்கள்) எல்லாரும் 'கல்சர்' என்பதைக் 'கலாச் சாரம்' அல்லது 'கலைப் பண்பாடு' என்று மொழி பெயர்க்கிறோம்" என்று நான் சொன்னேன்.

இந்த வார்த்தை விவகாரத்தை இதோடு விட்டு விட்டு, தினசரி வாழ்க்கையில் கலை யழகின் தேவையை ஸ்ரீமதி ருக்மிணி, மேலும் விளக்கலானார்: "நம் வீடுகளைக் கோலம் முதலியவை களால் அழகு படுத்துகிறோம். அது கலை யில்லையா? நம்முடைய பழங்காலத்துச் சாமான்களில் ஒரு கலைச்சுவை இருக்கிறது. அவைகளையே நான் உபயோகப்படுத்துகிறேன். இதற்காக என்னைச் சிலர் பரிகாசம் கூடச் செய்கிறார்கள். ஸோபா, நாற் காலிகள் முதலியவை என் வீட்டில் கிடையாது. வெள்ளைக் காரர்கள் தங்களுடைய சம்பிரதாயப்படி தங்கள் வீடுகளை வைத்

துக் கொள்ளுவதும் ஓரழகாய்த்தான் இருக்கிறது. ஆனால் அந்த முறை அவர்களுக்குத்தான் பொருத்தம்; நமக்குப் பொருத்த மில்லை.''

**கேள்வி:** ''கலைகளின் தத்துவம் என்ன? கலைகளைப் பற்றி உங்கள் சித்தாந்தம் யாது? சில வார்த்தைகளில் அதை விளக்க முடியுமா?''

**பதில்:** ''தென்னிந்திய நாட்டியம் இரண்டு தீமைகளுக்குள் மூழ்கி யிருக்கிறது. ஒன்று ஆபாசம்; இரண்டாவது குரூரம். நடனம் ஆனந்த மூட்டவேண்டும். நடனத்தை ஆனந்த நடனம் என்று கூடச் சொல்வதுண் டல்லவா? கலாக்ஷேத்திரத்தில் குரூர மாய்ச் சொல்லித்தரும் வழக்கம் கிடையாது. குழந்தைகள் மிக்க ஆசையுடன் இங்கே நடனம் கற்றுக் கொள்கின்றன. நடனக் கலையில் சம்பந்தப் பட்டவர்களுக்குக் கல்வியில்லாதிருப் பதுதான் மேலே சொன்ன குறைகளுக்கு ஒரு காரணம். நல்லது அவர்களுக்குத் தெரியவில்லை. சீர்திருத்தம் எப்படி அவர்களால் ஏற்படும்? கெடுதலை வைத்துக்கொண்டு, நல்லதை அவர்கள் தள்ளி விடுகிறார்கள். கலை ஒரு தொழிலாகவும்தான் இருக்கிறது. இருந்தாலும் அதைத் தொழிலுக்காக மட்டில் கையாள லாகாது. கலையைப் பயில்கையில், மனத் தூய்மையும் தெய்வ பக்தியும் வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், **கலை ஒரு தொழில் அல்ல; ஓர் உத்தம கைங்கர்யமாகும். ஆத்மீக வளர்ச்சியும் ஆனந்தமும் அளிப்பதே கலையின் நோக்கம்.''**

**கேள்வி:** ''பல்வேறு நாடுகளின் கலைகளையும் ஒன்றுகூட்டி இசைப்பது சாத்தியமென்று நீங்கள் கருதுகிறீர்களா? இல்லை, அவை வெவ்வேறாகத்தான் இருக்குமா?''

**பதில்:** ''எந்தத் தேசத்துக் கலையாக இருந்தாலும் சரி; அது மிக உன்னதமானதாக இருந்தால், உலக முழுவதையும் வசியம் செய்துவிடும். ஜீவனுள்ள கலைக்கு, தேசத்துக்குத் தேசம் வித்தி யாசம் கிடையாது. சர்வ தேச பாஷை ஒன்று வேண்டு மென்றால் அது கலைதான். ஆனால் சுதேசத்துக் கலையையும் பிற நாட்டுக் கலையையும் நன்றாய்த் தெரிந்து கொள்ளாமல், சிலர் குரூபமான கலப்படம் செய்து விடுகிறார்கள். அது தவறு. இதை நீக்கவே, எங்கள் கலா க்ஷேத்திரத்தில் நல்ல ரசனையையும் அர்த்தத்தையும் நான் வற்புறுத்துகிறேன். தம் ஐதீகமான முறைப்படிதான் நட்டுவனார் இங்கே நாட்டியம் பயிற்றுவிக்கிறார். என்றாலும்,

அந்த ஐதீகமான முத்திரைகளையும் சந்தேகங்களையும் பாணிகளையும் மீருமல், எங்கள் மனோதர்மத்தைக் கொண்டு புதிய புதிய தீர்மானங்களை நாங்கள் சிருஷ்டித்து வளர்க்கிரும். குழந்தைக்கு வெறும் நாட்டியம் கற்பிப்பது மட்டில் எங்கள் நோக்கமல்ல. குழந்தையின் கல்வி, ஒழுக்கம் முதலியவற்றிலும் கவனம் செலுத்துகிரும். இதைப் பார்த்து, 'எங்கள் ஊர் நாட்டியம் வேறே; அடையார் டான்ஸ் வேறே' என்று சில சமயம் நட்டுவனர் வேடிக்கையாய்ச் சொல்வதுமுண்டு!''

கலா க்ஷேத்திரத்தைப் பற்றி இங்கே சில வார்த்தைகள் கூறுவது அவசியமாகும். அது வெறும் நாட்டியச் சாலை மட்டிலும் அல்ல. உலகப் பிரசித்திபெற்ற மாண்டிஸோரி அம்மை அங்கே குழந்தைகளின் கல்வியைச் சிலகாலம் நேரேயிருந்து கவனித்து வந்திருக்கிருர். பற்பல நுட்பமான கைத்தொழில்கள் நேர்த்தியான கலையழகுடன் அங்கே பயிற்றுவிக்கப்படுகின்றன. அற்புதக் கலை நகரம் ஒன்றைச் சிருஷ்டித்து விட வேண்டுமென்பதே, கலா க்ஷேத்திர ஸ்தாபகரான ருக்மிணிதேவியின் கனவு. பற்பல விதமான இந்தியக்கலைகளும் அங்கே செழிக்க வேண்டுமென்பது அவருடைய ஆவல்.

''கலையும் சயின்ஸும் ஒன்றுக்கொன்று உதவியானவையா? விரோதமானவையா? உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று ஸ்ரீமதி ருக்மிணியைக் கேட்டேன்.

**அவர் சொன்னர்:** ''கலையே ஒருவித சயின்ஸ்தான். இதுதான் வித்தியாசம்: அறிவுக்குமட்டில் திருப்தி யளிப்பது சயின்ஸ்; அறிவுக்கும் உள்ளத்துக்கும் இன்பமூட்டுவது கலை. கலையை மட்டிலும் வைத்துக்கொண்டு ஒரு தேசம் வாழ்ந்துவிட முடியும்; சயின்ஸை மட்டிலும் வைத்துக்கொண்டு வாழமுடியாது. ஆனல், சயின்ஸ் ரீதியாக அல்லாமல் கலையை வேறு எப்படிக் கற்க முடியும்?''

பிறகு, அரசியலைப்பற்றி அவருடைய அபிப்பிராயத்தை அறிய விரும்பினேன். ''உங்களுக்கு அரசியலில் சிரத்தையுண்டா? காங்கிரஸ் கொள்கையையும் காந்திஜியின் வழியையும்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''கலையில் அரசியல் கலக்கவே கூடாது'' என்று அழுத்தமாகச் சொன்ன ருக்மிணிதேவி, ''அதாவது நான் சொல்வது

இதுதான்: தமிழ், தெலுங்கு என்றெல்லாம், கலைகளில் விவகாரம் கிளப்பக்கூடாது'' என்று முடித்தார். சற்று நின்று மேலும் சொன்னதாவது: ''காங்கிரஸ் கொஞ்சம் தீவிரமான கொள்கையுடையது. தான் சொல்வதே சரியென்று ஒவ்வொரு கட்சியும் பிடிவாதம் செய்து கொண்டிருந்தால், போகும் வழி என்ன? எல்லாக் கட்சிகளும் கொஞ்சம் கொஞ்சம் விட்டுக் கொடுத்து ஒற்றுமைப்பட வேண்டும்'' என்றார்.

மீண்டும் தொடர்ந்து **''பாக்கிஸ்தான் மட்டில் கூடவே கூடாது.** ஏனென்றால், உலகத்துக்கே இந்தியர் போதிக்க வேண்டிய படிப்பினை ஒன்று உண்டு. பல்வேறு சமூகத்தினரும் ஜாதியினரும் நிறத்தினரும் ஐக்கியப்பட்டு இசையோடு வாழும் மார்க்கத்தை உலகத்துக்குக் காட்டுவது இந்தியாவின் கடமையாகும்'' என்று ஸ்ரீமதி ருக்மிணி கூறினர்.

அன்று உலக முழுவதையும் நிலைகுலையச் செய்துகொண்டிருந்த இரண்டாவது உலக யுத்தத்தைப் பற்றிக் கேட்டதற்கு, ஸ்ரீமதி ருக்மிணி சொன்ன பதிலாவது: ''இதைப் பிரளயம், கர்ம பலன் என்றுதான் சொல்ல வேண்டும். ஒவ்வொரு நாட்டுக்கும் இது ஒரு பாடமாகும். நமக்கு ஒற்றுமை வேண்டும்; இந்த யுத்தத்தினால் அது உண்டாகலாம். கீழ்நாட்டை மதிக்கவேண்டும், நிறத்திமிரைக் கைவிட வேண்டும் என்ற பாடத்தை, இது பிரிட்டனுக்குப் போதிக்கிறது.''

''நம்மைச் சூழ்ந்திருக்கும் இந்தப் பேரிருளுக்கு நடுவே உங்களுக்கு ஏதேனும் ஒளிக்கிரணம் தென்படுகிறதா? இந்தக் கோர நாசத்தின் முடிவிலே, எதிர்காலத்தில் மனித வர்க்கம் மேன்மை யடையுமென்று நீங்கள் நம்புகிறீர்களா?'' என்று பின்னும் கேட்டேன்.

''அதென்னவோ, நானறியேன். ஆனால், இந்தியா சுதந்தரமடைந்துவிடும். நான் ஜோஸ்யக்காரியல்ல; என்றாலும், இந்தியா சுதந்தர மடைவது நிச்சயம் என்றுமட்டில் திடமாய் நம்புகிறேன். சென்ற யுத்தத்தின் படிப்பினையை நாம் அறிந்து கொள்ளாததால் தான், இந்த யுத்தம் வந்திருக்கிறது'' என்று அவர் கூறினர்.

**கேள்வி:** ''இந்தமாதிரி நெருக்கடியான வேளையில், கலைகள் முதலிய தமாஷாக்கள் எல்லாம் கூடாது; அவைகளைக் கைவிட்டு,

நைஷ்டிகமாய் நடந்தால்தான், தேசத்தின் பலத்தைத் திரட்டி வளர்க்க முடியும் என்று சிலர் நினைக்கிறார்களே? அதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்களா?''

பதில்: ''கலைகளையும் நாகரிக வாழ்க்கையையும் கைவிட்டால், காட்டுமிராண்டித் தனத்துக்கு நாம் திரும்ப வேண்டியது தான். நமக்கும் யுத்தவெறி, பேராசை ஆகியவையே உண்டாகும். நாகரிக மடைந்த மனிதனுக்கும் காட்டுமிராண்டிக்கும் உள்ள ஒரே வித்தியாசம் கல்சர்தான். என்ன யுத்தம் நடந்தாலும் குழந்தைகள் இல்லையா? ஸ்திரீகள் இல்லையா? குடும்பம் இல்லையா? குழந்தைகள் தானே வருங்காலத்தைச் சமைக்கப் போகிறவர்கள்? அவர்களுக்குச் சரியான கல்வி வேண்டாமா? அவர்களையும் யுத்த வெறியர்களாகச் செய்துவிடலாமோ? 1938-ஆம் வருஷத்தில் நான் ஜெர்மனிக்குச் சென்றிருந்தபோது, ஆறு வயதுக் குழந்தை யெல்லாம் ஒரு குச்சியை வைத்துக் கொண்டு, 'இதோ பார், துப்பாக்கி. உன்னைச் சுட்டுவிடுவேன்' என்று சொல்லும். குழந்தைகளின் கூட்டமொன்றில், ஒரு குழந்தை என்னை அமெரிக்கச் சிவப்பிந்திய ஜாதியினள் என்று நினைத்துக்கொண்டது: 'நீ எத்தனை பேரைக் கொன்றிருக்கிறாய்?' என்று என்னைக் கேட்டது! அவ்வளவு யுத்த வெறி குழந்தைகளுக்கும் அங்கே உண்டாகிவிட்டது!''

இதோடு நிறுத்திக்கொண்டு, ''வெகு நேரம் சிரமம் கொடுத்ததற்கு மன்னிக்க வேண்டும்'' என்று சொல்ல வாயெடுத்தேன். இதற்குள் அவர் முந்திக்கொண்டு, ''ஏது! ஏராளமாய்ச் சொல்லிவிட்டேன் போலிருக்கிறது. இவ்வளவை யும் எழுதுவது சிரமமா யிருக்குமே'' என்றார்.

''அதெல்லா மில்லை. இன்னும் சொன்னாலும் எழுதிவிடுவேன்'' என்று கூறி விடை பெற்றேன்.